# பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்
# (PRIDE)

## பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 636 011.

# இளங்கலை தமிழ் இலக்கியம்
## மூன்றாமாண்டு
## தாள் – 12 : தமிழ்மொழி வரலாறும், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணமும்

புத்தக உருவாக்கம்

**முனைவர் மு. இளங்கோவன்**
**துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி**
**புதுச்சேரி - 605 003**

# இளங்கலை தமிழ் இலக்கியம்

## மூன்றாமாண்டு

## தாள் – 12 : தமிழ்மொழி வரலாறும், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணமும்

### பாடத்திட்டம்

அலகு 1: தமிழ்மொழி வரலாற்றுக்குதவும் சான்றுகள் - தொல்காப்பியத் தமிழ் - தமிழ் பிராமி - பல்லவர் காலத் தமிழ் - சோழர் காலத் தமிழ் - நாயக்கர் காலத்தமிழ் - இக்காலத்தமிழ்

அலகு 2: கல்வெட்டுத் தமிழ் - தமிழ் வரிவடிவ வரலாறு - எழுத்துச்சீர்திருத்தம் - அறிவியல் தமிழ்

அலகு 3: திராவிட மொழிக்குடும்பம் - தென்திராவிடம் - நடுத்திராவிடம் - வட திராவிடம் - திராவிட மொழிகளின் தனித்தன்மைகள்

அலகு 4: ஒலியின் பிறப்பு - உயிரொலி, மெய்யொலி மாற்றங்கள் - உருபன்களும் சொல்லாக்கமும் - வேற்றுமைகள் - மூவிடப்பெயர்கள் - எண்ணுப்பெயர்கள் -திணை, பால், இடம்

அலகு 5: வினைச்சொற்களின் அமைப்பு - வினைகள் காலம் காட்டும் முறை-எச்சங்களும் முற்றுகளும், திராவிடமொழிகளின் சொற்றொடரமைப்பு - சொற்பொருள் மாற்றமடைதல்

பாடநூல்கள்:

1. சு.சக்திவேல், தமிழ்மொழி வரலாறு
(மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003)

2. ஜான் சாமுவேல், திராவிடமொழிகளின் ஒப்பாய்வு
(ஓர் அறிமுகம்) (முல்லை நிலையம், சென்னை, 2008)

### 1.1 முன்னுரை

உலகமொழிகளின் வரிசையில் தமிழ்மொழி செம்மொழி எனும் தகுதிபெற்ற மொழியாக உள்ளது. இம்மொழியிலிருந்து பலநூற்றாண்டுகளுக்கு முன்பே பல மொழிகள் பிரிந்து, வளர்ந்துள்ளன என்று மரபிலக்கண அறிஞர்களும் மொழியியல் அறிஞர்களும் கருதுகின்றனர். தமிழ்மொழியுடன் உறவுடைய பிறமொழிகளை இணைத்து, இம்மொழிகள் அடங்கிய குடும்பத்தைத் திராவிடமொழிக்குடும்பம் என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். உறவுடைய மாந்தகுலத்தை ஒரே குடும்பம் என்று குறிப்பதுபோல் ஒத்த உறவுடைய மொழிகளை ஒரே குடும்பமாகப் பார்ப்பது மொழியியல் அறிஞர்களின் பார்வையாகும்.

இந்தப் பாட நூலில் தமிழ்மொழியின் சிறப்பினையும், வரலாற்றினையும் மரபிலக்கணப் பார்வையிலும் மொழியியல் பார்வையிலும் அறிய உள்ளோம். அதுபோல் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு உள்ளிட்ட திராவிட மொழிகள் யாவும் எத்தகு உறவுகளைக்

கொண்டுள்ளன என்பதை அறிஞர்களின் கருத்துகளின் துணைகொண்டு அறிய உள்ளோம்.

## 1.2 நோக்கங்கள்

- தமிழ்மொழியின் வரலாறு அறிதல்
- இலக்கியச் சான்றுகள், இலக்கணச்சான்றுகள் அறிதல்
- உரையாசிரியர்கள் கருத்துகள், வெளிநாட்டார் கருத்துகள் அறிதல்
- அகராதிப்பெருமைகள், கல்வெட்டுச் சான்றுகள் அறிதல்
- பிறமொழிக்கல்வெட்டுகளில், அயல்நாட்டார் குறிப்புகளில் தமிழ்ச்சிறப்பு அறிதல்
- தொல்காப்பியத் தமிழறிதல்
- தமிழ் பிராமி பற்றி அறிதல்
- பல்லவர் காலத் தமிழ்நிலை அறிதல்
- சோழர் காலத் தமிழ்நிலை அறிதல்
- நாயக்கர் காலத் தமிழ்நிலை அறிதல்
- இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வானொலி,தொலைக்காட்சி,செய்தி ஏடுகளால் வளர்ந்துள்ள பாங்கறிதல்.

**பாட அமைப்பு**

1.1 முன்னுரை

1.2 நோக்கங்கள்

1.3 பாட அறிமுகம்

1.4 தன்மதிப்பீட்டு வினாக்கள்

1.5 பாடத்தொகுப்புரை

1.6 முக்கியச்சொற்கள்

1.7 தன்மதிப்பீட்டு விடைகள்

1.8 மாதிரி வினாக்கள்

## 1.3 பாட அறிமுகம்

மொழி என்பது மனிதன் படைத்த கலைகளுள் ஒன்றாக உள்ளது.மொழி செய்திகளைப் பரிமாறுவதுடன் நின்றுவிடாமல் அம்மொழி பேசும் மக்களின் அறிவாற்றலையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் தாங்கி நிற்கின்றது.அத்தகு மொழிகளுள் செம்மொழியாகச் சிறப்புற்று நிற்பது தமிழ் மொழி. தமிழ்மொழியின் வரலாறு அறிய உதவும் சிறப்பிற்குரிய தரவுகளைத் தொகுத்துப் பேராசிரியர் சு.சக்திவேல் வழங்கியுள்ளார். மேலும் காலந்தோறும் தமிழ் நிலை எவ்வாறு இருந்தது என்பதையும் அவரின் தமிழ்மொழி வரலாறு நூலில் விரிவாக எழுதியுள்ளார்.அவற்றை இங்குத் தொகுத்துக் காண்போம்.

**தமிழ்மொழி வரலாற்றுக்கு உதவும் சான்றுகள்**

மொழி என்பது மக்களின் பயன்பாட்டில் இருப்பதால் காலந்தோறும் பல மாற்றங்களைக் காண்கின்றது. அவ்வாறு மாற்றங்களைக் கண்டாலும் அம்மாற்றங்கள் ஒரு வரம்புக்கு உட்பட்டே நிகழ்கின்றது.ஒவ்வொரு மொழிபேசும் மக்களும் தங்கள் மொழியினை வளர்க்கவும் பாதுகாக்கவும், ஆராயவும் பல முயற்சிகளைச் செய்துள்ளனர்.

மொழியாய்வு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறமொழியில் செல்வாக்கு பெற்ற சூழலில் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண அமைப்புகளை ஆய்வுக்கு உட்படுத்திய மொழியாக விளங்குகிறது. அறிவியல், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் சார்ந்த துறைகள் வளர்ந்து நிற்பன போன்று மொழியியல் துறையும் இன்று மிகப்பெரிய வளர்ச்சியடைந்துள்ளது. உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றிய டார்வினின் பரிணாமக்கொள்கை இயற்கைமொழிகளின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆராய வழிவகுத்தது. மொழி வளர்வது பரிணாம வளர்ச்சியாலும் (Evolution), கடன் வாங்கலாலும் (Diffusion) என்று மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுவது உண்டு.

ஒருமொழியில் பல்வேறு காலங்களில் அடைந்த மாற்றத்தைக் காலமுறைப்படி ஆராய, பலசான்றுகள் தேவைப்படுகின்றன. சான்றுகள் இல்லாமல் அமையும் ஆய்வுகளை அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்வதில்லை. அறிவியல் அடிப்படையில் அமையும் ஆய்வுகளுக்குச் சான்றுகள் முதன்மையாகும்.

தமிழ்மொழி வரலாற்றை அறிவதற்கு இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுகள், பிறமொழிக் கல்வெட்டுகள், அயல்நாட்டார் குறிப்புகள், கிளைமொழிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். அச்சான்றுகளின் அடிப்படையில் தமிழ்மொழி வரலாற்றை அறிவோம்.

### 1.இலக்கியங்கள்(Literature)

ஒரு நாட்டின் வரலாற்றையும் மொழி வரலாற்றையும் மக்கள் வரலாற்றையும் அறிவதற்கு இன்றியமையாதன இலக்கியங்களாகும். மொழிவரலாற்றிற்கு எழுதப்பட்ட அனைத்தையும் சான்றாகக் கொள்வது மரபாக உள்ளது. அதுபோல் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களை அடிப்படையாக வைத்து அவ்வக்காலச் சூழலையும், மொழியமைப்பையும் அறியமுடிகின்றது. குறிப்பாகச் சங்க இலக்கியங்களை வைத்துச் சங்ககால மொழிநிலை பற்றி அறியமுடிகின்றது.

இலக்கியச்சான்றுகளை இருவகையில் பகுக்கமுடியும். இலக்கிய நடையில் அமைந்த செய்யுள் நூல்களை ஒருவகையாகவும், பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி வடிவங்களை ஒருவகையாகவும் பகுக்கலாம். செய்யுள் இலக்கியங்களை எழுத்திலக்கியங்கள் (Written Literature) என்றும், வாய்மொழி வடிவங்களை வாய்மொழி இலக்கியங்கள் (Folk literature) என்றும் குறிப்பிடுவர்.

வாய்மொழி இலக்கியங்களே ஒருமொழியின் உண்மையான இயல்பைக் காட்டுவனவாகும். ஒரு மொழியைப் பேசும் சமுதாயம் என்பது படித்தவர்களையும் படிக்காதவர்களையும் உள்ளடக்கியது. எனவே வாய்மொழி இலக்கியங்கள் என்பவை மக்கள் பேசும் மொழியின் உண்மை இயல்பைக் காட்டுவதாகும். எனவே மொழியியல் அறிஞர்கள் பேச்சு வழக்கில் உள்ள சொற்களை ஒதுக்காமல் தங்கள் ஆய்வுக்கு ஆர்வமுடன் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். சமுதாயமொழியியல் என்ற பிரிவு மொழியியல்துறையில் தனித்துறையாகவே உள்ளது.

தமிழில் தோன்றிய முதல் நூலாகக் கருதப்பெறும் தொல்காப்பியத்தின் அமைப்பு, நடையையும் அதனை அடுத்துப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தோன்றிய சிலப்பதிகார நூலினையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டு நூல்களின் வழியாக மொழிவளர்ச்சி தெளிவாகத் தெரியும். எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியம் எதிர்காலத் தன்மை ஒருமை விகுதியாக 'அல்' என்பதைக் கூறுகிறது தொல். சொல். 200). சிலப்பதிகாரத்தில் 'அல்' ஈறு 'அன்' ஈறாக மாறிய நிலையைக் காணமுடிகின்றது. மருங்கொலி (lateral) மூக்கொலியாக மாறியதைச் சிலப்பதிகாரம் வழியாக அறியமுடிகின்றது.

கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த திருநாவுக்கரசர் தேவாரம் தமிழ் வடமொழியுடன் இயல்புக்குத் தக வழங்கியமையும் காண்கின்றோம்.

பிரளய > பிரளயம்

க்ஷமி > சமி

இவற்றால் திருநாவுக்கரசர் தேவாரம் வடமொழி ஒலிகளைப் பயன்படுத்தியமுறையைத் தெரிவிக்கிறது.

சங்க கால இலக்கியங்களையும் சங்கம் மருவிய இலக்கியங்களையும் ஒப்பிட்டு நோக்கினால் நிகழ்கால இடைநிலை 'கின்று', 'கிறு' சங்கம் மருவிய கால இலக்கியங்களில் அதிகம் பயின்று வருவதைக் காண்கின்றோம். சங்க இலக்கியங்களில் பரிபாடலில் நிகழ்கால இடைநிலை பற்றி அறிகின்றோம். சங்க காலத்தமிழுக்கும் சோழர்காலத் தமிழுக்கும் உள்ள வேறுபாட்டை இச்சான்றுகளின் வழியாக அறிகின்றோம்.

கி.பி.பதினேழாம் நூற்றாண்டுக்குப் பிறகே தமிழ் இலக்கியங்களில் பேச்சுத் தமிழ்ச்சொற்கள் மிகுதியாக இடம்பெற்றன. குறிப்பாக மக்கள் ஆர்வமுடன் விரும்பிய கதைப்பாடல்கள், சமய நூல்களில் இவ்வகைப் பேச்சு வழக்குகள் இடம்பெற்றன. இராமப்பய்யன் அம்மானை, சிவகெங்கை சரித்திரம், மாகபுராண அம்மானை, பொன்னுருவி மசக்கை போன்ற வாய்மொழி இலக்கியங்கள் அச்சிடப்பட்ட பின்னர் அக்காலத்தில் நிலவிய மொழியமைப்பை அறியமுடிந்தது. மாகபுராண அம்மானை வழியாகப் பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழின் ஒலிவகையின் சிறப்புகளை அறியமுடிகின்றது. குற்றியலுகரம் சில இடங்களில் குற்றியலிகரம்போல் ஒலிப்பதை அறியமுடிகின்றது.

எ.கா. புக்கு > புக்கி ; இருபத்து > இருபத்தி

இதுபோல் மொழிக்கு இடையில் வரும் உகரம் இகரமாக ஒலிப்பதையும் அறியமுடிகின்றது.

எ.கா: அருமை > அரிமை ; சிறு இலை > சிறி இலை

இராமப்பய்யன் அம்மானை என்னும் நாட்டுப்புற இலக்கியத்தில் கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் வழங்கப்பெற்ற பேச்சுத் தமிழைப் பற்றி அறிகின்றோம். மேலும் மதுரை, சிவகங்கை வட்டாரம் சார்ந்த வழக்கையும் அறிகின்றோம்.

எ.கா. அடைக்காய் - பாக்கு ; வெள்ளிலை - வெற்றிலை ; சம்பாரம் - சாக்கு

விதனம் - செய்தி ; மன்னாப்பு - மன்னிப்பு ; கலனை - ஜீனி

**2.இலக்கணங்கள்**

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் காண்பது தமிழ் மரபாகும். தமிழ் இலக்கியங்கள் காலத்தால் பழைமையுடன் விளங்குவன போன்றே இலக்கணங்களும் காலப் பழைமை கொண்டு விளங்குகின்றன. எனவே தமிழ்மொழி வரலாற்றை அறிவதற்கு இலக்கணங்களையும் துணையாகக் கொள்ள வேண்டியுள்ளது. இலக்கணம் என்பவை மொழியின் இயல்பை நேரடியாகக் கூறுவதாகும். இலக்கியம் ஒலியன்களையும் உருபன்களையும் தன்னகத்தே கொண்டது. இலக்கணம் ஒலியன்களையும் உருபன்களையும் சொற்களின் அமைப்பையும் நேரடியாக எடுத்தியம்புகின்றது. எனவே இலக்கணங்கள் விளக்க மொழியியல் (Descriptive Linguistics) அடிப்படையில் அமைந்தவையாகும். தொல்காப்பியர் பிறப்பியல் பகுதியில் ஒலிகளை உச்சரிப்பொலியியல் நோக்கில் உரைத்துள்ளார்.

தொல்காப்பியர் எழுத்துகளின் பிறப்பைப் பற்றிப் பின்வரும் நூற்பாவில் சிறப்பாக விளக்கியுள்ளார்.

> ‘‘உந்தி முதலா முந்துவளி தோன்றித்
> தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
> பல்லும் இதழும் நாவும் மூக்கும்
> அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
> உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
> எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
> பிறப்பின் ஆக்கம் வேறு வேறியல
> திறப்படத் தெரியுங் காட்சி யான’’(தொல்.எழுத்து. 83)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு தொல்காப்பியர் அறிவியல் அடிப்படையில் எழுத்தொலிகளின் பிறப்பினை விளக்கியுள்ளமை மொழியியல் அறிஞர்களை வியப்பில் ஆழ்த்துகின்றது.

தொல்காப்பியர் மொழிமுதல், இடை, கடை ஆகிய இடங்களில் வரும் ஒலிகளைக் கூறுகின்றார். இதனால் அவர் காலத் தமிழ்மொழியின் ஒலியனியல் அமைப்பினை (Phonemic Structure) வெளிப்படுத்துகின்றார்.

தமிழ்மொழியில் தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. அந்த நூல்கள் தமிழ் இலக்கண வளர்ச்சியைக் காட்டுவதுடன் தமிழ்மொழியின் அமைப்பு காலந்தோறும் வளர்ந்துள்ள பாங்கினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வகையில் நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல், முத்துவீரியம் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய முனைவர் இரா.திருமுருகனாரின் சிந்துப்பாவியல், புலவர் ச.பாலசுந்தரனாரின் நூல், முனைவர் பொற்கோவின் தற்காலத் தமிழ் இலக்கணம் முதலிய நூல்கள் தமிழ்மொழியின் இலக்கண வளர்ச்சியை அறிவதற்குப் பேருதவி புரிவனவாகும்.

ழகரம் புணர்ச்சியில் டகரமாக மாறுவதைத் தொல்காப்பியர் 'கீட்டிசை' என்ற சொல்லுக்குக் கூறினார். ஆனால் வீரசோழியம் பாழ் + தீமை = பாட்டீமை போன்ற வேறு சிலவற்றிலும் மாறும் என்று கூறுகிறது. ஆறாம் வேற்றுமைக்கு 'அது' மட்டுமிருந்து பின்பு 'ஆது'வும் சேர்ந்து ஒருமைக்கு இவை இரண்டும் பன்மைக்கு 'அ'வும் என்ற நிலை ஏற்பட்டது. சங்க இலக்கியமான பரிபாடலில்தான் முதன்முதல் நிகழ்கால இடைநிலை பற்றிக் காண்கின்றோம்.

நன்னூலார் கிறு, கின்று, ஆநின்று என்ற மூன்று இடைநிலைகளை நிகழ்காலத்துக்குக் குறிப்பிட்டுச் செல்கின்றார். இவை யாவும் மொழிவளர்ந்த வளர்ச்சியை இலக்கணங்கள் காட்டுகின்றன.

### 3.உரையாசிரியர்கள் (Commentators)

தமிழில் தோன்றிய பழைய இலக்கண நூல்களையும், இலக்கிய நூல்களையும் கற்ற புலவர் பெருமக்கள் அவற்றின் சிறப்புகளை உரையாக வரைந்து மகிழ்ந்தனர். அத்தகு உரைகள் கால இடைவெளியால் படிப்பதற்கு அரிதான நூல்களைப் படித்து உணர்வதற்குப் பேருதவிபுரிகின்றன. உரையாசிரியர்கள் காலத்துக்கும் மூல நூலாசிரியர்கள் காலத்துக்கும் இடையில் மொழியில் நிகழ்ந்த மாற்றங்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் காலத்தில் எழுந்த வழக்குகளையும், விழுந்த வழக்குகளையும் குறிப்பிட்டுள்ளனர். உரையாசிரியர்கள் உரையிற்கோடல் என்னும் உத்திவகையை மேற்கொண்டு தங்கள் கருத்துகளையும் கூறியுள்ளனர். தொல்காப்பியர் 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்று கூறிச்சென்றுள்ளார். தொல்காப்பியர் வியங்கோள் வினைமுற்றை ஈறு கூறாமல் இடங்கூறி விளக்குகிறார். உரையாசிரியர்கள் வியங்கோள் விகுதிகளைக் கூறியுள்ளனர்.

எ.கா.

இளம்பூரணர், தெய்வச்சிலையார் - க

சேனாவரையர் - க, யா, அல்

நச்சினார்க்கினியர், கல்லாடர் - க, யா, ஆல், ஆர், மார், உம், ஐ

இவ்வாறு உரையாசிரியர்களின் பங்களிப்பால் மொழி வரலாற்றில் அவர்களின் பணிகள் போற்றப்படுகின்றன.

## 4.வெளிநாட்டார் எழுதிய இலக்கணங்கள் (Grammars by Foreigners)

தமிழறிந்த தமிழகத்துப் புலவர் பெருமக்கள் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளமை போன்று வெளிநாட்டு அறிஞர்கள் பலரும் தமிழ்மொழிக்கு இலக்கணம் வரைந்துள்ளனர். இவர்கள் இயற்றிய இலக்கணம் யாவும் பெரும்பாலும் பேச்சுத் தமிழுக்கே ஆகும். கி.பி.1672 இல் டச்சுக்காரர் பால்டீயசு (Baldaeus) என்பார் இந்தியா பற்றிய நூலில் தமிழ் மொழியின் உச்சரிப்புக்கள், வேற்றுமைப் பாகுபாடுகள், வினைவிகற்ப வாய்பாடு முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். கி.பி.1680 ஆம் ஆண்டில் கோசுடா பல்த்சரா (Casto Balthsara) என்பார் இலத்தீன்மொழியில் தமிழ் இலக்கணம் ஒன்றை எழுதினார்.

கி.பி.1685 ஆம் ஆண்டு புருனோ (Bruno) என்பவர் ஓர் இலக்கண நூலை எழுதினார். கி.பி.1786 இல் சீகன்பால்கு (Ziegenbleg) அவர்கள் தமிழ் இலக்கண நூல் (Grammatica Damulica) ஒன்றை எழுதினார். வீரமாமுனிவர் பேச்சுத் தமிழ் இலக்கணம் (Grammar of the Common Dialect of the Tamulian) ஒன்றை எழுதினார். ரேனியசு என்பவர் கி.பி. 1836 இல் தமிழ் மொழியின் இலக்கணம் (Grammar of The Tamil Language) என்ற நூலை இயற்றினார். இவருடைய இலக்கணம்
Prescriptive Grammar என்ற வகையில் அடங்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த எல்லீசு, போப், கிராலின், கால்டுவெல் போன்றோர் எழுதிய இலக்கண நூல்கள் தமிழ்மொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்கனவாகும். அயல்நாட்டார் எழுதிய இலக்கணங்களில் குறைகள் இருப்பினும் ஒலியியல் ஆய்வுக்கு அவை பெரிதும் உதவுகின்றன. மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழை அறிவதற்கு அவை பெரிதும் பயன்படுகின்றன.

தமிழகத்து இலக்கண அறிஞர்கள் குறிப்பிடும் தமிழ் இலக்கணச்செய்திகளுக்கும் அயல்நாட்டார் குறிப்பிடும் செய்திகளுக்கும் ஆய்வு அடிப்படையில் பல வேறுபாடுகள் அமைந்து நமக்குப் பெரிதும் உதவுகின்றன. மரபுத்தமிழ் இலக்கணங்கள் மூவிடப்பெயர்களைப் பற்றித் தனியாகக் கூறவில்லை. அவற்றைப் பற்றிப் பெயர்ச்சொல்லிலே கூறிவிட்டனர். மேலைநாட்டாரின் தமிழ் இலக்கணங்களில்தான் மூவிடப் பெயர் பெயர்ச்சொல்லில் தனி உட்பிரிவாகக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. எனவே இன்றைய தற்காலத் தமிழ் இலக்கணத்தில் மூவிடப்பெயரைப் பெயரின் தனி உட்பிரிவாக இலக்கணக்காரர்களும் மொழியியலாரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

தமிழில் தோன்றிய மரபு இலக்கணங்கள் கூறாத ஒன்றை, வெளிநாட்டார் எழுதிய தமிழ் இலக்கணங்களில் காண்கின்றோம். எந்த வினைச்சொல் எந்த எந்தக் காலம் காட்டும் இடைநிலைகளைப் பெறும் என்பதை மேலைநாட்டாரின் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

முனைவர் கிரால் அவர்கள் தமிழ் வினையடைச்சொற்களை அவை ஏற்கும் கால இடைநிலைகளின் அடிப்படையில் மெல்வினை, இடைவினை, வல்வினை என்ற மூன்று பிரிவுகளாகப் பகுத்துக் குறிப்பிடுகின்றார்.

வகர எதிர்கல இடைநிலை பெறும் வினைப்பகுதிகள் மெல்வினை என்றும், பகர எதிர்கால இடைநிலை பெறுவன இடைவினை என்றும், ப்ப் என்ற ஈரொற்றைப் பெறுவன வல்வினை என்றும் வகுக்கின்றார். இம்மூவகை வினைகளையும் மறுபடியும் ஏழு உட்பிரிவாகப் பிரிகின்றார். அவற்றுள் நான்கு மெல்வினைகளிலும் ஒன்று இடைவினைகளிலும் இரண்டு வல்வினைகளிலும் அடக்கப்படுகின்றன.

**5.அகராதிகள்**

அகராதிகள் என்பவை ஒருமொழியிலுள்ள சொற்கள் அனைத்தையும் அகரவரிசையில் அமையும்படி ஒருசேரத் தொகுத்து அவற்றின் பொருள்களை அம்மொழியிலேனும் பிற மொழியிலேனும் விளக்கும் நூலாகும். ‘உரிச்சொல் பனுவல்’ என்னும் பெயரில் பண்டைக்காலத்தில் இதனைக் குறித்தனர். சமண சமயம் சார்ந்த முனிவர்கள் பலர் இத்தகு நூல்களை இயற்றி ‘நிகண்டு’ என்னும் பெயரில் அவற்றை அழைத்தனர். பண்டைக்காலத்தில் நிகண்டு நூல்கள் செய்யுள் நடையில் இயற்றப்பட்டன. ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகே தமிழுக்கு அகராதி நூல்கள் அறிமுகம் ஆயின. பதினேழாம் நூற்றாண்டில் கிறித்தவப் பாதிரிமார்கள் வெளியிட்ட அகராதிகள் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகின்றன.

பாதிரிமார்கள் அகராதியை அமைக்கும்பொழுது பிறமொழியிலுள்ள செப்பமான முறையைப் பின்பற்றினர். கி.பி.1679 இல் அந்தம் தெ பிரென்சா (Antem de Proence) என்ற பாதிரியாரால் தொகுக்கப்பட்டுக் கேரளத்திலுள்ள அம்பலக்காட்டில் ஒரு அகராதி பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்த அகராதி நமக்குக் கிடைக்கவில்லை. வீரமாமுனிவரால் கி.பி.1732 இல் சதுரகராதி தொகுக்கப்பெற்றது. இவ்வகராதியில் பன்னிரண்டாயிரம் சொற்கள் உள்ளன. வீரமாமுனிவர் ஏழு அகராதிகளை வெளியிட்டுள்ளார்.

அவை: 1. தமிழ்-இலத்தீன் அகராதி, 2. இலத்தீன்-தமிழ் அகராதி 3. தமிழ்-பிரஞ்சு அகராதி, 4. தமிழ்-ஆங்கில அகராதி 5. போர்ச்சுக்கீசியம் -இலத்தீன் - தமிழ் அகராதி, 6. வட்டார வழக்குத் தமிழ் அகராதி 7. சதுரகராதி.

சென்னைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக்கொண்டு தமிழ்ப் பேரகராதியை வெளியிட்டுள்ளது. இந்த அகராதியில் இலட்சத்து நாலாயிரத்து நானூற்று ஐந்து சொற்கள் இடம்பெற்றுளன. இந்த அகராதிக்குப் பிற்சேர்க்கையும் வெளியிட்டுள்ளனர். இந்த அகராதி செம்பதிப்பாக வெளிவரும் வண்ணம் பேராசிரியர் வ.செயதேவன் அவர்கள் பதிப்புப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

திராவிடமொழியியலில் வல்லவர்களான பேறறிஞர்களான தாமசு பர்ரோ அவர்களும் எமனோ அவர்களும் இணைந்து உருவாக்கி

வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி (A Dravidian Etymological Dictionary) திராவிட மொழியியல் உலகில் அனைவராலும் போற்றப்படும் அகராதியாகும். திராவிட ஒப்பிலக்கண ஆய்வு வளர்ச்சிக்கு இந்த அகராதியின் பங்கு மிகுதியும் உண்டு.

இந்த அகராதி வெளிவந்த பிறகு திராவிட மொழியியல் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்தன. ஆய்வு நிறுவனங்கள் தோன்றின. தமிழ் மொழிக்கும் பிற திராவிடமொழிக்கும் உள்ள தொடர்புகளை ஆராய்வதற்கு அடிப்படைக் கருவி நூலாக இருப்பது இந்த அகராதியாகும்.

தமிழ் அகராதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்பிற்கு உரியனவாக உள்ளன. அண்மைக்காலத்திலும் பல அகராதி நூல்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன. கி.ரா.வின் கரிசல்காட்டுப் பகுதி மக்களின் வழக்குச்சொற்களுக்குப் பொருள்தரும் அகராதியும், பெருமாள்முருகனின் கொங்குநாட்டு வழக்குச்சொற்கள் அகராதியும், கண்மணி குணசேகரனின் நடுநாட்டு வழக்குச்சொல் அகராதியும், முனைவர் தமிழகனின் வழக்குச்சொல் அகராதியும் குறிப்பிடத்தகுந்த சில அகராதிகளாகும். ஒவ்வொரு தொழில்சார்ந்த சொற்களை அகராதியாக்கும் முயற்சியில் சில பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் நடந்து வேளாண்மை, கட்டடக்கலை, சிற்பக்கலை, நெசவு சார்ந்த தொழில்களில் பயன்படுத்தப்படும் வழக்குச்சொற்களின் பொருள்கள் அறியும் முயற்சியும் தமிழகத்தில் நிகழ்ந்துவருகின்றன.

### 6.கல்வெட்டுகள் (Inscriptions)

தமிழ்மொழியின் தொன்மையை நிலைநாட்டவும் சிறப்புகளை அறியவும் உதவப் பெரிதும் உதவுவன கல்வெட்டுகளாகும். கல்வெட்டுகள், செப்பேடுகள், சாசனங்கள் முதலியன மொழிவரலாறு அறிவதற்குப் பெரிதும் உதவுகின்றன. கல்வெட்டுகள் அழியாத கல்லில் வெட்டப்பட்டுள்ளதால் காலம் கடந்தும் நமக்கு உதவுகின்றன.

சிந்துச் சமவெளியின் குறியீடுகளை ஒத்த குறியீடுகளைக் கொண்ட கல்வெட்டு செம்பியன் கண்டியூரில் கிடைத்துள்ளமை இங்கு எண்ணிப்பார்க்கத் தக்கது. கி .பி. மூன்றாம் நூற்றாண்டுகளிலிருந்து கல்வெட்டுகள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றுள் சில கல்வெட்டுகள் இலக்கிய நடையில் அமைந்துள்ளன. ஆனால் கிடைத்துள்ள பெரும்பான்மையான கல்வெட்டுகள் பேச்சு நடையில் கிடைத்துள்ளன. கல்வெட்டில் இடைச்செருகலாக எழுதும் பழக்கம் இல்லை.

கல்வெட்டுகள் பழந்தமிழக வரலாற்றை நமக்கு நினைவூட்டுவதுடன் அக்கால மொழி வரலாற்றையும் தாங்கி நிற்கின்றது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் கிடைத்துள்ள கல்வெட்டுகள் மொழியை எவ்வாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதைச் சிறப்பாக அறிய உதவுகின்றன. குறிப்பாக மொழியில் பிறமொழிக்கலப்பு, பேச்சு மொழி, இலக்கியமொழி அவற்றுக்கு இடையை நிகழ்ந்துள்ள மாற்றங்களைப் பற்றி அறியமுடிகின்றது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில்தான் கல்வெட்டுகள் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன. தமிழ்க் கல்வெட்டுகள் தமிழகத்தில் மட்டுமன்றிக் கேரளா,

ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா, இலங்கை, தாய்லாந்து உள்ளிட்ட பல இடங்களில் கிடைக்கின்றன.

கல்வெட்டுகளால் ஒலி மாற்றத்தை அறியமுடிகின்றது. காலத்தைக் கணிக்கமுடியாதபடி உள்ள கல்வெட்டுகளில் மொழியியல் மாற்றங்களை வைத்து ஓரளவு கல்வெட்டின் காலத்தைக் கணிக்கமுடியும்.

- கி.பி.ஆறாம் நூற்றாண்டு = ற்ற > த்த் > ஏத்தம். பல்லவன்கோயில் செப்புப்பட்டயம்
- கி.பி.ஏழாம் நூற்றாண்டு = அ > எ அரசர் > அரசெர் SI III 72.14
- கி.பி.எட்டாம் நூற்றாண்டு

  ஞூ > ய திருப்பதிகம் > திருப்பதியம்

  ய > ச குயக்காணம் > குசக்காணம்
- கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு

  இ > அ ஞாயிறு > ஞாயறு
- 12 ஆம் நூற்றாண்டு

  ற > ர நிறுத்த > நிருத்த
- 14 ஆம் நூற்றாண்டு

  க > வ தகப்பனார் > தவப்பனார்

  ள் > மக்கள் > மக்க

கல்வெட்டுகளில் உடம்படுமெய் இல்லாமல் உயிர் எழுத்துகள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன.

எ.கா.

கோஇலுக்கு

ஆஇரம்

கைஇல்

மேற்கண்ட சான்றுகளால் தமிழ்மொழி இடைக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

### 7.பிறமொழிக் கல்வெட்டுகள் ( Inscriptions in other languages)

தமிழ்மொழியில் காணப்படும் கல்வெட்டுகளைப் போலப் பிறமொழிகளில் காணப்படும் கல்வெட்டுகளும் மொழி வரலாற்றை அறிவதற்கு உதவுகின்றன. இலங்கையில் கிடைத்துள்ள பல சிங்களக் கல்வெட்டுகளில் தமிழ்ப்பெயர்களும் தமிழ்ச்சொற்களும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டிலும் பிறமொழிக் கல்வெட்டுகள் மிகுதியாக வெளிப் டுத்தப்பட்டுள்ளன.

தமிழில் க என்ற எழுத்து பல ஒலிகளாக ஒலிக்கின்றன. கால்டுவெல் தடையொலிகள் மொழிக்கு முதலிலும் இடையே இரட்டித்து வருகையிலும் ரி போன்ற ஒலிப்பிலா ஒலியாகவும் மொழிக்கு இடையே

உயிர் எழுத்துகளின் நடுவே ஒற்றையாய் வரும்பொழுதும் மெல்லெழுத்தின் பின் வரும்பொழுதும் நி போன்ற ஒலிப்புடை ஒலியாகவும் ஒலிக்கின்றது என்றும் இம்மாற்றத்தை உயிர்ப்பொலி ஒலிப்பொலி மாற்றுச்சட்டம் எனவும் பெயரிட்டுள்ளனர். இந்த மாற்றம் அடுத்து வரும் எழுத்துகளின் சாயலால் ஏற்படுகின்றது.

அரிக்கமேட்டில் கிடைத்த மட்கல ஓட்டில் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. மட்கல ஓடுகள் தமிழ் எழுத்துகளின் வரி வடிவ ஆய்வுக்கு மிகவும் இன்றியமையாதனவாகும். இவ்வாறு பிறமொழிக் கல்வெட்டுகளும் தமிழ்மொழி ஆய்வுக்கு உதவுகின்றன.

### 8.அயல்நாட்டார் குறிப்புகள் (Foreigners references)

வேற்றுமொழியினர் பலரும் தமிழ்ப்பெயர்கள், தமிழ்ச்சொற்களைத் தங்கள் மொழியில் எழுதியுள்ளனர். கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பதஞ்சலியும் கி.மு.நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த வரருசியும் தென்னிந்தியா பற்றியும் தென்னிந்தியச் சொற்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றனர். குமரிலப் பட்டருடைய தந்திர வார்த்திகத்திலும் (Tantra Varttika) பாலி, சமற்கிருதம், பிராகிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் தமிழ் பற்றிய குறிப்புகள் உள்ளன. பதஞ்சலி அவர்கள் காஞ்சி என்ற சொல்லைக் குறிப்பிடுகின்றார். கிரேக்கத்தில் Damarica என்ற சொல் தமிழகத்தைக் குறிக்கின்றது. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சத்தில் damila என்ற சொல் உள்ளது.

கி.பி.பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த லீலாதிலம் என்ற நூலில் பாண்டிய நாட்டு, சோழநாட்டு வழக்காறுகளையும் உச்சரிப்புகளையும் காண்கின்றோம். நம் நாட்டிற்கு வந்த அயல்நாட்டார்கள் தங்களுடைய குறிப்புகளில் நகரங்கள், துறைமுகங்கள், ஏற்றுமதிப் பொருட்கள் ஆகியன பற்றி எழுதியுள்ளனர்.

மெகசுதனிசு, பிளினி, தாலமி போன்றோரும் தமிழகம் சார்ந்த பல செய்திகளைப் பதிவு செய்துள்ளனர். சீனப்பயணி யுவான் சுவாங், மார்க்கோபோலா ஆகியோரின் குறிப்புகள் பல பயனுடைய தகவல்களைத் தருகின்றன.

இந்தியாவிலிருந்த கிறித்தவ பாதிரிமார்கள் தங்கள் தலைமையிடங்களுக்கு எழுதிய கடிதங்கள் தமிழ்மொழி வரலாற்று ஆய்வுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. மெகசுதனிசு Chandra Gupta என்ற அரசரின் பெயரை Sandra cottarus என்று எழுதியுள்ளார். பிறமொழி மூலங்கள் வழியாகத் தமிழ்ச்சொற்களைப் பிறமொழியினர் எவ்வாறு புரிந்துகொண்டனர் என்பது தெரிகிறது.

கொற்கை நகரத்தைக் கொல்கை என்றே இவர்கள் எழுதியுள்ளனர். பழங்காலக் கல்வெட்டுகளில் கொல்கை என்று இவ்வூர் அழைக்கப்பட்டுள்ளதையும் இங்குச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கிரேக்கர்கள் மன்னார்குடாவைக் ‘கொல்சி குடா’ என்றே குறித்தனர். இதனால் லகரம் றகரமாக மாறாமையை அறியலாம்.

தாலமி சென்னைக்கு அருகிலிருந்த துறைமுகத்தை மல்லியர்பா எனக் குறிப்பிடுகின்றார். இது மயிலாப்பூர் என்பதன் கிரேக்க உச்சரிப்பாகத் தெரிகின்றது. தமிழ் ஒலியியல் ஆய்வுக்குப் பிறநாட்டாரின் குறிப்புகள் மிகுதியும் பயன்படுகின்றன.

### 9.கிளைமொழிகள் (Dialects)

மொழியியல்துறையில் கிளைமொழிகள் முக்கிய இடம்பெறுகின்றன. மொழிக்குடும்ப வரலாற்றை அறிவதற்கு மொழியும், மொழி வரலாற்றிற்குக் கிளைமொழிகளும் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. எழுத்துச் சான்றுகளைக்கொண்டு மொழி வரலாற்றை எழுத முடியும். ஆனால் எல்லா மொழிக்கும் எழுத்துச்சான்றுகளை எதிர்பார்க்கமுடியாது. ஒருமொழியை முழுமையாக அறிவதற்கு இலக்கியச்சான்றுகள் மட்டும் போதுமானவையாக இருக்கமுடியாது. அம்மக்கள் பேசும் பேச்சு வழக்கினையும் அறிய வேண்டும். அதனால்தான் தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம் "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்" என்று குறிப்பிடுகின்றது. எனவே ஒரு மொழியைப் பற்றி அறிய முனையும்பொழுது பேச்சு வழக்கினையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பேச்சுமொழியின் சிறப்பியல்புகளையும், புதிய பொருள்கள், இலக்கண அமைப்பு முதலியவற்றையும் வகைப்படுத்தும்பொழுது மொழியை முழுமையாக அறியமுடியும்.

கிளைமொழியியலாளர் தாங்கள் சேகரித்த மொழிச்செய்திகளை வரலாற்று அடிப்படையில் எந்தச் சொல் யாரால் எங்கு எந்தப் பொருளில் வழங்கப்பட்டது என்றும் பிறமொழிக் கூறானால் அஃது எந்த மொழியின் குறுக்கீட்டால் வந்தது என்றும் விளக்கம் காணலாம். கிளைமொழி ஆய்வால் பேச்சு வழக்கின் சிறப்பு இயல்புகளையும் பழைய வழக்குகளையும் அறியலாம்.

கிளைமொழிகளை நன்கு ஆராயும்பொழுது பல்லாயிரக்கணக்கான சொற்கள் தமிழ்ப் பேரகராதியில் இடம் பெறுவதோடு தமிழ்மொழியும் வளம்பெறும். கிளைமொழியியல் மொழி வரலாற்றிற்கும் ஒப்பிலக்கணத்திற்கும் பெருந்துணைபுரிகின்றது. மேற்குக் கிளைமொழிதான் மலையாளமொழியாக வடிவம் பெற்றுள்ளது என்று மொழியியல் அறிஞர் செ.வை.சண்முகம் அவர்கள் குறிப்பிடுவார்.

எழுத்துச்சான்று இல்லாத மொழிகளின் வரலாற்றை அறிவதற்குக் கீழ்க்காணும் நான்குமுறைகளைப் பயன்படுத்துவர்.

1.அக மீட்டுருவாக்கம் (Internal reconstruction)

2.கிளைமொழி புவியியல் (Dialect geography)

3.புற மீட்டுருவாக்கம் அல்லது ஒப்பியல்முறை (External reconstruction or comparative method)

4.சொற்கோவைப் புள்ளியியல் (Glottochronolgy)

இம்முறைகளில் நிறை குறை இருப்பினும் இவை மொழி ஆய்வுக்குப் பெரும் துணைபுரிகின்றன. அகமீட்டுருவாக்கம் மூலமாக ஒலி மாற்றத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் தனித்தனியாகப் பிரிந்துசெல்லும் காலத்தைக் கணக்கிடுவதற்குச் சொற்கோவைப் புள்ளியியல் என்பர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல்வேறு மொழிகளுக்கும் பொதுவான பொதுச்சொற்களைக் கொண்டு ஆராய்கின்றனர். அவை அதிகமாகப் பயின்றுவரும் தன்மை, பொதுமை, நிலைத்து நிற்கும் தன்மை ஆகிய இயல்புகளைப் பெற்றிருக்க வேண்டும். இதன் துணைகொண்டு மொழிகளுக்கு இடையே உள்ள தொடர்பை அறியவும், மொழிகள் பிரிந்த காலத்தைக் கணக்கிடவும் முடியும்.

மொழி வரலாற்றை ஆராய்வதற்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவது ஒப்பியல்முறையாகும். ஒரு குடும்பத்தின் பல்வேறு மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் முறைதான் ஒப்பியல்முறை என்கின்றனர். பல மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்து அவையனைத்தும் தொல்மொழி ஒன்றிலிருந்து கிளைத்திருக்கவேண்டும் என்று ஒப்பியல் ஆய்வறிஞர்கள் கூறுவர். திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளை ஆராய்ந்து இவை யாவும் ஒருமொழியிலிருந்து கிளைத்திருக்கவேண்டும் என்று சில அறிஞர்கள் குறிப்பிடுவர். அதுபோல் தமிழிலிருந்து பிறமொழிகள் கிளைத்திருக்க வேண்டும் என்று கூறும் அறிஞர்களும் உண்டு.மேற்கண்ட செய்திகளிலிருந்து மொழி ஆய்வுக்குப் பயன்படும் ஆய்வுமூலங்களை அறிந்துகொண்டோம்.

**தொல்காப்பியத் தமிழ்**

தமிழில் காணப்படும் பழைமையான நூல் தொல்காப்பியமாகும். இந் நூல் தோன்றுவதற்கு முன்பே தமிழில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். அதுபோல் இலக்கண நூல்களும் தோன்றியிருக்க வேண்டும் என்பதை இந்த நூலில் இடம்பெறும் 'என்மனார் புலவர்', 'என்ப' என்னும் தொடர்களால் அறியலாம்.

திராவிடமொழிகளுள் தொல்காப்பியம் குறிப்பிடத்தகுந்த நூலாக விளங்குகிறது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று பகுத்துக்கொண்டு தொல்காப்பியர் குறிப்பிடும் செய்திகளையும் முறைகளையும் நோக்கும்பொழுது தொல்காப்பியரின் பேரறிவு நமக்கு விளங்குகின்றது.

தொல்காப்பியரின் காலம் பற்றிய கருத்தில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. மறைமலையடிகளார், வெள்ளை ாரணனார் போன்றோர் இறையனார் களவியல் வழி நின்றும் அகச்சான்றுகள், புறச்சான்றுகள் அடிப்படையிலும் தொல்காப்பியர் காலத்தைக் கி.மு.5000 ஆண்டுகள் என்று மதிப்பிடுகின்றனர். நாவலர் சோமசுந்தரபாரதியார் வடமொழி இலக்கண நூலான அஷ்டாத்தியாயி என்னும் இலக்கண நூலை எழுதிய பாணினியின் காலத்துக்கு முற்பட்டவர் என்று குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் காலம் கி.மு.மூன்றாம்

நூற்றாண்டு என்று இராகவையங்கார் குறிப்பிடுகின்றார். கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு என்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார். பேராசிரியர் தமிழண்ணல் உள்ளிட்ட அறிஞர்கள் தொல்காப்பியர் காலம் கி.மு.711 என்று உறுதி செய்யுமாறு அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

சங்க இலக்கியத்தையும், தொல்காப்பியத்தையும் நுணுகி ஆராய்ந்த அறிஞர்கள் சங்க இலக்கியத்துக்கு முற்பட்டது தொல்காப்பியம் என்று குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியத்தின் நூற்பாக்களின் அமைப்பு, பகுப்புமுறை ஆகியவற்றை உற்றுநோக்கும் மொழியியல் அறிஞர்கள் வியப்படைகின்றனர். ஏனெனில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் அறிவியல் அடிப்படையில் சிந்தித்து எழுதப்பட்டுள்ளது என்பதே அவ்வியப்புக்குக் காரணம் ஆகும்.

ஒரு மொழிக்கு இலக்கணம் எழுதும்போது முதலில் அதன் ஒலியன்களையும் ஒலியன்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களையும் உருபன்களையும் தொடரமைப்பைப் பற்றியும் வரிசையாக விளக்குவர். இவற்றை எழுத்தியல் (Phonology), புணரியல் (Morphophonemics), உருபனியல் (Morphology) தொடரியல் (Syntax) என்றும் கூறலாம். தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் எழுத்தியல், புணரியல் பற்றியும் சொல்லதிகாரத்தில் உருபனியில், தொடரியல் பற்றியும் கூறியுள்ளார். இன்றைய மொழியியல் வளர்ச்சியின் வித்து தொல்காப்பியத்தில் உள்ளது என்று பேராசிரியர் சு.சக்திவேல் குறிப்பிடுவார்.

தொல்காப்பியரின் ஒலியனியல் கொள்கையும் ஒலியுறுப்புக்கள், ஒலிக்கும் முறை, ஒலியின் பாகுபாடு ஆகியவை பற்றிய அவரது அறிவாற்றலும் இன்றைய மொழியியலாரும் வியக்கும் வண்ணம் உள்ளது. தொல்காப்பியர் ஒலியன் பற்றிய கொள்கையுடையவர் என்பதை உய்த்துணரமுடிகிறது. முதல் எழுத்து, சார்பெழுத்து பற்றிய பகுதிகள் இதை உணர்த்துகிறது.

ஒலியியல், உச்சரிப்பொலியியல் (Articulatory Phonetics), பௌதிக ஒலியியல் (Acoustic Phonetics), கேட்பொலியியல் (Auditory Phonetics) என்ற மூன்று வகையாக அமையும். தமிழ் ஒலிகளின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியர் பிறப்பியலில் தெளிவாக விளக்கியுள்ளார். தொல்காப்பியர் பிறப்பியலில் ஒலிப்பான்களையும் (articulators), ஒலிப்பு முனைகளையும் (Point of articulation), ஒலிப்பு வகைகளையும் (manner of articulation) அடிப்படையாகக் கொண்டு தமிழ் ஒலிகளை விளக்கியுள்ளார். நா, இதழ் முதலிய இயங்கும் உறுப்புக்கள் ஒலிப்பான்களாகும்.

இவ்வுறுப்புக்கள் தொடுகின்ற பல், அண்ணம் ஒலிப்பு முனைகள் எனப்படும். அங்காத்தல், ஒற்றல், வருடல், அணருதல் என்பன ஒலிப்புமுறைகளை விளக்குவனவாகும்.

தொல்காப்பியர் முதலில் பன்னிரண்டு உயிர் எழுத்துகளின் பிறப்பினை விளக்குகின்றார். பின்னர் பதினெட்டு மெய்யெழுத்துகளின் பிறப்பிடங்களைக் குறிப்பிடுகின்றார். அடுத்துக் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற சார்பெழுத்துகளையும் தொல்காப்பியர் குறித்துள்ளார்.

தொல்காப்பியர் பன்னிரு உயிர்களின் பிறப்புப் பற்றிப் பேசும்பொழுது 'மிடற்றுப் பிறந்த வளி' என்ற தொடரைப் பயன்படுத்துகின்றார். ஒலி உறுப்புகளை ஏற்படுத்தும் ஒலி அதிர்வுகளே 'மிடற்றுப் பிறந்த வளி' என்ற சொல்லால் சுட்டப்படுகிறது. ஒலிப்புமுறையை அடிப்படையாக வைத்து உயிர் எழுத்துகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1.அ,ஆ

2.இ,ஈ,எ,ஏ,ஐ

3.உ,ஊ,ஒ,ஓ,ஔ

தொல்காப்பியர் பிறப்பியலில் எழுத்துகளின் பொதுப்பிறப்பைக் கூறிய பின், உயிர் எழுத்துகளின் சிறப்புப் பிறப்பு பற்றிக் கூறுகின்றார்.

எழுத்துகளின் பொதுப்பிறப்பைப் பற்றி,

"உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியலத்
திறப்படத் தெரியுங் காட்சி யான"

என்னும் நூற்பாவில் விளக்குகின்றார்.

மேலும் உயிர் எழுத்துகளின் பிறப்பினைப் பின்வரும் நூற்பாவில் விளக்குகின்றார்.

"அவ்வழிப்
பன்னீ ருயிரும் தம்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்" - பிறப்பியல் 2

"அவற்றுள்
அ ஆ ஆயிரண்டும் அங்காந்து இயலும்" - பிறப்பியல் 5

"இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய" - பிறப்பியல் 4

"உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்" - (பிறப்பியல் 5)

அகரமும் ஆகாரமும் வாயைத் திறந்தாலே பிறக்கின்றன. இவற்றைக் கீழ் நடு உயிர் என்பர். அ, ஆ இவ்விரண்டும் வாயைத் திறப்பதால் பிறக்கின்றன. எனவே இவற்றை அங்காப்புயிர் என்பர். இ,ஈ,எ,ஏ,ஐ முன்னுயிர்கள் என்றும் உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவை குவியுயிர் என்றும் விளக்கப்பட்டுள்ளன. அ என்பது அங்காப்புயிர் என்றதால் மற்ற உயிர் எழுத்துகளை மூடுயிர் (close vowel) என்பர்.

**மெய்யொலிகளின் பிறப்பு**

தொல்காப்பியர் நாவினை மூன்றாகப் பகுத்துள்ளார். அவை முதல், இடை, நுனி என்பனவாகும். முதல்நா அண்ணம், இடைநா அண்ணம், நுனிநா அண்ணம் என்ற தொடர்கள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

தொல்காப்பியர் மெய்யெழுத்துகள் பதினெட்டினையும் வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பிரிக்கின்றார். பதினெட்டு மெய்களில் யகர வகர இரண்டு மெய்களுக்கும் தனித்தனி இலக்கணம் கூறுகின்றார். மற்ற மெய்களைப் பற்றிப் பேசும்பொழுது இரண்டிரண்டு மெய்களுக்குப் பிறப்பிடம் கூறி விளக்குகின்றார்.

**கடைநா(back of the tongue) ஒலிப்பானாக அமைதல்**

**கடைநா கடையண்ண ஒலி:**

கடைநா கடையண்ணத்துடன் பொருந்தும்போது கடையண்ண வெடிப்பொலியான ககர மெய்யும், அதற்கு இணையான மூக்கொலியான நகர மெய்யும் பிறக்கின்றன. இதனைத் தொல்காப்பியர்

'ககார ஙகாரம் முதல் நா அண்ணம்' (பிறப்பியல்7) என்று குறிப்பிடுகின்றார்.

**இடைநா(centre of the tongue) ஒலிப்பானாக அமைதல்**

இடைநாவானது அண்ண உச்சிக்கு அருகிலுள்ள இடையண்ணத்துடன் பொருந்துவதால் இடையண்ண ஒலிகள் பிறக்கின்றன. இடையண்ணத் தடையொலியான 'ச'வும் இடையண்ண மூக்கொலியான 'ஞ'வும் பிறக்கின்றன.

'சகார ஞகாரம் இடைநா அண்ணம்' -(பிறப்பியல் 8)

என்பது தொல்காப்பியம்.

**நுனிநா ஒலிப்பானாக அமைதல்**

'நுனிநா' என்று தொல்காப்பியர் கூறும் ஒலிப்பான் மிகுந்த ஆய்வுக்கு உரியதாகும். நாவின் நுனி பலவாறு இயங்கும் வகையில் அமைந்துள்ளது. எனவே நா நுனி அண்ணத்தைத் தொடும் இடம் வெவ்வேறாக ஆவதற்கு இயைய வெவ்வேறு ஒலிகள் பிறக்கும். நுனிநா அண்ணத்திற்குத் தொல்காபியர் அண்பல் தடையொலி (alveolar plosive),

உரசொலி (fricative), மருங்கொலி (lateral) என்ற மூன்றினைக் கூறியுள்ளார்.

**அண்பல் ஒலி (நுனி நா -நுனியண்ண ஒலி)**

நாவானது அண்ணத்தைத் தொடுவதால் ஒலியன் இயல்பு மாறுபடுகிறது. தமிழில் டகரத்தின் தொடுமிடம் வல்லண்ணத்தின் உயரத்தே செல்கின்றது. நாவின் நுனியாகவும் மாறுகிறது.

'டகார ணகாரம் நுனி நா அண்ணம்' - (பிறப்பியல் - 9)

எனத் தொல்காப்பியம் கூறிச் செல்கின்றது.

தொல்காப்பியர் டகரத்திற்கும் றகரத்திற்கும் ஒலிப்புமுறையில் சிறு வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றார்.

'நுனிநா அணரி அண்ணம் ஒற்ற

றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்'- (பிறப்பியல் 12)

நாவின் நுனி மேல்நோக்கிச்சென்று அண்ணத்தைத் தொட றகரம், னகரம் ஆகிய இரு எழுத்துகளும் பிறக்கும். நா மேல் நோக்கிச் சிறிது வளைதலை 'அணரி' என்ற சொல்லால் தொல்காப்பியர் விளக்குகின்றார். நாமடிதலாகிய இவ்வியல்பு மகரத்திற்குப் பொருந்துமேயன்றி டகரத்திற்குப் பொருந்தாது. டகரத்திற்கு நா விளிம்பு பொருந்துதலும் றகரத்திற்கு நா நுனி பொருந்துதலும் வேண்டும். தமிழ் வடமொழியுடன் உறவுகொண்ட காலத்தில் டகரம் வளைநா ஒலியாக மாறிவிட்டது. எனவே றகரம் பிறழ்ந்து ஒலிக்கத்தொடங்கியது. இன்று றகரம் ஆடொலியாக ஒலிக்கின்றது.

**உரசொலிகள்** (Fricatives)

நுனிநா அண்ணத்தால் பிறக்கும் இரண்டாவது வகை ஒலிகள் அண்பல் உரசொலியும் நுனிநா உரசொலியும் ஆகும். அவை முறையே ரகரமும் ழகரமும் ஆகும்.

'நுனிநா அணரி அண்ணம் வருட

ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்' - (பிறப்பு 13)

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். நுனி நா அண்ணம் ஒற்ற றகர னகரம் பிறக்கும் என்கின்றார். வருட, ஒற்ற என்ற சொற்களைப் பயன்படுத்தித் தொல்காப்பியர் சில ஒலிப்புமுறைகளைக் கவனமுடன் பயன்படுத்தியுள்ளார்.

**மருங்கொலி** (Lateral)

நுனிநா அண்ணத்தால் பிறக்கும் மூன்றாவது வகை ஒலிகள் லகரமும் ளகரமும் ஆகும்.

'நா விளிம்பு வீங்கி அண்பல் முதலுற

ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்

லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்' - (பிறப்பியல் 14)

லகரம் மேல் அண்ணத்தின் இடையில் பல்லையொட்டித் தடையெழுவதால் பிறக்கின்றது. இவ்வொலி பிறக்கும்பொழுது நாக்கின் ஓரம் விரிந்து அருகேயுள்ள பற்களில் ஏறி, வீங்கி ஒற்றி நிற்கும். அதுபோல் நா விளிம்பு வீங்கி அண்பல் முதலுற்று அண்ணத்தை வருடப் பிறக்கும் ளகரத்திற்குத் தொல்காப்பியர் நாநுனி அணருதலைக் குறிப்பிடவில்லை.ஆனால் ழகரத்திற்கு நா நுனி அணரி அண்ணத்தை வருடுதலைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**சார்பெழுத்துகள்**

தொல்காப்பியர் தமிழ் எழுத்துகள் முப்பது(அகர முதல் னகர இறுவாய்) என்றும் அவற்றுடன் சார்பெழுத்துகள் மூன்று இணைந்து வரும் என்றும் குறிப்பிடுவார். அவ்வாறு இணைந்துவரும் சார்பெழுத்துகள் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்பனவாகும். இதனை,

"அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன" (நூன்மரபு 2)

என்னும் நூற்பாவால் அறியலாம்.

**குற்றியலுகரம்:**

குற்றியலுகரம் உகரத்திலிருந்து வேறுபட்டது. உயிரை ஒலிக்கின்றபோது காற்று வெளிப்படுவதுபோல உகரமேறிய தடையொலியையும் ஒலிக்கும்போதும் காற்று வெளிப்படுகின்றது. தொல்காப்பியர் குற்றியலுகரத்துக்குத் தனியாக ஒலிப்பிடமோ ஒலிப்புமுறையோ கூறவில்லை. நச்சினார்க்கினியர் குற்றியலிகரம், குற்றியலுகரம்ஆகிய இரண்டும் தத்தம் முதலெழுத்துப் பிறக்கும் இடத்தில் பிறக்கும் என்றும் எஞ்சிய ஆய்தம் தலைவளியால் பிறக்கும் என்றும் கூறியுள்ளார். ஒரே உகரம் ஆறு இடங்களில் வெவ்வேறாக ஒலிக்கும் என்கின்றார். இவை ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

உகரம் சொல்லின் இடையில் வரும்பொழுதும் நெடில் தடையொலியால் தொடரும்பொழுதும் விடுநிலை ஒலியாகவே ஒலிக்கும். இச்சூழலில் தொடரும் தடையொலி இரட்டிக்கும்.

எ.கா: பாக்கு+ கடிது = பாக்குக்கடிது

**குற்றியலிகரம்**

குற்றியலுகரத்தின் திரிபு குற்றியலிகரம் என்று இலக்கண நூல் வல்லார் குறிப்பிடுவது உண்டு. குற்றியலிகரத்தில் உள்ள இகரம் ஒருவகை விடுநிலை(release)ஒலியாகும். மொழியியலார் குற்றியலுகரத்தின் இடமாறுபாடு குற்றியலிகரம் என்பர். குற்றியலுகரத்தை ஈறாக உடைய சொல்லை யகர மொழிமுதல் சொல் தொடர்ந்தால், உகரம் இகரம் ஆகும்.

எ.கா:பாக்கு+யாது= பாக்கியாது

குற்றியலிகரம் சொல்லிலும் காணப்படுகின்றது. ஒரு சொல்லில் மகரத்தைத் தொடர்ந்து யா வரினும் மகரம் இகரத்தைப் பெறும்.

கேண்ம்+யா= கேண்மியா

சென்ம்+யா= சென்மியா

**ஆய்தம்**

உயிர் எழுத்துகளின் வரிசைக்கும் மெய் எழுத்துகளின் வரிசைக்கும் இடையே உள்ளது ஆய்தம். சில இடத்து உயிர்போலவும் சில இடத்து மெய்போலவும் அலகுபெறுகின்றது. இதனைத் தொல்காப்பியர் தனி ஒலியனாகக் கருதவில்லை. ல், வ், ள் என்று முடியும் ஓரசைச்சொற்களுக்கு முன்னே தடையொலி வந்தால் அது இரட்டிக்கும்.

1.அவ்+கடிய > அக்கடிய

2.கல்+தீது > கற்றீது

3.முள்+தீது > முட்டீது

**மொழிமுதலாகும் எழுத்துகள்**

தொல்காப்பியர் சில மெய்யெழுத்துகள் சில உயிர்களுடன் மட்டும்தான் இணைந்து மொழிக்கு முதலில் வரும் என்று குறிப்பிடுகின்றார். யகரம் ஆவோடுதான் மொழிமுதலாகும். இடையண்ண ஒலிகளான ய, ஞ, ச என்பன அகரத்துடன் மொழி முதலாகாது. சில சூழ்நிலைகளில் அகர எகரங்கள் மயங்குகின்றன. வகரமெய் இதழ் ஒலிகள் உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்குடன் சேர்ந்து மொழிமுதலில் வாரா. ப, த, க, ச, ம, ந, ஞ, வ, ய முதலியவை மொழிமுதலில் வரும்.

ய என்பது மொழிக்கு முதலாக வருகின்ற க,த,ந,ப,ம,ச,வ,ஞ ஆகிய எட்டு எழுத்துக்களுடனும் கூடி வரும்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

க் . . . . . . . . . . .

ங் மொழிமுதலாகாது

ச் . . . . . . . . . . . .

ஞ் .

ட், ண், ர், ல், ழ், ள், ற் ன் என்னும் இந்த எழுத்துகள் மொழியின் முதலில் வாரா. .

**மொழி இறுதியாகும் எழுத்துகள்**

ஔ நீங்கலாக ஏனைய பதினொரு உயிர் எழுத்துகளும் மொழிக்கு இறுதியாக வரும். ககர வகரங்களுடன் இணைந்து ஔகாரமும் மொழிக்கு இறுதியில் வரும். எகரம் எந்த மெய்யுடனும் மொழிக்கு ஈறாகாது. நகரத்துடன் மட்டும் ஒகரம் ஈறாகும். ஏ,ஓ என்னும் உயிர்களுடன் ஞகரம் ஈறாவதில்லை. உகர ஊகாரங்கள் நகர வகரங்களுடன் ஈறாகாது. உச்சகாரம் இருமொழியில்தான் வழங்கின(எ.கா.உசு முசு) உப்பகாரம் ஒரு சொல்லில் வழங்கியது(எ.கா.தபு)

வல்லொலிகள் ஆறும் மொழிக்கு ஈறாகாது. குற்றியலுகரம் ஈறாகும். மெல்லொலிகளில் ங தவிர ஏனைய ஐந்தும் ஈறாகும். இடையெழுத்துகள் ஆறும் ஈறாகும். மெய்யெழுத்துக்களில் ஞ,ண,ந,ம,ன,ய,ர,ல,வ,ழ,ள என்னும் பதினொன்றும் ஈறாகும். நகரம் இருசொற்களில் ஈறாகும்.

(எ.கா.பொருந்,வெரிந்.)

ஞாகரம் 'உரிஞ்' என்ற சொல்லில் ஈறாகும். வகரமெய் நான்கு சொற்களில் ஈறாகும்.

(எ.கா.) அவ், இவ், உவ், தெவ்.

மகர ஈற்றுச்சொற்களுடன் மயங்காத னகர ஈற்றுச்சொற்கள் ஒன்பதாகும். எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் முதலியன் சார்பெழுத்துக்களில் குற்றியலுகரம் ஈறாகும். ஏனைய இரண்டும் மொழிக்கு இடையில்தான் தோன்றும்.

**மயக்கம்**

மயக்கம் = கூட்டம்.எழுத்துகள் ஒன்றுடன் ஒன்று கூடி வருங்கால் தம்மொடு தாமே கூடி வருவனவும், தம்மொடு பிறவே கூடி வருவனவும், தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் கூடி வருவனவும் என முத்திறத்தன. எழுத்துகள் உயிர், மெய், உயிர்மெய் என மூவகைப்படும். இவற்றுள் உயிருடன் உயிர் கூடி வருவது இல்லை. உயிர்மெய்முன் உயிர்மெய் கூடி வருவதற்கு வரையறை இல்லை. எனவே இடைநின்ற மெய்யெழுத்துக்களே தம்மொடு தாமும், தம்மொடு பிறவும் மயங்கி வரும். இம்மயக்கத்தையே தொல்காப்பியர் தம் நூலுள் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் தம்மொடு தாம் மயங்கும் மயக்கத்தை உடனிலை மயக்கம் எனவும் தம்மொடு பிற மயங்கும் மயக்கத்தை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றும் குறிப்பிடுவார்.

**உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

**உயிர் மயக்கம்**

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு உயிர்மயக்கம் பெருவழக்காக இருந்துள்ளது. அவர் காலத்திலும் அதன் பிறகும் குறையலாயிற்று. மொழியிடையில் மெய்கள் மயங்கி வருவதில் தொல்காப்பியர் காலத்துக்கும் நன்னூலார் காலத்துக்கும் அதிக வேறுபாடில்லை.உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்ற இரண்டு பற்றியும் தொல்காப்பியர் பேசியுள்ளார்.

**உடனிலை மெய்ம்மயக்கம்**

க,ச,த,ப என்ற நான்கு எழுத்துகளும் தம்மொடு தாமே மயங்குவனவாகும்.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

ர, ழ என்பன க, த, ந, ப, ம, ச, வ, ஞ, ங ஆகிய ஏழு எழுத்துகளுடன் மயங்கி வருவனவாகும்.

**தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் மயங்குவன**

தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் என்ற நிலையில் வரும் எழுத்துகள் பன்னிரண்டு ஆகும். அவை ட, ற, ல, ள, ங, ஞ, ண, ந, ம, ன ,வ, ய என்பன.

ட,ற என்பன க,ச,ப ஆகிய மூன்றுடன் கூடி வரும்;

எ.கா: கட்க, கற்க, கற்சிறார், கட்ப

ல,ள என்பன க, ச, ப, ய, வ ஆகிய ஐந்து எழுத்துடன் கூடி வரும்.

எ.கா.கொள்யானை,கோல்வளை

நகரம் ககரத்துடனும், ஞகரம் சகர யகரங்களுடனும், ஞகரம் தகர யகரங்களுடனும் கூடி வரும்.

எ.கா. தெங்கு, மஞ்சு, வண்டு, பந்து

மகரம் பகர,யகர,வகரங்களுடன் கூடி வரும்.

எ.கா. நிலம்வலிது

ணகரம் ட, க, ச, ஞ, ப, ம, ய ஆகிய ஏழு எழுத்துகளுடனும் மயங்கும்.

எ.கா. வெண்கலம்,புன்கண்,வெண்சாந்து,புன்செய்,

னகரம், ட, க, ச, ஞ, ப, ம, ய, வ ஆகிய எழுத்துகளுடனும் கூடி வரும்.

எ.கா.புன்செய், பொன்பெரிது, பொன்யாது, பொன்வலிது

வகரம் யகரத்துடன் கூடி வரும்.

எ.கா.தெவ்யாது

**எண்ணுப்பெயர்கள்**

இலக்கண நூலார் எண்ணுப்பெயர்களைப் பெயர்வகைகளில் ஒன்றாகக் குறிப்பிடுவர். தொல்காப்பியர் எண்ணுப்பெயர்களைப் பெயர்களாகக் கொண்டு பெயரியலில் கூறியுள்ளார். எண்ணுப் பெயர்களுக்குப் பெயர் வடிவம்,பெயரடை வடிவம் என இருவகை வடிவங்கள் உண்டு. பெயர் வடிவம் தனித்து இயங்குவது. பெயரடை வடிவம் கட்டுருபனாக இயங்குவது.

**ஒன்று:**

இதன் மாற்றுருபுகளாக ஓர்,ஒர்,ஒரு,ஒன்று ஆகிய வடிவங்கள் காணப்படுகின்றன.

"ஓர்" என்பது உயிர் எழுத்துகளைத் தொடக்கத்தில் கொண்ட சொற்களுக்கு முன்பாக வரும்.

எ.கா: ஓர் -அளபு, (தொல்.எ.3.3)

ஓர் - எழுத்து, (தொல்.எ.5.1)

ஓர் - இடத்து, (தொல்.பொ.86.1)

ஓர் - ஆயிரம், (தொல்.எ.464)

'ஒரு' மெய்ம் முதல் சொற்களின் முன்னும்,மெய்ம் முதலாகவுடைய விகுதிகளின் முன்னும் வருகின்றது.

ஒரு-பெயர் தொல்.எ.254.1

ஒரு வினை தொல்.சொ.73.7

ஒரு மொழி தொல்.எ.431

ஒரு பான் தொல்.பொ.453.1

ஒருமை தொல்.சொ.167.2

ஒன்று தனிவடிவமாகவும் வருகின்றது

ஒன்று-தொ.பொ.75.1

**இரண்டு:** இரண்டு என்பதன் மாற்று உருபுகள் இரு,இர்,ஈர்,இரண்டு என்பனவாகும்.

"இரு" மெய்ம் முதல் சொற்களின் முன் வருகின்றன.

இரு-பெயர்,தொல்.எ.272.1

இரண்டு தனிவடிவமாகவும் பிற இடத்திலும் வருகின்றன.

இரண்டு-தொல்.எ.104.2

**மூன்று:** இதன் மாற்று உருபுகள் மு,மூ,மூன்று

'மு' மெய்ம் முதற் சொற்களின்முன் வருகின்றது.

மு-பது> முப்பது-தொ.எ.1

மூ-எழுத்து மூவெழுத்து தொ.எ.23.2

மூன்று- தொல்.சொ.73.1

**நான்கு:** இதன் மாற்று உருபுகள் நால்,நான்கு

நால் என்பது பெயர்களுக்கு முன் வருகின்றது.

நால்-சொல்> நாற்சொல்

நான்கு தனிவடிவமாகவும் பிற இடத்தில் வருகின்றது.

நான்கு-தொல்.172.3

**ஐந்து:** இதன் மாற்று உருபுகள் ஐ-ஐந்-ஐம்-ஐந்து

'ஐ' உயிர் முதல் அரை உயிர் முதற்சொற்களுக்கு முன் வருகின்றது.

ஐ-வகை-தொல்.பொ.357.1

ஐந்-நூறு= தொ.எ.400

**ஆறு:** ஆறு என்பதன் மாற்று உருபுகள் அறு,ஆறு

'அறு' மெய்ம்முதல் சொற்களுக்கு முன் வருகின்றது.

அறு-மூன்று தொ.சொ.57.6

ஆறு பிற இடங்களில் வருகின்றது

ஆறு-தொல்.சொ.22.1

**ஏழு:** இதன் மாற்று உருபு எழு,ஏழ்

எழு மற்ற பெயர்களுக்கு முன் வருகின்றது

எழு-பது தொ.பொ.35.7.3

ஏழ் தனியாகவும் மற்ற இடத்திலும் வருகின்றது.

ஏழ்-தொ.எ.4.2

பதின்-ஏழ் தொ.பொ.357.2

**எட்டு:** இதன் மாற்று உருபுகள் எண்,எட்டு

எண்-சீர் தொல்.சொ.400.2

எண்-வகை தொ.பொ.623.1

எட்டு-தொல்.பொ.283.3

**ஒன்பது:** இதன் மாற்று உருபுகள் ஒன்பதின்-ஒன்பதிற்று,ஒன்பான்,தொண்டு

ஒன்பதின் - துறைத்து தொல்.பொ.75.24

ஒன்பதிற்று- தொல்.எ.171.1

ஒன்பான்- தொ.எ.450,470

தொண்டு தனியாக வருகின்றது

தொண்டு-தொல்.பொ.406.3

ஒன்பது ஒன்பஃது உறழ்ச்சியாக வருகின்றன.

ஒன்பது-தொல்.எ.37

ஒன்பது என்பதைக் கூட்டுச்சொல்லாகக் கொண்டு பது-என்பது பத்து என்பதின் மாற்று உருபாகும்.

**பத்து:** இதன் மாற்று உருபுகள் பது-பஃது-பன்-பதின்-பான்-பத்து

பது,பஃது உறழ்ச்சியாக வருகின்றன.

இரு-பது

இரு-பஃது-தொல்.எ.104.2

ஒரு-பான்

பத்து-தொ.சொ.216.6

**நூறு:** மாற்றுருபுகள் நூறு,நூற்று

நூறு தொல்.எ.460.1

அறு+நூற்று+இரு+பத்து+ ஐந்து= அறுநூற்றிருபத்தைந்து தொ.பொ.357.4

நூறு-ஆயிரம் > நூறாயிரம்- தொல்.எ.471.1

தொல்காப்பியத்தில் ஆம்பல் (393), தாமரை (393) வெள்ளம் (393) என்பன பேரெண்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வேற்றுமை**

"வேற்றுமை தாமே ஏழென மொழிப" (தொல்.சொ.62)

என்று வேற்றுமை பற்றி குறிப்பிடும் தொல்காப்பியர் அடுத்த நூற்பாவில்

"விளிகொள் வதன்கண் விளியொ டெட்டே" தொல்.சொ.63
என்று விளியுடன் வேற்றுமை எட்டு என்கின்றார்.

வேற்றுமைகள் உருபாலும் வடிவாலும் பெயர் பெற்றிருந்தன என அறியமுடிகின்றது.

எழுவாய்,விளி வேற்றுமைகள் வடிவத்தால் பெயர் பெற்றவை. ஐயெனப் பெயரிய, இன்னெனப் பெயரிய, அதுவென் பெயரிய, கண்ணெனப் பெயரிய, என்றெல்லாம் தொல்காப்பியர் உருபாலும் வடிவத்தாலும் பெயர்சுட்டியுள்ளார்.

அதுபோல் தொல்காப்பியர் வேற்றுமைகளை எண்வகையால் இரண்டாகுவதே, மூன்றாகுவதே, நான்காகுவதே, ஐந்தாகுவதே, ஆறாகுவதே, ஏழாகுவதே எனப் பெரிட்டு வழங்குகின்றார்.

வடமொழியைத் தழுவி வேற்றுமை எட்டு என்று வரையறை செய்ததாகக் கால்டுவெல் கருதுகிறார்.

வேற்றுமைகள் எட்டு என்பதை,

"அவைதாம்
பெயர்,ஐ ஒடு கு
இன் அது கண் விளி யென்னும் ஈற்ற" (தொல்.சொல்.64)

என்னும் நூற்பா வழி விளக்கியும்,

" கூறிய முறையில் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப" (தொல்.பொரு.69)

என்ற நூற்பாவில் வேற்றுமையும் அதன் உருபும் பெயரின் ஈற்றில்தான் அமையும் எனக் குறிப்பிடுகின்றார். பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்குங்கால் அப்பெயர்களின் பின்னாகிய இடத்தின்கண்ணே சாரியை வருதலைத் தொல்காப்பியர்,

"அவற்று வழி மருங்கிற் சாரியை வருமே" (தொல்.எ.118)

என்கின்றார். எனவே வேற்றுமை உருபுகள் பெயர்ச்சொல்லுடன் நேரடியாக இணைந்து நிற்றலும் இடையில் சாரியை அமைய அதன் பின்னர் வருதலும் உண்டு.

**எழுவாய் வேற்றுமை:**

தொல்காப்பியர்,

"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே" (தொல்.சொல்.65)

எனக் கூறுவதால் முதல் வேற்றுமையைப் பெயர் என்றும், எழுவாய் என்றும் பொருளின் பெயரால் குறிப்பிட்டுள்ளார். எழுவாய் வேற்றுமை என்றதனால் முதல் வேற்றுமை எழுவாயாகச் செயலாற்றுவது மட்டுமின்றி அவ்வேற்றுமை ஏற்கும் அறுவகைப் பயனிலைகளையும் கூறியுள்ளது. (தொல்.சொல்.66)

**இரண்டாம் வேற்றுமை:**

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ ஆகும். இரண்டாம் வேற்றுமையின் பொதுத்தன்மையை,

"எவ்வழி வரினும் வினையே,வினைக்குறிப்பு
அவ்விரு முதலில் தோன்றும்" (தொல். 55)

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

உரையாசிரியர்கள் இவ்வேற்றுமையைச் செயப்படுபொருள் வேற்றுமை என்பர்.

"காவ லோனக் களிறஞ் சும்மே"

என்பதில் இரண்டாம் வேற்றுமைப் பொருள் வந்துள்ளது. இங்கு அகரம் இரண்டாம் வேற்றுமை உருபாக வந்துள்ளது.

மலையாளத்தில் 'அகரமும்', கன்னடத்தில் 'அம்மும்' இரண்டாம் வேற்றுமை உருபுகளாக வந்துள்ளன.

**மூன்றாம் வேற்றுமை:**

மூன்றும் வேற்றுமையின் உருபு ஒடு என்றும் அது வினைமுதல், கருவி என்ற அடிப்படையில் வரும் என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் வேற்றுமை மயங்கியலில் ஆன் என்னும் உருபையும் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் "மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி'' (576) என்று வேற்றுமை மயங்கியலில் குறிப்பதாலும் மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளிலும் வரும் என்பது பெறப்படுகின்றது. சங்க காலத்தில் ஒடு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது. கருவிப் பொருளை உணர்த்த ஆன் உருபு பயன்படுத்தப்பட்டுள்ளது. பிற்காலத்தில் ஆன் என்பது ஆல் ஆயிற்று.ஒடு என்பது ஓடு ஆயிற்று. நன்னூல் ஆசிரியர் ஆன், ஆல், ஒடு, ஓடு என்ற நான்கினையும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாகக் குறிப்பிடுகின்றார். இன்று ஒடுவிற்குப் பதிலாக உடன் என்ற சொல்லுருபு வழங்கப்படுகின்றது.

**நான்காம் வேற்றுமை உருபு:**

நான்காம் வேற்றுமை உருபு கு ஆகும். அது எப்பொருளாயினும் கொள்ளும் எனவும் தொல்காப்பியர் கூறுகின்றார். 'க்கு' இவ்வேற்றுமைக்கு மாற்றுருபாகும். இவ்வேற்றுமை நோக்கு, கொடை, எல்லை, முறை ஆகிய பொருள்களில் வரும். கு பெரும்பாலும் நோக்கற்பொருளில் வழங்கப்பட்டது. இன்று 'ஆக', 'பொருட்டு' என்ற சொல்லுருபுகள் வழங்குகின்றன.

**ஐந்தாம் வேற்றுமை**

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' ஆகும். இது இதனின் இற்று இது (561) என்ற வாய்பாட்டில் வரும். ஆனால் தொல்காப்பியர் அடுத்த நூற்பாவில் ஒப்புப்பொருள், நீங்கல் பொருள், அச்சப்பொருள் ஆகியனவும் கூறியுள்ளார். ஒப்புப்பொருளுக்கு இருபத்தி மூன்று சொற்களும்

ஏனையவற்றுக்கு நான்கு சொற்களும் குறிப்பிட்டுள்ளார். இன்று 'இருந்து', 'நின்று' என்ற சொல்லுருபுகளை 'இல்' உருபொடு வழங்குகின்றோம்.

**ஆறாம் வேற்றுமை:**

ஆறாம் வேற்றுமை மட்டும் பெயர்த்தொடரைப் பற்றியதாகும். ஆறாம் வேற்றுமையின் உருபு அது எனவும், அது 'தன்னிலும் பிறிதினும் இதனது இது' என்னும் கிழமையில் தோன்றும் எனவும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

நச்சினார்க்கினியர் 'ஆது' என்பதையும் ஆறாம் வேற்றுமையாகக் கருதுகின்றார். அது, ஆது, அ ஆகியவற்றையும் ஆறாம் வேற்றுமையின் உருபாக நன்னூலார் குறிப்பிடுகின்றார். அது ஒருமை, பன்மை வேறுபாடு இன்றி இரண்டிற்கும் வழங்கியது. தற்பொழுது 'உடைய' என்ற சொல்லுருபு வழங்கப்படுகின்றது.

**ஏழாம் வேற்றுமை**

ஏழாம் வேற்றுமையின் உருபு கண் என்பதாகும்.அது வினை செய்யிடம், நிலம், காலம் ஆகிய மூன்று பொருள்களில் வரும் என்பது தொல்காப்பயிர் கருத்தாகும். அடுத்த நூற்பாவில் பத்தொன்பது பின்னிணைச் சொற்களைத் தொகுத்து அதன்பால என்கின்றார். இளம்பூரணர் இவற்றை வேற்றுமை உருபுகளாகக் கருதுகின்றார். நன்னூலார் இவற்றை இடப்பொருள் உருபே என்கின்றார். நச்சினார்க்கினியர் வேற்றுமை உருபுகளாகக் கருத, தெய்வச்சிலையாரும் கல்லாடரும் பெயர்களாகவும் உருபுகளாகவும் செயலாற்றுகின்றன என்கின்றனர்.

**எட்டாம் வேற்றுமை**

விளி வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை.பெயர்ச்சொல்லின் ஈறு கெட்டும், திரிந்தும், பிற ஒலிகள் ஈற்றில் இணைந்தும் விளிவேற்றுமை வடிவங்கள் அமைகின்றன. இதன் முதன்மை கருதிய தொல்காப்பியர் விளி வேற்றுமைக்குத் தனி இயலை வைத்துள்ளமை இங்கு நினைக்கத்தக்கது.

**வினை**

தொல்காப்பியர் வினையைக் குறிக்க காலத்தை அடிப்படையாகக் கொண்டு நூற்பாக்களைப் படைத்துள்ளார்.

"காலந் தாமே மூன்றென மொழிப" (தொல்.சொல். 199)

என்று மூவகைக் காலத்தைக் குறிப்பிடுகின்றார். அடுத்த நூற்பாவில்,

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா" (தொல்.சொல். 200)

என்று இறப்பு ,நிகழ்வு, எதிர்வு என்று முக்காலத்தையும் கூறுகின்றார். இறப்பு, எதிர்வு என்ற காலங்களுக்குரிய வினைகள்தாம் தெளிவாக உள்ளன. வினை என்பது குறிப்பாகக் காலம் காட்டும் குறிப்பு வினையாகவும், வெளிப்படையாகக் காலம் காட்டும் தெரிநிலை வினையாகவும் இரண்டு வகைப்படும். குறிப்பு வினையும் உயர்திணைக்கு உரியன, அஃறிணைக்கு உரியன என்று எடுத்துக்காட்டுகளால் விளக்கியுள்ளார். குறிப்பு என்பதை உரையாசிரியர்களும் பிற்கால

இலக்கணப்புலவர்களும் காலத்தைக் குறிப்பதாகக் கருதினர். கச்சினன், கரியன், நல்லவன் போன்ற எடுத்துக்காட்டுகளைக் காட்டுகின்றனர்.

**பெயரெச்சம்**

செய்யும்,செய்த,செய்யா(த) ஆகிய வாய்பாட்டுக் கிளவிகளை இங்குப் பெயரெச்சம் என்ற சொல்லால் குறிக்கின்றனர்.தொல்காப்பியர் இதனைப் பெயரெஞ்சு கிளவி என்ற தொடரால் குறிக்கின்றனர். செய்யும், செய்த என்னும் இருவகை வாய்பாட்டில் வரும் பெயரெஞ்சு கிளவிகள்(179) உயர்திணைப் பெயரோடும் அஃறிணைப் பெயரொடும் வரும். பெயரெஞ்சு கிளவிகள் யாவும் பெயர்கொண்டு முடிவன.

**வினையெச்சம்**

தொல்காப்பியர் வினையெஞ்சு கிளவி (707,713,721,717,940) எனக் குறிப்பதுடன் வினையெச்சம் (717,723) என்றும் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத்தில் வினையியலில் வினையெச்சம் பற்றிப் பேசுவனவாகப் பத்து நூற்பாக்கள் உள்ளன. எழுத்தியலிலும் (223,236), எச்சவியலிலும் (913,915,920) வினையெச்சம் பற்றிப் பேசும் நூற்பாக்கள் உள்ளன. நன்னூலார்

'தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே' (நன்.வினை 23)

என வினையெச்சத்தை வரையறுக்கின்றார்.

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" (தொல்.713)

எனவரும் இந்நூற்பாவிலுள்ள வாய்பாடுகளின் அமைப்பை உடைய எல்லாக் கிளவிகளும் வினையெஞ்சு கிளவிகள் என்பது தொல்காப்பியர் கோட்பாடாகும். மேலும் அவர் பின், முன், கால், கடை, வழி, இடத்து ஆகிய சொற்களைச் சேர்ப்பதன் மூலம் வினையெச்சம் உருவாக்கப்பட்டுள்ளன.

''பின்முன் கால்நடை வழியிடத் தென்னும்
அன்ன மரபின் காலம் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே'' (தொல்.714)

இங்குக் காலம் என்பது காலத்தைக் காட்டக்கூடிய வினையைக் குறிக்கின்றது. வினை என்பது எச்சவினை, முற்றுவினை என இரண்டையும் குறிக்குமாயினும் இங்கு வினை என்பது பெயரெச்சத்தையே குறித்து நிற்கின்றது. பின், முன் முதலிய சொற்களைப் பெயரெச்சங்களோடு சேர்க்கும்பொழுதுதான் அவை வினையெச்சங்களாக மாறி நிற்கின்றன என்ற உண்மையை உரையாசிரியர்கள் தெளிவுப்படுத்தவில்லை. வான், பான், பாக்கு என்பவற்றை ஈறாகக்கொண்டு அமையும் வினையெச்சங்களைப் பற்றித் தொல்காப்பியர் ஏதும் குறிப்பிடவில்லை

எனினும் உரையாசிரியர்கள் 713 ஆம் நூற்பாவில் அவற்றைப் பற்றிப் பேசுகின்றனர்.

**தமிழ் பிராமி**

தமிழ்மொழியில் பல்லாயிரம் கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் காலத்தால் முந்திய கல்வெட்டுகளாகப் பிராமி கல்வெட்டுகள் விளங்குகின்றன. இக்கல்வெட்டுகளின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு என்பர். தமிழகத்தில் கீழ வளைவு, மறுகால்தலை, ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல், திருவாதவூர், விக்கிரமங்கலம், திருப்பரங்குன்றம், மாங்குளம், கருங்காலக்குடி, புகழூர், அரசலூர், மாமண்டூர் போன்ற இடங்களில் இக்கல்வெட்டுகள் கிடைக்கின்றன. மாங்குளம் கல்வெட்டு முன்னைய எழுத்து வடிவிற்கும், புகழூர்க் கல்வெட்டுகள் பின்னைய எழுத்து வடிவிற்கும் சான்றுகளாகும்.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் பேரரசர் அசோகர் ஆண்ட பொழுது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பௌத்த சமயம் பரவிற்று. சமணம், பௌத்த சமயம் இரண்டும் பரவுவதற்குக் காரணம் அச்சமயங்களைச் சேர்ந்த துறவியர்கள் ஆவர். அச்சமயப் பரப்புநர்கள் அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்று அம்மொழிகளின் மூலம் சமயத்தைப் பரவச்செய்தனர். பௌத்த, சமண சமயங்கள் தமிழகத்திலும் பரவின. அவர்களுடைய சமய நூல்கள் பிராகிருத மொழியில் இருந் ததாலும் அம்மொழி எழுத்துகள் பிராமியில் இருந்ததாலும் அவர்கள் மூலம் பிராமி எழுத்துத் தமிழகத்தில் பரவியது. தமிழகத்தில் சமண, பௌத்த சமயத் துறவிகள் பெரும்பாலும் தங்கியிருந்த இடங்கள் குகைகளாகும். குகைகளில் காணப்பட்ட கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. மொழி தமிழாக இருந்தாலும் எழுத்துகள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. குகைக் கல்வெட்டுகளில் காணப்படும் கல்வெட்டுகள் சிறு சொற்களாகவும், சொற்றொடர்களாகவும் எழுத்துகளாகவும் உள்ளன. இக்கல்வெட்டுகளைக் குகைக்கல்வெட்டுகள் எனவும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் எனவும் கூறுவர்.

தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழைமையான குகைக்கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. 20 ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டில் பல குகைக்கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குகைக் கல்வெட்டுகளும் இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகளும் ஒத்துள்ளன. ருநாடுகளிலும் காணப்படும் கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் எழுதப்பெற்றுள்ளன.

வெங்கோபராவ் அவர்கள் கி.பி..1903 இல் கீழவளைவில் பிராமிக் கல்வெட்டைக் கண்டுபிடித்தார். கி.பி.1906 இல் கெமைடு என்னும் ஆங்கிலேயர் மருகால் தலையிலுள்ள கல்வெட்டைக் கண்டுபிடித்தார். கே.வி.சுப்பிரமணிய ஐயர் பன்னிரண்டு இடங்களிலிருந்து முப்பது கல்வெட்டுகளை ஆராய்ந்தார். இருபத்தொரு இடங்களிலிருந்து எழுபத்தொரு பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளை ஆராய்ந்தபொழுது இவற்றில் ஒலிப்புடை ஒலிகளும் மூச்சுடை ஒலிகளும் காணப்படாமையை நோக்கி, இக்கல்வெட்டுகளின் மொழி தமிழ் என்றும், சில பிராகிருதச்சொற்கள் கலந்திருக்கலாம் என்றும் கருதினர். இக்கல்வெட்டுகளில் காணப்படும் பிராகிருதச் சொற்களைக் கொண்டு பிராகிருத மொழிக்கல்வெட்டு என நாராயணராவ் கூறுகின்றார். தமிழும் பிராமியும் கலந்தமொழியில் எழுதப்பட்டுள்ளதாக டாக்டர் கே.கே.பிள்ளை கூறுகின்றார். தெ.பொ.மீனாட்சிசுந்தரம் கல்வெட்டின்மொழி தமிழும் பிராகிருதமும் கலந்தது என்றும் இலக்கண அமைப்புத் தமிழ் என்றும் கூறுகின்றார். இவர் பின்னாளில் எழுத்து பிராமி எனினும் மொழி தமிழ் என்று உறுதிப்படக் கூறுகின்றார். கே.இ.சுப்பிரமணிய ஐயர் இவை தமிழ் எழுத்துகளே என்றார். ஐராவதம் மகாதேவன் அவர்கள் குகைக் கல்வெட்டுகளைத் தமிழ்க் கல்வெட்டுகளாகக் கருதுவதுடன் சங்க இலக்கியச்செய்திகள் இக்கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

இந்திய வரி வடிவங்களின் தாயாகப் பிராமி வடிவைக் குறிப்பிடுவது உண்டு. பிராமி எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டு இருவகையாகப் பிரிக்கப்படுவது உண்டு. அவை வட பிராமி, தென் பிராமி என இருவகைப்படும். தென் பிராமியைத் திராவிடி என்பர். தென்னிந்தியப் பிராமிக்கும் வட இந்தியப் பிராமிக்கும் வரி வடிவில் வேறுபாடு உண்டு. தமிழ் நாட்டுப் பிராமி எழுத்துக்களில் தமிழுகக்குத் தனிச்சிறப்பாய் அமைந்த ழ,ற,ன என்னும் எழுத்துக்களும் காணப்படுகின்றன. தமிழ் மொழிக்கே உரிய ஒலிகள் உள்ளன. ஸ என்னும் வட எழுத்தும் த என்னும் வர்க்க எழுத்தும் காணப்படுகின்றன. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை. எ, ஒ நெடில் வேறுபாடு இல்லை. குகைக்கல்வெட்டுகளில் நீண்ட கோடு நெட்டுயிரையும், குறுகிய கோடு குற்றுயிரையும் குறிக்கின்றன. கோட்டின் வேறுபாட்டில் எகர, ஏகாரமும், ஒகர, ஓகாரமும் வேறுபடுத்துகின்றன. G என்ற வடிவம் ழ கரம் என இனங்காணப்பட்டது. பிராமியில் % என்ற வடிவம் இகரம் என இனங்காணப்பட்டது. பிராமியில் n என்பது த என்று இனங்காணப் பட்டுள்ளது. ன கரம் ந கரமாகக் கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளது.

ஒலிப்புடைய வெடிப்பொலிகளும், மூச்சுடைய வெடிப்பொலிகளும் இக்கல்வெட்டுகளில் காணப்படவில்லை. ஐ, ஔ, ஆயுதம் போன்ற உயிர் எழுத்துகளும் காணப்படவில்லை.

குழிந்துரசொலியும் பிறவிடங்களில் மூல திராவிட இடையண்ண வெடிப்பொலியாகவே மாறிவிடுகின்றன. எல்லா மெய்யெழுத்துக்களும் காணப்படுகின்றன.

ந, ன தனியான ஒலியன்களானாலும் வேற்று நிலை வழக்கு காணப்படவில்லை. இதனால் குகைக்கல்வெட்டுகளின் மொழி தமிழாகவோ, மூலத் தென்திராவிடமாகவோ இருத்தல் வேண்டும் என ஊகிக்கப்படுகின்றது.

இக்கல்வெட்டுகளில் பிராகிருதமொழிச் சொற்களின் கலப்பு மிகுதி. ஏனென்றால் பௌத்த-சமண சமயங்களை மேற்கொண்டவர்கள் பிராகிருதமொழியைக் கற்றனர். சீத்தலைச்சாத்தனார் போன்றவர்கள் பாலிமொழியையும் நன்கு கற்றிருந்தனர். மணிமேகலையில் பாலிமொழிச் சொற்கள் இடம்பெற்றுளன.

பிராகிருதச் சொற்கள் தமிழில் கலந்தமைக்குப் பிராமிக் கல்வெட்டுகளும் சிலம்பு, மணிமேகலையும் சான்றாக அமைந்துள்ளன. கே.வி.சுப்பிரமணிய ஐயர், எச்.கிருட்டின சாத்திரி, சி.நாராயணராவ், மயிலை சீனி. வேங்கடசாமி, ஐராவதம் மகாதேவன் போன்றோர் இக்கல்வெட்டுகளைப் படித்துப் பொருள்கூறியுள்ளனர். சில கல்வெட்டுகளுக்கு ஒவ்வொரு விதமாகப் பொருள்கொள்கின்றனர். பெரும்பாலான கல்வெட்டுகளில் ஒன்றுபட்டுப் பொருள் கூறுகின்றனர்.

**1.அரிட்டாபட்டி கல்வெட்டு**

கணிஇ ந தா ஸீரியகுவ

வெள் அறைய் நிகமது

காவி தி இய் காழி திக அந்தை அ

ஸதன் பிணாஊ கொடுபி தோன்

இந்தக் கல்வெட்டைக் கல்வெட்டறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் கீழ்க்கண்டவாறு பிரித்துப் பொருள் கொள்கின்றார்.

கணி நந்தாஸிரியற்கு

வெள்ளறை நிகமத்து

காவிதி காழிதி ஆந்தைய

ஸுதன் பிணாவு கொடுபித்தான்

கணிநதி ஆசிரியர் பெயராகும். வெள்ளறை என்பதுடன் யகர மெய் சேர்த்து எழுதுதல் அக்கால முறையாகும். நிகமம் என்பது நியமமாகும். நியமம் தெருவாகும்.

எ.கா. 'கருங்கட் கோசர் நியமமாயினும்' (அகம்.90.12)

கோயில் என்ற பொருளும் உண்டு. காவிதி என்பது அரசனால் அளிக்கப்படும் பட்டமாகும். காழிதி ஆந்தை என்பது பெயராகும். ஆந்தை என்பது கல்வெட்டுகளில் அந்தை என உள்ளது.

ஆந்தைய என்பதில் அ என்னும் வேற்றுமை உருபு உடைய என்னும் பொருளில் உள்ளது. ஸுதன் என்பது வடமொழிச்சொல்லாகும். பிணா அல்லது பிணவு என்பதற்குப் பின்னப்பட்டது, முடையப்பட்டது, சாமரை, கற்படுகை எனப் பலபொருள் கூறுகின்றனர்.

"வெள்ளறை அங்காடித் தெருவில் வசிக்கிற காழிதி ஆந்தனுடைய மகன் கணி நந்தாசிரியற்குப் 'பிணாவு' கொடுப்பித்தான்'' என்பது இதன்பொருளாகும்.

**2.அரிட்டாபட்டி கல்வெட்டு**

வெள் அடை

நிகமதோர்

கொடிஓர்

வெள்ளடை ஊரின் பெயர் என்றும், நிகமதோர் கடைத்தெருவில் இருப்போர் என்றும், கொடிஓர் என்பதைக் கொட்டியோர் என்றும் பொருள் கூறுவர்.

**3.மருகாந்தலைக் கல்வெட்டு**

வேண் காஸிபன்

குடுபித

கல் காஞ்சணம்

வேண் காஸிபன் என்பதைப் பெயராகக் கொள்ளலாம். சங்க இலக்கியங்களில் வெண்கொற்றனார், வெண்பூதனார், வெண்பூதியார் என்னும்பெயர்கள் வழங்கிவருவதாலும் இதனை அறியலாம். குடுபித என்பது குட்டுப்பித்த என்றதாகும். கொட்டுவித்த என்ற சொல்லின் திரிபாகும்.

குடுபித > குட்டுப்பித்த> கொட்டுப்பித்த> கொட்டுவித்த என்பது ஈரேவல் வினையின் பெயரெச்ச வடிவமாகும். காஞ்சணம் என்பது இருப்பிடம் என்ற பொருளைத் தரும் பிராகிருதச் சொல்லாகும். கல் என்பது அதற்கு அடையாகிறது. வேண் வகுப்பைச் சார்ந்த காஸிபன் என்பவனால் கொட்டுப்பிக்கப்பட்ட கல்லாகிய காஞ்சணம்.

**4.அரிக்கமேடு பிராமி எழுத்து**

அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் கிடைத்த அகல்விளக்கு ஒன்றில் பொறிக்கப்பட்ட எழுத்துகளையும் அதன்பொருளையும் காண்போம். பிராமி எழுத்துகளால் எழுதப்பட்டுள்ள அதன் வடிவம் வருமாறு:

முதிகுழுர அன் அகல்

முதுகுழூரன் என்பவருடைய அகல் என்பது இதன் பொருளாகும். 'முதுகுழூரான்' என்பது 'முதிகுழுரஅன்' என எழுதப்பட்டுள்ளது. 'அகல்' என்பது அகல் விளக்கு ஆகும்.

**5.திருப்பரங்குன்றக் கல்வெட்டு**

எரு கோ டூர் ஈழ குடும்பிகன் போலாலயன்

செய்தா ஆய்ச்யன்

நெடு சாத்தன்

இலங்கை (ஈழத்திலிருந்து) வந்து எரு கோட்டூரில் உள்ள குடும்பிகனான போலாலையன் உறங்குவதும் ஆழ்ந்த தியானம் செய்வதற்கும் அமைத்தான் என்பது இதன் கருத்தாகும். குகையின் கற்படுகைகளைச் செய்து அமைத்தவன் ஆய்ச்சயன் நெடுசாத்தன் ஆகும். எருகோடூர் என்பது எருக்கோட்டூர் ஆக இருக்கலாம். சங்க

இலக்கியங்களில் இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. நெடுசாத்தன் என்பதை நெடுஞ்சாத்தன் எனக் கொள்ளலாம்.

**6. கழுகுமலைக் கல்வெட்டு**

காணிய நாந்தா ஸிரி யகு அன் தமாம்

இதா நெடிஞ்சாழியான் ஸாலாகான்

இளாஞ்சாடி கான் தாந்தைய் சாடிகான் செயிபாபாளிய்

இக்கல்வெட்டைக் கீழ்க்கண்டவாறு பிரித்துப் பொருள்கொள்கின்றனர்.

காணிய நந்த(ஆ) ஸிரிய்ச உவன் த(ம்)மம்

இத (உ) அ நெடிஞ்சழியன் ஸாலகன்

இளஞ்சடி கள் சந்தைய் சடிகன் செஇய பளிய்

அங்கு வாழும் கணியன் நந்தன் என்னும் துறவிக்குப் படைக்கப்பட்டது.

நெடுஞ்செழியனின் மைத்துனனும் (ஸாலகன்), இளஞ்சடிகளின் தந்தையுமான சடிகனால் இந்தப் பள்ளி அமைக்கப்பட்டது. தமம் என்பது தம்மம்(அறம்) என்றாகும். நந்தாஸிரிய்கு என்பது நந்தியாசிரியற்கு என்றிருத்தல் வேண்டும். ஈதா என்பது ஈந்தான் என்று பொருளாகும். சடிகன் என்பது இளஞ்சடிகனுடைய தந்தையின் பெயராகும். பளிய் என்பது பள்ளி என்பதன் திரிபாகும். ஸாலகன் என்ற பிராகிருதச் சொல்லுக்கு மைத்துனன் என்பது பொருளாகும். இகர ஈற்றுச்சொற்களின் இறுதியிலும் ஐகார ஈற்றுச்சொற்களின் இறுதியிலும் யகரமெய் சேர்த்து எழுதுதல் அக்கால வழக்கமாகும்.

எ.கா. பளி, ய், தந்தை, ய்

**7.புகழூர்க் கல்வெட்டு**

நள்ளிய ஊர் அ பிடந்தை மகள் கீரன் சொற்ற...

புகழூர்ப் பிராமி எழுத்துக் கல்வெட்டு, கல்வெட்டு இலாகாவின் 1928 ஆம் ஆண்டுத் தொகுப்பில் வெளியாகியுள்ளது. இக்கல்வெட்டை ஐராவதம் மகாதேவன் படித்துள்ளார்.

இக்கல்வெட்டை மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் கீழ்க்கண்டவாறு படித்துப் பொருள் கண்டுள்ளார்.

நள்ளிவ் ஊர்ப் பிடந்தை மகன் கீரன் கொற்றன், பிடந்தை என்பது ஆளைக் குறிக்கும் பெயராகும். மகாதேவன் அவர்கள் மகள் என்பதற்கு மக்கள் எனப் பொருள்கொள்கின்றார். கீரன்கொற்றன் என்பதை இரண்டு பெயராகக் கொள்கின்றார். நள்ளியூரில் வாழ்ந்த பிடந்தை என்பவருடைய மகனான கீரன்கொற்றன் (கற்படுக்கை அமைத்துக் கொடுத்தான்) என்பது இதன் பொருளாகும்.

**8.சித்தன்னவாசல் கல்வெட்டு**

பாகனூர் போதாதன்

பிடன் இதாதாவெ லேன்

பாகனூர் என்பது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஊராகும். பிடன் என்பது பிட்டன் எனச் சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றது. லேன் என்னும் பிராகிருதச்சொல்லுக்குக் குகை என்பது பொருளாகும். இதாதாவெ என்பதைச் சிறப்புப் பெயராகக் கொள்வர்.

### 9.ஆண்டிப்பட்டி பிராமி எழுத்து

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டம் ஆண்டிப்பட்டியில் கிடைத்த நாணயங்களில் பிராமி எழுத்து காணப்படுகின்றது. இந்த நாணயங்கள் கடைச்சங்க காலத்தில் வெளியிடப்பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

சேர்தன் ஆதி

எதிரான் சே

எதிரா

எதினன்

சேத்தன்,எதிரன் என்ற சொற்கள் தெளிவாகத் தெரிகின்றன.எகர எழுத்தில் நடுவில் புள்ளி உள்ளது. ‘எகர ஒகர மெய் புள்ளி பெறும்’ என்கின்றது தொல்காப்பியம். புதழியூர் கல்வெட்டிலும் எகரத்தில் புள்ளி காணப்படுகின்றது.

### 10.அதியமான் கல்வெட்டு

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூருக்கு அருகில் உள்ள ஜம்பை என்னும் ஊரில் காணப்படும் அதியமான் காலத்திய கல்வெட்டில்,

ஸதியபுதோ அதியந் நெடுமாஞ் அஞ்சி ஈத்த பாளி

‘அதியனை ஸதியபுதோ அதியந் நெடுமாஞ் அஞ்சி’ என்று வழங்குகிறது. அசோகரது காலத்திய கல்வெட்டுகளில் சோழர், பாண்டியர், கேரளபுத்ரர், ஸத்தியபுத்ரர் ஆகியோரைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. ‘ஸதியபுதோ’ என்பவர் அதியமானாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கல்வெட்டு மூலம் அசோகர் கூறும் ஸத்ய புத்ரர்கள் ‘அதியமான்கள்’ எனத் திட்டவட்டமாகத் தெரிகிறது. அதியனைப் பொய்யா எழினி (சத்யபுத்ரா) எனப் புறநானூறு கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டு கி.பி.முதல் நூற்றாண்டு என முனைவர் இரா.நாகசாமி கருதுகின்றார்.

தொல் திராவிட ஒலியன் அமைப்பே(Proto Dravidian Phonemic Structure) குகைக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிர்களும் அவற்றின் நெடில் உயிர்களும் காணப்படுகின்றன. ஐகாரம் என்பது பெரும்பாலும் சொல்லின் இறுதியில் வந்துள்ளது. ஆனால் ஐயன், ஐம்பது போன்ற சொற்கள் மொழி முதலில் வந்துள்ளது. ஐகார ஈறாக இலக்கியத்தில் வருபவை அகர ஈறாகக் கல்வெட்டுகளில் வந்துள்ளன. ஔகாரம் கல்வெட்டுகளில் காணப்படவில்லை.

உயிர் எழுத்துகளில் குறில், நெடில் வேறுபாடு ஒலியன் இயல்புடையது. ஏகார ஓகார நெடில் உயிர் வடிவங்களுக்குத் தனியே

வரிவடிவம் இல்லை. ஆனால் பொருள் வேறுபாடு உண்டு. எல்லா உயிர் எழுத்துகளும் சொல்லின் முதலிலும் இடையிலும் வருகின்றன. ஆனால் ஈ, எ, ஒ என்ற மூன்றும் சொல்லின் இறுதியில் வாரா. பிறவெல்லாம் வருகின்றன. இக்கல்வெட்டுகளில் மெய்ம்மயக்கங்களைக் காட்டிலும் உயிர் மயக்கங்களே அதிகம். ஆனால் யகர வகரமும் உடம்படு மெய்களாகக் காணப்படுகின்றன. பதினெட்டு மெய்யெழுத்துக்களும் ஒலியன்கள் அல்ல.

குகைக்கல்வெட்டுகளில் ஆய்த எழுத்துக் காணப்படவில்லை. பின்னண்ண மூக்கொலியான ஙகரமும் வழங்கவில்லை. தமிழ் இலக்கியங்களில் மெய்ம் மயக்கங்கள் உள்ளன போன்றே குகைக் கல்வெட்டுகளிலும் மெய்ம்மயக்கங்கள் காணப்படுகின்றன.

யாற்றூர் என வரும் புகழூர் கல்வெட்டுத் தொடரின் வழியாக யகரம் ஆகாரத்தோடு மொழி முதலாக வருவதை அறியமுடிகின்றது. சந்தன், சழியன், சடிகன் என்ற சொற்களில் சகரம் மொழி முதலில் வருவதை அறியமுடிகின்றது. வகர் உ, ஊ, ஒ, ஓ ஆகிய நான்கினோடு வருவதில்லை. மெய் இரட்டித்தல், இன மூக்கொலியொடு தடையொலி வருதல் ஆகிய இரண்டு வகையில்தான் மெய்ம்மயக்கம் காணப்படுகிறது. ரகரமும் ழகரமும் இரட்டிக்காது.ஆறு தடையொலிகளும் சொல்லுக்கு இறுதியில் வாரா.

ரகரம் மொழி இடையிலும் இறுதியிலும் வருகின்றது. வகரமும் யகரமும் மொழி முதலில் வருகின்றன.

மொழி இறுதியில் வரும் மூக்கொலிகள் ஒலிக்கப்படாமல் முன்னுள்ள உயிர்கள் மூக்கொலிச்சாயல் (Nasalisation) பெறுகின்றன.

எ.கா: செய்தான் > செய்தா

வந்தான் > வந்தா

இக்காலப் பேச்சு வழக்கிலும் மூக்கொலி மறைதலைக் காணலாம்.

கல்வெட்டுகளில் சிறப்பு ழகரம் டகரமாகிறது.

கழு > கடு

ர்மலைக் கல்வெட்டில் கழு என்றும் அப்பொருளிலேயே புகழூர்க் கல்வெட்டுகளில் கடு என்று வந்துள்ளது. மகன் என்ற சொல்லில் ககரம் மறைந்து மான் எனக் காணப்படுகின்றது.

குகைக் கல்வெட்டுகளில் பல சமற்கிருதச்சொற்கள் பிராகிருத வடிவில் எழுதப்பட்டுள்ளன என்பதை ஒலியனியல் அமைப்புத் தெளிவாகக் காட்டுகின்றன. ஒன்றன் பால் உணர்த்துவன மகர ஈற்றில் முடிகின்றன. தம்மம், அதிட்டானம் போன்ற சொற்கள் ஒலிப்புடை ஒலியாகவும், மூச்சுடை ஒலியாகவும் விளங்குகின்றன.

தமிழ் பிராமி கல்வெட்டுகள் தமிழகத்தில் புத்த, சமண சமய வளர்ச்சியையும் செல்வாக்கையும் காட்டுவனவாக உள்ளன. குகைகளில் வாழுமிடங்களைப் பள்ளி என்றும், பாறைப் படுக்கைகளை அதிட்டானம் என்றும் கூறுவர். உப்பு வாணிகன், அறுவை வாணிகன், கொழு

வாணிகன், பொன் வாணிகன் போன்ற சொற்களை அழகர்மலைக் கல்வெட்டில் காண்கின்றோம். தச்சன், பொன், கொல்லன், பாகன் போன்ற தொழில்கள் பற்றியும் காணமுடிகின்றது.

கடைச்சங்க காலத்தில் பிராகிருத மொழிச்சொற்கள் தமிழ்நாட்டில் வழங்கி வந்ததைப் பிராமி எழுத்துக் கல்வெட்டுகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றன. பிராகிருதச்சொற்கள் தமிழில் கலந்தமைக்குப் பிராமிக் கல்வெட்டுகளும், சிலம்பு, மேகலையும் சான்று பகர்கின்றன. பண்டைக்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சியையும் அமைப்பையும் அறிவதற்குத் தமிழ்ப் பிராமி எழுத்துகள் அடங்கிய கல்வெட்டுகள் துணைசெய்கின்றன.

**பல்லவர் காலத் தமிழ்**

தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதும் அறிஞர்பெருமக்கள் பல்வேறு காலகட்டங்களாகப் பகுத்துப் பேசுவர். மொழியியல் அறிஞர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் சில பண்புகளின் அடிப்படையில் இவற்றைச் சங்கத் தமிழ், தெய்வத் தமிழ், வளரும் தமிழ் என வழங்குவர். வேறு சில அறிஞர்கள் பண்டைக் காலத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என்று முப்பெரும் பிரிவாகப் பிரிப்பர்.

கி.பி.ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.பதினேழாம் நூற்றாண்டுவரை உள்ள காலப்பகுதியை இடைக்காலத் தமிழ் என்றும் வழங்குவர். காரைக்காலம்மையார் புராணம், தேவாரம், நாலாயிரத் திவ்ய பிரபந்தம், கம்பராமாயணம், வில்லி பாரதம் போன்றவை பக்திச்சுவை சொட்டச் சொட்ட எழுந்தவையாகும். எனவே இக்காலத் தமிழைத் தெய்வத் தமிழ் என்றும் வழங்கலாம்.

இடைக்காலத் தமிழையும் பல்லவர் காலத் தமிழ், சோழர் காலத் தமிழ், நாயக்கர் காலத் தமிழ் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

பல்லவர்கள் கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டுவரை தமிழகத்தை ஆண்டனர். இவர்கள் காலத்தில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி இலக்கியங்களைப் பாடினர். இக்கால இலக்கியங்கள் மட்டுமின்றி இக்காலக் கல்வெட்டுகளும் பல்லவர்காலத் தமிழைப்பற்றி அறிவதற்குப் பெரிதும் துணைசெய்கின்றன.

சங்க காலத்தைப் போலவும், சங்கம் மருவிய காலத்தைப் போலவும் பல்லவர் காலத்திலும் இ, எ, உ, ஒ, ஆ என்ற ஐந்து உயிர் எழுத்துகளும் அவற்றிற்கு இனமான நெடில்களும் ஒலியன்களாக இருந்தமையை அறிகின்றோம்.

எகரமும் ஒகரமும் தவிர ஏனைய உயிர்கள் சொல்லின் எல்லா இடங்களிலும் வரும். எகர ஒகரங்கள் சொல்லின் இறுதியில் வாரா.

**மெய் ஒலியன்கள்**

க் ச் ட் த் ப் ஞ் ண் ன் ம் ய் ழ் ர் ல் வ் ள் என்பன மெய்யெழுத்துக்களில் ஒலியன்களாக விளங்குகின்றன. ணகரத்திற்கு நகரமும் மகரத்திற்கு ஙகரமும் மாற்றொலியன்களாகும். மொழியின் இடையிலும்

கடையிலும் வருவதனை னகரம் என்றும் மொழி முதல் வருவதனை நகரம் என்றும் வேறுபடுத்தியிருப்பர்.

நெடில் மெய்களுக்கு அல்லது மெய்ம் மயக்கங்களுக்கு முன்னர் நெடில் குறிலாக மாறுவது பல்லவர் காலத்திலும் பின்னரும் பெரு வழக்காயிற்று.

நீக்கி > நிக்கி

ஆழாக்கு > ஆழக்கு

தீந்தமிழ் >திந்தமிழ்

வீற்றிருந்தருளி >விற்றிருந்தருளி

மூன்று > முன்று

பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைக் காண்கின்றோம்.

மங்கலம்>மங்கிலம்

மேலன >மேலின

கடா >கிடா

இகரம் உகரமாதலையும் இக்காலத்தில் காணமுடிகின்றது.

விழிஞும் > வுழிஞும்

ஐகாரம் அகரமாகின்றது.

ஐந்து > அஞ்சு

தலை>தல

பனைகாய் >பனங்காய்

ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த கூரம் செப்பேட்டில் ஐந்தே என்பது அயிந்தே எனக் காணக்கிடக்கின்றது.

ஐகாரம் அகரமாவதுடன் எகரமாகவும் மாறுகின்றது.

அரசர் >அரைசர் >அரெசர்

தலை >தலெ

சினை > சினெ

எல்லை > எல்லெ

அரைசர்>அரெசர் என்று சொன்னாலும், சொல்லின் இடையிலுள்ள எகரம் அகரமாகவே எழுதப்பெறும். ஆனால் சொல்லின் இடையில் எகரம் அகரமாகவே ஒலிக்கப்படவில்லை.

அரெசா என்ற வடிவத்திலுள்ள அகரம் கீழ் நடு உயிர் (low central) ஆனால் சொல்லின் இடையில் அகரம் முன் தாழ் இடை (front low mid) உயிராக மாறுகின்றது.

யகரம் கெடுதல் சங்கத் தமிழ், சங்கம் மருவிய காலத் தமிழ் மாற்றம் பல்லவர் காலத்திலும் தொடர்கின்றது.

யாராலும் > ஆராலும் (திருவா.8.2)

யானை >ஆனை (திருவாச.6.21)

யாக்கை > ஆக்கை(திருவா.6.10)

க்த் > த்த்

எனப் பல்லவர் காலத்திலும் மாறுகின்றது.

பக்தி > பத்தி (திருவா.11.12)

முக்தி > முத்தி (திருவா.11.12)

ற்ற் > த்த்

பற்றேதும் > பத்தேதும் (திருவா.10.5)

கி.பி.எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலும் இம்மாற்றங்களைக் காணலாம்.

ஆற்றுக்கால் > ஆத்துக்கால்

சேற்றுநிலம்>சேத்து நிலம்

இருபதாம் நூற்றாண்டுப் பேச்சுத் தமிழிலும் ற்ற் > த்த் மாற்றங்களைக் காணலாம். பல்லவர் கால மாற்றங்கள் இன்றும் நிலைத்து நிற்பதைக் காணமுடிகின்றது.

பற்றேதும் > பத்தேதும் (திருவா.10.5)

பற்று வரவு >பத்து வரவு

கொற்றவன்குடி >கொத்தவன்குடி > கொத்தக்குடி

கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவாரத்தில் ந ஞகரமாக மாறியுள்ள இடையண்ண ஒலியோ முன்னுயிரோ முன்னால் வந்தால் இம்மாற்றம் ஏற்படும். இதனை வரையறுத்த சூழல் எனலாம். இவ்வாறு வரையறுத்த சூழலால் அமையாத இடங்களிலும் நகரம், ஞகரமாதலைக் காணலாம்.

எ.கா:

நெகிழ்த்தது >ஞெகிழ்த்தது

முந்நாழி >முஞ்ஞாழி

என்ற இடங்களில் இடையண்ணமாகும் சூழல் இல்லை. உவற்றுல் எல்லாம் நகரத்தைக் காட்டிலும் ஞகரமே தொன்மையானது. அதுவே தொல் திராவிடத்திற்குரியது. தமிழ்ப் பேச்சிலும் மலையாளத்திலும் ஞகர ஒலியே மிகுதியாகும்.

**தடையொலிகளின் ஒலிப்புடைமை** (Voicing of the Plosive)

தடையொலிகள் ஒலிப்புடையனவாக விளங்கியதைப் பல்லவர் காலக் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது. தமிழ் இடப்பெயர்களும் சிறப்புப் பெயர்களும் கல்வெட்டுக்களில் சமற்கிருதத்தில் வெட்டப்பட்டுள்ளமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. சில தமிழ்க் கல்வெட்டுகள் சமற்கிருத, கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. சமற்கிருத ஒலிப்புடைய ஒலி சில இடங்களில் ஒலிப்பில் ஒலியாக வெட்டப்பட்டுள்ளன. ஆனால் அவையே வேறு இடங்களில் ஒலிப்புடை

ஒலிகளாக எழுதப்பட்டுள்ளன. தடையொலிகளின் ஒலிப்புடைமையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1.உயிரிடைத் தடையொலி

2.இன மூக்கொலி முன் தடையொலி

தடையொலிகள் உயிர் ஒலிகளுக்கு இடையில் வருகின்றன. கி.பி.எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த நெடுஞ்சடையன் பராந்தகனின் வேள்விக் குடிச் செப்பேட்டில்

paragan > parakan

என்று சமற்கிருதப் பெயர் ஒன்று காணப்படுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த மூன்றாம் நந்திவர்மனுடைய பாகூர்ச் செப்பேட்டில்,

நிலைதாங்கி( g )

என்றும் வருகின்றது. சமற்கிருதச்சொற்களல்லாத தமிழ்ச்சொற்களில் வரும் உயிரிடைத் தடையொலிகள் 11 ஆம் நூற்றாண்டு வரை ஒலிப்பில்லா ஒலியாக விளங்கின.ஒலிப்பில் தடையொலிகள் தன் இன மூக்கொலிக்கு முன் தோன்றும். ஒன்பதாம் நூற்றாண்டுச் சின்னமனூர்ச் செப்பேட்டில்,

வேம்ப( p ) நாடு

செங்கு ( k ) டி

என்றும்,

மூன்றாம் நந்திவர்மனுடைய ஆவணங்களில்

தந்தி (T) வர்மன்

நிலைதாங்கி (G)

விளங்கா (G) டு

நந்தா (D) விளக்கு

போன்றவற்றில் தந்திவர்மன் தவிர மற்றவற்றில் ஒலிப்புடை ஒலியாக ஒலிக்கின்றன.

சங்க நூல்களில் யான் என்ற சொல் தன்மை ஒருமையைக் குறிக்க, சங்கம் மருவிய நூலான பரிபாடலில்தான் முதன்முதல் ‘நான்’ (பரி.6-97, 20-82) என்ற சொல் வருகின்றது. அப்பர் தேவாரத்தில் ‘யான்’ இருபத்தியொன்பது இடத்திலும் ‘நான்’ முந்நூற்று முப்பத்து ஒன்பது இடத்திலும் வருகின்றன. முன்னிலைப் பன்மைச்சொல்லாக ‘நீயிர்’ பிற இலக்கியங்களில் வர சங்கம் மருவிய கால நூலான பரிபாடலில் ‘நீர்’ (பரிபா.8.7) என்ற சொல் வந்துள்ளது. முன்னிலை வடிவம் அப்பர் தேவாரத்தில் காணப்படுகிறது. இலங்கைப் பேச்சுத் தமிழிலும் உகரம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இரட்டைப் பன்மை வடிவம் ‘நீர்கள்’ அப்பர் தேவாரத்தில் காணப்படுகின்றது. பல்லவர் காலத் தமிழில் ‘கள்’ விகுதி பதிலிடு பெயர்களிலும் காண்கின்றோம்.

நீர்கள்- (அப்பர் தேவாரம் 419.1)

உங்கள்- (அப்பர்தேவாரம் 566.2)

நங்கள் - (அப்பர் தேவாரம் 847.4)

நீங்கள் - (அப்பர் தேவாரம் 405.1)

இவர்கள்- (அப்பர் தேவாரம் 360.2)

உயர்வு ஒருமை உயர்திணையில் மட்டுமின்றி அஃறிணையிலும் உள்ளதை அப்பர் தேவாரத்தில் காண்கின்றோம்.

உடல்-ஆர்

உயிர்-ஆர்

பிணை- ஆர்

தென்றல்-ஆர்

நிபந்தனை எச்சச உருபுகளாக ஆல்,இல்,ஏல் பல்லவர், சோழர் காலத் தமிழில் மிகுதியாக வருகின்றன.

எண்ணுதியேல் - (அப்பர் தேவாரம்-239.5.1)

உருகுவித்தால் - (அப்பர் தேவாரம்.3016.2)

விடில் - (அப்பர் தேவா.72.3)

பல்லவர் காலப் பக்தி இலக்கியங்களில் சமற்கிருதச் செல்வாக்கினை மிகுதியாகக் காண்கின்றோம். பல்லவர் காலக் கல்வெட்டுகள் கிரந்தம், வடமொழி போன்றவற்றில் எழுதப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. அப்பர் தேவாரம் போன்றவற்றில் சமற்கிருதச் சொற்கள் ஓரளவு தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளன.

**சோழர் காலத் தமிழ்**

தமிழக வரலாற்றில் சோழர் காலம் பொற்காலம் என்று குறிப்பிடுவதுபோல் இலக்கிய உலகிலும் சோழர் காலம் பொற்காலமாக விளங்குகிறது. ஆயிரக்கணக்கான பாடல்களைத் தன்னகத்தே கொண்ட நூல்கள் பல சோழர் காலத் தமிழ் இலக்கியங்களாகத் தோன்றியுள்ளன. இலக்கிய நூல்களைப் போலவே இலக்கண நூல்களும் சோழர் காலத்தில் பல தோன்றியுள்ளன. வீரசோழியம், நேமி நாதம், நன்னூல், போன்ற இலக்கண நூல்கள் தோன்றின. சோழர் காலத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் பலவும் சோழர்காலத் தமிழ் நிலை அறிவதற்குப் பெரிதும் உதவுகின்றன. எனவே சோழர் காலத் தமிழ் நிலை அறிவதற்கு இலக்கியம், இலக்கணம், கல்வெட்டுகள் துணை செய்யும்.

பல்லவர் காலத்திய ஒலியன்களான உயிர் எழுத்துகள் சோழர் காலத் தமிழிலும் ஒலியன்களாக விளங்கின.

இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ அ ஆ

பல்லவர் கால மொய்யொலியன்கள் சோழர் காலத்திலும் தொடர்ந்தன.

க் ச் ட் ற் த் ப் ண் ன் ம் ய் ழ் ர் ல் வ் ள்

இலக்கியங்களில் நகரமும் னகரமும் ழகரமும் ரகரமும் றகரமும் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. கற்றோர் மொழியில் வடமொழி ஒலிகள் காணப்படுகின்றன. ஆனால் அவை ஒலியன்களாக

இல்லை.சோழர் காலத்தில் வடமொழிச்செல்வாக்கு மிகுந்திருந்ததை அறியமுடிகின்றது. ஒட்டக்கூத்தர் வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தாமல் அப்படியே வழங்கியுள்ளமையைக் காணமுடிகின்றது.

எ.கா: திவ்ய பானம்

இதே போக்கு மணிப்பவள நடையிலும் காண்கின்றோம். வடமொழிச் செல்வாக்கினை உணர்ந்த பவணந்தியார் நன்னூலில் பதவியல் என்ற இயலில் வடமொழிக்குரிய தமிழ் ஒலிகளை வரையறை செய்துள்ளார்.

மொழிமுதல், மொழி இறுதி எழுத்துகளைப் பற்றிச் சோழர் காலத்தில் தோன்றிய வீரசோழியமும் நன்னூலும் கூறுகின்றன.இவ்விலக்கணங்கள் கூறுவதைத் தொல்காப்பியத்துடன் ஒப்பிட்டு நோக்கினால் மொழி வளர்ச்சி, மாற்றம் நன்கு புலப்படும்.

எல்லா உயிர் எழுத்துகளும் மொழி முதலில் வரும் என்பது தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களில் காணப்படுகின்றன. அதே போன்று க் ச் த் ந் ப் ம் ஆகியன எல்லா உயிர்களுடன் வரும் என்பது தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல் ஆகிய நூல்களில் காணப்படுகின்ன. ஞகரம் ஆ,எ,ஒ ஆகியவற்றுடன் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. ஆனால் வீரசோழியம், நன்னூல் அக்கால வழக்கையொட்டி மேற்கண்டவற்றைத் தவிர அகரத்துடனும் வரும் என்று கூறுகின்றன. யகரம் ஆகரத்துடன் மட்டும் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால் யகரம் சோழர் காலத்தில் ஆகாரத்துடன் மட்டுமன்றி அ,உ,ஊ,ஒ,ஔ வற்றுடனும் வரும் என வீரசோழியமும் நன்னூலும் கூறுகின்றன.

எல்லா உயிர் எழுத்துகளும் மொழி இறுதி எழுத்துகளாக வரும் எனத் தொல்காப்பியமும் நன்னூலும் கூறுகின்றன. ஆனால் வீரசோழியம் எ, ஒ என்ற உயிர் எழுத்துகளைத் தவிர எல்லா உயிர்களும் மொழியிறுதியில் வரும் எனக் கூறுகின்றது. பல்லவர் காலக் கல்வெட்டுகளிலும் இதே நிலை காணப்படுகிறது. தொல்காப்பியம் ஆய்தத்தைச் சார்பெழுத்து என்கின்றது. ஆனால் வீரசோழியம் ஆய்தத்தைத் தனி ஒலியாகக் கருதுகின்றது. நேமிநாதம் ஒன்பது உயிர்களே (ஏகாரம், ஓகாரம், ஔகாரம் நீங்கலாக) மொழிக்கு இறுதியில் வரும் எனக் கூறுகிறது(நேமி.நூற்பா 8).

சோழர் கால ஒலி மாற்றங்களை இலக்கிய, இலக்கணக் கல்வெட்டுகளின் துணைகொண்டு நோக்கும்பொழுது பல்லவர் கால மாற்றங்கள் பெரும்பாலும் சோழர் காலத்திலும் தொடர்கின்றன.

அ கரம் இகரமாதல்

அதனுக்கு > அதினுக்கு

மேலன > மேலின

அகரம் உகரமாதல்

கொண்டது > கொண்டுது

புகுந்தது > புகுந்துது

உகரம் இகரமாதல்

அமுது > அமிது

அருளின > அரிளின

செலுத்தி > செலித்தி

எகரம் இகரமாதல்

செலவு > சிலவு

எனக்கு > இனக்கு

உயிர் உயிர் மாற்றங்கள்

இ > எ

நிதி > நெதி

உ > ஒ

புத்தகம் > பொத்தகம்

உலகம் > ஒலகம்

தமிழ்ச்சொற்களில் சிலவற்றில் இகரம் எகரமாவது உண்டு.

பிறவும்> பெறவும்

உகரம் ஒகரமாதல்

குலோத்துங்க > கொலோத்துங்க

இகரம் அகரமாதல்

ஞாயிறு > ஞாயறு

அகரம் ஐகாரமாதல் உண்டு. இம்மாற்றம் பழந்தமிழில் சகர யகர மெய்களுக்கு முன்னர்க் காணப்படுகிறது.

அரசர் > அரைசர்

அரசு > அரைசு (பதிற்றுப் 37.141: (புறம் 26.6)

இம்மாற்றம் கி.பி.11,12 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி இலக்கியமொழிகளில் காணப்படுகின்றது.

சமயம் > சமையம்

தச்சன் > தைச்சன்

முன்னோ பின்னோ இடையண்ண ஒலி தொடராதபோதும் அகரம் ஐகாரமாகும்.

அத்தை> ஐத்தை

அத்தான் > ஐத்தான்

இம்மாற்றத்தை இக்கால சமூகக் கிளைமொழிகளிலும் காணலாம்.

இரட்டித்த நுனி நா பல் மூக்கொலிகள் கூட இடையண்ண ஒலிகளையடுத்து இடையண்ண மூக்கொலிகளாகின்றன.

ஐந்நூறு > ஐஞ்ஞூறு

இந்நிலம் > இஞ்ஞிலம்

அரசர் > அரைசர் > அரெசர்

சினை > சினெ

தலை > தலெ

எல்லை > எல்லெ

மொழி முதல் இகரத்துடன் யகரம்

பல்லவர் காலத்தில் முன்னுயிர்கள் அரையுயிரான யகரத்துடன் இணைந்து ஈரொலி உயிராக மாறிக் கி.பி.11,12,13 ஆம் நூற்றாண்டுகளில் முன்னுயிர்கள் வழக்கொலியான யகரத்தைச் சொல்லின் முதலில் பெற்றன.

இக்கோயில் > யிக்கோயில்

இரண்டு > யிரண்டு

இறை > யிறை

**பால்காட்டும் விகுதி**

சோழர் காலத்தில் தோன்றிய வீரசோழிய இலக்கணம் (கி.பி.11ஆம் நூற்றாண்டு). கண்,மன் என்னும் இரண்டு புதிய விகுதிகளை ஆண்பாலுக்குரிய விகுதியாகக் கூறுகின்றது. (சிறுக்கன், கருமன்) (நூற்பா 55).

பெண்பாலுக்குரிய விகுதியாக மி,சி,ஆட்டி,ஆத்தி போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது. (சிறுமி, ஆய்ச்சி, வெள்ளாட்டி, வண்ணாத்தி(நூற்பா 56). சங்க இலக்கியங்களை நோக்கக் கண் புதிய விகுதியாகத் தோன்றுகிறது. ஆனால் அவ்விகுதி மற்ற திராவிட மொழிகளில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மி, சி போன்ற பெண்பால் விகுதிகள் சிலம்பிலும் கலித்தொகையிலும் காணப்படுகின்றன. ஆட்டி,ஆத்தி போன்றவை புதிய விகுதிகளாகும். பலர்பால் விகுதியாக அர்கள், ஆர்கள், கள், மார் (நூற்பா 30) முதலியவற்றை வீரசோழியம் குறிப்பிடுகின்றது. ஆனால், இவ்விகுதிகள் சங்க இலக்கியங்களில் குறைந்த அளவில் வந்துள்ளதை இங்கு நினைவில்கொள்ளவேண்டும்.

சோழர் காலத்தில் தோன்றிய ஏராளமான இலக்கிய, இலக்கணங்கள் வாயிலாகவும் கல்வெட்டுகள் வாயிலாகவும் சோழர் காலத் தமிழை நன்கு அறியலாம். சோழர் காலக் கல்வெட்டுகள் ஒலி மாற்றம் பற்றி அறியப் பெருந்துணை செய்கின்றன. சோழர் காலத்தில் வடமொழிச் செல்வாக்கின் காரணமாக வடமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்வதற்குரிய விதிமுறைகள் (நன்னூல் - பதவியல்) உருவாக்கப்பட்டமையையும் காண்கின்றோம். பல்லவர் காலக் கூறுகளில் சில நிலைத்துவிட்டன. சில மறைந்துவிட்டன. சில புதிய கூறுகள் உருவாகியுள்ளன. இவை யாவற்றையும் சோழர் காலத் தமிழில் காணமுடிகின்றது.

**நாயக்கர் காலத் தமிழ்**

கி.பி.14 ஆம் நூற்றாண்டில் மாலிக்காப்பூர் தென்னகத்தின் மேல் படையெடுத்தான். இதனால் தமிழர்கள் உரிமையிழந்தனர். மதுரையில் இசுலாமியர் ஆட்சி தோன்றும் சூழல் உருவானது. இந்த நிலையில் விசய நகரப் பேரரசின் தலையீட்டால் மதுரையில் நாயக்கர் ஆட்சி வேரூன்றியது. நாயக்கர்கள் இருநூற்றேழு ஆண்டுகள் (1529 - 1736) மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். இக்கால கட்டத்தில் வில்லிபாரதம் போன்ற காப்பியங்கள் தோன்றின. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் உள்ளிட்ட சிற்றிலக்கியங்கள் தோன்றின. மேலும் நாட்டுப்புற இலக்கியங்கள், மாகபுராண அம்மானை, இராமப்பய்யன் அம்மானை போன்ற நூல்கள் தோன்றின. கிறித்தவ மதம் பரப்ப வந்த இத்தாலி நாட்டினரான வீரமாமுனிவரின் A Grammar of the Common Dialect of the Tamil Language என்ற இலக்கண நூலும் இக்கால கட்டத்தில் தோன்றியது. இது பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்டு அமைந்த நூலாகும்.தமிழ் ஒலிகளை மேலை நாட்டார் எவ்வாறு ஒலித்தனர், எவ்வாறு அவர்கள் மொழியில் எழுதினர் என்பதைப் பற்றி அறிய இந்த நூல் உதவுகின்றது.தமிழ் ஒலிகளைப் பற்றி அறிய இந்த நூல் உதவுகின்றது.நாயக்கர்கள் சற்றொப்ப இருநூறு ஆண்டுகள் தமிழகத்தை ஆண்டதால் தெலுங்குமொழியின் செல்வாக்கினையும்,தெலுங்கு மொழிச்சொற்களையும் காண்கின்றோம்.நாயக்கர் காலத்தில் தோன்றிய நூல்களின் அடிப்படையில் நாயக்கர் காலத் தமிழின் நிலையை அறியலாம்.

தொல்காப்பியர் சகரம் மொழி முதலில் வராது என்கின்றார். சங்க கால இலக்கியங்களில் சகர மொழிமுதல் சொற்களைக் காண்கின்றோம். சங்கம் மருவிய காலத் தமிழில் சைகார முதற் சொற்கள் வருகின்றன. நாயக்கர் கால வில்லிபாரதத்தில் சௌகாரச் சொற்கள் வருகின்றன.

எ.கா.

சௌபால - வில்லிபாரதம் 2.2.258-2,9

சௌபாலர் - வில்லிபாரதம் 1.3:5-1

சௌபாலன் - வில்லிபாரதம் 4.3.50.1

‘ற’கரம் பேச்சுத் தமிழில் ஒலியனாகக் காணப்படவில்லை என்று வீரமாமுனிவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இன்றைய கிளைமொழிகள் சிலவற்றிலும் ‘ற’ கரம் ஒலியனாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வில்லிபாரத மொழிநடை தமிழும், வடமொழியும் கலந்ததொன்றாகும். தமிழும் வடமொழியும் கலந்த கலப்பினால், கீழ்க்காணும் மெய்ம்மயக்கங்கள் வில்லிபாரதத்தில் காணப்படுகின்றன.

-ம்ச்-, ல்த்-, த்ண்-, க்வ்-, த்ய்-, ப்ர்-, த்ர்-, ச்ர்-

சமற்கிருத ஒலியன்களான S S S தமிழில் புகுத்தியதால் கீழ்க்காணும் மெய்ம் மயக்கங்கள் காணப்படுவதாகப் பெசுகிபாதிரியார் குறிப்பிடுவார்.

St,Sn,Sm,Sp,Sk,St,Tr, Ks என்ற மெய்ம்மயக்கம் Tc என எழுத்தப்பட்டுள்ளது. ‘ந’கர ஒற்றாதல் ‘ன’கர ஒற்றாதல்,’ர’கர,’ற’கர ஒற்றாதல் போன்ற பல்லவர் கால, சோழர் கால மாற்றங்கள் நாயக்கர் காலத் தமிழிலும் தொடர்ந்தன.

இரட்டை மெய்க்குப் பின்னோ மெய்ம் மயக்கத்திற்குப் பின்னோ வரும் நெடில் உயிர்க்குறிலாகும்.

வணங்குவார்க்கு > வணங்குவர்க்கு

‘இ’கரம் ‘உ’ கரமாதல்

வளைநா ஒலி அல்லது இதழ்ஒலி மெய்கள் வரும் சூழலில் உகரம் தோன்றுகிறது.

சிலிர்க்கு > சிலுருக்கு

தமிழ் > தமுழு

மதில் > மதுலு

அகரம் இகரமாதல்

அதனால் >அதினால்

வஞ்சனை > வஞ்சினை

அகரம் உகரமாகவும் உகரம் இகரமாகவும் மாறல்

வந்தது > வந்துது

இருபது > இருபதி

நாயக்கர் காலத் தமிழில் சமற்கிருத ஒலிகள் பல தமிழாக வழங்கப்பட்டுள்ளதை அறிஞர் தெ.பொ.மீ.தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

(அ). நாயக்கர் காலத்தில் சமற்கிருத நாமடி ஒலி இடையண்ணத் தடை ஒலியாக மாறிற்று.

எ.கா.

ரிஷி > ரிசி

தோஷா > தோசம்

(ஆ)க்ஷ என்ற ஒலி ச என மாறல்

க்ஷணம் > சணம்

ஒவ்வொருவரும் சொற்களைப் பயன்படுத்தும்பொழுது அதன் பொருளை ஒருவாறு தத்தம் மனத்திற்கு எட்டும் வகையில் விளக்கிக் கொள்வர். இதற்கேற்பச் சொல்லில் வடிவம் மாறும். இதனை நாட்டுப்புற மொழியியல் என்பர்.

சித்ரகுப்தன் என்ற சொல்லைச் சித்ரக்கூத்தன் என மாற்றிக் கொண்டனர். கூத்தன் கூற்றம் என்பதன் மருஉவாகி எமனினும் வேறான ஒருவனைக் காட்டும்.

சித்ரகுப்த > சித்தரகூத்தன்

சட்சா > சட்டரசம்(சட்டம்-தகுதி)

இவ்வாறு குறிப்பிடுவது நாட்டுப்புற மொழியியலின் போக்காகும்.

**இக்காலத் தமிழ்**

ஆங்கிலேயரின் வருகை தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் மிகப்பெரிய ஏற்றம் தந்தது எனலாம். செய்யுளில் எழுதப்பெற்ற தமிழ் நூல்கள் உரைநடையில் எழுதப்பெற்றது ஆங்கிலேயர் காலத்தில் எனில் மிகையன்று. அச்சியந்திரங்களின் வருகை ஓலைச்சுவடியாக, கல்வெட்டாக இருந்த தமிழை அச்சுக்குக் கொண்டு வந்தது. அதுபோல் அகராதிகள் பல உருவாயின. சிறுகதை, புதினம், உரைநடை, இதழ்கள் யாவும் தமிழுக்குக் கிடைத்தன.

இராபர்ட்டு கால்டுவெல் பெருமகனாரின் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் நூல் தமிழகத்தில் மிகப்பெரிய அரசியல் மொழிப்புரட்சிக்குக் காரணமானது. புதிய கலைச்சொற்கள் பல படைக்கப்பட்டன. புதிய இலக்கணக்கூறுகள், புதிய புதிய வாக்கிய அமைப்புகள் போன்ற பல நிலைகளில் மாற்றங்கள் வந்தன. வானொலித் தமிழாகவும், இதழியல் தமிழாகவும், தொலைக்காட்சித் தமிழாகவும் இணையத் தமிழாகவும் இன்று தமிழ் ஏற்றம்பெற்றுள்ளது. வானொலி, இதழ்கள், தொலைக்காட்சிகள், திரைப்படங்கள் வழியாகப் பொதுக்கிளைமொழி ஒன்று உருவாகின்றது. அது அனைத்துக் கிளைமொழிகளின் பொதுப் பண்பாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழைப் பற்றி ரேனியசு பாதிரியார், கிரால், வீரமாமுனிவர், போப் அடிகளார், ஆர்டன், கால்டுவெல் உள்ளிட்ட மேனாட்டு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அதுபோல் இருபதாம் நூற்றாண்டுத் தமிழைப் பற்றி வையாபுரியார், தெ.பொ.மீ, ச.அகத்தியலிங்கனார், செ.வை.சண்முகனார், பொற்கோ, மு.சண்முகம் பிள்ளை, கு.பரமசிவம், ஆந்திரனோவ், கமில்சுவலபில் போன்ற பேரறிஞர்கள் ஆய்வுசெய்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பிற பல்கலைக்கழகங்களிலும் மொழியியல்துறைகள் நிறுவப்பட்டதன் விளைவாகப் பல நூறு மொழியியல் சார்ந்த ஆய்வேடுகள் வெளிவந்துள்ளன. இவைத் தமிழ்மொழியின் பன்முக ஆய்வுகளுக்கு உதவின. அறிஞர் ச.அகத்தியலிங்கனார் இன்றைய தமிழாய்வுகளை மனத்தில் கொண்டு தற்காலத் தமிழை வளரும் தமிழ் என்று குறிப்பிடுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் பேச்சுத் தமிழுக்கும், எழுத்துத் தமிழுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இன்றைய மொழியியல் அறிஞர்கள் மொழியைப் பேச்சுமொழி, எழுத்துமொழி என இரண்டாகப் பிரித்து, ஆய்வு செய்கின்றனர். இருபதாம் நூறாண்டுத் தமிழ் என்று குறிப்பிடும்பொழுது பேச்சு மொழியையும் எழுத்துமொழியையும் தனியே ஆராயவேண்டும்.

**மூக்கின உயிர்கள்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் மூக்கின உயிர் தோன்றியுள்ளது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். மூக்கொலி உயிர்கள் முன்னரே இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்திலேயே மொழியிறுதி மகர னகர மெய்கள் ஒன்றாகியமை அதற்கு முந்திய உயிர்கள் மூக்கொலிச்சாயல் பெற்றதன் விளைவாக இருக்கலாம்.

Maram > mara

Maran > mara

**ஒலிப்புடை வெடிப்பொலிகளும் ஒலிப்பிலா வெடிப்பொலிகளும்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் ஒலிப்புடை வெடிப்பொலிகள் தனி ஒலியன்களாக (Separate Phonemes) வளர்ச்சியுற்றமையாகும். பிறமொழிச் சொற்கள் வழக்கு மிகுந்ததே இந்த நிலைக்குக் காரணமாகும்.

Kuru pimple

Guru teacher

**வரன்முறை (Distribution)**

எல்லா உயிரும் சொல்லுக்கு முதலிலும், இடையிலும் வரும். ஈற்றில் ஏகாரமும், ஓகாரமும் வருவது இல்லை. ஈகாரம், ஊகாரம் ஆகிய இரண்டும் தீ, பூ, என்னும் ஓரசைச் சொற்களில் ஈற்றில் வருகின்றன. க்,ச்,த்,ம்,ந்,ஞ்,வ்,ய் ஆகியவை சொல்லுக்கு முதலில் வரும். பிறமொழிச் சொற்களில் ட், ர், ல் மொழி முதலில் வருகின்றன. (டப்பா, ரகசியம், லட்டு). பதினெட்டு மெய்களும் மொழியிடையில் தனித்து வருகின்றன. ம்,ன்,ண்,ழ்,ல்,ள்,ர்,ய் ஆகியவை சொல்லுக்கு இறுதியில் வரும்.

இன்றைய எழுத்துத் தமிழைப் பற்றி கூறும்பொழுது நாளிதழ்கள், மாத இதழ்கள், கதை, நாவல், சிறுகதை போன்றவற்றில் பயன்படுத்தப்படும் தமிழையும் ஆராயவேண்டும். பத்திரிகைத் தமிழில் க்,ச்,ட்,த்,ந்,ம்,ய், ,ல்,வ்,ஸ்,ஜ்,க்ஷ்,ஹ் முதலியன சொல்லுக்கு முதலில் வருகின்றன.

/ட / டவல்,டானிக்,டெலிகிராம்

/ ட/ லட்சம்,லாகிரி,லீலை,லினன்

/ஷ/ ஷர்பத்,ஷாப்

/ ஜ / ஜம்பம்,ஜாக்கிரதை,ஜான்,ஜோப்பு,ஜோடி

/ ஹ/ ஹால் ஹோட்டல்

/ க்ஷ / க்ஷத்திரியார்,க்ஷவரம்,க்ஷயரோகம்,க்ஷேமம்

உயிர் எழுத்துகளில் எ,ஒ,ஔ ஆகியவை இறுதியில் வருவனவல்ல. மெய்யெழுத்துக்களில் க்,ச்,த்,ட்,ப்,ம்,ன்,ண்,ய்,ர்,ல்,வ்,ழ் ள்,ஜ்,ஸ் ஆகியவை மொழியிறுதியில் வருகின்றன.

இன்றையத் தமிழில் ஒரு சொல்லின் முதலிலோ,இறுதியிலோ இரண்டு மூன்று மெய்கள் மயங்குவனவல்ல. பழந்தமிழில் சொல்லின் இறுதியில் இரண்டு மெய்கள் (தீர்ம்,போன்ம்) மயங்கி வந்துள்ளன.

சொல்லின் நடுவில் மயங்கலாம். இன்றையப் பத்திரிகைத் தமிழில் புதிய மெய்ம்மயக்கங்கள் தோன்றியுள்ளன.

/ட்ன்/ சட்னி

/ட்ல்/ இட்லி

/ட்ஜ்/ பேட்ஜ்

/ன்ய்/சூன்யம்

/ன்ஷ்/ பென்ஷன்

/ஸ்க்/ நமஸ்காரம்

/ஸ்ட்/ போஸ்டர்

/ஸ்த்/ஆஸ்தி

/ஸ்ப்/ பரஸ்பரம்

/ஸ்ர்/ ஆஸ்ரமம்

/ஸ்ல்/ இஸ்லாம்

/ஸ்வ்/ சரஸ்வதி

**இன்றைய பேச்சுத் தமிழில் ஒலிமாற்றங்கள்**

பேச்சுத்தமிழில் நிகழும் ஒலிமாற்றங்கள் பற்றி பல அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். அவர்களுள் கு. பரமசிவம் குறிப்பிடத்தக்கவர்கள். வரின் ஒலிமாற்ற ஆய்விலிருந்து சில எடுத்துக்காட்டுகள்:

இகர, எகர, உகர, ஒகர மாற்றம்

இலை - எலை

இடம் - எடம்

உரல் - ஒரல்

குடை - கொடை

முதல் - மொதல்

இகர எகரங்கள் ஒகரமாதல்

பிறப்பு - பொறப்பு

பிணம் - பொணம்

பெட்டி - பொட்டி

இகரம் உகரமாதல்

பிட்டு - புட்டு

பிள்ளை - புள்ளை

உகரம் இகரமாதல்

புல்லு - பில்லு

புறா - பிறா

ஒளகாரத் திரிபு

இருபதாம் நூற்றாண்டில் ஒளகாரம் அவ் என்றே உச்சரிக்கப்படுவதோடு எழுதவும்படுகிறது.

ஒளவை - அவ்வை

**சந்தி**

இருபதாம் நூற்றாண்டில் புதிய சந்திகள் தோன்றியுள்ளன. அந்தந்த (அந்த + அந்த), நாலா பக்கமும் (நாலு+பக்கம்), பத்திரிகாசிரியர் (பத்திரிகை+ஆசிரியர்) போன்று பல சொற்களில் மாற்றுவடிவங்கள் வந்து புதிய புணர்ச்சி விதிகளை அமைக்கும்படி செய்துள்ளன.

**ஆக்கப்பெயர்கள்**

வேறொரு சொல்லிலிருந்து ஆக்கிக்கொள்ளப்பட்டவற்றை ஆக்கப்பெயர்கள் என்பர். இக்காலத் தமிழில் பல ஆக்கப் பெயர்கள் தோன்றியுள்ளன.

1.உருபு - த்துவம் பெறல்

முதலாளி> முதலாளித்துவம்

முக்கியம்> முக்கியத்துவம்

2.உருபு-அம் பெறல்

திருப்பு>திருப்பம்

ஓட்டு>ஓட்டம்

நெருக்கு>நெருக்கம்

அடக்கு>அடக்கம்

3.உருபு -பது பெறல்

எடு>எடுப்பது

கொடு>கொடுப்பது

4.உருபு-ப்பு பெறல்

சிரி> சிரிப்பு

விரி>விரிப்பு

5.உருபு-ஆளி பெறல்

பேச்சு> பேச்சாளி

நோய்>நோயாளி

6.உருபு -மான் பெறல்

நீதி>நீதிமான்

புத்து>புத்திமான்

பெயர்ச்சொல்லில் எதிர்மறை வடிவம் சேர்க்கப்படுதல் இன்றையத் தமிழில் பெருவழக்காக உள்ளது.

நாகரிகம்>அநாகரிகம்

அவசியம்>அனாவசியம்

நம்பிக்கை>அவநம்பிக்கை

மானம்>அவமானம்

**தன்மதிப்பீட்டு வினாக்கள்**

அ.சரியா? தவறா?

1. உயிரினங்களின்தோற்றம், வளர்ச்சிபற்றிய டார்வினின் பரிணாமக் கொள்கை இயற்கை மொழிகளின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆராய வழிவகுத்தது.
2. வாய்மொழிஇலக்கியங்களே ஒருமொழியின் உண்மையான இயல்பைக் காட்டுவனவாகும்
3. தமிழறிந்த தமிழகத்துப் புலவர் பெருமக்கள் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளமை போன்று வெளிநாட்டு அறிஞர்கள் பலரும் தமிழ்மொழிக்கு இலக்கணம் எழுதவில்லை
4. தாமசு பர்ரோ அவர்களும் எமனோ அவர்களும் இணைந்து உருவாக்கி வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி (A Dravidian Etymological Dictionary) திராவிடமொழியியல் உலகில் அனைவராலும் போற்றப்படும் அகராதியாகும்.
5. இன்றைய எழுத்துத் தமிழைப் பற்றி கூறும்பொழுது நாளிதழ்கள், மாத இதழ்கள், கதை, நாவல், சிறுகதை போன்றவற்றில் பயன்படுத்தப்படும் தமிழையும் ஆராயவேண்டும்.

பாடத்தொகுப்புரை

- தமிழ்மொழி வரலாற்றை அறிய இலக்கணம், லக்கியம், ரையாசிரியர்கள் கருத்துகள், கல்வெட்டு,வெளிநாட்டார் குறிப்புகள்,ஆய்வுகள் பெரிதும் பயன்படுகின்றன.
- தொல்காப்பியர் இன்றைய மொழியியல் அறிஞர்கள் வியக்கும் வண்ணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் வகுத்துள்ளார்.இதில் எழுத்துகளின் பிறப்பு பற்றிய அவர் கருத்துகள் மேல்நாட்டினரையும் வியப்படையச் செய்கின்றது.
- பெயர்,வினைச்சொற்கள் பற்றியும் வேற்றுமைகள் பற்றியும் தொல்காப்பியரின் கருத்துகள் சிறப்பிற்கு உரியன.
- தமிழ் வரலாற்றை அறிவதில் கல்வெட்டுகளுக்கு முக்கிய இடம் உண்டு.
- தமிழ்மொழி வளர்சிக்கு இருபதாம் நூற்றாண்டில் ஊடகங்கள் பெரும் பங்களிப்பு செய்துள்ளன.

**முக்கியச்சொற்கள்**

1. பிராமி - தமிழைத் தொடக்க காலத்தில் எழுதப் பயன்பட்ட எழுத்து
2. வளி - காற்று
3. தம்மம் -அறம்
4. லேன்(பிராகிருதம்)- குகை
5. ஸத்ய புத்ரர்கள் - அதியமான்கள்

**தன்மதிப்பீட்டு விடைகள்**

1.சரி

2.சரி

3.தவறு

4.சரி

5.சரி

**1.8.மாதிரி வினாக்கள்**

அ.**ஒரு பக்க** அளவில் விடை தருக

1.தமிழில் அகராதி முயற்சி பற்றி எழுதுக

2.தமிழில் ஆக்கப்பெயர்கள் பற்றி விளக்குக

ஆ.**நான்கு பக்க** அளவில் விடைதருக

1.தமிழ்மொழியின் வரலாறு அறிவதற்குரிய சான்றுகளைத் தொகுத்து எழுதுக

2.தொல்காப்பியர் குறிப்பிடும் வேற்றுமைகளை விளக்குக

-------------------

**குறிப்பு**

.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................

## அலகு 2

## 2.1.முன்னுரை

சங்க காலத்திற்குப் பிறகு தமிழ்மொழியின் வரலாறு அறிவதற்குப் பெரிதும் துணைபுரிவன கல்வெட்டுகளாகும்.தமிழ் வரிவடிவ வரலாறு அறிவதற்கும்,பேச்சு வழக்கு,எழுத்து வழக்கு அறிவதற்கும் கல்வெட்டுகள் பெரிதும் உதவுகின்றன.ஒவ்வொரு அரசுகளின் அரசாட்சியிலும் தமிழ் பிறமொழிக் கலப்புற்றும்,மாற்றங்களைச் சந்தித்தும் வளர்ந்துள்ளதை இந்தப் பகுதியில் அறிய உள்ளோம்.மேலும் எழுத்துச்சீர்திருத்தம் பற்றியும், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி தமிழுக்கு எவ்வகையான பயனைத் தந்துள்ளது என்பதைப் பற்றியும் அறிய உள்ளோம்.

**நோக்கங்கள்**

- தமிழ்க்கல்வெட்டுகளின் தொன்மை அறிதல்
- தமிழ் வரிவடிவ வளர்ச்சி அறிதல்
- மெய்க்கீர்த்திகள் பற்றி அறிதல்
- தமிழ்க் கல்வெட்டு எழுத்துகளைப் பற்றி அறிதல்
- எழுத்துச்சீர்திருத்தம் பற்றி அறிதல்
- அறிவியல்தமிழ் என்ற தலைப்பில் அறிவியல், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ் வளர்ச்சி பற்றி அறிதல்

**பாட அமைப்பு**

1.9 முன்னுரை

1.10 நோக்கங்கள்

1.11 பாட அறிமுகம்

1.12 தன்மதிப்பீட்டு வினாக்கள்

1.13 பாடத்தொகுப்புரை

1.14 முக்கியச்சொற்கள்

1.15 தன்மதிப்பீட்டு விடைகள்

1.16 மாதிரி வினாக்கள்

**பாட அறிமுகம்**

முனைவர் சு.சக்திவேல் எழுதியுள்ள தமிழ்மொழி வரலாறு நூலில் கல்வெட்டுத் தமிழ் என்னும் தலைப்பில் உள்ள செய்திகளும், தமிழ் வரிவடிவ வரலாறு என்னும் தலைப்பில் உள்ள செய்திகளும் இந்த இயலில் பாடமாக அமைகிறது.

**கல்வெட்டுத் தமிழ்**

தமிழர்கள் பண்டைக்காலந்தொட்டுக் கல்லில் எழுதும் பழக்கம் உடையவர்களாக விளங்கியுள்ளனர். அரசர்கள் தாங்கள் வழங்கும் கொடைகள்,பிற அறச்செயல்கள் காலத்தால் அழியாமல் நிலைநிறுத்த கல்வெட்டுகளில் எழுதிவைக்கும் பழக்கத்தைக் கொண்டனர். கல்லில்

எழுதியதைச் செம்பிலும் எழுதி வைத்துள்ளனர். கல்லின் மேல் பொறிக்கப்பட்ட எழுத்துகளுக்குக் கல்வெட்டெழுத்து என்று பெயர். இவ்வாறு உறுதியான கல்லில் எழுதப்பட்டதால்தான் காலம் கடந்தும் நமக்கு அரிய உண்மைகளைச் சுமந்தபடி நிற்கின்றன.தமிழ் போலவே உலகின் பலமொழிகள் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளன. எகிப்தியமொழி,உக்ரிடிக்மொழி, உறிட்டைட்மொழி, பினீசியமொழி போன்றமொழிகள் அனைத்தும் கல்வெட்டுகளில் வாழ்பவையாக உள்ளன. இம்மொழிகளின் பழைமையும் வளமும் கல்வெட்டுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

காலந்தோறும் கல்வெட்டுகளில் எழுதப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையிலும், எழுத்துருவங்களின் அடிப்படையிலும் மொழி காலந்தோறும் எவ்வாறு வளர்ந்துள்ளது, மாற்றம் அடைந்துள்ளது என்று அறியமுடிகின்றது. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் உள்ள வேறுபாடுகளை அறியவும் கல்வெட்டுகள் துணைநிற்கின்றன.

திராவிடமொழிகளில் குறிப்பாகத் தமிழ்மொழியில் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் மிகப்பழைமையானது பிராமிக்கல்வெட்டுகளாகும். இவை கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இவற்றைக் கீழ வளைவு, மறுகால்தலை, திருவாதவூர், ஆனைமலை, அழகர்மலை, மேட்டுப்பட்டி, முத்துப்பட்டி, சித்தன்னவாசல், விக்கிரமங்கலம் போன்ற ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளில் காணலாம். அசோகர் பயன்படுத்திய பிராமி எழுத்துக்களைத் தென்னிந்திய மொழிகளுக்கு ஏற்ப மாற்றியமைத்ததே தென்னிந்திய பிராமி என்பர். பொதுவாகத் தமிழ்நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுகள் தமிழ், கிரந்தம், வட்டெழுத்து ஆகிய மூன்றுவகை எழுத்துக்களால் ஆகியவை. கிரந்த எழுத்துக்களாலும் தமிழ் எழுத்துக்களாலும் ஆகிய கல்வெட்டுகள் கி.பி.ஆறாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. பிராமிக் கல்வெட்டுகளை அடுத்துத் தமிழ்நாட்டில் கிடைப்பது திருநாதர்குன்று கல்வெட்டடாகும்.தமிழ் எழுத்துக்களாலான இக்கல்வெட்டு கி.பி.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். இக்கல்வெட்டுகள் யாவும் தமிழ் மொழியின் வளர்ச்சியையும் பேச்சுமொழியின் சாயலையும் காட்டுவனவாக உள்ளன.இலக்கியத்திற்கும் கல்வெட்டுகளில் காணும் மொழிக்கும் இடையே பல்வேறு வேற்றுமைகள் காணப்படுகின்றன. இலக்கியமொழிகளில் ஏறாத பல பேச்சு வழக்குகள் கல்வெட்டுமொழிகளில் காணலாம். இக்கல்வெட்டுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழி வரலாற்றைச் சிறந்த முறையில் உருவாக்கலாம்.

தமிழில் ‘‘க’’ என்ற எழுத்து பல ஒலிகளாக ஒலிக்கின்றன. ால்டுவெல் தடையொலிகள் (Plosives) மொழிக்கு முதலிலும் இடையே இரட்டித்து வருகையிலும் “K” போன்ற உயிர்ப்பொலியாகவும், மாழிக்கிடையே உயிர் எழுத்துக்களின் நடுவே ஒன்றாய் வரும்பொழுதும் மெல்லெழுத்தின் பின்வரும்பொழுதும் “G” போன்ற ஒலியுடைய ஒலியாக (Voiced) வும் ஒலிக்கின்றது. இம்மாற்றத்தை உயிர்ப்பொலி ஒலிப்பொலி

மாற்றுச்சட்டம் (Law of Covertibillity of surds into Sonants) எனப் பெயரிட்டுள்ளார்.

கல்வெட்டுகளில் தமிழ்ச்சொற்கள் கிரந்தம்,பிராகிருதம்,தேவநாகரி போன்ற அயல்மொழி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துகளில் ஒலிப்புடைய ஒலிக்கும் ஒலிப்பிலா ஒலிக்கும் வேறுபட்ட வரிவடிவங்கள் உள்ளன.எனவே கல்வெட்டுகளின் துணைகொண்டு தமிழ் ஒலியன்கள் ஒலிப்புடையனவா ஒலிப்பில்லனவா என்று அறியமுடியும்.

தமிழ்மொழி வழக்கை இலக்கியவழக்கு,பேச்சு வழக்கு என இருவகையாகப் பகுக்கலாம். கல்வெட்டு வழக்கு,பேச்சு வழக்குடன் ஒத்தியல்வது.மக்கள் நாவில் வழங்கும் பேச்சு வழக்கில்தான் காலத்துக்குக் காலம் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். இலக்கிய வழக்கைக் கற்றோர் மட்டுமே பேணிப் பாதுகாத்தனர். 19, 20 ஆம் நூற்றாண்டு இலக்கியங்களில் பேச்சு வழக்கு மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. தமிழறிஞர்கள் இலக்கிய வழக்குதான் உயர்ந்தது என்றும் பேச்சு வழக்கு உயர்ந்தது அல்ல என்றும் நீண்ட காலமாக எண்ணினர்.அதனால் பேச்சு வழக்கு ஆய்வைப் புறக்கணித்தனர். கல்வெட்டுத் தமிழ் பேச்சுவழக்குத் தமிழின் நீண்ட கால வரலாற்றை அறியத் துணைபுரிகின்றது.பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும் தனித்தனி வரலாறு உடையன.ஒன்றின் தாக்கத்தை மற்றொன்றில் காணலாம். இவ்விரண்டையும் ஆராய்ந்தால்தான் தமிழ் மொழி வரலாறு முழுமையடையும்.பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் தமிழ்மொழி வரலாற்றை ஆராயும்பொழுது குகைக்கல்வெட்டுமொழி,தொல்காப்பியத்தமிழ்,சங்க காலத் தமிழ் என்ற வரிசையில் ஆய்வு செய்துள்ளார்.பல்லவர் கால,சோழர்காலத் தமிழை ஆராயக் கல்வெட்டுகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளார் என்பதிலிருந்து கல்வெட்டுத் தமிழின் சிறப்பினை அறியலாம்.

பி.சி.சாப்ரா அவர்களும் டாக்கர் டி.ஸி.சர்க்கார் அவர்களும் மொழியியலுக்குக் கல்வெட்டுகளின் இன்றியமையாமையை முதலில் உணர்ந்தனர். தமிழ்மொழியைப் பொறுத்த மட்டில் கல்வெட்டின் இன்றியமையாமையை முதலில் உணர்ந்தவர் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் ஆவார். டாக்டர் கே.கணபதி பிள்ளை அவர்கள்தான் முதன்முதலில் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுத் தமிழை ஆய்வு செய்தார். ஜெயகுமாரி அவர்கள் எம்.லிட்., பட்ட ஆய்வுக்காக கி.பி. 1050 முதல் கி.பி. 1250 ஆம் ஆண்டு வரையிலான கல்வெட்டுகளை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்வுசெய்தார். பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்கு 14 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து 17 ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுத் தமிழை ஆய்வு செய்தார்.

முனைவர் பன்னீர்செல்வம் அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வுக்குக் கி.பி.7,8,9 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்தார். கி.பி.800-920 ஆம் ஆண்டுகளில்

பொறிக்கப்பட்ட கல்வெட்டுத் தமிழையும் சாடவர்ம சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டுகளையும் மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து ஆ.வேலுபிள்ளை டாக்டர் பட்டம் பெற்றார். இதைத் தவிர 'சாசனமும் தமிழும்' என்ற நூலும் (Language Variations in Tamil Inscriptions) ஆராய்ந்து, மேலும் ஒருடாக்டர் பட்டமும் பெற்றுள்ளார்கள். கார்த்திகேயனி அவர்கள் டாக்டர் பட்ட ஆய்வுக்குக் கி.பி. 900-1050 ஆம் ஆண்டு கல்வெட்டுக்களை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்துள்ளார்கள்.

பேராசிரியர் ச.அகத்தியலிங்கமும் டாக்டர் செ.வை.சண்முகம் அவர்களும் இணைந்து 1250-1350 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதி கல்வெட்டுகளை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து நூலாக வெளியிட்டுள்ளனர்.

கல்வெட்டுகள் பேச்சுத் தமிழில் அமைந்துள்ளன. கல்வெட்டை வெட்டியவர்கள் அக்காலத்தில் பேச்சை எப்படிக் கேட்டார்களோ அப்படியே செதுக்கியுள்ளனர். ல்வெட்டுமொழியில் இடைச்செருகல் Interpolation) ல்லை. எக்காலத்துக் கல்வெட்டு என்று நிர்ணயம் செய்துவிட்டால் அக்கல்வெட்டு கொண்டு அது அக்கால மக்கள் வழக்கு என்று முடிவுசெய்துவிடலாம். காலத்தை நிர்ணயிக்க முடியாத கல்வெட்டு,செப்பேடுகளின் துணைகொண்டு மொழியியல்கூறுகளின் அடிப்படையில் காலத்தை நிர்ணயிக்கலாம்.

**வரிவடிவம்**

குகைக்கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்ட தமிழ்மொழிக் கல்வெட்டுக்களாகும். குகைக்கல்வெட்டுக்களின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு ஆகும்.தமிழ்நாட்டிலுள்ள குகைக் கல்வெட்டுகளுக்கும் பல்லவர் காலக்கல்வெட்டுகளுக்கும் இடையே இடைவெளி உண்டு. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த திருநாதர்குன்று கல்வெட்டு மிகவும் பழைமையானது. கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் வரிவடிவத்திலும், கிரந்த வரி வடிவத்திலும் எழுதப்பட்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கி.பி.எட்டாம் நூற்றாண்டிலிருந்தே வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இம்மூன்று வரிவடிவங்களுக்கும் இடையே உள்ள உறவினை ஆராய வேண்டியுள்ளது.தமிழ் வரி வடிவத்திற்கும் கிரந்த வரி வடிவத்திற்கும் இடையே உள்ள உறவு நெருக்கமானது. உ,ஊ, ய,ங, த,ந, ய,வ என்பன இரண்டு வடிவங்களிலும் ஒரே மாதிரியாக எழுதப்படுகின்றன. அ, ஆ, ஈ, ஒ, ஔ, ட, ற, ர, ல, ள என்னும் எழுத்துக்கள் சிறிதளவே மாறுபடுகின்றன. இவ்விரண்டையும் இணைத்துக் 'கிரந்த தமிழ் வரிவடிவம்' என்பாருமுளர்.

கல்வெட்டுகளில் வடமொழிப் பகுதியைக் கிரந்தத்திலும் தமிழ்ப் பகுதியை வட்டெழுத்திலும் எழுதினர். கிரந்த வடிவம் தமிழ்ப்பகுதியில் வடமொழியை எழுதப் பயன்பட்டது.பல்லவர்கள் கிரந்த வடிவத்தையும்,தமிழ் வரி வடிவத்தையும் தென்னிந்தியாவில் புகுத்தினர்என டி.என்.சுப்பிரமணியம் கூறுகின்றார். கி.பி.எட்டாம் நூற்றாண்டில் வட்டெழுத்து வளர்ச்சி

அதிகமிருந்தது.பினீசிய எழுத்து,அரமைக் எழுத்து என்ற மேற்காசிய எழுத்துகளிலிருந்து வட்டெழுத்து தோன்றியிருக்குமோ எனப் பர்னல் (Burnell) கூறுகின்றார். வட்டெழுத்தும் அசோகன் பிராமியிலிருந்து வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும் எனக் கோபிநாதராவ் குறிப்பிடுகின்றார். வட்டெழுத்துத் தமிழகம் முழுவதும் முந்திய காலத்தில் இருந்திருக்க வேண்டும். பல்லவர்கள் கிரந்த தமிழைப் புகுத்திய பிறகு இது வழக்கொழிந்திருக்க வேண்டும். கோபிநாதராவ் தமிழ் வரிவடிவத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தையும் அசோகன் காலப் பிராமி,திருநாதர்குன்று கல்வெட்டு, பல்லவர், சோழர்காலக் கல்வெட்டுகளில் காணப்படும் கல்வெட்டு வடிவங்களுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். கிரந்த தமிழ் வரிவடிவத்திற்கும், தெலுங்கு,கன்னட வரி வடிவத்திற்குமுள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் எழுத்து வளர்ச்சியை இரண்டு பிரிவாகப் பிரிக்கின்றனர்.எகரத்தை ஏகாரத்திலிருந்தும் ஒகரத்தை ஓகாரத்திலிருந்தும் பிரிப்பதற்கான புள்ளி 11 ஆம் நூற்றாண்டுவரை கல்வெட்டுகளில் காணப்படுவதாகக் கோபிநாதராவ் குறிப்பிடுகின்றார். கி.பி.11 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இப்புள்ளி காணப்படவில்லை. தமிழ்க் கிரந்த வடிவங்களில் மாற்றமும் இருவகையில் நடைபெற்றுள்ளது. நர்கோடுகளுக்குப் பதிலாக வளைகோடுகளும் வளை கோடுகளுக்குப் பதிலாக நேர்கோடுகளும் எழுதப்பட்டமையே ஆகும்.எட்டாவது நூற்றாண்டிலிருந்து கிரந்த எழுத்தில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள் எல்லா எழுத்துகளின் வலப்பக்கக் கோணங்களும் வட்டங்களாக மாறியது ஆகும். முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து எழுத்துகள் அதிக அளவில் கோணங்களைப் பெற்று நீள் சதுர வடிவம் கொள்ளத் தொடங்கின. கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்து முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகப்பழைமையான கல்வெட்டுகள் அனைத்தும் பிராமி வரி வடிவத்திலேயே எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுக் குகைக் கல்வெட்டுகளின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு என முதலில் கூறியவர் கே.வி.சுப்பிரமணிய ஐயர். குகைக் கல்வெட்டுகளுக்குப் புதிய கால முறையை வகுக்கும் மகாலிங்கம் அவர்கள் அவற்றுள் பழையவை கி.மு.மூன்றாம் நூற்றாண்டு எனவும் மிகப்பிந்தியவை கி.பி.மூன்றாம் நூற்றாண்டு எனவுப் கூறுகின்றார். அசோகனுடைய வரிவடிவத்திற்கு வேறுபாடு அந்நாட்டு வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றமாகக் கொள்ளலாம்.

கிரந்த வரிவடிவம்,தமிழ் வரிவடிவம்,வட்டெழுத்துத் தொடர்பான வளர்ச்சியைக் காட்டும் கல்வெட்டுகள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டன. ட்டெழுத்தைப் பொறுத்தமட்டில் கோபிநாதராவ், சிவராமமூர்த்தி, டி.என்.சுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகியோர் சேர நாட்டு வரிவடிவமும் பாண்டியாநாட்டு வரி வடிவமும் வேறு என்று கொள்ளவில்லை. பாண்டிய நாட்டில் வழங்கி வந்த வரிவடிவம் ‘வட்டம்’ என்பதற்குத் திருநெல்வேலி

மாவட்டத்திலுள்ள குற்றாலக் கல்வெட்டொன்று சான்றாக அமைகின்றது. (Travancore Archaeological series Vol 1/ p 286).

தமிழ் வரிவடிவமும் வட்டெழுத்தும் தமிழ்மொழியை எழுதுவதற்கே பயன்பட்டன. வட்டம் பிராமியிலிருந்து தோன்றித் தென்னிந்திய சூழலுக்கு ஏற்ப வளர்ந்த வடிவம் என்பாரும் உள்ளனர். தமிழ் மொழிக்கு வரிவடிவம் இருந்தமைக்குச் சான்று தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.பழைய வட்டெழுத்தின் முன்னோடியே தமிழ் பிராமியைக் குறிப்பன என்பதைப் பழைய சான்றுகளாகக் கொள்ள வேண்டும். பல்லவர்களில் சிலர் நாகரி எழுத்து வடிவத்தையும் பயன்படுத்தியுள்ளனர். பாண்டியரும் சேரரும் வடமொழியை எழுதக் கிரந்தத்தையும் தமிழ்மொழியை எழுத வட்டெழுத்தையும் பயன்படுத்தினர்.

இடைக்காலக் கல்வெட்டுகளின் இயல்புகளில் ஒன்று,தமிழ் இலக்கண நூலாரின் கருத்துப்படி புள்ளிபெற வேண்டிய எழுத்துக்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் புள்ளியில்லாது எழுதப்படுவதாகும். புள்ளி என்ற பெயர் எகர ஒகரக் குறில்கள் வழங்குவதாகும்.ஆனால் உயிர் எழுத்துக்களாகிய எகர,ஒகரக் குறில்கள் புள்ளி பெற வேண்டும் எனக் கூறப்படுகின்றது. வடமொழிக்கு வழங்கப்பட்ட பிராமி வரி வடிவத்தைத் தமிழுக்கு வழங்க முற்பட்ட போது தனி மெய்யெழுத்துக்கும் வடமொழியில் வழங்காத எகர, ஒகரக் குறில்களுக்கும் புள்ளியிட்டு எழுதும் வழக்கம் தொடங்கியது. எனவே இடைக்காலக் கல்வெட்டுகளில் எகர ஒகரங்களுக்கும் வேறுபாடு காணமுடியாது. ஏகார,ஓகார மாற்றத்தினை வீரமாமுனிவர் செய்ததாகக் கூறுவர். தமிழ் வரி வடிவமும் காலப்போக்கில் சிறிது சிறிதாக மாறிச் சென்றிருக்கிறது.

**மொழியமைப்பு**

**உயிர் ஒலியன்கள்**

| | | |
|---|---|---|
| இ ஈ | | உ ஊ |
| எ ஏ | அ ஆ | ஒ ஓ |

(ஐ-கூட்டொலி; ஔகாரம் எச்சொல்லிலும் இடம்பெறவில்லை)

**மெய் ஒலியன்கள்**

| | | | |
|---|---|---|---|
| ப் | | த் | ட்ச்க் |
| ம் | ந் | ண்ஞ் | |
| ல் | ழ் | | |
| ர் | ள் | | |
| ற் | | | |
| வ் | | ய் | |

'ங'கரம் சொல்லின் இடையில் ககர வெடிப்பொலிக்கு இன மூக்கொலியாக வருகின்றது. மகர மெய்யின் மாற்றொலியாக 'ங'கர மெய்யைக் கொள்ளலாம். பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் ஞகர மெய்யும் இந்நிலைக்கு வந்துவிட்டது.

‘ன’ கரம் ‘ந’கரத்தின் மாற்றொலியாகும்(allophone)

**உயிரொலி மாற்றங்கள்**

1.அ> இ

படலிகை > பிடலிகை

மலாட்டு > மிலாட்டு

அ> உ

தேவன்கேசவன் > தேவன் கேசுவன்

திருமழபாடி >திருமழுவாடி

2.ஆ>ஓ

பெற்றான்> பெற்றோன்

என்றாம் >என்றோம்

3.இ> அ

ஞாயிற்று > ஞாயற்று

காவித்ப்பாக்கம் >காவதிப் பாக்கம்

இ>உ

அமிர்தம்>அமுர்தம்

4.உ>அ

நுந்தா >நந்தா

ஊருணி >ஊரணி

உ >இ

ஒன்றினுக்கு >ஒன்றிநிக்கு

5.ஐ > ஏ

ஊட்டாமை > ஊட்டாமே

கெடாமை >கெடாமே

6.ஒ >அ

பொலிசை> பலிசை

ஒ> உ

கொடு > குடு

கொணர்ந்து >குணந்து

மெய்யொலி மாற்றங்கள்

1.ஞ > ந

ஞான்று>நான்று

ஞெகிழ்த்து >நெகிழ்த்து

2.க>ய

பதிகம் > பதியம்

திகதி > தியதி

க >ம

சந்தி விக்கிரகப் பேறு >சந்தி விக்கிரமப் பேறு

ய >க

வாரியம் >வாரிகம்

நியதி >நிகதி

3.ந்த>ஞ்ச

ஒழிந்து>ஒழிஞ்சு

இசைந்த > இசைஞ்ச

ஐந்தாவது > ஐஞ்சாவது

4.ல் >ள்

மதில்>மதிள்

துலை > துளை

5.ள் > ழ்

திருவாய்க் கேள்வி >திருவாய்க்கேழ்வி

6.ற்க்>க்க்

தெற்கு > தெக்கு

மேற்கு>மேக்கு

7.கெடல்(loss)

போழ்து >போது

கொணர்ந்து > கொணந்து

யாண்டு > ஆண்டு

முறையே ழகரமும் ரகரமும் யகரமும் கெட்டுள்ளன.

கீர்த்தி > கீத்தி

கார்த்திகை>காத்திகை

வாய்க்கால்>வாக்கால்

மொழிமுதல் யகரம்

ஆளும் > யாளும்

இறையான்சேரி >யிறையான்சேரி

கல்வெட்டுகளில்காணப்படும் ஒலியியல் மாற்றங்களை (phonological Change) நூற்றாண்டு வாரியாகக் காணலாம்

7 ஆம் நூற்றாண்டு

அ> எ அரசர் >அரசெர்

உ>இ இவருடைய >இவரிடைய

ஐ >அ ஐந்நூறு >அஞ்நூறு

ய > யி செய்து செயிது

8 ஆம் நூற்றாண்டு

அ> இ எல்லாவற்றி >எல்லாவிற்றின்

எய்> அய் எண்ணெய்> எண்ணை

க>ய திருப்பதிகம் > திருப்பதியம்

ய>ச குயக்காணம் > குசக்காணம்

9 ஆம் நூற்றாண்டு

இ>அ ஞாயிறு > ஞாயறு

ழ>ள கிழமை >கிளமை

11 ஆம் நூற்றாண்டு

ய>யி இக்கோயில் > யிக்கோயில்

12 ஆம் நூற்றாண்டு

ற>ர நிறுத்த > நிருத்த

14 ஆம் நூற்றாண்டு

க>வ தகப்பனார் >தவப்பனார்

15 ஆம் நூற்றாண்டு

ய்> ள் ஆராய்ச்சி ஆராள்ச்சி

16 ஆம் நூற்றாண்டு

ன்ற > ண்ண ஒன்று>ஒண்ணு

உ>வு உள்ளிட்ட>வுள்ளிட்ட

கல்வெட்டுப் பெயர்ச்சொற்களைப் பாலறி கிளவிஉள்ள பெயர்ச்சொற்கள் என்றும் பாலறி கிளவிகள் இல்லாப் பெயர்ச்சொற்கள் என்றும் இரண்டாகப் பகுக்கலாம். பெயர்ச்சொல்லே பயனிலை அமைந்த வினைமுற்று இடம்பெறாத வாக்கியங்களும் கல்வெட்டில் உண்டு. நான்காம் வேற்றுமை உருபாகிய குகரம் ரகரத்திற்குப் பின் - க்கு என்றும் றகரத்திற்குப் பின்-கு என்றும் வரும்.

மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆன்,ஆல் இவ்விரண்டும் கல்வெட்டில் இடம்பெற்றிருக்கின்றன.ஆறாம் வேற்றுமை உருபாக ‘அது’ மட்டுமின்றி ‘அ’கரமும் ‘உடையு’வும் கல்வெட்டுகளில்

இடம்பெற்றிருக்கின்றன. ஏழாம் வேற்றுமைக்குக் ‘கண்’ மட்டுமின்றிப் ‘பக்கல்’ என்பதும் கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வீரசோழியம் இவ்வுருபைப் பற்றிப் பேசுகின்றது.

ஐந்தாம் வேற்றுமைக்கு ‘நின்று’ என்ற சொல்லுருபும் கல்வெட்டில் காணப்படுகின்றது. தன்மை ஒருமைக்கு யான், நான் என்ற இரு வடிவங்களும் பன்மைக்கு யாம், நாம், நாங்கள் என்ற வடிவங்களும் காணப்படுகின்றன. மரியாதைப் பன்மையாக இவர், இவர்கள் என்ற வடிவங்கள் காணப்படுகின்றன.

எண்ணுப்பெயர்கள் எண்ணுமுறைப் பெயர்கள் என இரண்டாகப் பகுக்கலாம். ஒன்று, ஒரு, ஓர், இரண்டு, ஈர், மூன்று, மு, மூ என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. பத்துக்குப் பத்து, பது, பதின், பதிற்று என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. பெயர்களாக வழங்குபவை என்றும், பெயர்களும் முன்புவரும் எண்ணுப் பெயர்களைப் பெயரடைகளாக வழங்குபவை எனவும் இருவகையாகப் பிரிக்கலாம்.

எ.கா. அடைக்காய் பத்து

பதினேழு கழஞ்சு

அரை,கால் போன்ற பின்னங்களும் வழங்குகின்றன. ’ஆம்’ என்பதைச் சேர்ப்பதால் உண்டாகும் எண்ணுப் பெயர்கள் பெயர்ச்சொற்களுக்கு முன்னும் ‘ஆவது’ என்பதைச் சேர்ப்பதால் உண்டாகும் எண்ணுமுறைப் பெயர்ச்சொற்களுக்குப் பின்பும் வருகின்றன.

தன்மை ஒருமையில் ‘ஏன்’ என்ற ஈறும் தன்மைப் பன்மையில்‘ஓம்’ என்ற ஈறும் கல்வெட்டில் வந்துள்ளன. அன்,ஆன்,ஆள், ஆர்,ஆர்கள் விகுதிகள்கல்வெட்டில் காணப்படுகின்றன.

‘கொடுக்கக் கடவேன் ஆகவும்’ போன்ற வியங்கோள் வினை கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. கருங்கில்,முட்டில்,செய்யில் முதலிய நிபந்தனைப் பொருளை உணர்த்தும் வினைவடிவங்கள் தோன்றியுள்ளன. ’ஆகில்’, ‘ஆயில்’ என்பதும் நிபந்தனை வினை வடிவமேயாகும்.

முற்காலக் கல்வெட்டுகளில் **ஸ்ரீ** என்பதும் அதன் திரிந்த வடிங்களான சிரி, திரு, சி என்பனவும் அடிகள் என்பதும் பெயர்ச்சொல்லுக்கு முன் வழங்கியுள்ளன. பிற்காலக் கல்வெட்டுகளில் **ஸ்ரீ** என்பதுவும் அதன் திரிபுகளும் உடையார், தேவர், நாயனார், நாச்சியார் என்பனவும் பெயர்ச்சொற்களுக்கு முன் வழங்கியுள்ளன. சொற்களின் பின்னிணைப்புகளாக அடிகள், அமுது, அருள், என்பன முற்காலக் கல்வெட்டுகளிலும் தேவர், நாச்சியார், அமுது, அருள் என்பன பிற்காலக் கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளன.

**சாசனச் செய்யுள்**

இலக்கியம் என்ற சொல் செய்யுள் இலக்கியம், உரைநடை இலக்கியம் என்ற இரண்டையும் உள்ளடக்கியது.மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் சாசனச் செய்யுள் மஞ்சரி என்ற நூல் வெளியிட்டுள்ளார்கள். சாசனச்செய்யுள்,சாசன உரைநடை என இரண்டு கூறாகப் பகுக்கலாம்.

சாசனச் செய்யுட்களை மெய்கீர்த்திகள், மெய்க்கீர்த்திகள் தவிர்ந்த பிற செய்யுட்கள் என இரண்டாகப் பகுக்கலாம். சாசனச்செய்யுட்களில் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது மெய்க்கீர்த்தி என்னும் இலக்கிய வகையாகும். முதலாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தி,

" திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை வழியுங்
குடமலை நாடுங் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசைப் புகழ்தர ஈழ மண்டலமும்
இரட்டபாடி ஏழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராஜ கேசரி வர்மரான
ஸ்ரீ ராச ராச தேவர்க்கு யாண்டுஞ்"

'ராஜ' என்ற சொல் மூன்றுமுறை இருப்பின் இராசராசனின் கல்வெட்டு எனக் கூறலாம். காந்தளூர்ச்சாலையில் வெற்றிகொண்டான். அதனால் 'காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளி' எனக் கல்வெட்டில் உள்ளது. மெய்க்கீர்த்திகள் நல்ல தமிழ் நடையில் உள்ளது. ஒரு மன்னன் தன் ஆட்சிக்காலத்தில் பெற்ற வெற்றிகளை மெய்க்கீர்த்தி எனலாம் (சீர்த்தி மிகு புகழ் - தொல்காப்பியம். சீர்த்தி என்பது கீர்த்தி என்றானது). அவனுடைய ஆட்சிக் காலத்தில் கடைசிக் கல்வெட்டுகளில் காணப்படும் மெய்க்கீர்த்திகளில் அவன் அடைந்த வெற்றியெல்லாம் காணலாம்.

முதலாம் இராசேந்திரனின் மெய்க்கீர்த்தி, "திருமன்னி வளர இருநில மடந்தையம்", "பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட" எனவும், முதலாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி, " திருமன்னி விளங்கு", "புகழ்மாது விளங்க", "புகழ் சூழ்ந்த புணரி", " பூமேலரிவையும் பொற்செயப் பாவையும்" எனவும், விக்கிரமசோழனின் மெய்க்கீர்த்தி," பூமாது புணர", "பூமாலை மிடைந்து" எனவும் தொடங்கி அவர்களின் வெற்றிச்சிறப்பைக் காட்டி நிற்கின்றன.

மெய்க்கீர்த்தியை ஒத்த பகுதியானது சோழர் காலத்துக்கு முந்திய கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. வடமொழிச்சாசனங்களில் காணப்படும் " பிரசஸ்தி" வகையைச் சார்ந்தது.மன்னனது மட்டுமின்றிக் குலமுறைமையும் குலப்பெருமையும் முன்னோர் அருஞ்செயல்களையும் தாங்கி இவை நிற்கும் (சின்னமனூர்ச்செப்பேடுகள்).

மெய்க்கீர்த்தி தவிர்த்த மற்ற செய்யுட்களை மண்டல ரீதியில் தொண்டை மண்டலச்செய்யுட்கள், சோழ மண்டலச்செய்யுட்கள் என மயிலை சீனி.வேங்கடசாமி குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக,

“வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே - யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணொன்றும் வேய்வாய் பகை”

என்ற பாடலைக் காணலாம்.

**சாசனத் தமிழ் வழக்காறுகள்**

சாசன வழக்குத் தமிழுக்கும் இலக்கிய வழக்குத் தமிழுக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. தமிழ் மொழியின் உண்மையான வரலாற்றை அறிவதற்குக் கல்வெட்டுத் தமிழ் பயன்படுகின்றது.இன்றைய பேச்சு வழக்குகள் நீண்ட வரலாறு உடையன என்பதைக் கல்வெட்டுத் தமிழால் அறியலாம்.

கல்வட்டுகளில் வடமொழிச்சொற்கள்,சொற்றொடர்கள் பல தமிழாக்கம் பெற்றுள்ளன. பிறமொழிச்சொற்களைத் தமிழாக்கம் செய்ய விழையும் இந்த நேரத்தில் கல்வெட்டு வழக்காறுகளைத் தெரிந்துகொள்வது பயன்தரக்கூடிய ஒன்றாகும்.

ஏகபோகம் - ஒரு பூ

அந்தப் புரம் - அகம்படி

தாம்பூலம் - சுருளமுது

திருமேனி - திருவுடம்பு

கர்ப்பக்கிரகம் - உட்கோயில்,அகநாழிகை,திருவுண்ணாழிகை

பரிவர்த்தனை - தலைமாறு

சிற்றாயம் - சிறுவரிகள்

பரிவட்டம் - சாத்துக்கூறை

சர்வமானியம் -முற்றூட்டு

உற்சவமூர்த்தி - எழுந்தருளும் திருமேனி

தர்ம சாசனம் - அறவோலை

நைவேத்தியம் -அமுதுபடி

கவசம் - திருக்கொள்கை

அபிசேக மண்டபம் - திருமஞ்சனச்சாலை

ஹவிர்பலி - தீயெறிசோறு

நஷ்டம் - உள்ளிட்டம்

கும்பாபிஷேகம் - கலசமாட்டுதல்

மொழியின் வளர்ச்சி,மாற்றம்,வரலாறு என்ற கண்ணோட்டத்தில் கல்வெட்டுத் தமிழ் முக்கிய இடம் பெறுகிறது. கல்வெட்டுத் தமிழை நூற்றாண்டு வாரியாகவும்,மண்டலவாரியாகவும் பிரித்து ஆராய்ச்சி செய்யும்பொழுது தமிழ் மொழி வளர்ச்சி, வழக்காற்றுத் தன்மை பற்றி அறிய வாய்ப்பு உண்டு.

**தமிழ் வரிவடிவ வரலாறு**

உலக மொழிகள் பலாவாக இருப்பினும் சில மொழிகள் எழுத்து வழக்கினைப் பெற்றும், சில மொழிகள் பேச்சு வழக்கினைப் பெற்றும் உள்ளன. சிலமொழிகள்தான் எழுதவும் பேசவுமான மொழிகளாக உள்ளன. பேச்சு வழக்கில் இருந்துதான் எழுத்து வழக்கு உருவானதாக அறிஞர்கள் குறிப்பிடுவர்.பல மொழிகள் வரிவடிவம் இன்றி வழக்கில் உள்ளன. திராவிட மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளுக்குதான் எழுத்து வடிவம் உண்டு. இலக்கிய வளமில்லாத துளுமொழி முதலில் மலையாள எழுத்திலும் பின்பு கன்னட எழுத்திலும் எழுதப்பட்டது.பழங்குடி மொழியான கூயி மொழியை ஒரிய எழுத்தில் எழுதுகின்றனர். மற்ற பழங்குடி மொழிகளுக்கும் வரி வடிவம் காணும் முயற்சியில் உள்ளனர்.

பேச்சு மொழியினை வரி வடிவில் காட்டுவதுதான் எழுத்துமொழி.ஆனால் பேச்சு மொழிக்கு இல்லாத சில பண்புகள் எழுத்துமொழிக்கு உண்டு. நாடு, காலம் கடந்து நிற்கும் பண்பு எழுத்துமொழிக்கு உண்டு.நம் முன்னோர்களின் அறிவுச்செல்வத்தை நாம் அறிவதற்கும், நம் அறிவு வளமையை நம் பிறங்கடைகள் அறிவதற்கும் எழுத்துமொழி பெருந்துணைபுரிகின்றன. பேச்சுமொழி மனிதனை மனிதனாக்கியது என்பதுபோல் எழுத்துமொழியோ மனிதனை நாகரிக மனிதனாக,இயற்கையையே வெல்லும் சக்தியாக மாற்றியது எனலாம்.

எழுத்துருவம் பெற்ற மொழிகளையே நாகரிக மொழிகள் என்றும் சிறந்த மொழிகள் என்றும் கருதுகின்றோம். அதிலும் பழங்காலத்தில் எழுத்து உருவத்தினைப் பெற்ற மொழிகளைப் பழைமையான மொழிகள் என்றும் நாகரிகத்தைத் தோற்றுவித்தமொழிகள் என்றும் கூறுவதைக் காணலாம். திராவிடமொழிகளில் தமிழ் மொழியில் பழைமையான எழுத்துருவத்தைக் காண்கின்றோம்.

தெலுங்குமொழியின் எழுத்துருவம் கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கன்னட மொழியின் எழுத்துருவம் கி.பி.ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது. மலையாள மொழியின் எழுத்து உருவம் இன்னும் காலத்தால் பிந்தியது.

ஆங்கிலமொழி அனைத்துலக மொழியாக இருப்பினும் கிரேக்கமும் இலத்தீனும் இன்னும் பழைய மொழிகளாக நாகரிக மொழிகளாகக் கருதப்படுகின்றன. கிரேக்கம் மிகப்பழமையான எழுத்துருவைக் கொண்டு உலக நாகரிகத்திற்கு அடிகோலியது. நாகரிக மக்களின் மொழிகள் அனைத்தும் எழுத்துருவத்தைப் பெற்ற மொழிகளாக மிகப்பழங்காலத்திலேயே உள்ளன. எகிப்து நாகரிகம், சீன நாகரிகம்,

இந்திய நாகரிகம், அனைத்தும் பழைமையான நாகரிகங்களாகும். தொல் வரி வடிவங்களின் வளர்ச்சிப் படிநிலைகளுக்கும் அந்த நாட்டுப் பண்பாட்டு இயக்கங்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு இதுவரை ஆராயப்படாத ஒன்றாகவே உள்ளது. இந்தியத் தொல் வரி வடிவ இயல் பண்பாட்டு வளர்ச்சியின் ஓர் அம்சமே வரிவடிவ மாற்றம் எனத் தானி கூறுகின்றார்.

இன்றைய உலகில் எத்தனையோ எழுத்துமுறைகள் உள்ளன. கிரேக்க எழுத்துமுறை, உரோமன் எழுத்துமுறை, அரேபிய எழுத்துமுறை, சீன எழுத்துமுறை, எகிப்து நாட்டு ஹீரோகிளிபிக் எழுத்துமுறை, எத்தியோப்பிய எழுத்துமுறை, பீனிய எழுத்துமுறை, ஆரமய்க் எழுத்துமுறை, இந்திய எழுத்துமுறை எனப் பல்வேறு எழுத்துமுறைகள் உள்ளன. இந்த எழுத்து முறைகள் பன்னெடுங்காலமாக வழக்கில் உள்ளன. உலக எழுத்துமுறைகளில் கிரேக்க எழுத்துமுறைக்குத் தனிச் சிறப்பு உண்டு. கிரேக்க நாகரிகம் மேற்கு நாகரிகத்திற்கு அடிகோலியது போல், மேற்கத்திய எழுத்துமுறைக்குக் கிரேக்க எழுத்துமுறை அடிகோலியது. இம்முறை பீனிசிய முறையிலிருந்து உருவானது.உலகில் இன்று அதிகமான மொழிகள் இவ்வெழுத்துமுறையில்தான் எழுதப்படுகின்றன. ஆங்கிலம், பிரஞ்சு, செர்மன், ஸ்பானி, போர்த்துகீசு, சிலாவனிக் போன்ற மொழிகளும் பின்னி, ஹங்கேரியன் போன்ற ஐரோப்பியமொழிகளும் மலாய் போன்ற கீழை நாட்டு மொழிகளும் இவ்வெழுத்து முறையைப் பின்பற்றியுள்ளன.

சீன எழுத்துமுறை உலக எழுத்துமுறைகளில் முக்கியமானது. இம்முறைதான் அன்றுமுதல் இன்றுவரை அதிக மாற்றமின்றியே உள்ளது.கி.மு.இரண்டாயிரத்துக்கு முன்பே இந்த எழுத்துமுறை வழக்கில் இருந்துள்ளது.

எழுத்துமுறையினை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1.பட எழுத்துமுறை (Pictography)

2.எண்ண எழுத்துமுறை ( Ideographic Writing)

3.ஒலி எழுத்துமுறை (Phonetic Writing)

(i)அசை எழுத்துமுறை (Syllabic Writing )

(ii) அகர எழுத்துமுறை (Alphabetic Writing)

எழுத்து முறையில் முதன்முதல் தோன்றியது பட எழுத்து முறையாகும். சூரியனைக் காட்ட ஒரு வட்டத்தை வரைந்துகாட்டினர். படங்களை வரைந்து செய்தியைக் காட்டுதல் ‘பட எழுத்துமுறை’யாகும். இம்முறையினை எந்த மொழியினரும் உணரமுடியும். குறிப்பிட்ட ஒருபொருளையோ கருத்தையோ உணர்த்தப் பயன்படுமே தவிர,பொருளின் பலவகை வேறுபாடுகளையோ நுட்பங்களையோ உணர்த்தப்பயன்படாது.

எண்ண எழுத்துமுறையை “Ideography” என்று கூறுவர் சிலர். வட்டவடிவம் சூரியனைக் குறிக்கும். ஆனால் இதனைச் சூரியன் என்றே வாசிப்போம். ஆனால் பட எழுத்து முறையில் இவ்வாறு வடிவத்தோடு உச்சரிப்பைப் பொருத்திக் காண்பதில்லை.

ஒலி எழுத்துமுறையால்தான் பேச்சுமொழியில் காணப்படும் ஒலிகளுக்கு எழுத்துமுறையில் உள்ள வரிவடிவத்திற்குமிடையே ஒரு தொடர்பு ஏற்பட்டது. ஒலி வடிவத்தை வரி வடிவில் காணத்தொடங்கிய நிலையில்தான் குறிப்பிட்ட முன்னேற்றம் ஏற்பட்டது.

அசைகளை வரிவடிவத்தில் எழுதிய நிலையில்தான் அசை எழுத்துமுறை உண்டானது. அசையெழுத்து முறையில் பல வடிவங்களின் நிலையை உணரலாம். சுமேரியன் ஆப்புவடிவ (cuniform) எழுத்துகள்தான் அசையெழுத்து வடிவங்களுள் மிகவும் பழைமையானது.

பெரும்பாலான உலகமொழிகள் அகர எழுத்து முறையைப் பின்பற்றுகின்றன. எத்தனையோ நூற்றாண்டு வளர்ச்சியில்தான் இன்றைய மொழிகள் அகர எழுத்து மொழியைக் கொண்டுள்ளன. அசையெழுத்து முறையில் ஏராளமான எழுத்து உருவங்களை நினைவில்கொள்ளவேண்டும். அகரவகை எழுத்துக்களில் ஓர் உரு ஓர் ஒலியைக் குறிக்கும். இவ்வெழுத்து முறைகளின் மூலம் எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சியைக் காணலாம்.

பட எழுத்து முறையே எழுத்துக்களின் தோற்றத்திற்குக் காரணம் என்றும் பட எழுத்தே எண்ண எழுத்தாகிப் பின் ஒலி எழுத்தாகியது என்றும் கருதப்படுகிறது.

தமிழ் எழுத்துகளின் தோற்ற வளர்ச்சியைப் பற்றி இதுவரை அறிவியல்முறைப்படி ஆய்வுசெய்யப்பெறவில்லை. பண்டைத் தமிழ் எழுத்துகளைப் பற்றி அறிஞர்களிடேயே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன.அண்மையில்தான் தொன்மை எழுத்துகளைப் பற்றி ஆராயத் தொல்லெழுத்தியல்துறை உருவானது. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாதர் குன்று கல்வெட்டில்தான் பண்டையத் தமிழ் எழுத்துக்களைப் பற்றி அறிகின்றோம் (அண்மையில் மயிலாடுதுறை அருகில் செம்பியன் கண்டியூரில் கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டு எழுத்துகளைப் பழைமையான எழுத்து வடிவங்களாக அறிஞர்கள் பதிவு செய்துள்ளனர் என்பதையும் இங்கு நினைவிற்கொள்ள வேண்டும்).

தமிழ்நாட்டில் காணப்பெறும் மிகப்பழைமையான குகைக்கல்வெட்டுகள் பிராமி என்னும் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. எழுத்து பிராமி எனினும் மொழி தமிழேயாகும்.கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்தே தமிழகத்தில் தொடர்ச்சியாகக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் நான்குவகை எழுத்துமுறைகள் காணப்படுகின்றன. மிகப்பழைமையான குகைக் கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் காணப்படுகின்றன. வடமொழியை எழுதக் கிரந்த எழுத்துப் பயன்படுத்தப்பட்டது.சோழநாட்டிலும், தொண்டை நாட்டிலும் பண்டைத் தமிழ் எழுத்துகளும், பாண்டிய நாட்டிலும் சேரநாட்டிலும் வட்ட எழுத்துகளும் காணப்படுகின்றன.

பல்லவர் காலக் கல்வெட்டுகளில் பல்லவ கிரந்தம், தமிழ், நாகரி, வடமொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் கிடைக்கின்றன. சோழர் காலத்தில் நாணயங்களில் ‘‘நாகரி’’ எழுத்து காணப்படுகின்றது. கி.பி.16,

17 ஆம் நூற்றாண்டளவில் தற்பொழுது வழக்கத்திலிருக்கும் தமிழ் எழுத்துகள் வளர்ச்சிபெறத் தொடங்கின.

**பிராமி எழுத்து:**

மிகப்பழைமையான குகைக் கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் பல இடங்களில் இக்குகைக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கண்டுபிடிக்கபட்ட குகைக் கல்வெட்டுகளும் தமிழகத்தில் கண்டுபிடிக்கப் பெற்ற சில கல்வெட்டுகளும் ஏறத்தாழ ஒத்துள்ளன. இரண்டு நாட்டிலும் காணப்படும் கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் காணப்படுகின்றன.குகைக் கல்வெட்டுகளின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு என்பர்.

சிந்துவெளியின் சித்திர எழுத்துகளே திராவிடப் பெருங்குடிமக்களது எழுத்துகளின் மூல வடிவமாக இருக்கலாம் என்று ஈராசு பாதிரியார் குறிப்பிடுகின்றார். சிந்து சமவெளி எழுத்து பற்றிய உண்மைகள் தெளிவாகும்பொழுது இந்திய எழுத்துமுறை பற்றி, குறிப்பாகத் தமிழ் எழுத்துமுறை பற்றிய தோற்ற வளர்ச்சியை அறியலாம்.

பிராமி எழுத்தைத் தமிழ் எழுத்து என்றும் இந்த எழுத்தில்தான் சங்க இலக்கியங்கள் எழுதப் பெற்றிருக்க வேண்டும் எனக் கல்வெட்டியல் அறிஞர் நடன. காசிநாதன் குறிப்பிடுவார். தமிழ்மொழிக்குரிய ழ, ள, ற, ன உள்ளன என்றும் அசோகன் காலப் பிராமி எழுத்துக்களான மூச்சுடை ஒலி (Aspirated stop) இவற்றில் இல்லை என்றும் இவ் எழுத்துக்களைத் தமிழ் எனக் கூறுவது பொருத்தமென்றும் கூறுகின்றார்.

குகைக்கல்வெட்டு எழுத்துகள் பற்றி ஐராவதம் மகாதேவன் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

1. தமிழ்மொழிக்கு உள்ள ஒலிகளே குறிக்கப்பட்டுள்ளன.'ஸ' எனும் வடவெழுத்தும் 'த' எனும் வர்க்க எழுத்தும் காணப்படுகின்றன.
2. ழ, ற, ள, ன என்ற எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
3. ஆரம்பகாலக் குகைக்கல்வெட்டுகளில் உள்ள புள்ளியில்லா மெய் வடிவு மெய்யை மட்டுமே குறிக்கும்.
4. இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் புள்ளியில்லா மெய்யுருவம் அகரமேறிய மெய்யாகவே வழங்கப்பட்டது.
5. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தப்படவில்லை.
6. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடு இல்லை
7. உயிர் மயக்கங்கள் மிகுதி.

குகைக்கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளுக்கும் புதுச்சேரி-அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பெற்ற பானை ஓடுகளில் பொறிக்கப் பெற்றுள்ள எழுத்துகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டிய தானி அவை இரண்டும் சமகாலத்தனவாகக் கருதுகின்றார்.

**கிரந்த எழுத்து**

தமிழகத்தில் வடமொழியை எழுதப் பயன்படுத்திய எழுத்து கிரந்தம் ஆகும். கிரந்தம் என்பதற்கு வடமொழியில் நூல் என்று பொருள். கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்து கிரந்த எழுத்துக்களும் கன்னட, தெலுங்கு எழுத்துக்களும் தனித்தனியே பிரிந்து வளரலாயின. பல்லவர் காலத்தில் கிரந்த எழுத்து மிகுதியும் பயன்பாட்டில் இருந்தது. ஆனைமலை,அழகர்மலை,திருமயம்,குடுமியான்மலை முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளும் வேள்விக்குடி, சின்னமனூர், தளவாய்புரம் செப்பேடுகளிலும் கிரந்த எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. சோழப்பேரரசர் ஆட்சிக்காலத்திலும் கிரந்த எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. விசயநகரப் பேரரசர்களும் அவர்களுக்குப் பின் வந்த நாயக்க மன்னர்களும் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

**தமிழ் எழுத்து**

தமிழ் நூல்கள் அச்சான காலத்தில் தமிழ் எழுத்துகள் எல்லாம் இப்பொழுது காணப்படும் நிலையான வடிவங்களைப் பெற்றன. ஒவ்வொரு நூற்றாண்டிலும் வரிவடிவங்கள் சில மாறுதல்களை அடைந்து வளர்ச்சி பெற்றுள்ளன. தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கில் இருந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது. அரச்சலூர் கல்வெட்டு இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும், வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன. கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகேந்திரவர்மனின் கல்வெட்டு முழுவதும் தமிழில் காணப்படுகின்றது. முனைவர் இரா.நாகசாமி அவர்கள் சோழர் காலத்திய எழுத்துகளை முற்காலச் சோழர் எழுத்து என்றும், பிற்காலச் சோழர் எழுத்து என்றும் இருவகையில் வகைப்படுத்துவர். முற்காலச் சோழர் எழுத்துகள் பெரிய எழுத்துகளாக இருந்தன. இராசராசன் காலம் வரை இது இருந்தது.

கி.பி.ஏழாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களையும் கி.பி.பதினொன்றாம் நூற்றாண்டு தமிழ் எழுத்துகளையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது மெய்யெழுத்துக்களில் சில மேலே கிடைக்கோடும் இடது பக்கம் குத்துக்கோடும் பெற்றமையைக் காணலாம். க, ங, ச, த, ந, ர, போன்ற எழுத்துகள் இவ்வகையில் அடங்கும்.பதினோராம் நூற்றாண்டு கல்வெட்டு எழுத்துகளில் சில கால் அல்லது கீழ்ப்பகுதி நீண்டமைந்துள்ளன. பதினோராம் நூற்றாண்டிலே ஞ,ண, ல, ள போன்ற எழுத்துகள் சுழிகளோடு காணப்படுகின்றன.தமிழ் வரிவடிவ மாற்றங்களுக்கு அலங்கார விருப்பமும், எளிமையான போக்கும் ஒரு காரணமாகும்.

**வட்டெழுத்து**

தமிழ்நாட்டில் தமிழ்மொழியை எழுதுவதற்கு வழங்கிய வட்ட வடிவமான தமிழ் எழுத்துகளை வட்டெழுத்து என்பர். வட்டெழுத்தை அக்காலத்தில் ‘வட்டம்’ என வழங்கியதாகக் குற்றாலம் கல்வெட்டு மூலம் அறியலாம். வட்டெழுத்தும் பிராமியிலிருந்து தோன்றியதாகக் கோபிநாதராவ் உள்ளிட்ட அறிஞர்கள் கருதுவர்.இவ் வட்ட எழுத்துகள் பிராமி என்ற எழுத்திலிருந்து தோன்றி வளர்ந்தவை என்று பூலர் (Buhler)

என்ற அறிஞரும் குறிப்பிடுவார். ஆரியர்கள் இந்த நாட்டிற்கு வருவதற்கு முன்பே தமிழர்கள் மிகச்சிறந்த நாகரிக நிலையில் இருந்தனர்.பிராமி எழுத்துக்கு மூலமான பீனிசிய எழுத்துக்களிலிருந்து தமிழ் மக்கள் இந்த வட்டெழுத்துகளை அமைத்துக்கொண்டனர் என்று டாக்டர் பர்னல் (Burnell) கூறுவர்.

மிகப்பழைய கல்வெட்டுகளில் உள்ள வட்டெழுத்துத் தமிழரின் பழைய எழுத்து என்றும் தொல்காப்பியத்தில் குறிப்பிடும் எழுத்து வடிவங்கள் வட்டெழுத்தையே குறிப்பிடுவதாகவும் அறிஞர் மு.வரதராசனார் கூறுகின்றார். இவ்வெழுத்தினையே கோலெழுத்து எனவும் கண்ணெழுத்து எனவும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

**நாகரி எழுத்து**

கி.பி.6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வடபகுதியில் சமற்கிருதத்தை எழுத வழங்கப்பட்ட ஒருவகை எழுத்துக்களை 'நாகரி' என்பர். தனைத் 'தேவநாகரி' என்றும் அழைப்பர்.

தேவநாகரி பிராமியிலிருந்து தோன்றியதாகக் கூறுவர். கி.பி.எட்டாம் நூற்றாண்டில் சிறப்பும் முழுமையும் பெற்றது. தேவநாகரி நெடுங்கணக்கிலிருந்து தமிழ்நெடுங்கணக்கு வேறுபடுவதை அறிஞர் மு.வரதராசனார் தம் மொழிவரலாற்றில் நன்கு விளக்கியுள்ளார். குப்த அரசர்களின் காலத்தில்தான் பிராமி எழுத்திலிருந்து தேவநாகரி எழுத்துகள் உருவாயின என்பர். இரண்டாம் நரசிம்மவர்மன் கல்வெட்டுக் கிரந்த எழுத்திலும் அதே செய்தி நாகரி எழுத்திலும் எழுதப்பட்டுள்ளது. கிபி.8 ஆம் நூறாறண்டில் வேணாட்டை ஆண்ட கருநந்தடக்கன் நாகரி எழுத்தில் செப்பேடு வெளியிட்டான். உத்தமசோழன், இராசராசன், கங்கைகொண்டசோழன், இராசேந்திரசோழன் ஆகிய மன்னர்களது பெயர்களில் காசுகளில் நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து தென்னாட்டில் வழங்கிய எழுத்துகளை'நந்தி நாகரி' என்பர்.

**மராட்டியர்களின் மோடி எழுத்து**

தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலில் மோடி என்னும் எழுத்தில் பொறிக்கப்பட்ட மராட்டியமொழிக் கல்வெட்டுகள் சில உள்ளன. கி.பி.1803 இல் தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னரால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் வரலாறு கூறுப்பட்டுள்ளது.

மராட்டியர்கள் தங்கள் ஆட்சி ஆவணங்களை மராத்தியமொழியின் சுருக்கெழுத்தான மோடி என்ற எழுத்துவடிவில் எழுதி வைத்துள்ளனர். இதனைக் கொண்டு மராட்டிய மன்னர்களின் ஆட்சிமுறையை அறியலாம்.

**மரபு இலக்கணங்களும் எழுத்துகளும்**

தொல்காப்பியத்தில் பண்டையத் தமிழ் எழுத்துகள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. எழுத்து என்ற சொல்லும் புத்தகத்தைக் குறிக்கும் நூல் என்ற சொல்லும் தனித்தமிழ்ச் சொற்களாகவே பழந்தமிழில்

காணப்படுகின்றன.எழுத்து என்பது ஒலிகளை மட்டுமன்றி, வரிவடிவையுங் குறித்தது என்பதற்குப் பலசான்றுகள் தொல்காப்பியத்தில் உள்ளன. வரிவடிவை மட்டுமின்றி முறைவைப்பையும் கூறுகின்றார். தமிழ் எழுத்துகள் அகரமுதல் னகர இறுதியாக இக்கால நெடுங்கணக்கில் காணப்படுவது போல் தொல்காப்பியர் காலத்தும் முறைப்பட எழுதப்பட்டுள்ளது.

'எழுத்தெனப் படுவ

அகர முதல்

னகர இறுவாய் முப்பஃதென்ப

சார்ந்துவரன் மரபின் மூன்றலங்கடையே'

என்பது தொல்காப்பியம்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழுக்கு ஒரு நெடுங்கணக்கு வரிவடிவம் உண்டு என்பதையும் தொல்காப்பியம் வழியாக அறியலாம். தனி மெய்யெழுத்துக்கு வடிவம் கூறுகின்றார்.

''புள்ளியில்லா எல்லா மெய்யும்

உருவுருவாகி அகரமோடு உயிர்த்தலும்

ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும்

ஆயீரியல உயிர்த்த லாறே'' (தொல்.எழுத்து.71)

இதில் தனி மெய்யெழுத்துகள் புள்ளி பெற்று இயங்குவதும் உயிர்மெய் ஆகும்பொழுது அகரமேறின் புள்ளி நீங்கி முந்தைய வடிவோடு நிற்றலும் பிற உயிர்கள் ஏறும்பொழுது வடிவு மாறி நிற்றலும் கூறுகின்றார்.

மெய்யெழுத்துக்களும் எகர, ஒகர எழுத்துக்களும் புள்ளி பெற்று நிற்றல்வேண்டும் என்பதையும் மகரக் குறுக்கம் மெய்ப்புள்ளியோடு உள்ளே மற்றொரு புள்ளியும் பெறுதல் வேண்டும்.

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்''(தொல்.எழுத்து,15)

''எகர ஒகரத் தியற்கையு மற்றே'' (தொல்.எழுத்து,16)

''உட்பெறு புள்ளி உருவாகும்மே'' (தொல்.எழுத்து,17)

என்னும் நூற்பாக்கள் எழுத்துகளின் உருவம்பற்றிய பல செய்திகளைக் குறிப்பிடுகின்றன.

''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' (தொல்.எழுத்து,46)

என்பதால் மேற்புள்ளி நீங்கிய தனி மெய்யெழுத்துக்கள் இயல்பான அகரத்தோடு சேர்ந்து ஒலிக்கும் என்பது பெறப்பட்டது.

''எகர ஒகரத்தியற்கையு மற்றே''

என்ற சூத்திரத்தின்படி எகர, ஒகரங்களை, ஏகார, ஓகாரங்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டப் புள்ளி பயன்படுத்தப்பட்டது என்பதை உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகளிலிருந்து அறிகின்றோம்.

இந்த வகையில் உட்புள்ளி அமைப்பு பழைய ஓலைச்சுவடிகளில் இருந்தன என்று நன்னூல் வெளியீட்டு முகவுரையில் உ.வே.சா.

குறிப்பிட்டுள்ளார்.தாண்டவராய முதலியார் வெளியிட்ட சேந்தன் திவாகரம் என்ற நூலில் எகர ஒகரங்களில் புள்ளி வைக்கப்பட்டிருப்பதாக மு.அருணாசலம்பிள்ளை அவர்கள் தமது தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடைச்சங்க காலத்தில் சேர நாட்டிலும் சோழநாட்டிலும் வழங்கிவந்த தமிழ் எழுத்துகள் 'கண்ணெழுத்துகள்' என்ற பெயருடன் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரத்தின் வழியாக அறியமுடிகின்றது.

''கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கலம் மன்னவர்க்களித்து'' (சிலம்பு.26.170-171)

''வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த'' (சிலம்பு.15.1-12)

''கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி

''இருபதினாயிரம்
கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும்''(சிலம்பு.26.134-136)

கண்ணெழுத்துகள் ஒருகாலத்தில் முழுவதும் வழக்கில் இருந்திருக்கவேண்டும். கண்ணெழுத்தே பழைய தமிழ் எழுத்து என்பாரும் உளர். சிலர் கண்ணெழுத்தையே வட்டெழுத்து என்பாரும் உளர்.

தொல்காப்பியத்தின் வழிநூலான நன்னூல் ஆசிரியரும் எழுத்து இன்னதென்பதையும் எழுத்துகளின் சிறப்புக்கூறுகளையும் விளக்கியுள்ளார்.

''மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி
எழுத்து அது முதல் சார்பு என இருவகைத்தே'' (நன்னூல்,58)

''தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகர மெய்ப்புள்ளி'' (நன்னூல்,98)

பிற்கால இலக்கண ஆசிரியர்களும் எழுத்துகளைப் பற்றி சிந்தித்துள்ளனர். இவர்களுள் பிரயோக விவேகம், நேமிநாதம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம் உள்ளிட்ட நூல்களின் ஆசிரியர்களின் கருத்துகள் சிறப்புடையன.

**வீரமாமுனிவரின் முயற்சி**

தமிழ் எழுத்துகளின் வரிவடிவத்தில் வீரமாமுனிவர் மாற்றம் செய்துள்ளார். ''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல், எகர ஒகரத் தியற்கையும் அற்றே'' என்ற நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை மேலும் வேறுபடுத்தினார். எகரத்துக்கும் ஒகரத்துக்கும் புள்ளி நீக்கி, ஏகாரத்திற்குக் கால் இட்டும் ஏனைய நெடில் அறிகுறியாகிய காலினின்றும் வேறுபடுத்தினார். .உயிர் மெய்களில் எகர ஒகரஙகளுக்கு ஒற்றைக் கொம்பையும் அமைத்தார்.

**எழுத்துச்சீர்திருத்தம்**

உலகமொழிகளின் வளர்ச்சி வரலாற்றை ஆராயும்பொழுது மொழிகள் ஓர் எழுத்தை-வரி வடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக்கொண்டுள்ளதையும் இருக்கின்ற வரிவடிவத்தில் திருத்தம்

செய்துகொண்டுள்ளதையும் காணமுடிகின்றது. இவற்றை வரிவடிவ மாற்றம், வரிவடிவத் திருத்தம், எழுத்துகளின் எண்ணிக்கை மாற்றம், சொல்லெழுத்து மாற்றம் ஆகியவற்றை எழுத்துச்சீர்திருத்தம் என்ற பெயரால் வழங்குகின்றனர். சோழப்பேரரசு தமிழகம் முழுமையும் ஆட்சி செய்தபொழுது தமிழ் எழுத்துப் புகுத்தப்பட்டது. பாண்டிய நாட்டில் வழக்கில் இருந்த வட்டெழுத்து விடப்பட்டது. தமிழ்மொழி வரலாற்றில் எழுத்து எண்ணிக்கை கூடியிருப்பதைக் காணமுடிகின்றது. கி.பி.பத்தாம் நூற்றாண்டில் திருமந்திரத்தில் ஹ, க்ஷ, ஸ, ஸ்ரீ ஆகிய எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கி.பி.15 ஆம் நூற்றாண்டு இலக்கியங்களில் கிரந்த எழுத்துகள் எனப்படும் ஸ, ஷ, ஜ, ஹ, ஸ்ரீ, க்ஷ என்ற ஆறு எழுத்துகளும் காணப்படுகின்றன.

**பெரியாரின் எழுத்துச்சீர்திருத்தம்**

தமிழ் எழுத்துகளுள் பல எழுத்துகள் சீர்மையாக இருக்க சில எழுத்துகள் சீர்மை இல்லாமல் இருப்பதை அறிந்த தந்தை பெரியார் அவர்கள் தமிழ் எழுத்துகளில் சீர்மையைக் கொண்டுவர நினைத்துத் தம் விடுதலை ஏட்டில் அதனைப் பயன்படுத்தவும் செய்தார்.அவரைத் தொடர்ந்து பல அறிஞர்கள் கணிப்பொறியின் தேவைக்கு ஏற்பவும் தமிழை எளிதாகக் கற்பதற்கும் தமிழ் எழுத்துகளின் குறியீடுகளில் மாற்றம் செய்ய முனைந்தனர். ஆனால் கணிப்பொறி வல்லுநர்களும் மொழிப்பற்றாளர்களும் தந்தை பெரியார் செய்த மாற்றம் சீர்மை என்றும் பின்னர் தோன்றும் திருத்தங்கள் தமிழ் படிப்பதைப் பின்னுக்குத் தள்ளிவிடும் என்றும் கருத்து தெரிவிக்கின்றனர்.தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் எனப் பல கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. அதுபோல் எழுத்துச்சீரமைப்பு கூடாது என்றும் பல கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன.

பெரியார் எழுத்துச்சீர்மையால் தமிழில் அய், அவ், ணா, றா, னா, ணை, லை, ளை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ என்று எழுதும் போக்கு தமிழக அரசால் ஆணையிட்டு உறுதிசெய்யப்பட்டது. (அரசாணை எண் 1875)

தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சிக்கு எழுத்துச்சீர்திருத்தம் வேண்டும் என்று குறிப்பிட்ட மொழியியல் அறிஞர்கள் முனைவர் செ.வை.சண்முகம், முனைவர் பொற்கோ உள்ளிட்டவர்கள் இன்று கணிப்பொறிக்குத் தக எழுத்தை மாற்றவேண்டிய தேவை இல்லை என்று குறிப்பிடுகின்றனர். முனைவர் வா.செ.குழந்தைசாமி, முனைவர் கொடுமுடி சண்முகம் போன்றவர்கள் தமிழ் எழுத்துகளின் குறியீட்டை மாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டு வருகின்றனர். தமிழ் இன்று தமிழகத்தைக் கடந்து உலகமொழியாகப் பயன்பாட்டில் உள்ளது. எனவே உலகெங்கும் பரவி வாழும் தமிழர்கள் தமிழ் எழுத்துகளை எந்த வகையான மாற்றத்துக்கு உட்படுத்தினாலும் மொழி பின்னடைவைச் சந்திக்கும் என்று குறிப்பிடுகின்றனர்.

**அறிவியல்தமிழ்**

மொழியினைப் பயன்படுத்தும்பொழுது கருத்துப்பரிமாற்றத் தேவைகளுக்கு ஏற்பவும் பயன்படும் துறைகளின் வளர்ச்சிக்கு ஏற்பவும் புதியகலைச்சொற்களும் வாக்கிய அமைப்புகளும் இன்றையத் தமிழில் உருவாகியுள்ளன. அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்ததுறைகளில் இன்று புதிய கலைச்சொற்கள் தேவைப்படுவதால் புதுப்புதுச் சொற்கள் உருவாகிவருகின்றன.

இணையம் தமிழிற்கு அறிமுகம் ஆனபிறகு பலநூறு கலைச்சொற்கள் மக்கள்மனதில் பதிந்துள்ளது. எடுத்துக்காட்டாக மென்பொருள், வன்பொருள், குறுவட்டு, திரை, விசைப்பலகை, மின்வருடி, இணையம், வலைப்பூ, இணையக்குழுக்கள், மின்னஞ்சல், வலைப்பதிவர்கள், அரட்டைமுதலான சொற்கள் இன்று கணினி, இணையத்துறையில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு தமிழில் சொற்களைப் புதியதாகப் படைப்பவர்கள் பலவகையில் படைக்கின்றனர்.

1.சொல்லாக்கம் (Transcreation)

2.ஒலிபெயர்ப்பு (Transliteration)

3.மொழிபெயர்ப்பு ( Translation)

4.அகநிலையாக்கம்

5.தெளிவுபடக்கூறல் (Explicity)

6.இருமொழி இணைச்சொற்கள் ( Blending)

7.ஒட்டுச்சொல்லாக்கம் ( Affixation)

8.புதுச்சொல் படைத்தல் (Creation of new Word)

புதுச்சொற்களைப் படைக்கும்பொழுது எளிமை (Simplicity), வழக்குமுதன்மை (Currency), ஆக்கத்திறன் (Productivity), சொல்தெளிவு (Transparancy) முதலியவற்றை மனதில் கொள்ளவேண்டும். கலைச்சொல்லாக்கத்தில் ஒலிபெயர்ப்பு என்பது முக்கியமானதாகும். தொல்காப்பியர் வடமொழிச்சொற்களைப் பயன்படுத்துவதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்மொழி இன்னும் ஒலிபெயர்ப்பில் நிலைபேறு அடையவில்லை என்பதை அறிஞர் சு.சக்திவேல் பலசான்றுகளைக் காட்டி விளக்கியுள்ளார்.

**வானொலித்தமிழ்**

தகவல் தொடர்பு ஊடகங்களில் வானொலியின் பங்குகுறிப்பிடத்தக்க ஒன்றாகும். வானொலித்தமிழில் இருவழக்கு நிலையைக் காண்கின்றோம். செய்திஅறிக்கை, அறிவிப்பு, பேச்சுபோன்றவை அனைத்தும் உயர்மொழிவழக்கில் அமைந்துள்ளன. உரையாடல், நேர்காணல், நாடகம் போன்றவை பேச்சுத்தமிழில் அமைந்துள்ளன.

வானொலியில் நான்குகோடி என்பது நாலுகோடி என்றும் ஏறக்குறைய என்பது கிட்டத்தட்ட என்றும் கூறப்படுகின்றன. தமிழ்

வாக்கியங்களின் சொற்றொடர் ஆங்கிலச் சொற்றொடர்களின் சாயலில் உள்ளன.

“நடப்பு நிதியாண்டு மத்திய அரசின் அனுமதிநாடி இத்திட்டங்கள் காத்திருக்கின்றன” போன்றதொடர்கள் ஆங்கிலத்தைத் தழுவிஉள்ளன.

**இதழியல் தமிழ்**

தமிழ்இதழ்கள் செய்திப்பரவலில் முக்கியப் பங்காற்றுகின்றன. செய்தித்தாள்கள், வாரஇதழ்கள், மாத இதழ்கள் போன்றவற்றில் பயன்பட்டுவரும் தமிழ்வழக்கில் காலத்திற்கேற்பவும், நாளும் வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் சமுதாய வளர்ச்சியினைக் கருத்தில்கொண்டும் பலபுதுச்சொற்கள், சொற்றொடர்கள், மற்றமொழியமைப்புகள், மொழிநடை போன்றவை தோன்றிவருவதை யாராலும் மறுக்கமுடியாது. தமிழ்மக்களின் அன்றாடப் பேச்சுவழக்கில் இடம்பெற்றுள்ள சிலசொற்கள், சொற்றொடர்கள் போன்றவை இதழ்களில் அன்றாடம் காண்கின்றோம்.

உலகநடப்புகளைப் பற்றிக் கூறுவதால் ஆங்கிலமொழியின் செல்வாக்கினை இதழ்களில் காணமுடிகின்றது.

தொடக்ககால இதழ்களில் வடமொழியின் தாக்கம் மிகுதியாக இருந்தது. பின்னர் ஆங்கிலம் கலந்துஎழுதினர். செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், புலமை போன்ற இதழ்கள் இலக்கிய நடையைப் பின்பற்றுகின்றன. குமுதம், கல்கி, ஆனந்தவிகடன் போன்ற இதழ்களில் வெளிவரும் வரலாற்றுப்புதினங்கள் இலக்கியநடையிலும் மற்றபடைப்புகள் பொதுவான நடையிலும் வெளிவருகின்றன.

தமிழ்ச்செய்தி இதழ்களில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை தமிழ்த் தென்றல் திரு.வி.க.அவர்களுக்கு உண்டு. ஆங்கிலக் கலப்பிலான நடைகளை மாற்றித் தமிழ்ப்படுத்திய பெருமை திரு.வி.க.வின் தேசபக்தன் இதழுக்கு உண்டு. திரு.வி.க. புதுப்புதுத் தமிழ்ச்சொற்களைக் கண்டுபிடித்து இதழ்களில் எழுதிப் பரப்பியவர். திரு.வி.க. தம் ஆசிரிய உரைகளை “எழுத்துப்பேச்சு”என்பார். திரு.வி.க.வின் எழுத்துச் சிறுசிறு தொடர்களாக அமையும். எளிமையான நடையில் தெளிந்த நீரோட்டமாக அவர்நடை இருக்கும். பழையதமிழ்ச் சொற்களையும் பொருத்தமாக இணைத்து எழுதுவார்.

1.இதழ்களில் பல புதுச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

நுண்+உயிர்>நுண்ணுயிர்

பேர்+உந்து>பேருந்து

2.இரண்டு அல்லது மேற்பட்ட சொற்களை இணைத்துக் கூட்டுச்சொற்களை உருவாக்குவதும் நடைமுறையில் உள்ளது.

குடி+அரசு>குடியரசு

கருணை+இல்லம்>கருணைஇல்லம்

3.பெயர்ச்சொற்களுடன் அல்லது அடிச்சொற்களுடன் விகுதிசேர்த்துப் புதுச்சொற்கள் படைக்கப்படுகின்றன.

ஆளு+நர்>ஆளுநர்

பதிவு+ஆளர்>பதிவாளர்

ஒன்று+இயம்>ஒன்றியம்

செவிலி+அர்>செவிலியர்

4.இரண்டு தமிழ்ச்சொற்களைச் சேர்த்துப் புதுப்புதுப் பொருளுக்கேற்ப சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

போக்கு+வரத்து>போக்குவரத்து

கூட்டு+அணி>கூட்டணி

5.ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்து இதழ்கள் வழங்கியுள்ளன.

Telivision -தொலைக்காட்சி

Central Government - நடுவணரசு

Round Table - வட்டமேசை

Rolling Cup - சுழற்கோப்பை

Black Money - கருப்புப்பணம்

6.ஆங்கிலச் சொற்களைத் தமிழில் அவ்வாறு பெயர்த்து எழுதுவதும் உண்டு.

போலிஸ் கமிஷ்னர்

7.இருமொழிக் கலப்பையும் இன்றைய பத்திரிகைத் தமிழில் காணமுடிகின்றது.

மில்தொழிலாளி (ஆங்கிலம் & தமிழ்)

டைரக்ட்செய் (ஆங்கிலம் & தமிழ்)

8.ஆண்பாலுக்கு ஏற்பப் பெண்பால் சொற்களையும் பெண்பாலுக்கு ஏற்ப ஆண்பால் சொற்களையும் இதழ்கள் உருவாக்குகின்றன.

இளைஞன்>இளைஞி (தினமணி)

விபசாரி>விபசாரர் (ஜூனியர்விகடன்)

9.துடிப்புள்ள சொற்களைப் பயன்படுத்துதல்

அதிர்ச்சி, குமுறல், துடிதுடிப்பு, கொந்தளிப்பு, முழக்கும், கூக்குரல்

10.வாக்கியத்தை எளிமையாக்கித் தருதல்

காஷ்மீர் சட்டசபையில் இன்று பலப்பரிட்சை

ஜி.எம்.ஷா.தலையில் உள்ள மந்திரிசபை பிழைக்குமா

தினத்தந்தி நாளேடு மக்கள் நாளேடாக விளங்குவதற்கு அதன் எளிமையான மொழி நடையே காரணமாகும். தமிழ்மொழி வளர்ச்சியை முழுமையாக அறிய இதழ்களைப் பலகோணங்களில் ஆராயவேண்டும். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்மொழி அமைப்பு, வளர்ச்சி பற்றி அறிய இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, கணிப்பொறி, இணையம் உள்ளிட்ட ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கும்.

**தன்மதிப்பீட்டுவினாக்கள்**

**அ.சரியா? தவறா?**

1. எகிப்தியமொழி, உக்ரிடிக்மொழி, உறிட்டைட்மொழி, பினீசியமொழி போன்றமொழிகள் அனைத்தும் கல்வெட்டுகளில் வாழ்பவையாக உள்ளன.
2. கல்வெட்டு வழக்கு, பேச்சு வழக்குடன் ஒத்தியல்வது
3. இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகப்பழைமையான கல்வெட்டுகள் அனைத்தும் பிராமி வரி வடிவத்திலேயே எழுதப்பட்டுள்ளன.
4. ‘ராஜ’ என்ற சொல் மூன்றுமுறை இருப்பின் இராசராசனின் கல்வெட்டு எனக் கூறலாம்.
5. வட்டெழுத்தை அக்காலத்தில் ‘வட்டம்’ என வழங்கியதாகக் குற்றாலம் கல்வெட்டு மூலம் அறியலாம்.

**பாடத்தொகுப்புரை**

- தமிழ்க் கல்வெட்டுகள் பிராமி எழுத்திலும் வட்டொழுத்திலும் எழுதப்பட்டுள்ளதுடன், பிறமொழியிலும் வெளியிடப்பட்டுளளது.
- தமிழ்க் கல்வெட்டுகளை மொழியியல் அறிஞர்கள் பல கோணங்களில் ஆய்வு செய்துள்ளனர்.
- மொழி வளர்ச்சி, மாற்றங்கள், எழுத்து வளர்ச்சிகளைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.
- தமிழ் பற்றி அறிய மெய்க்கீர்த்திகளும் உதவுகின்றன.
- மரபிலக்கணங்களும் தமிழ் எழுத்துகள் பற்றி குறிப்பிட்டுள்ளன.
- பெரியாரின் எழுத்துச்சீர்திருத்தம் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சீர்மையாக உள்ளது.
- அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி தமிழுக்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

**தன் மதிப்பீட்டு விடைகள்**

1.சரி

2.சரி

3.சரி

4.சரி

5.சரி

**முக்கியச் சொற்கள்**

1.வட்டம் -வட்டெழுத்தைக் குறிப்பது

2. மோடி- மராட்டிய மொழியின் சுருக்கெழுத்து

3.இணையம்- Internet

**மாதிரி வினாக்கள்**

அ. ஒருபக்கஅளவில்விடைதருக

1. வட்டெழுத்து பற்றி விளக்குக

1. எழுத்துச்சீர்திருத்தம் பற்றி விளக்குக

2. அறிவியல் தமிழ் பற்றி எழுதுக

ஆ. நான்கு பக்க அளவில் விடைதருக

1. தமிழ் எழுத்துகள் பற்றி மரபிலக்கணங்கள் குறிப்பிடும் செய்திகளைத் தொகுத்துரைக்கவும்

2. தமிழ் வரிவடிவ வரலாறு பற்றி ஒரு கட்டுரை வரைக

-------------------

குறிப்பு

# அலகு 3

**முன்னுரை**

உலக மொழிகளைப் பல மொழிக் குடும்பங்களாக மொழியியல் அறிஞர்கள் பிரித்துள்ளனர். அவற்றுள் ஒன்று திராவிட மொழிக்குடும்பம். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட சற்றொப்ப இருபத்தைந்து மொழிகள் இக்குடும்பத்தில் உள்ளன. இம்மொழிகளின் சிறப்புணர இந்த இயலில் உள்ள செய்திகள் உதவும்.திராவிட மொழிகளைத் தென்திராவிடம்,நடுத்திராவிடம்,வட திராவிடம் என்று பகுத்து ஆய்வது மரபாக உள்ளது. முதன்மையான திராவிட மொழிகளை இந்த இயல் அறிமுகம் செய்கின்றது

**பாட அறிமுகம்**

இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் திராவிட மொழிக்குடும்பம் சார்ந்த மொழிகள் பெருஞ்சிறப்பிற்கு உரியன. செம்மொழியான தமிழ் உள்ளிட்ட இலக்கண, இலக்கிய வளம் செறிந்த பல மொழிகள் இக்குடும்பத்தில் உள்ளன. திராவிட மொழிக்குடும்பம் சார்ந்த மொழிகளை இந்த இயல் அறிமுகம் செய்கிறது. முனைவர் ஜான் சாமுவேல் அவர்கள் எழுதிய திராவிடமொழிகளின் ஒப்பாய்வு என்னும் நூலின் செய்திகள் இங்குப் பாடமாக அமைக்கப்பெற்றுள்ளது.

**திராவிட மொழிக்குடும்பம்**

உலகில் பல மொழிகள் பேசப்பட்டாலும் அம்மொழிகளுக்கு இடையே சில ஒற்றுமைக்கூறுகள் உள்ளதை மொழியியல் அறிஞர்கள் கண்டனர்.அவ்வொற்றுமைகள் கொண்ட மொழிகளைத் தனியாகப் பகுத்து அவற்றை ஒரு குடும்பமாகக் குறிப்பிடும் மரபு தோன்றியது.

சமற்கிருதமொழியை ஆராய்ந்த வில்லியம் சோன்சு (William jones)என்னும் அறிஞர் சமற்கிருதமொழியானது ஏனைய ஐரோப்பிய மொழிகளுடன் தொடர்புடையது என்பதை முதன்முதல் விளக்கினார். அவர்க்குப் பின்னர் கி.பி.1816 ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப் (Bopp), ரஸ்க் (Rask), கிரிம் (Grimm) என்னும் மொழிநூலறிஞர்கள் இத்துறையில் பல அரிய ஆய்வுகளைச் செய்தனர்.அவர்களின் ஆய்வின் பயனாகக் கீழ்வரும் ஆய்வுமுடிவுகளை வெளிப்படுத்தினர்.

1.வடமொழி (சமற்கிருதம்), செர்மன் மொழி போன்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய அனைத்து மொழிகளும் இந்தோ-ஐராப்பிய மொழி (Indo-European Languages) என்னும் மூலமொழியிலிருந்து பிரிந்தவை.

2.இம்மொழிகளைப் பேசிய மக்கள் சமுதாய, பொருளாதார காரணங்களால் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரிந்து சென்ற பொழுது பல்வேறு கிளைமொழிகள் தோன்றின.

3.இந்நிலையில் இந்தோ ஐரோப்பியமொழி,

1.இந்தோ-இராணியன் (Indo-Iranian)

2.அர்மீனியன் (Armenian)

3.பால்தோ-ஸ்லாவிக் (Balto-Slave)

4.அல்பேனியன் (Albanian)

5.ஹெலனிக் (Hellanic)

6.இத்தாலி (Italic)

7.கெல்டிக் (Celtic)

8.ஜெர்மானிக் (Germenic)

என்னும் எட்டுப் பிரிவுகளாகப் பிரிந்து வளர்ந்தன.

ஒன்றுக்குஒன்று தொடர்புடைய பல மொழிகளுக்கு இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம் எனப் பெயரிட்டு, இம்மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் ஆய்வுமுறை ஐரோப்பாவில் தொடங்கியது. இம்மொழிகளை ஆராய்ந்த பேராசிரியர் கிரிம் என்பவர் அவைகளுக்கு இடையேயுள்ள ஒலித்தொடர்பு, ஒலிமாற்றம் ஆகியவற்றைச் சில விதிமுறைகளைக் கொண்டு விளக்கினார். இம்மொழிகளை ஆய்ந்த ஆய்வறிஞர்களுள் பேராசிரியர் ராஸ்க் என்பவர் இந்தோ ஐரோப்பிய மொழிகளை வரையறுத்து,அவற்றின் இயல்புகளைத் தெளிவுறுத்தி ஓர் ஆய்வுக் கட்டுரையைக் கி.பி.1819 இல் வெளியிட்டார். இவர் சமற்கிருதமொழியை ஆராய்ந்தபொழுது அதனோடு தொடர்பில்லாத பல சொற்களைப் பிரித்தறிந்து அவற்றை ''மலபார் மொழிச்சொற்கள்'' என்று குறிப்பிட்டார்.இதன் பிறகு பலர் மொழிக்குடும்ப ஆய்வுகளில் ஈடுபட்டனர். இவர்கள் இந்தியாவில் வழங்கும் மொழிகளை ஆரியம், திராவிடம், முண்டா, திபேத்தோ-சீனம் என்று பல்வேறு மொழிக்குடும்பங்களாகப் பிரித்து ஆராய முற்பட்டனர்.

**திராவிடமொழி ஆய்வின் தொடக்கநிலை**

தென்னிந்தியாவில் வழங்கப்படும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய 25 மொழிகள் திராவிடமொழிகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் பிராகுயிமொழி வடஇந்தியாவிலுள்ள பலுசிஸ்தானத்தில் பேசப்படுகின்றது. குருக், மால்டோ போன்ற சிலமொழிகளும் வட இந்தியப் பகுதிகளில் பேசப்படுகின்றன.

திராவிடமொழிக் கல்வியும் இனக்கல்வியும் இன்று வளர்ந்துள்ளது. எனினும் தொடக்கத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய ஒருசில மொழிகளைப் பற்றியதாகவே இருந்தது.

கி.பி.1816 இல் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த பேராசிரியர் பிரான்சிசு எல்லிசு (Francis Whyte Ellis) என்பவர், பேராசிரியர் ஏ.டி.கேம்பல் (A.D.Campbell) என்பவர் எழுதிய தெலுங்குமொழி இலக்கணம் (A Grammar of the Teloogoo Language) என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் ஒரு தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்று குறிப்பிட்டார். 19ஆம் நூற்றாண்டில் வடமொழியை ஆராய்ந்த ராஸ்க் என்பவர் சமற்கிருதச் சொற்களிலிருந்து வேறுபட்ட சொற்கள் சிலவற்றைப் பிரித்து,

அவைகளுக்கு ‘மலபார் மொழிகளுக்குரிய(திராவிட மொழிகள்) சொற்கள்’ என்று குறிப்பிட்டார்.

கி.பி.1844 இல் கிறித்தவ லாசர் என்பவர் தென்னிந்தியாவில் ஒரு மொழிக்குடும்பமாகத் திராவிட மொழிக்குடும்பத்தைச் சுட்டிக்காட்டினார். இக்காலத்தில் சிராம்பூரில் வாழ்ந்த கிறித்தவ மதப் பாதிரியான வில்லியம் கேரி (William Carey) என்பவர் தமிழ்,தெலுங்கு போன்ற மொழிகள் தனிக்குடும்பத்தைச் சேர்ந்தன என்றும் அவை வட இந்திய மொழியிலிருந்து வேறுபட்டவை என்றும் நிறுவினார்.இதனையடுத்து ஸிடீவன்சன் (Stevenson 1841-44) என்பவர் வடமொழி தவிர்ந்த ஏனைய மொழிகளை ஆய்ந்து தென்னிந்திய மொழிகள் தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்றார். பேராசிரியர் ஆர்.ஈ. இராபர்ட்சு (R.E. Roberts 1779) என்பவர் பேச்சு வழக்கில் மட்டுமுள்ள மால்டோ மொழி பற்றி ஆய்ந்து கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார்.

தோடா மொழி பற்றி பேராசிரியர் ஸ்மிட் (1837), பிராகுயி மொழி பற்றி பேராசிரியர் லீச் (1838), கோண்டி மொழி பற்றி வாய்சே (1844), படகா மொழி பற்றி பஹ்லர் (1849), குயி மொழி பற்றி சான் பெர்சிவல் (1851) ஆகியோர் சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஹாட்ஜன் என்பவர் 1848,1856 ஆகிய ஆண்டுகளில் நடு இந்தியாவிலும், இமயமலைப் பகுதியிலும், தென்னிந்தியப் பகுதிகளிலுமுள்ள பழங்குடி மக்களின் சொற்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அவை தென்னிந்தியாவிலுள்ள மொழிகளின் இனத்தவை என்று சுட்டிச்சென்றார். பேராசிரியர் மாக்சுமுல்லர் என்னும் மொழிநூலறிஞர் தென்னிந்திய மொழிகளை ‘‘நிஷத மொழிகள்’’ என்று பெயரிட்டு அவை வட மொழியிலிருந்து வேறுபட்டவை என்று சுட்டிக்காட்டினார்.

**இராபர்ட்டு கால்டுவெல்**

‘திராவிடமொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை’ என்று போற்றப்படும் இராபர்ட்டு கால்டுவெல் அவர்கள் கி.பி.1856 இல் இம்மொழிகளைத் திராவிடம் என்ற பெயரில் அழைத்தார். அவர் இந்திய மொழிகளில் திராவிடமொழிகள் ஒரு தனிக்குடும்பதைச் சேர்ந்தவை என்று குறிப்பிட்டார். அவை இந்தோ ஐரோப்பிய மொழிகளுடன் தொடர்புடையன அல்ல என்றும் நிறுவினார். அவர் தென்னிந்தியாவில் உள்ள பண்பட்ட மொழிகளான (Cultivated Languages) தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுடன் சில பண்படாத மொழிகளும் (UnCultivated Languages) திராவிட இனத்தோடு உறவுடையன என்று விளக்கினார். வெளிநாட்டு மொழிகளாகிய சித்திய மொழிகளுடன் திராவிட மொழிகள் தொடர்புடையன என்பதையும் நிலைநாட்டித் தம் ஆய்வினை 1856 இல் நூலாக வெளியிட்டார்.

இராபர்ட்டு கால்டுவெல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, ஆகிய ஐந்துமொழிகளையும் பண்பட்ட மொழிகளாகவும் தோடா, கோடா, கோண்டு, கூ என்ற நான்கையும் பண்படாத மொழிகளாகவும்

கருதினார். பிராகூயி, மால்டோ போன்ற மொழிகளைச் சுட்டிச்சென்றாரே தவிர அவற்றைப் பற்றிய சிறப்பு ஆய்வுகளை அவர் நிகழ்த்தவில்லை. 1875 இல் வெளியிட்ட பதிப்பில் முன்னர் திருந்திய மொழிகள் என்று குறிப்பிட்ட ஐந்துடன் குடகு மொழியையும், திருந்தாத மொழிகள் என்று குறிப்பிட்டவற்றுடன் ராஜ்மகால், ஒராவான் ஆகியமொழிகளையும் அவர் இணைத்தார்.

இராபர்ட்டு கால்டுவெல்லின் காலத்தில் ஒலியியல் ஆய்வு அறிவியல் கண்ணோட்டத்துடன் மிகுந்த வளர்ச்சியினை அடையவில்லை. திருந்திய மொழிகள் என்று அவர் குறிப்பிட்ட சில மொழிகள் தவிர ஏனைய மொழிகளைப் பற்றி விரிவாக ஆய்வு நிகழ்த்துவதற்குரிய வாய்ப்புகளும் சான்றுகளும் அவர் காலத்தில் மிகவும் குறைவாகவே கிடைத்தன.

**இராபர்ட்டு கால்டுவெல் காலத்துக்குப் பிந்திய ஆய்வுகள்**

கி.பி.1866 ஆம் ஆண்டு வியன்னாவில் கூடிய மொழியாராய்ச்சி மாநாடு டாக்டர் இராபர்ட்டு என்.கஸ்ட் (Robert N.Cust) என்பவரின் தலைமையில் ஒரு மொழி ஆராய்ச்சிக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பி இந்திய மொழிகளின் இயல்பை ஆராய வேண்டும் என்று முடிவு செய்தது. இப்பணி பல ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி.1894 இல் தொடங்கியது. இதன் தலைமைப் பொறுப்பைப் பேராசிரியர் கிரியர்சன் (G.A.Grierson) ஏற்றார். 1891 இல் நடைபெற்ற கணக்கெடுப்பு (Census Report) இம்மொழி ஆய்வுக்குழுவுக்குப் பெரிதும் உதவியது. இந்திய மொழி பற்றிய கள ஆய்வில் உதவிபுரிந்த டாக்டர் ஸ்டெங் கெனோவின் (Sten Konow) முண்டா மொழிகள், திராவிட மொழிகள் பற்றிய கருத்துக்கள் 1906 இல் வெளியிட்டபொழுது திராவிடமொழிகளின் ஒப்பாய்வு புத்துயிர்பெறத் தொடங்கியது. இக்கள ஆய்வின் முதற்பகுதியில் தென்னிந்திய மொழிகள் விலக்கப்பட்டபொழுதும் 4 ஆம் பகுதியில் திராவிட, முண்டா மொழிகள் இடம்பெற்றன. டாக்டர் இராபர்ட்டு கால்டுவெல் குறிப்பிட்ட 12 மொழிகளுடன் கொலாமி, நாயக்கி என்னும் இரு மொழிகளையும் இணைத்து கிரியர்சன் திராவிடமொழிகள் 14 எனக் குறிப்பிட்டார்.

ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் சமற்கிருதப் பேராசிரியராகப் பணிபுரிந்த தாமசு பர்ரோ அவர்கள் திருந்தாத மொழிகளுக்கு முதலிடம் கொடுத்து அவகைளின் தன்மைகளை ஆராய்ந்து பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இக்காலத்தில்தான், திராவிட மொழிகளைத் தென் திராவிடமொழிகள் (South Dravidian), நடுத்திராவிடமொழிகள் (central Dravidian), வட திராவிடமொழிகள் (North Dravidian) என்று பிரித்து அவற்றின் இயல்புகளைத் தனித்தனியாக ஆராயும் போக்கு உருவானது.

1950 இல் பர்ஜி மொழியை ஆராய்ந்து அதனையும் பெங்கோ மொழியினையும் திராவிட மொழிக்குடும்பத்தின் தனிக்கிளைமொழிகள் என்று பேராசிரியர் பர்ரோ கண்டறிந்தார்.இவருடன் இணைந்து ஆய்வு நடத்திய பேராசிரியர் பட்டாச்சாரியா என்பவர் கோண்டா, கடபா ஆகிய மொழிகளை ஆராய்ந்து தனிமொழிகள் என்று கண்டறிந்தார். தோடா

மொழி பற்றிய தனி ஆய்வைச் சிறப்பாக மேற்கொண்ட கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் எமனோ தம் ஆய்வைத் தனி நூலாக (Dravidian Linguistics -Ethnology and Folk Tales) வெளியிட்டார். மேலும் திராவிட மொழிகளின் ஒலியியல் பற்றிய ஒப்பியல் ஆய்வுகளையும் தனிநூலாக வெளியிட்டார். பேராசிரியர் பர்ரோவின் ஒப்பாய்வு பற்றிய பல்வேறு கட்டுரைகளும்,இத்துறை ஆய்வுக்குப் புத்தொளி பாய்ச்சின. பர்ரோ, எமனோ எனும் இரு அறிஞர்களும் இணைந்து “திராவிட மொழிகளின் அடிச்சொல் அகராதி” (A Dravidian Etymological Dictionary) ஒன்றினை வெளியிட்டுத் திராவிட மொழிகளின் ஒப்பாய்வுக்கு அடிகோலினர்.

திராவிடமொழிகள் குறித்த ஆய்வில் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர் இராமசுவாமி ஐயர் குறைந்த வசதிகளுடன் நிறைவான பல ஆய்வுகளைச் செய்துள்ளார். உசுமானியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பி.எச்.கிருட்டினமூர்த்தி என்பவரும், திராவிடமொழிகளின் வினைச்சொற்கள் பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்ட பி.எசு.சுப்பிரமணியம் என்பவரும் இத்துறையில் குறிப்பிடத்தகுந்தவர்கள். பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம், வ.ஐ. சுப்பிரமணியம், பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், பேராசிரியர் செ.வை. சண்முகம், டாக்டர் குமாரசாமி ராசா, டாக்டர் இசரேல், முத்துசண்முகம் பிள்ளை, முனைவர் பொற்கோ உள்ளிட்டவர்கள் ஒப்பாய்வுதுதறைக்கு நிறைந்த பங்களிப்பு ஆற்றியுள்ளனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறை திராவிடமொழிகளின் ஆய்வுக்கு நிறைய பங்களிப்பை வழங்கியுள்ளது. திருவனந்தபுரம் திராவிட மொழியியல் கழகம்,மைசூர் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் உள்ளிட்ட ஆய்வு நிறுவனங்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கனவாம்.

அயலகத் தமிழறிஞர்களான கமில் சுவலபில், ஆண்டர்னோ ஆகியோரும் இத்துறையில் நிறைய பங்களிப்பு வழங்கியுள்ளனர். ஒலியியல் ஆய்வு சிறப்பாக வளர்ச்சி பெற்ற போதிலும் சொல்லியல், தொடரியல் பற்றிய ஒப்பாய்வு இன்னும் ஓரளவு பின்தங்கிய நிலையில்தான் உள்ளது. எனினும் மாற்றிலக்கண நெறிமுறைகளின் அடிப்படையில் தொடரியல் தொடர்பான ஆய்வுகள் இன்று புத்துயிர் பெற்றுள்ளன. தொடக்க நிலையில் 12 மொழிகள்தான் திராவிட மொழிகளாகக் குறிப்பிடப்பட்டன. ஆனால் திராவிட மொழிகளின் ஒப்பியல் வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பல்வேறு மொழிகள் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்போது திராவிடமொழிகள் முப்பதுக்கும் மேலாகப் பெருகியுள்ளன.

**தென்திராவிட மொழிகள்**

தமிழ், மலையாளம், இருளா, கொடகு, கோடா, கன்னடம், படகா, துளு ஆகிய ஒன்பது மொழிகளும் தென்திராவிட மொழிகள் என்று கருதப்படுகின்றன. இவற்றுள் தமிழும் மலையாளமும் மிகப் பிற்காலத்தில் பிரிந்ததால் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாக உள்ளன. தமிழ்,

மலையாள மொழிகளுடன் அடுத்த நிலையில் கோடா, தோடா ஆகிய மொழிகள் நெருங்கியத் தொடர்புடையனவாக உள்ளன என்று பேராசிரியர் எமனோ கருதினார். ஆனால் பேராசிரியர் இராமசாமி ஐயர் கொடகு மொழிதான் தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாள மொழிகளுக்கு அடுத்துள்ள நிலையில் உறவுடையது என்று நிலைநாட்டுகின்றார். தென் திராவிட மொழிகளுள் துளுமொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபடுவதால் பேராசிரியர் எமனோ, கிருட்டினமூர்த்தி ஆகியோர் இம்மொழியினை நடுத்திராவிட மொழிக்கூட்டங்களுடன் இணைத்துவிட வேண்டியதன் தேவையை வலியுறுத்தினர். ஆனால் பி.எசு.சுப்பிரமணியம் இதைத் தென்திராவிட மொழி என்று கொள்வதே ஏற்புடைத்து என்றும், தென் திராவிட மூலமொழியிலிருந்து துளு மொழி முதலில் பிரிந்த காரணத்தினால்தான் அது தமிழ், மலையாளம் போன்ற மொழிகளிலிருந்து அதிக அளவு வேறுபடுகின்றது என்றும் விளக்கிக் காட்டினார்.

தென் திராவிட மொழிகளுள் படகாமொழி கன்னடத்தின் கிளைமொழியாக (Sister Language) உள்ளது. இதனைப் பேசுகின்ற மக்கள் நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். தோடா, கோடா போன்ற மொழிகளும் நீலகிரி மலைப் பகுதிகளிலுள்ள பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன. கன்னடம், துளு, கொடகு போன்றன கர்நாடக மாநிலப் பகுதியில் வழக்கிலுள்ளன. துளுமொழி 1798 ஆம் ஆண்டில் பேராசிரியர் ஆர்.இ. இராபர்ட்டு என்பவரால் தனிமொழி என்று சுட்டிக்காட்டப்பட்டது. 1837 ஆம் ஆண்டில் தோடா மொழி தனிமொழி என்று தெரியவந்தது. 1961 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இம்மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

1.தமிழ் -3.056

2.மலையாளம் - 1.701

3.இருளா - 4617

4.கொடகு - 80 ஆயிரம்

5.கோடா 900

6.தோடா - 800

7.கன்னடம் - 1.742

8.படகா 70 ஆயிரம்

9.துளு - 5.1 இலட்சம்

தென்திராவிட மொழிகள் முதலில் தமிழ்- கன்னடக்கிளை என்றும், துளு என்றும் பிரிந்திருக்க வேண்டும். துளுமொழி இவ்வாறு முதலில் தனிமொழியாகப் பிரிந்த பின்னர் தமிழ் -கன்னடக் கிளை, தமிழ்-கொடகு கிளையிலிருந்து கோடா-தோடா மொழிகளிணைந்த கிளை பிரிந்திருக்க வேண்டும். இவை பிரிந்த பின்னர் தமிழ்-மலையாளம் கிளையிலிருந்து கொடகு மொழி தனியாகப் பிரிந்து சென்றது. இறுதி நிலையில் மலையாளம் தனியாகப் பிரிந்திருக்க வேண்டும் என்றும் தென் திராவிடக்

கிளையிலிருந்து முறையே துளு, கன்னடம், கோடா, தோடா, கொடகு, மலையாளம் என்பன படிப்படியாகப் பிரிந்ததை டாக்டர் பி.எசு.சுப்பிரமணியம் விளக்கியுள்ளார்.

**தென்திராவிட மொழிகளில் தமிழ்**

**சிறப்பியல்புகள்**

திராவிட மொழிகளுள் வடமொழித்தாக்குதல் குறைவாக உள்ள மொழி தமிழாகும். தமிழ்மொழியில் வடசொற் கலப்பினைத் தொல்காப்பியர் காலத்திலிருந்து காண்கின்றோம். வடசொற்களைக் கையாண்ட பொழுது அதனைத் தமிழ் ஒலியமைப்பிற்கு ஏற்பப் பெரும்பாலும் மாற்றியே கையாண்டுள்ளனர். தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் இதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே''

என்ற தொல்காப்பிய நூற்பா இதனை உணர்த்தும்.

2.தெலுங்கு,கன்னடம் போன்ற மொழிகள்,தொன்மையான மொழிகளாக இருந்தும், ஏராளமான மக்களால் பேசப்படும் மொழிகளாக இருந்தும், எழுத்து வடிவிலமைந்த தொன்மையான இலக்கிய, இலக்கணங்களைக் கொண்ட மொழி தமிழாகவே உள்ளது.

3.ஏனைய திராவிட மொழிகளை விடச் சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழே ஆகும்.ஒரே பொருளைக் குறிக்க பல சொற்கள் (Synonyms) அமைவது தமிழ்மொழியின் சொல்வளத்திற்குச் சான்றாக உள்ளது.

4.ஏனைய திராவிட மொழிகளில் பழங்காலக் கல்வெட்டுகள் அனைத்தும் வேற்றுமொழியில் அமைந்துள்ளன. ஆனால் தமிழின் தொன்மையான கல்வெட்டுகளில் அதிகமானவை தமிழிலேயே அமைவதைக் காணலாம்.

5.கன்னடம், தெலுங்கு ஆகிய தொன்மையான மொழிகளும் மலையாளமும் தற்காலத் தமிழுடன் வேறுபட்ட போதிலும் அவை பழந்தமிழ் வடிவங்களுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டு அமைவது தமிழின் தொன்மைக்குச் சான்றாகும்.

ஏனைய திராவிட மொழிகளைவிடவும் தமிழ்மொழி தனக்கென ஒரு பெரும் இலக்கணப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. அகத்தியர் தொன்மையான இலக்கணப் புலவராகத் திகழ்கின்றார். அவரை அடுத்துத் தோன்றிய தொல்காப்பியரின் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் சமற்கிருத இலக்கண நூல்களின் தொடர்பு தமிழகத்தில் வேரூன்றிய காலகட்டத்தில் தோன்றியிருக்கும் என்று கருத வாய்ப்புகள் உள்ளன. இந்நூல் பழைய இந்திய நாட்டிற்கு உரிய இலக்கண மரபினை ஒட்டியமைகிறது.உடம்படு மெய்யின்றி எழுதும் மரபினை இந்த நூல் புலப்படுத்துகிறது. எனவே உடம்படுமெய் கட்டாய விதியாக ஏற்றுக்கொள்ளப்படும் முன்னர் இந்த நூல் தோன்றியிருக்க வேண்டும்.

தமிழ்மொழி "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்"என்று பேசப்படும் எல்லை முன்னர் குறிப்பிடப்பட்டது. இன்று தமிழகத்திலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பர்மா, மொரீசியசு, தென்னாப்பிரிக்கா, கனடா, இலண்டன், அமெரிக்கா, டென்மார்க்கு, நோர்வே, பிசித்தீவுகள், பிரான்சு உள்ளிட்ட நாடுகளில் பேசப்படும் மொழியாக உள்ளது.

**தமிழும் திராவிடமும்**

தமிழ் என்ற சொல்லை ஆராயும் கால்டுவெல் திராவிடம் என்ற சொல்லே படிப்படியாக மாறி இறுதியில் 'தமிழ்' என்று புத்துரு பெற்றது என்கின்றார். இச்சொல்லாய்வைப் பல தமிழறிஞர்கள் மறுத்துரைக்கின்றனர். தொல்காப்பியர் காலத்திலிருந்தே இம்மொழியைக் குறிக்கத் தமிழ் என்னும் சொல் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

'தமிழென் கிளவி' - தொல்.

'தமிழ்கூறு நல்லுலகம்' -தொல்.பாயிரம்

'தமிழ் தலை மயங்கிய' - புறம்

'தமிழ்கெழு கூடல்' - புறம்

என்பன போன்ற தொடர்களே இதற்குச் சான்றாகும்.

தமிழ்மொழியை மேல்நாட்டார்கள் தமுலிக் எனவும் மலபார் எனவும் அழைத்தனர். கி.பி.1766 இல் 14 ஆம் லூயி மன்னன் தமிழன் ஒருவனுக்கு (ஆனந்தரங்கம் பிள்ளையின் உறவினர்) தமிழர்தலைவன் என்னும் பொருள்படும் "மலபார் தலைவன்" என்னும் பட்டத்தை வழங்கியுள்ளதை அறியமுடிகின்றது.

**தமிழ் மக்கள்**

திராவிட மொழிகளுள் தொன்மை வாய்ந்த, பண்பட்ட, உயர்தனிச் செம்மொழியாய் இலக்கண இலக்கிய வளம் பெற்றுத் திகழும் தமிழ் மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மக்களின் ஆற்றலையும், சிறப்பினையும் கால்டுவெல் பலபடப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். தமிழர்களைக் கிரேக்க நாட்டு மக்களுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார். இந்துக்களுள் மூட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் குறைந்தவர்கள் தமிழர்களே என்று இராபர்ட்டு கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

**மலையாளம்**

தமிழுடன் நெருங்கிய தொடர்புடைய மொழி மலையாளம் ஆகும்.வளர்ந்துவரும் இலக்கிய வளங்களைக் கொண்ட மொழி இது. பண்டைத் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியான சேரநாட்டில் பேசும் மொழி மலையாளம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதி தமிழ் பேசும் பகுதியாகவே இருந்தது என்பதற்கு இப்பகுதியில் எழுந்த பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் சான்றாகும்.மேலும் மலையாள மொழியின் தொடக்க நிலையில் எழுந்த இலக்கியங்களிலும் தமிழின் ஆதிக்கமே

மிகுந்திருந்தது. கி.பி.15 ஆம் நூற்றாண்டு வரை சமற்கிருதமொழியின் தாக்கமும், அதன் பின்னர் ஆங்கிலம் போன்ற மேல்நாட்டு மொழியின் ஆதிக்கமும் மலையாள மொழியில் மிகுந்தன. மேல்நாட்டு மொழியின் தாக்கம் மிகுந்தபொழுது ஏராளமான மேல்நாட்டுப் பாதிரிமார்கள் இம்மொழிக்குப் பல இலக்கண நூல்களை எழுதிக் குவித்தனர்.

மலபார் கடற்கரை சிறந்த துறைமுக நகரமாக இருந்ததால் கிரேக்கர், யூதர், போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் இப்பகுதிக்கு வணிகத்திற்கு வந்து தொடர்புகொள்ள வாய்ப்பாக இருந்தது. முற்காலத்தில் இந்நாட்டைக் குறிக்க கேரளம் என்ற சொல்லைப் பயன்படுத்தினர் என்பதற்குக் கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் எழுந்த அசோகனது கல்வெட்டில் ‘‘கேரளபுத்திரா’’ என்ற தொடரே சான்றாகும்.

மலையாள மொழிக்குக் குண்டர்ட்டு என்ற அறிஞர் இலக்கண நூலும் அகராதியும் எழுதியுள்ளார்.அவர் தமிழிலிருந்து மலையாளம் தோன்றியது என்ற கருத்தை ஒத்துக்கொள்ளாமல் கொடுந்தமிழின் ஒரு கிளைமொழி மலையாளம் என்றும், மற்றொரு கிளைமொழி தமிழ் என்றும் குறிப்பிடுகின்றார். ‘‘கேரள பாணினியம்’’ என்ற நூல் எழுதிய பேராசிரியர் இராசராசவர்மா என்பவரும் மலையாளம் தமிழிலிருந்து தோன்றியது என்ற கால்டுவெல் கருத்தை மறுக்கின்றார்.

**கன்னடம்**

கன்னடமொழி கர்நாடகாவிலும் மராட்டிய மாநிலத்தின் தென்பகுதியிலும் பேசப்படுகின்றது.இதனைக் ‘கருநாடகம்’ என்றும், ‘கானரிஸ’ என்றும் அழைப்பர்.கர்நாடகா என்ற வடசொல் திரிந்து இம்மொழின் பெயராக அமைகின்றது என்று வடமொழியினர் குறிப்பிடுவது உண்டு. எனினும் குண்டர்ட்டு இதனைத் திராவிடச் சொல்லாகவே கருதுகின்றார். இம்மொழியில் பழங்கன்னடம், புதுக்கன்னடம் என்ற இருவகை உண்டு. இவற்றில் புதுக்கன்னடத்தின் எழுத்துமுறை தெலுங்கு மொழியின் எழுத்துமுறையை ஒட்டி அமைந்திருக்கின்றது.

**தேவாங்க கன்னடம்**

கன்னடமொழியின் வட்டார வழக்குகளில் ஒன்று தேவாங்க கன்னடம் என்பதாகும். தமிழ்நாட்டிலுள்ள சின்னாளப்பட்டி, அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளில் வாழும் தேவாங்க செட்டியார் என்னும் சாதியினர் இதனைப் பேசுகின்றனர். இம்மொழியில் தமிழ்ச்சொற்கள் பல கலந்து காணப்படுகின்றது. தொன்மையான தமிழிலக்கியங்களில் இடம்பெற்று அழிந்துபோன சொற்கள் பலவற்றை இம்மொழி இன்றும் பாதுகாக்கின்றது.

எ.கா. வெண்திங்கள் > பெலிதிங்கலு (தே.க)

**கௌடா கன்னடம்**

கர்நாடக நாட்டின் தென்பகுதியிலுள்ள கூர்க் மாவட்டத்தில் உள்ள கௌடர்கள் பேசும் கன்னடமொழியின் ஒரு வட்டார வழக்கே கௌடா

கன்னடம் ஆகும். இது கன்னட மொழியிலிருந்து பல நிலைகளில் வேறுபடுகின்றது.

**படகா**

படகா மொழியைப் பேசுகின்ற மக்கள் நீலகிரி மாவட்டத்திலுள்ள ஊட்டி, குன்னூர் பகுதிகளில் பெரும்பான்மையாக உள்ளனர். இதனைக் கன்னட மொழியின் வட்டார வழக்காகவே பல ஒப்பியல் அறிஞர்களும் கருதிவந்தனர். எனினும் தற்பொழுது இது தனிமொழியாகவே கருதப்படுகின்றது. இம்மொழியை ஆராய்ந்த பேராசிரியர் எமனோ தோடர், கோடர் ஆகியோர் நீலகிரிப் பகுதியில் குடியேறிய காலத்திற்கு நெடுநாளைக்குப் பின்னரே படுகர் வடக்கிலிருந்து வந்து அங்குக் குடியேறினர் எனவும் இவர்களின் மொழி கன்னட மொழியுடன் நெருங்கியத் தொடர்புடையது எனவும் குறிப்பிட்டுள்ளார். படகர் மொழி பற்றி பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார்.

**துளு மொழி**

துளுமொழியைக் கால்டுவெல் திருந்திய மொழியாக ஏற்றுக்கொண்டபோதிலும் இதற்கு வரிவடிவமோ,இலக்கிய வடிவமோ கிடையாது. பேசில மிஷனைச் சேர்ந்த பாதிரிமார்கள் இம்மொழியில் பல நூல்களைத் தோற்றுவித்து அவற்றைக் கன்னட மொழியின் வரிவடிவில் அச்சிட்டனர். மைசூர் மாநிலத்தை அடுத்து ஓடும் சந்திரகிரி, கல்யாணபுரி என்ற இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி துளு மொழி பேசும், பேசப்படும் எல்லையாகக் குறிக்கப்படுகின்றது. இம்மொழிக்குப் பேராசிரியர் பிரிகல் என்பவர் இலக்கணம் எழுதியுள்ளார். மான்னர் என்பவர் துளு-ஆங்கில; ஆங்கில-துளு அகராதிகளை வெளியிட்டுள்ளார் (1886,1888).

**கொடகு**

எழுத்தும் இலக்கிய வளமும் பெறாது வழக்களவிலேயே நின்று நிலவும் இம்மொழியினை டாக்டர் மோக்லிங் என்பவர் ஆராய்ந்து தமிழுடன் பெருங்கேண்மை உடையது என்று கூறியுள்ளார். இம்மக்கள் பெரும்பாலும் ஒதுங்கி வாழ்வதால், நீலகிரியிலுள்ள பழங்குடி மக்களின், மொழியைப் போன்று இம்மொழியும் தொன்மைப் பண்பு மாறாமல் இருந்து வருகின்றது. இம்மொழி பற்றி பேராசிரியர் எமனோவும் ஆய்வு செய்துள்ளார்.

**தோடா மொழி**

நீலகிரிப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களான தோடர்கள் பேசும் இம்மொழியினைக் கி.பி.1837 ஆம் ஆண்டில் பேராசிரியர் பெர்னாட் ஸ்கிமி (Bernhard Schmid) என்பவர் ஆராய்ந்து திராவிட மொழிக் குடும்பத்துடன் தொடர்புடைய மொழி என்று குறிப்பிட்டுள்ளார்.

1961 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இவர்களின் எண்ணிக்கை 800 என்று அறியமுடிகின்றது. போதைப் பொருள் உட்கொள்ளும் பழக்கம் இருப்பதாலும், பிறந்தவுடன் பெண்குழந்தைகளைக் கொன்றுவிடுவதாலும் இவர்கள் எண்ணிக்கையில் குறைந்துவிட்டனர் என்று கால்டுவெல்

குறிப்பிடுகின்றார். தோடர்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து அறிஞர்கள் பலர் நூலெழுதியுள்ளனர்.

தோடா மொழியில் சொற்களின் முதலசையில் ஒலியழுத்தம் உள்ளது.மலையாள மொழியைப் போல் இல்லாமல் இம்மொழியின் வினைமுற்றுக்களில் பாலறி கிளவிகள் உள்ளன.தோடா மொழியின் இலக்கண அமைப்புகளில் பல பழந்தமிழுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. ர், ற் ஆகிய ஒலி வேறுபாடுகள் ஏனைய திராவிட மொழிகளைவிட தோடாவில் மிகத் தெளிவாக உள்ளது.

**கோடா**

கோடா மொழி நீலகிரிப் பகுதியில் வாழும் கோடர்கள் என்ற இனத்து மக்களால் பேசப்படுகின்றது. இம்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 900 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இம்மக்கள் பெரும்பாலும் கூலி வேலை செய்து வாழ்ந்து வருகின்றனர். கன்னட மொழியின் கொச்சைமொழி இது என்று கால்டுவெல் குறிப்பிடுகின்றார். ஆனால் இது தனிமொழி என்று இப்பொழுது நிறுவப்பட்டுள்ளது.

**இருளா**

நீலகிரிப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களான இருளர்கள் இம்மொழியைப் பேசுகின்றனர்.ஆனைமலைப் பகுதியில் வாழும் இருளர்கள் 'வட்டக்காட இருளர்கள்' எனப்படுவர். நீலகிரியில் வாழ்பவர்கள் 'மலைதேச இருளர்கள்' என்று அழைக்கப் படுகின்றனர். பேராசிரியர் கமில் சுவலபில் அவர்கள் இம்மக்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். குறும்பர்கள். படகர்கள் ஆகியோருடன் இம்மக்கள் நெருங்கிப் பழகுவதால் குறும்பா, படகா ஆகிய மொழிகளின் சொற்கள் இவர்களது மொழியில் ஏராளம் கலந்துள்ளன.

**நடுத்திராவிட மொழிகள்**

நடுத்திராவிட மொழிகளைத் தெலுங்கு-குவி கிளை என்றும், கொலாமி-நாயக்கி கிளை என்றும் மொழிநூலார் இருகூறுபடுத்துவர். தெலுங்கு-குவி கிளையில் தெலுங்கு, கோண்டி, கோண்டா, குயி, குவி, பெங்கோ, மண்டா ஆகிய ஏழு மொழிகள் உள்ளன. கொலாமி-நாயக்கி கிளையில் கொலாமி, நாயக்கி, பர்ஜி, கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகிய மொழிகள் உள்ளன. இவற்றுள் கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகியன தனிமொழிகள் அல்ல என்றும் ஒரே மொழியின் கிளைகள் என்றும் சிலர் வாதிடுவர். நடுத்திராவிடமொழிகளுள் தெலுங்கு மொழியைத் தென்திராவிட மொழிகளுடன் இணைத்து ஆராய்வது பழைய மரபு.ஆனால் இப்பொழுது நடுத்திராவிட மொழிகளுடன் இணைக்கப்படுகின்றது.

**நடுத்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்**

தென் திராவிட மொழிகளில் முன்னுயிர்களின் முன்னர் வரும் மொழிமுதல் 'க'கர ஒலி 'ச'கர ஒலியாக மாறுவதைக் காணலாம். ஆனால்

நடுத்திராவிட மொழிகளில் இம்மூலத் திராவிட ஒலியான ‘க’கரம் மாறாமலே நிற்கின்றது.

பெண்பால் உறவுப்பெயர்கள் ஆள் விகுதியைப் பெற்று அமையும் மரபினை நடுத்திராவிட மொழிகளில் காணமுடிகின்றது.

**நடுத்திராவிட மொழிகளில் தெலுங்கு**

தமிழுக்கு அடுத்து சொல்வளத்திலும் தொன்மைச்சிறப்பிலும் தெலுங்குமொழியைக் குறிப்பிடலாம்.இதன் இனிமை நோக்கிச் சுந்தரத் தெலுங்கு (பாரதியார்), களி தெலுங்கு (சுந்தரம் பிள்ளை) என்று குறிப்பிடுவர். ஐரோப்பியர்கள் இம்மொழியினை ஜெண்டு (Gentiles என்ற போர்த்துக்கீசியச் சொல்லின் திரிபு) என்று அழைத்தனர்.தமிழகத்தின் வடக்கேயுள்ள பகுதிகளில் இம்மொழி பேசப்படுகின்றது. வடமொழியாளர்கள் இந்த மொழியினை ஆந்திரம் என்று அழைத்தனர். ஆந்திரர்கள், தெலுங்கர்கள் என்றும் கலிங்கர்கள் என்றும் இருவகைப்படுவர். தமிழைவிட அதிகமான மக்களால் பேசப்படும் மொழி பல்வேறு படைப்பு இலக்கியங்களைக் கொண்டுள்ளது.நடுத்திராவிட மொழிகளுள் திணை, பால் பாகுபாட்டைப் பொறுத்தவரையில் தெலுங்கு,குருக் ஆகிய மொழிகளின் அமைப்பே மிகத்தொன்மையானது.

**கோண்டி**

கோண்டி மொழியைப் பேசும் மக்கள் கோண்டுவனம் என்று அழைக்கப்படும் நடு இந்தியாவின் காடுகளில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.இவர்கள் தங்களைக் கோயிதோர் என்று அழைக்கின்றனர். பேராசிரியர்கள் செனிவிக்ஸ், வில்லியம்சன் என்பார் இம்மொழிக்கு எழுதிய இலக்கண நூல்கள் குறிப்பிடத்தக்கன.

**குவி அல்லது கோந்த்**

குவி மொழியைப் பேசும் மக்கள் கோண்டவனத்தின் பகுதிகளிலும் ஒரிசாவிலுள்ள குன்றுகளிலும் வாழ்கின்றனர். இவர்களைக் கோண்டர்கள், கந்தர்கள், கூ என்றெல்லாம் அழைப்பது உண்டு. இம்மொழிக்கென வரி வடிவமோ, எழுத்து வடிவல் அமைந்த இலக்கியங்களோ இல்லை. குழந்தைகளைத் திருடி வந்து தெய்வங்களுக்குப் பலியிடுவதை இவர்களின் பழக்கமாகக் கொண்டிருந்ததை அறியமுடிகின்றது.

**குயி**

குயி மொழி ஒரிசாவிலும்,கோறாபுத் மாவட்டப் பகுதிகளிலும் பேசப்படுகின்றது. ஏறத்தாழ ஒன்பது இலட்சம் மக்கள் இதனைப் பேசி வருவதாகத் தெரிகின்றது. இம்மொழியின் இலக்கணத்தைப் பேராசிரியர் வின்பீல்டு என்னும் மேனாட்டறிஞர் எழுதியுள்ளார். பர்ரோ, பட்டாச்சாரியா ஆகிய இரு அறிஞர்களும் இணைந்து இம்மொழி பற்றிய ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

**கோண்டா**

கோண்டா மொழி ஆந்திரப் பிரதேசத்தின் எல்லைப் பகுதிகளில் பேசப்படுகின்றது. உசுமானியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கிருட்டினமூர்த்தி இம்மொழியின் இலக்கண அமைப்புப் பற்றி பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளார். பட்டாச்சாரியா என்பவர் இதன் இலக்கணத்தையும்,பல சொற்களையும் ஆராய்ந்து 'கோண்டா மொழி' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். இம்மொழியை 13 ஆயிரம் மக்கள் பேசி வருகின்றனர்.

**கொலமி**

கொலமி மொழி மத்தியப் பிரதேசத்தில் வழங்கப்படுகின்றது.ஏறத்தாழ ஐம்பதாயிரம் மக்கள் பேசிவருகின்றனர்.பேராசிரியர் சேது மாதவராவ் என்பவர் இம்மொழியின் இலக்கண நூல் ஒன்றை எழுதியுள்ளார்(1950). பேராசிரியர் எமனோ, பர்ரோ, பட்டாச்சாரியா உள்ளிட்ட அறிஞர்கள் இம்மொழி பற்றி ஆராய்ந்துள்ளனர்.

**நாயக்கி,பர்ஜி**

நாயக்கி மொழி மத்தியப் பிரதேசத்திலும் மகாராட்டிரத்திலும் பேசப்படுகின்றது. இம்மொழியை ஏறத்தாழ 1500 பேர் பேசி வருகின்றனர். பேராசிரியர்கள் பர்ரோ, பட்டாச்சாரியா இணைந்து இம்மொழியை ஆராய்ந்துள்ளனர். பர்ஜி மத்திய பிரதேசப் பகுதிகளில் பேசப்படுகின்றன. மொழி பேசும் பகுதியில் மேற்கில் பஸ்தர் பகுதியும், கிழக்கில் கோறாபுட் பகுதியும், வடக்கில் ஜகதல்பூர் பகுதியும், தெற்கில் செய்பூரும் உள்ளன.

**கடபா**

ஒரிசாவிலும் மத்தியபிரதேசத்தின் சில பகுதிகளிலும் இம்மொழி பேசப்படுகின்றது. கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகிய இருமொழிகளையும் ஒரே மொழியாகச் சிலர் கொள்கின்றனர்.ஆனால் பர்ரோவும் பட்டாச்சாரியாவும் தனித்தனி மொழிகளாகக் கொள்கின்றனர்.

**பெங்கோ மண்டா**

பெங்கோ மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1300 எனத் தெரிகிறது.இம்மொழி பேராசிரியர் பர்ரோவால் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தனிமொழி என்று நிறுவப்பட்டது. மண்டா மொழி பற்றி விரிவான ஆய்வுகள் இதுவரை நடந்ததாகத் தெரியவில்லை.

**வட திராவிடமொழிகள்**

பிராகுயி, மால்டோ, குருக் ஆகிய மூன்று மொழிகளும் வட திராவிட மொழிப்பிரிவில் அடங்கும். தற்போது ஆந்திரப் பகுதியில் வழங்கும் கோயா என்ற மொழியைத் தனிமொழி என்று கண்டு அதனையும் வட திராவிட மொழிகளுடன் இணைத்துள்ளனர். எனினும் சிலர் கோயா மொழியைக் கோண்டி மொழியின் வட்டார வழக்காகவே கருதுகின்றனர்.

**வட திராவிட மொழியின் சிறப்பியல்புகள்**

1. மூலத்திராவிட ஒலியான 'க' கரம் மொழி முதலில் இ, ஈ, தவிர்ந்த முன்னுயிர்களின் முன்னர் வரும்போது வட திராவிட மொழிகளில் அது 'ஹ' கர ஒலியாக (x) மாறிவிடுகின்றது. இம்மாற்றத்தை உரசொலியாதல் என்பர்.

தமிழ் - kan

மால்டோ - xuanu

பிராகுயி - xan

குருக் - xann

2. மொழி முதலில் வரும் 'ச'கர ஒலி உ, எ, ஊ, ஏ ஆகிய உயிர்களின் முன்னர் இம்மொழிகளில் 'க'கர ஒலியாக மாறுகின்றது.

**குருக்**

குருக் மொழியை கால்டுவெல் ஒராவோன் என்று குறிப்பிடுகின்றார். இம்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை 11.4 இலட்சம் ஆகும். இவர்கள் பீகார், அசாம், வங்காளம், மத்தியபிரதேசம் ஆகிய பகுதிகளில் பரந்து வாழ்கின்றனர். பேராசிரியர் கொலோனல் டால்டன் இம்மக்களைப் பற்றிய குறிப்புகளை வங்காள மக்களின் வரலாறு என்ற நூலில் தருகின்றார். பட்ஸச் என்னும் பாதிரியார் இம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

**மால்டோ**

மால்டோ மொழியை 90 ஆயிரம் மக்கள் பேசுகின்றனர்.அவர்கள் பீகார்,மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர். மால்டோ மொழி பேசும் மக்கள் தங்களை மாலர் (மனிதர்கள்) என்று அழைக்கின்றனர். இம்மொழியை ஆராய்ந்த கிரியர்சன்,மாலர் என்னும் சொல் மலை என்னும் சொல்லின் வேரடியாகப் பிறந்தது என்றும் மாலர் என்பது மலை மனிதர்கள் என்னும் பொருளுடையது என்றும் குறிப்பிடுகின்றார். இம்மொழிக்கு இலக்கிய வளம் கிடையாது.கிறித்தவத் தொண்டர்கள் பலர் இம்மொழியில் இலக்கியம் படைத்துள்ளனர்.

**பிராகுயி**

பலுசிசுதான் பகுதிகளில் பேசப்படும் பிராகுயி மொழியினைக் கால்டுவெல் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார். எனினும் திராவிட மொழிக் குடும்பத்தில் இணைத்து விரிவாக ஆராயவில்லை. டென்னிஸ் டி.எஸ்.பிரே என்பார் பிராகுயி மொழியைத் திராவிடமொழிக் குடும்பத்ததைச் சார்ந்த மொழி என்று நிறுவினார். பேராசிரியர் எமனோ 1962 இல் பிராகுயி மொழி வட திராவிட உட்பிரிவைச் சார்ந்தது என்று தெளிவாக விளக்கியுள்ளார். மூலத்திராவிட மொழியிலிருந்து முதல்நிலையில் பிரிந்தமொழி பிராகுயி மொழியாக இருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் துணிகின்றனர். இம்மொழி பேசும் மக்கள் பாகிஸ்தானில் உள்ள கலத்,

ஹய்ர்பூர் மாவட்டங்களிலும் ஈரான், ஆப்கானிஸ்தான் பகுதிகளிலும் பரந்து காணப்படுகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகளில் பலுச்சி என்னும் மொழியே பெரு வழக்கில் உள்ளது. பிராகுயி மொழி திராவிட மொழியாகக் கருதப்பட்டாலும் பாரசீகமொழியுடன் நெருங்கியத் தொடர்புகொண்டுள்ளது. ஏறத்தாழ ஐந்து இலட்சம் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். பேராசிரியர் எமனோ இம்மொழி பற்றி ஆராய்ந்துள்ளார்.

**பாடத்தொகுப்புரை**

- திராவிட மொழிகள் பற்றிய ஆய்வில் ஐரோப்பியர்கள் பலர் முனைப்புடன் ஈடுப்பட்டதை அறிய முடிகின்றது.
- திராவிடமொழிகள் ஆய்வில் இராபர்ட்டு கால்டுவெல், தாமஸ் பர்ரோ, எமனோ ஆகியோரின் பங்களிப்புகள் குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்தன.
- திராவிடமொழிகள் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிடமொழிகள் என்னும் பகுப்பில் பகுக்கப்படுகின்றன.

**மாதிரி வினாக்கள்**

அ.ஒருபக்க அளவில் விடை தருக

1. இராபர்ட்டு கால்டுவெலின் திராவிடமொழி ஆய்வுப் பங்களிப்பை விளக்குக
2. தென்திராவிட மொழிகளை விளக்குக
3. திராவிடமொழிகளின் ஆய்வு பற்றி விளக்குக

ஆ.நான்கு பக்க அளவில் விடை தருக

1. தென்திராவிட மொழிகளில் தமிழின் சிறப்பை விளக்குக
2. திராவிடமொழிகளின் வகைகளை விளக்குக

-------------------

**குறிப்பு**

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

## அலகு 4

**முன்னுரை**

மொழிக்கு அடிப்படையாக அமைவது ஒலியாகும். இவ் ஒலிகளின் வகைகளையும், பிறப்பையும் இந்த இயலில் கற்க உள்ளோம்.பொதுவாக ஒலிகளை உயிரொலிகள், மெய்யொலிகள் என்னும் பகுப்பில் அடக்கி அதன் பிறப்புகளை மரபு இலக்கணப் பார்வையுடனும், மொழியியல் கண்ணோட்டத்துடனும் இந்த இயல் விளக்குகிறது.

**பாட அறிமுகம்**

மொழியில் முக்கிய இடம் வகிப்பன ஒலிகளாகும். ஒலிகள் உயிர் ஒலிகள், மெய்யொலிகள் என்றவாறு மொழியியல் அறிஞர்களால் குறிப்பிடப்பெறும். முனைவர் ஜான் சாமுவேல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பாய்வு என்னும் நூலிலில் இடம்பெறும் ஒலிகள் பற்றிய செய்திகளும், உருபன்கள், வேற்றுமைகள், எண்ணுப்பெயர்கள், திணை பால், இடம் குறித்த செய்திகளும் இங்குப் பாடமாக அமைகின்றன.

**ஒலியும் பிறப்பும்**

மொழிக்கு அடிப்படையாக அமைவது ஒலியாகும். இவ்வொலிகள் பேசுவோர், கேட்போர் ஆகியோரின் மூளைகளும் உள்ளங்களும் உறவு கொள்ளத்தக்க தொடர்பினை ஏற்படுத்துகின்றன. ஒருவர் எழுப்பும் பொருள்பொதிந்த ஒலிக்கூட்டங்களின் இணைப்பை ஏனையோர் (Monolingual) புரிந்துகொள்ளச் சற்று அரிதாக இருந்தால் அதனை ஒரே மொழியின் மற்றொரு திரிந்த வடிவம் அல்லது வட்டார வழக்கு என்றும், புரிந்துகொள்ளவே முடியவில்லை எனில் அதனை வேறொரு மொழி என்றும் கணித்துவிடலாம்.

பேசுவோர் ஒலிகளை வேறுபடுத்தி ஒலிப்பதற்கு அவர்களின் உடலில் அமைந்துள்ள நுரையீரல், குரல்வளை, ஒலித்தசைகள், நா, இதழ், பல், அண்ணம், மூக்கறை போன்ற பல உறுப்புகள் கருவியாக அமைகின்றன. நுரையீரலிலிருந்து புறப்படும் காற்று இவ்வுறுப்புக்களில் தடையுற்று வெளிப்படும்பொழுது எல்லா வகையான ஒலிகளும் பிறக்கின்றன. இவ்வுறுப்புகள் ஒலிகளை எழுப்புவதுடன் உண்டல், சுவாசித்தல் போன்ற பிற பணிகளையும் செய்கின்றன.

**முதல் ஒலியும் துணைஒலியும்**

ஒவ்வொரு மொழியிலும் பொருள் வேறுபாட்டைத் தரும் அடிப்படை ஒலிகளை முதல் ஒலிகள் அல்லது ஒலியன்கள்(Phonemes) என்று கூறுவர். பொருள் வேறுபாட்டினைத் தராமல் இடத்தாலும் முயற்சியாலும் வேறுபட்டு அமையும் ஒரே ஒலியனின் மாற்று வடிவங்களைத் துணை ஒலிகள் (Allo-phones) என்பர். தமிழைப் பொறுத்தவரையில் க், ச், ட், த், ப் போன்ற வல்லொலிகள் ஒலியன்களாகவும் g, j, d, d, b போன்றன துணை ஒலிகளாகவும் அமைகின்றன.ஒலியன்களும் துணை ஒலிகளும் மொழிக்கு மொழி வேறுபட்டு அமைகின்றன. ஒரு மொழியின் ஒலியன்கள் அடுத்த

மொழியிலும் ஒலியன்களாக அமைய வேண்டிய தேவையில்லை. ஒரு மொழியின் ஒலியன்கள் அடுத்த மொழியில் துணை ஒலிகளாக அமைவதையும் காணலாம்.தமிழில் ப் ஒலியனாகவும் b துணை ஒலியாகவும் அமைய, ஆங்கில மொழியில் p, b ஆகிய இரண்டுமே ஒலியன்களாக அமைகின்றன.

பழந்தமிழர் அடிப்படை ஒலிகளை முதலெழுத்துகள் என்றும், சார்ந்து வரும் ஒலிகளைச் சார்பெழுத்துகள் என்றும் அறிவியல் கண்ணோட்டத்துடன் பிரித்த முறையினைப் பேராசிரியர் டானியல் ஜோன்சு போன்ற மேல்நாட்டு ஒலியியல் அறிஞர்கள் வியந்து பாராட்டுகின்றனர். பொருளை வேறுபடுத்தி நிற்கும் பொருள் உணர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படை ஒலிகளை மட்டும் பழந்தமிழர் ஒலி எழுத்துக்களாகக் கொண்டனர். அந்தந்த மொழிக்குரிய முதல் ஒலிகளை மட்டும் ஆராய்ந்து அவற்றிற்கேற்ற வரிவடிவங்களை அமைத்துக்கொண்ட முறை இந்திய நாட்டு மொழிகளில் காணப்படும் சிறப்பியல்பாகும் என்று ஐரோப்பியரும் அமெரிக்கரும் பாராட்டுகின்றனர்.


ஒவ்வொரு மொழியிலும் குறிப்பிட்ட சில ஒலிகள் அதிக வழக்கில் இருப்பதைக் காணலாம். மலையாளம் போன்ற சில மொழிகளில் மூக்கொலிகள் மிகுந்துள்ளன. அவ்வாறே ஒலிகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மொழிக்குடும்பத்திற்கும் சிற்சில தனித்தன்மைகள் உள்ளன. திராவிட மொழிகளில் உயிரெழுத்துக்களில் உள்ள குறில் நெடில் வேறுபாடு இன்றியமையாததாக அமைய ஏனைய மொழிகள் அவ்வாறு அமையாமையினைச் சான்றாகக் குறிப்பிடலாம். கன்னடத்தில் ‘ப்’ ஒலி குறைந்து அதற்குப் பதிலாக ‘ஹ்’ ஒலிமிகுந்து வருவதையும் அவற்றின் தனித்தன்மைகள் எனலாம்.திராவிட மொழிகளின் ஒலிகளுக்கும், வடமொழி ஒலிகளுக்கும் அடிப்படையில் சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளன. வடமொழியில் உள்ள உயிர்ப்பு ஒலிகள் தமிழில் அதிகமாக இல்லை. தமிழில் உள்ள ற், ன்,ழ் போன்ற ஒலிகள் வடமொழியில் இல்லை.

**உயிரொலிகளின் பிறப்பு**

ஒலிகளை உயிரொலிகள் என்றும், மெய்யொலிகள் என்றும் இரண்டாகப் பகுப்பர். நுரையீரலிலிருந்து புறப்பட்டு வாய்ப் பகுதிக்கு (Oral cavity) வரும் காற்று, பல்வேறு பகுதிகள் (Points articulation) தடைப்படும்பொழுது மெய்யொலிகளும், தடையின்றி வெளிவரும்பொழுது உயிரொலிகளும் தோன்றுகின்றன. உயிரொலிகள் குரல்வளையிலேயே ஒலிப்பைப் பெற்றுவிடுகின்றன. உயிரொலிகள் பிறக்கும்பொழுது ஒலியுறுப்புகளில் தடை ஏற்படாததால் பொதுவாக அவற்றை நாவினது எழுச்சி, இதழினது குவிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறுபடுத்துவர். நாவானது அடியில் படிந்திருக்கும் நிலையில் ‘அ’கரமும், முன்னோக்கி மேலெழும்பொழுது ‘இ’கரமும், பின்னோக்கி மேலெழும்பொழுது ‘உ’கர ஒலியும் பிறக்கின்றன.

மெய்யொலிகளின் பிறப்பிடங்களைப் போன்று உயிரொலிகளின் பிறப்பிடங்களை ஒலிக்கும் இடத்தை வைத்து விளக்குவது அரிது. எனவே

ஆங்கில மொழியின் உயிரொலிகளின் பிறப்பிடத்தை விளக்கிக் காட்டுவதற்கு அடிப்படை உயிரொலிகளை வரைபடம் மூலம் வரைந்து காட்டி அவற்றைத் துணையாகக் கொண்டு பேராசிரியர் டானியல் ஜோன்சு விளக்கிக் காட்டியுள்ளார். அதைப் போன்று தமிழ் மொழியின் உயிரொலியின் பிறப்பிடத்தையும் ஒரு முக்கோணத்தின் முனைகளுக்கு ஒப்பிட்டு விளக்குவது எளிது.




பிறப்பிடம், முயற்சி ஆகியவற்றை நோக்கிப் பார்க்கும்பொழுது ‘இ’கரத்துடன் ‘எ’கரமும், ’உ’கரத்துடன் ‘ஒ’கரமும் தொடர்புடையன. ‘இ’கர ‘அ’கர ஒலிகளுக்கு இடையில் ‘எ’கரம் பிறத்தலும் ‘உ’கர, ‘அ’கர ஒலிகளுக்கு இடையில் ‘ஒ’கரம் பிறத்தலும் தெளிவு.

(எ.கா) இலை > எலை

என்று ‘இ’கரத்தை உச்சரிக்கும் முயற்சி சுருங்கும்பொழுது ‘அ’கரத்திற்கும் ‘இ’கரத்திற்கும் இடையில் ‘எ’கரம் பிறக்கின்றது. அவ்வாறே ‘உ’கரத்தை உச்சரிக்கும் முயற்சி சுருங்கும்பொழுது ‘அ’கர ‘உ’கரங்களுக்கு இடையில் ‘ஒ’கரம் பிறக்கின்றது.

எ.கா.

உலகம் > ஒலகம்

உரல் > ஒரலு

மேற்கண்ட பேச்சு வழக்குகளே இதற்குச் சான்றாகும்.

உயிரொலிகளுள் அ, ஆ ஆகியன நா அடியில் படிந்திருக்கும் நிலையில் பிறப்பதால் கீழ் உயிர்கள் என்றும் இ,ஈ ஆகியன நா முன்னோக்கி எழும் நிலையில் பிறப்பதால் முன்னுயிர்கள் என்றும், ஒ, ஓ ஆகியன நா பின்னோக்கி எழும் நிலையில் பிறப்பதால் பின்னுயிர்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. எ.ஏ ஆகிய ஒலிகளை இடை முன்னுயிர்கள் என்றும், ஒ, ஓ ஆகிய ஒலிகளை இடைப் பின்னுயிர்கள் என்றும் அழைக்கலாம். மேலும் உ, ஊ, ஒ, ஓ ஆகியவற்றை ஒலிக்கும்பொழுது இதழ்குவிதல் பற்றி அவற்றை இதழ்குவி உயிர்கள் என்றும், ஏனையவற்றை இதழ்குவியா உயிர்கள் என்றும் அழைப்பர். அ, இ, உ, எ, ஒ ஆகியன குறுகி ஒலிப்பதால் குறில் ஒலிகள் என்றும், நீண்டு ஒலிக்கும்பொழுது நெடில் ஒலிகள் என்றும் பெயர்பெறும். இவையன்றி ஐ,

ஔ என்னும் இரண்டு ஒலிகள் உயிர் வரிசையில் உள்ளன. அவற்றை மொழிநூலார் அ+ய்;அ+வ் ஆகியன இணைந்த கூட்டொலிகளாகவே கருதுவர்.

மொழிநூலார் கொள்கைப்படி 'ய'கரமும் 'வ'கரமும் அரை உயிர்கள் என்று கொள்ளப்படும். இவற்றுள் 'வ'கரத்தை அழுத்தமாக ஒலிக்கும்பொழுது அது பல இதழின ஒலியாகவே ஒலிக்கிறது. இவ்விரு ஒலிகளும் மெய்யொலிகளாகக் கருதப்பட்ட போதிலும் உயிர்த்தன்மை அதிகமாக இருப்பதால் இவற்றை அரை உயிர் என்று அழைக்கின்றனர்.

**மூக்கின உயிர்கள்**

உயிர் ஒலிகள் பிறக்கும்பொழுது அண்ணத்தின் பின்பகுதியிலுள்ள தசைப்பகுதி மூக்கறை வாயிலை அடைத்து விடுவதால் காற்று வாய் வழியாகச் செல்கின்றது. சில சமயம் பின் அண்ணப்பகுதியிலுள்ள தசைப்பகுதி அவ்வாறு மூக்கறை வாயிலைத் தடுக்காமல் வழிவிடும் பொழுது காற்றின் ஒரு பகுதி வாய் வழியாகவும்,மறுபகுதி மூக்கு வழியாகவும் செல்லும். அப்போது பிறக்கும் உயிரொலிகளை மூக்கின உயிர்கள் (Nasalised vowels) என்பர்.

எ.கா. வந்தான் > vanta

இங்கு வந்தான் என்ற சொல்லின் இறுதி மெய்கெட்டு, அதற்கு முந்திய அகர உயிர் மூக்கொலிச் சாயல் பெறுகின்றது. மக்களின் ஒலிக்கும் முயற்சி சுருங்கும்பொழுது இத்தகைய மூக்கின ஒலிகள் ஏற்படும் என்பது பேராசிரியர் புளும்பீல்டு போன்றவர்களின் கருத்தாகும்.

**மெய்யொலிகளின் பிறப்பு**

நுரையீரலில் இருந்து வெளிவரும் காற்று வாய்ப்பகுதியின் பல்வேறு இடங்களில் தடைப்படும்பொழுது மெய்யொலிகள் பிறக்கின்றன. இலக்கண அறிஞர்கள் இம்மெய்யொலிகளை வல்லினம், மெல்லிம், இடையினம் என்று மூன்றாகப் பகுப்பர். அவர்கள் கருத்துப்படி க், ச், ட், த், ப், ற் என்ற ஆறும் வல்லினம் எனப்படும். மூக்கின் வழியாய்ப் பிறக்கும் ங், ச், ண், ந், ன், ம் என்பன மெல்லொலிகள் அல்லது மூக்கொலிகள் எனப்படும். ய், ர், ல், வ், ழ், ள் என்பன இடையினம் என்று வழங்கப்படும். வல்லினம் மார்பையும், மெல்லினம் மூக்கையும், இடையினம் மிடற்றையும் இடமாகக் கொண்டு பிறக்கும் என்பது நன்னூலாரின் கொள்கை.

தற்கால மொழிநூல் அறிஞர்கள் மெய்யொலிகளை ஒலிக்கும் உறுப்புகளாகிய இதழ், பல், அண்ணம் போன்றவற்றை ஒட்டியும் ஒலிக்கும் முறையை ஒட்டியும் கூறுபடுத்துவர். நுரையீரலில் இருந்து வரும்காற்று குரல்வளை நாணில் அதிர்வை ஏற்படுத்தினால் ஒலிப்பு ஒலிகளும், அதிர்வை ஏற்படுத்தாவிட்டால் ஒலிப்பில் ஒலிகளும் பிறக்கின்றன.

'க'கர, 'ங'கர மெய்யொலிகள் பிறக்கும்போது நாவின் பின்பகுதி மேலெழுந்து கடையண்ணத்தைத் தொடுகின்றது. எனவே இவ்விரு ஒலிகளையும் பின்னண்ண ஒலிகள் என்று இடவகையாலும், பின்னண்ணத் தடையொலி, பின்னண்ண மூக்கொலி என்று இட முயற்சி வகையாலும்

அழைப்பர். ச், ஞ் ஆகிய ஒலிகள் இடைநா இடையண்ணத்தோடு பொருந்தியிருக்கும் நிலையில் பிறக்கின்றன. இவற்றை வளைநா ஒலிகள் என்பர். த், ந் ஆகிய ஒலிகள் நாவின் நுனி பல்லின் அடிப்பகுதியைத் தொடும் நிலையில் பிறப்பதால் இதனைப் பல்லின ஒலிகள் என்பர். முன்னண்ணத்தின் நாவானது பொருந்திய நிலையில் ற், ன் ஆகிய ஒலிகள் பிறக்கின்றன. அவற்றுள் 'ன' கரத்தை முன்னண்ண மூக்கொலி என்பர். 'ற'கரம் பிறக்கும்பொழுது நாவானது முன்னண்ணத்தை வருடுவதால் இது முன்னண்ண ஆடொலி எனப்படும். நாவானது மேலெழுந்து முன்னண்ணத்தைத் தொடும் நிலையில் 'ர' கரம் பிறக்கும்.

ல், ழ், ர் ஆகிய பிறக்கும் போது நாவானது வளைந்து அண்ணத்தைத் தொட,காற்று நாவின் இருமருங்கும் பிரிந்து செல்வதால் இதனைப் பிரிவழியின மெய்கள் என்பர். மேலிதழும் கீழிதழும் இணையும் நிலையில் பிறக்கும் ப், ம் என்ற இரு ஒலிகளும் இதழ் ஒலிகள் எனப்படும். மேற்பல்லும் கீழிதழும் இணையும் நிலையில் பிறக்கும் 'வ'கர ஒலியினைப் பல்லிதழின மெய் என்பர். இடையண்ணப் பகுதியில் பிறக்கும் 'ய' கரம் உயிர்த்தன்மை பெற்றுள்ளதால் அதனை அரையுயிர் என்பர்.

## ஒலிமாற்றங்கள்

### உயிரொலி மாற்றங்கள்

#### 'இ'கர 'எ'கர 'உ'கர 'ஒ'கர மாற்றங்கள்

திராவிட மொழிகளின் உயிரொலிகளில் ஏற்படும் மாறுதல்களுள் 'இ'கர 'எ'கர 'உ'கர 'ஒ'கர மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன.

இவ்வொலி மாற்றங்கள் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளுக்கு இடையில் மட்டுமன்றித் தமிழ்மொழியின் வரிவடிவத்திற்கிடையேயும் பேச்சு வழக்கிற்கு இடையேயும் நிகழ்வதைக் காணலாம்.

எ.கா. இலை >எலை (பேச்சுவழக்கு)

உலகம் > ஒலகம் (பேச்சு வழக்கு)

தமிழ்மொழியின் இவ்விரு வடிவங்களைப் பொறுத்தவரையில் இம்மாற்றம் முயற்சி எளிமை நோக்கி ஏற்படுவது என்பது தெளிவு. இகர உகர ஒலிகளை எழுப்பும்பொழுது நாவானது முன்னோக்கியும் பின்னோக்கியும் எழும்பொழுது இடைநிலையில் நின்றுவிடுவதால் அகரத்திற்கும் இகரத்திற்கும் இடையில் எகர ஒலியும் அகரத்திற்கும் உகரத்திற்கும் இடையில் ஒகர ஒலியும் பிறந்துவிடுகின்றன. இவ்வாறு ஒரேமொழியின் இருவடிவங்களுக்கு மட்டுமின்றித் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பல்வேறு மொழிகளுக்கு இடையிலும் இம்மாற்றம் நிகழ்கின்றது. இவ் உயிரொலி மாற்றத்தைப் பொறுத்தவரையில் கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளை ஓரினமாகவும், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளை வேறொரு இனமாகவும் பிரித்துக்கொள்ளலாம்.

எகர ஒகர ஒலிகளைக் கொண்டு தொடங்கும் ஏராளமான கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளின் சொற்களுக்கு நிகராகத் தமிழிலும் மலையாளத்திலும் காணப்படும் சொற்களில் இவ்வொலிகளுக்கு இணையாக முறையே இ, உ என்னும் உயிர் ஒலிகளே உள்ளன. இவ்வொலி மாற்றம் இரு வேறிடங்களில் பிறக்கும் ஒரே இன ஒலிகளுக்குள் ஏற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**இகர எகர மாற்றம்**

| தமிழ் | மலையாளம் | கன்னடம் | துளு | தெலுங்கு |
|---|---|---|---|---|
| இலை | இல | எலெ | எலெ | எலெ |
| இறங்கி | இறங்ஙி | eragu | eraguni | eragu |
| இள | இள | எளெ | எளெ | எலெ |

**உகர ஒகர மாற்றம்**

| தமிழ் | மலையாளம் | கன்னடம் | துளு | தெலுங்கு |
|---|---|---|---|---|
| உடல் | உடல் | odalu | Udal/odal | odalu |
| உலை | உலெ | ஒலெ | உலெ | ஒற |
| குடை | குட | kode | kode | godugu |

இவ் உயிரொலி மாற்றத்தை ஆராய்ந்த பல்வேறு மொழியியல் அறிஞர்களும் பல்வேறு காரணங்களைக் காட்டி அமைதி கூறினர். ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு அமையும் இவ்வொலி மாற்றங்கள் குறித்துச் சுப்பையா என்பவர் தம் ஆய்வுக்கட்டுரையில் சிறப்பாகச் சுட்டியுள்ளார்.

**நெடில் குறில் மாற்றம்**

**உயிர் குறுகல்**

திராவிட மொழிகளில் மூவிடப்பெயர்களின் தன்மை, முன்னிலை, எழுவாய் வடிவங்களின் முதலசையிலுள்ள நெடில் அவற்றின் வேற்றுமையேற்கும் வடிவங்களில் குறுகி நிற்கின்றன. மலையாளம், தமிழ், கன்னடம், துளு ஆகிய மொழிகளில் இம்மாற்றம் இடம்பெறுவதாகக் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். தெலுங்கு, கோண்டி போன்ற மொழிகளில் இம்மாற்றம் ஏற்படுவதில்லை என்பது அவர் கருத்து. ஆனால் தெலுங்கு மொழியில் இரண்டாம் வேற்றுமையில் நெடில் குறிலாவதைக் காணலாம்.

எ.கா. நீ >நின்னு

மூவிடப் பெயர்களில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களன்றி வினையடிச் சொற்களிலும் நெடில்,குறில் மாற்றங்கள் உள்ளன.இரண்டாவது அசையிலோ அல்லது பின்னொட்டிலோ உயிரொலி முதலில் வரவில்லை என்றால் இம்மாற்றம் நிகழ்வதில்லை. சில இடங்களில் வினையடிச் சொற்களோடு கால இடைநிலை, பாலறி கிளவி ஆகியவற்றை

இணைக்கும்போது வினையடிச்சொல்லையடுத்து வரும் பின்னொட்டில் உயிர் முதலில் வராமலே இம்மாற்றம் நிகழ்வதுண்டு.

எ.கா. காண் > கண்டான்.

இம்மாற்றத்தைச் சில எண்ணுப் பெயர்களின் பெயரடைகளிலும் காணமுடிகின்றது.

எ.கா.

ஓர்>ஒரு

ஈர் > இரு

மூ > மு(முப்பது)

**உயிரின் நீட்சி**

சில வினைச்சொற்களின் அடிச்சொற்கள் தொழில்பெயருக்குரிய விகுதிகள் இணைக்கப்படாமலேயே தொழிற் பெயர்களாகச் செயல்படுகின்றன. அவ்வாறு செயல்படும்பொழுது அவற்றின் முதலசையிலுள்ள குற்றுயிர் நீண்டு ஒலிப்பதைக் காணலாம்.

எ.கா.

கெடு > கேடு

படு > பாடு

சுடு > சூடு

**உயிர் இடம்பெறுதல் (Metathesis of Vowels)**

ஒரு சொல்லிலோ, உருபனிலோ உள்ள ஒலியன்கள் இடம்பெயர்ந்து நிற்குமென்றால் அதனை ஒலி இடம் பெயர்தல் என்பர். இம்மாற்றம் திராவிட மொழிகளின் உயிரொலிகளிலும் மெய்யொலிகளிலும் உள்ளது. மெய்யொலிகளைப் பொறுத்தவரையில் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இம்மாற்றம் அதிகமாக இடம் பெறுவதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

எ.கா.

கொப்புள் > பொக்குலி -தெலுங்கு

> பொக்குள் - மலையாளம்

தமிழ்மொழிக்குள்ளும் இம்மாற்றம் நடைபெறுவது உண்டு.

எ.கா. சிவிறி > விசிறி

தசை > சதை

உயிரொலிகள் இடம்பெயர்ந்து நிற்குமியல்பைத் தெலுங்கு, குயி, குவி, கோண்டா போன்ற மொழிகளிலும், பெங்கோ, மண்டா, பிராகுயி போன்ற மொழிகளிலும் அதிகமாகக் காணமுடிகின்றது. தென் திராவிட மொழிகளில் இவ்வியல்பு குறைவு. எனினும் தமிழில் இரண்டு > ரெண்டு

என்று வழங்குவதைக் காணலாம். அதுபோல் இரவு என்னும் சொல் ராவு என்று மாறுவதைக் காணலாம்.

**உயிரொலி இயல்பு**

இரு வேறுபட்ட ஒலிகள் ஓர் இனத்தைச் சார்ந்த ஒலிகளாக மாறுவதை ஓரினமாதல் என்பர். இவ்வோரினமாதலைப் பெரும்பான்மை மெய்யொலிகளிலும் சிறுபான்மை உயிரொலிகளிலும் காண்கின்றோம். திராவிடமொழிகளைப் பொறுத்தவரையில் இவ்வியல்பு தெலுங்கு மொழியில் அதிகமாக உள்ளது.

எ.கா.

தானி+கு > தானிகி

ஆவு + னி > ஆவுனு

இவ்விரு தெலுங்குச் சொற்களில் முதற் சொல்லிலுள்ள'கு'என்னும் நான்காம் வேற்றுமை உருபு கி என்று திரிந்தது. அதாவது முன்னுயிர்+ பின்னுயிர்=முன்னுயிர்+பின்னுயிர் என்று ஓரினமாகியது. அவ்வாறே இரண்டாவது சொல்லிலுள்ள னி என்னும் உருபு னு என்று மாறியது. ஆவு என்ற சொல்லிலுள்ள உகர உயிர் அதையடுத்து வந்த முன்னுயிராகிய இகரத்தையும் உகரமாக மாற்றி, பின்னுயிர்+ முன்னுயிர்=பின்னுயிர்+ பின்னுயிர் என்று ஓரினமாகியது.

**உடம்படுமெய் பெறல்**

உயிரொலியை இறுதியில் கொண்ட சொற்களும், உயிரை முதலில் கொண்ட சொற்களும் புணரும்பொழுது விட்டிசை ஏற்படுதல் இயல்பு. இவ்விட்டிசையைத் தடுக்க உடம்படுமெய்கள் தோன்றுகின்றன.அதிகமான இந்தோ ஐரோப்பிய மொழிகளில் விட்டிசையைத் தடுக்க (n) என்னும் மூக்கொலி பயன்படுத்தப்படுகின்றது. சமற்கிருத மொழியில் சில இடங்களில் மகரமும் உடம்படுமெய்யாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கிலமொழியில் ஒன்றன் உயிர் கெட்டு அதற்குப் பதிலாக ஈருயிரோடும் நெருங்கிய தொடர்புடைய மற்றொரு ஒலி தோன்றுவதுண்டு.

எ.கா. die+ing= dying (I,e கெட்டது)

இவ்வாறு விட்டிசை ஏற்படாவிடில் ஈருயிர்களும் இணைந்து (Vowel contractio) ஒன்றுபட்டுவிடும். வடமொழியில் பல சொற்களில் இவ்வாறு ஈருயிர்கள் இணைந்து ஒன்றுபடல் உண்டு.

எ.கா. மட+அதிபதி= மடாதிபதி (அ+அ=ஆ)

தமிழில் உயிர்களின் தன்மையினையும் மெய்களின் தன்மையினையும் ஒருங்கே பெற்றுள்ள அரையுயிர்களென்று அழைக்கப்படும் யகர வகர ஒலிகள் உடம்படு மெய்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொல்காப்பியர் உடம்படுமெய்யைச் சுட்டிச் செல்கின்றார் எனினும் அவற்றை வரையறை செய்யவில்லை. நன்னூலார்,

''இ ஈ ஊ வழி யவ்வும் ஏனை

உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும்

உயிர்வரின் உடம்படுமெய்என்றாகும்" (நன்னூல்,162)

என்று யகர, வகர உடம்படுமெய்கள் வருமிடங்களை வரையறுக்கின்றார்.

கன்னடத்தில் அ, உ என்னும் உயிர்களை அடுத்து வகரமும் எ,இ ஆகிய உயிர்களை அடுத்து ய கரமும் உடம்படுமெய்யாக இடம்பெறும்.

எ.கா.குடி+ஓ= குட்யோ (குடித்தல்)

குடி+ அத்தெ= குட்யத்தெ (அது குடித்தது)

மகு+ இன> மக்வின் (குழந்தையினுடைய)

இந்த உடம்படுமெய்கள் ஒட்டுநிலை மொழியாக அமையும் திராவிடமொழிகளில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகின்றது. அதோடு இவற்றால் அடிச்சொற்களும் சிதையாமல் காக்கப்படுகின்றன. ம், ன், ய், வ் ஆகிய நான்கு உடம்படுமெய்களும் தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய மொழிகளில் இடம்பெறுகின்றன. தமிழில் வகரம் வரும் இடங்களில் எல்லாம் தெலுங்கு, துளு மொழிகளில் னகரம் வருகின்றது. பழங்கன்னடத்தில் மகர உடம்படு மெய்யே இடம்பெறுகின்றது.

எ.கா. தமிழ் -குரு-வ்-ஐ >குருவை

பழங்கன்னடம் guru -m - am >gurumam

எண்ணுப்பெயர்களைப் பொறுத்த வரையில் தெலுங்கில் ஹ ஒலியும் தமிழில் ன் ஒலியும் உடம்படுமெய்களாக உள்ளன.

எ.கா. தெலுங்கு -padi-(h)-enu.

தமிழ்-பதினைந்து

**மெய்யொலிகளின் இயைபும் திரிபும்**

**மூலத்திராவிட மெய்யொலிகள்**

தமிழ் இலக்கண வல்லுநர்கள் மெய்யொலிகளை அவை ஒலிக்கும் இயல்புநோக்கி வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படுத்துவர். மொழிநூலார் மெய்யொலிகளை அவை பிறக்கும் இடம் நோக்கியும் ஒலிக்கும் இயல்புநோக்கியும் கூறுபடுத்தி விளக்கிச் செல்கின்றனர். திராவிடமொழிகளில் ஏராளமான மெய்யொலிகள் காணக்கிடைக்கின்றன. எனினும் ஒப்பியல்மொழிநூலார் பதினாறு மெய்யொலிகளையே பொருள் வேறுபாடு உணர்த்தி நிற்கும் தனிமெய்யொலின் களாகக் கருதுகின்றனர். இவற்றுள் இடையண்ண மூக்கொலியான ஞகரத்தைப் பல்வேறு அறிஞர்களும் தனி மெய்யொலியனாகக் கொள்ள மறுத்தனர். பேராசிரியர் கிருட்டினமூர்த்தி இதனைத் தனி ஒலியன் என்று நிறுவிக் காட்ட, பேராசிரியர் எமனோவும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு திராவிட மொழிகளின் அடிச்சொல்லகராதியில் ஞகரத்தைத் தனி ஒலியனாக இணைத்து அதன் திரிபுகளை விளக்கியுள்ளார்.

திராவிட மொழிகளின் மெய்யொலிகளில் பல்வேறு வகையான ஒலிகள் காணப்பட்ட போதிலும் வளைநா ஒலிகள் குறிப்பிடத்தகுந்த சிறப்பிடத்தைப் பெறுகின்றன. திராவிட மொழிகளின் மெய்யொலிகள் மொழியில் பயின்று வருவதில் சில பொதுத்தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றன. பொதுவாக ஒரு சொல்லின் முதலில் ஒரு மெய்யும் அதனை அடுத்து ஓர் உயிரொலியுமாக அமைவதைக் காணலாம். இம்மொழிகளில் ஒரு சொல்லின் முதலில் இருமெய்கள் இரட்டித்து நிற்பதில்லை. சில மொழிகளில் ஒலிகள் இடம்பெயர்ந்து நிற்கும்பொழுது மட்டும் மொழி முதலில் மெய்யொலிகள் இரட்டித்தோ, மயங்கியோ வருகின்றன.

க் (k) பின்னண்ண ஒலிப்பில் ஒலி

க் (மொழிமுதல்)

இவ்வொலி திராவிட மொழிக் குடும்பத்தின் பெரும்பாலான மொழிகளில் முதலில் ஒலிப்பில் ஒலியாகவுள்ளது. மூலத் திராவிட மொழிமுதல் ககரம் தமிழ், மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளில் இ, ஈ, எ, ஏ போன்ற முன்னுயிர்களையடுத்து வரும்பொழுது இடையண்ண ஒலியாக (Palatal Consonant) மாறிவிடுகிறது. ஆனால் குருக், மால்டோ போன்ற வட திராவிட மொழிகளில் முன்னுயிர்களை அடுத்து வரினும் மாறாமல் நிற்கும். மால்டோ மொழியில் இகர உயிரை அடுத்து வரும்பொழுது மட்டடும் q என்று மாறுகிறது. பிராகுயி மொழியில் இது x என்ற உரசொலியாகத் திரிபடைகின்றது. இதனை உரசொலியாதல் என்பர். தமிழில் சில இடங்களில் மொழியிறுதியில் இவ்வொலி ழகரமாகவும் திரியும்.

எ.கா

முகை >முழை

**அண்ண ஒலியாதல்**(Palatalisation)

மூலத் திராவிடப் பின்னண்ண ஒலி, அண்ண ஒலியாகத் திரியுமியல்பைத் தெலுங்குமொழியில் அதிகமாகக் காணமுடிகின்றது.

எ.கா. தமிழ் - சீழ்

கன்னடம் - கீவு

தெலுங்கு - சீவு

2.கன்னடம் - கிவி

தமிழ் - செவி

தெலுங்கு - செவி

இத்திரிபு தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகியமொழிகளின் ஒலிக்குறிப்புச்சொற்களில் ஏற்படுவதில்லை என்பது பலர் கருத்து.

திராவிடமொழிகளில் இடம்பெறும் இவ்வொலித் திரிபு மூலத் திராவிட ஒலிகளைத் திருத்தி அமைக்கவும் ஓரளவிற்குத் துணைசெய்கின்றது.

எ.கா. கன்னடம் - கின்ன

தமிழ் - சின்ன

இவ்விரு சொற்களையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது ‘கின்ன’ என்ற சொல்லில் இடம்பெறும் பின்னண்ண ஒலி தொன்மையான ஒலி என்றும், அதுவே இடையண்ண ஒலியாகத் திரிந்தது என்றும் எளிதில் உணரலாம்.

இவ்வொலி மாற்றத்தைச் சமற்கிருத மொழியில் காணமுடிவதில்லை.

எ.கா.

சமற்கிருதம் - கீர்த்தி

தமிழ் - சீர்த்தி

தமிழ் - சேரல்

சமற்கிருதம் - கேரள்

அசோகனது கல்வெட்டில் ‘கேரளபுத்திர’ என்ற தொடரைக் காண்கின்றோம். இது தமிழில் ‘சேரமான்’ என்பதற்கு நிகரான வடமொழித்தொடராகும். இங்கும் வடமொழியில் பின்னண்ண ஒலி இடம்பெற, தமிழில் இடையண்ண ஒலியே காணப்படுகின்றது.

**உரசொலியாதல்** (Fricativisation)

மூலத் திராவிட ஒலியான ‘க’கரம் தமிழ், மலையாளம், தெலுங்கு மொழிகளில் இடையண்ண ஒலியாக மாறுவதைப் போன்று குருக், மால்டோ, பிராகுயி ஆகிய மொழிகளில் உரசொலியாக மாறுகின்றது. இம்மாற்றம் ககர ஒலியையடுத்து இ, ஈ ஆகிய ஒலிகள் தவிர்த்த ஏனைய உயிரொலிகள் மட்டும் வரும்பொழுது நிகழ்கின்றது.

எ.கா.

தமிழ் -கண்

குருக்,பிராகுயி - khan

இச்சொல்லில் அகர உயிரின் முன்னர் ககர ஒலி உரசொலியாக மாறுவதைக் காண்கின்றோம்.

க் (மொழியிடை)

மொழி முதலில் ஒலிப்பில் ஒலியாக ஒலிக்கும் ககரம் பொதுவாக மொழியிடையில் இரட்டிக்குமிடங்களில் வன்மையாகவும், மூக்கொலிகளையடுத்து ஒலிப்பு ஒலியாகவும், உயிரொலிகளுக்கு இடையில் உரசொலியாகவும் ஒலிக்கிறது. மேலும் இது தோடா மொழியில் x ஒலியாகவும், பர்ஜி மொழியில் g ஒலியாகவும்,பிராகுயி மொழியில் kh ஒலியாகவும் மால்டோ மொழியில் q ஒலியாகவும் மாறுகின்றது. தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளில் இது மொழியிடையில் சகர ஒலியாக மாறுவதில்லை.

தமிழ் - புகை; கொடகு- பொக (poge)

மலையாளம்- புக; கோண்டி-பொய (poya)

கோடா பெக் (peg) ; கோண்டா - பொகோ (pogo);

தோடா (pax)

**மெய்யொலி மாற்றங்கள்**

**வல்லொலி, மெல்லொலி மாற்றங்கள்** (Convertibility of Surds and Sonants)

தற்காலத் தமிழில் ஒலிப்பு ஒலிகள் (voiced consonants) ஒலியன்களாகக் கருதப்படும் நிலையைப் பெற்றபோதிலும் பழந்தமிழில் அவை பொருள் வேறுபாட்டிற்குத் துணைசெய்யவில்லை. எனவே அவற்றிற்கென்று தனி வரி வடிவமும் அமைக்கப்படவில்லை. எனினும் ஒலிப்பில் ஒலிகளாகிய (voiceless consonants) வல்லொலிகள் மொழியிடையில் மூக்கொலிகளையடுத்து வரும்பொழுது மெல்லொலிகளாக (voiced) மாறிவிடுகின்றன. மொழி முதலிலும், இரட்டிக்குமிடங் களிலும் மட்டுமே அவை வல்லொலிகளாக ஒலிக்கின்றன. இரு உயிர்களுக்கு இடையில் பெரும்பாலும் அவை உரசொலிகளாக ஒலிக்கின்றன. மேலும் அதிகமான திராவிட மொழிகளில் மொழி முதல் மெல்லொலிகள் இடம்பெறுவதில்லை.

வேற்றுமொழிகளிலிருந்து திராவிடமொழிகளில் வந்து வழங்கும் சொற்களிலும் மொழி முதல் மெல்லொலி இடம்பெறுவதைக் காணலாம். இத்தகைய ஒலி மாற்றத்தை வல்லொலி, மெல்லொலி மாற்றம் என்று பெயரிட்டுத் தனியாக ஆராய்கின்றார் டாக்டர் கால்டுவெல். இம்மாற்றம் திராவிட மொழிக்குடும்பத்தின் கிளைமொழிகள் பலவற்றிலும் காணப்பட்ட போதிலும் தமிழ் மொழியில் உள்ளது போன்று ஒரு சமச்சீரான முறையில் அமையவில்லை என்பது அவர் கருத்து. இவ்விதியைத் தமிழ் வேற்றுமொழிச் சொற்களைக் கடன் வாங்கும்பொழுது தவறாது கையாள்வதைக் காணலாம்.

1வடமொழி danta

தமிழ் - tandam

2. வடமொழி - bhagya

தமிழ் - Pakkiyam

மேற்காட்டப்பட்ட இரு வடசொற்களிலும் முறையே d, b போன்ற மெல்லொலிகள் மொழிமுதல் வந்தபோதிலும் தமிழில் மொழி முதலில் அவை வல்லொலியாக மாறுவதையும் “t” என்னும் வல்லொலி மூக்கொலியை அடுத்து வரும்பொழுது மெல்லொலியாக மாறுவதையும் காண்கின்றோம்.

திராவிட மொழிகளில் அமையும் வல்லொலி மெல்லொலி மாற்றத்தை விளக்கும் டாக்டர் கால்டுவெல் இம்மாற்றம் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இல்லையென்றும், எபிரேய மொழியில் மட்டும் ஓரளவிற்கு உள்ளது என்றும், சித்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சில மொழிகளிலும் காணமுடிகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். தனக்கு முன்னர் 1853 இல் திரு. நோரிஸ் என்பார் தமிழுக்குரிய சிறப்பு விதியாக

இம்மாற்றத்தைச் சுட்டியுள்ளதையும் குறிப்பிட்டு, இம்மாற்றம் மிகத் தொன்மையானது என்று முடிவு கட்டுகின்றார். எனினும் மொழியியல் கண்ணோட்டத்துடன் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் கூட இம்மாற்றத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இம்மாற்றம் ஓரினமாதலைப் போல் முயற்சி சிக்கனம் காரணமாக ஏற்படுவது என்பது பலர் கருத்து.

மொழியிடையில் வல்லொலி, மெல்லொலியாக மாறுவதைப் பற்றி டாக்டர் கால்டுவெல் கொண்ட கருத்தை அனைவரும் ஓரளவிற்கு ஏற்று வந்தனர். இவ்வாய்வு பின்னர் வல்லொலி, மெல்லொலி ஆகிய ஒலிகளுள் எது மூலத் திராவிட ஒலி என்ற ஐய வினாவை மொழி நூலறிஞர்களிடம் எழுப்பியது. கே.வி.சுப்பையா தமது ஆய்வுக்கட்டுரையில் தமிழில் ககர வல்லொலி மொழி முதலில் வருமிடங்களில் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் அதற்கு இணையாக மெல்லொலி (g) இடம் பெறுவதைக் காட்டி, வல்லொலிதான் மூலத் திராவிட ஒலி என்றும்,மூலத்திராவிட மொழிநிலையில் மெல்லொலி இருந்திருக்க வாய்ப்பில்லை என்றும் குறிப்பிட்டார். இக்கட்டுரையைக் கண்ணுற்ற ஜூல்சு பிளாக் குமரிலப்பட்டரின் தந்திரவர்த்திகா என்ற இடைக்காலச் சமற்கிருத நூலில் இடம்பெற்ற பல திராவிடமொழிச்சொற்களை ஆராய்ந்து ‘தமிழும் சமஸ்கிருதமும்’ என்ற கட்டுரையில், கே.வி.சுப்பையாவின் கட்டுரையை மறுத்து மூலத்திராவிட மொழியில் மெல்லொலிகள் உண்டு என்று நிறுவினார்.

எ.கா.

வடமொழி - கொடகா (ghotaka)

தமிழ் - குதிரை (kutirai)

கன்னடம் - குதிரெ(kutire)

தெலுங்கு- குற்றமு (gurramu)

ஆகிய சொற்களைக் காட்டி இவற்றின் மூலத் திராவிட வடிவம் gutr என்பதாகத்தான் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அவர் கருத்துப்படி மெல்லொலி மட்டுமன்றி அவற்றின் உயிர்ப்பொலியும் மூலத் திராவிட மொழியில் இருந்திருக்க வேண்டும். இக்கருத்தை ஏற்றுக்கொண்ட கே.கோடவர்மா மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலிருந்து சில சொற்களைக் காட்டித் திராவிடமொழியில் மெல்லொலி இடம் பெற்றமையைத் தெளிவுப்படுத்தினார்.

எ.கா. மலையாளம் kettu (anekkettu)

கன்னடம் - gattu

ஜூல்சு பிளாக் போன்றோரின் கருத்தின்படி ghotaka (குதிரை) போன்ற சொற்கள் திராவிட மொழிச்சொற்களே. அவை வடமொழியில் பிற்காலத்தில் புகுந்தன. வடமொழிக்குச் செல்லும் முன்னர் அவற்றின் முதல் ஒலி மெல்லொலியாகவே இருந்திருக்க வேண்டும். நடுத்திராவிட மொழிகளின் சொற்கள் பலவற்றிலும் மெல்லொலிகள் மொழிமுதலில்

இடம்பெறுவதை அவர் காட்டுகிறார். எனினும் மொழி முதலில் வல்லொலிகளைக் கொண்டு தொடங்கும் சொற்களுக்கு இணையான மெல்லொலிகளை மொழி முதலில் கொண்ட தெலுங்கு, கன்னட மொழிச்சொற்களை அவரால் நிறையத் தரமுடியவில்லை. இவ்வொலி மாற்றத்தைச் சிறப்பாக ஆராய்ந்த பர்ரோ, கிருட்டினமூர்த்தி போன்ற ஒப்பியல் அறிஞர்கள் ஜூல்சு பிளாக்கின் கொள்கையை மறுத்துத் தெலுங்கிலும், கன்னடத்திலும் காணப்படும் மெல்லொலிகள் பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்றும் மூலத்திராவிட மொழியில் மொழி முதலில் மெல்லொலிகள் இடம்பெறவில்லை என்றும் கூறிப் பல்வேறு சான்றுகள் மூலம் தம் கருத்தை நிலைநாட்டினர்.

**இரட்டைமெய் தனிமெய்யாதல்**

திராவிட மொழிகளில் இரட்டை மெய்கள் (double consonants) பொதுவாக மொழிமுதலில் குற்றுயிர்கள் வரும்பொழுது அதையடுத்து இடம்பெறுகின்றன.

எ.கா.கிள்ளு

ஆனால் இத்தகைய சொற்களில் பின்னொட்டுகள் தொடர்ந்து வரும்பொழுது இந்நிலைக்கு முரண்பட்ட முடிவுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

எ.கா. kil / ai

திராவிட மொழிகளில் தனிமெய்களும் இரட்டை மெய்களும் பொருள் வேறுபாட்டிற்குத் துணைசெய்கின்றன. ஆனால் வேறு பல மொழிக்குடும்பங்களில் இவை தனி ஒலியன்களாக அமையவில்லை. இவற்றுள் தனி மெய்களே காலத்தால் முந்தியன என்பது பலர் கருத்து. இம்மெய்களுக்கு முன்னர் இடம்பெறும் மொழி முதல் குறில், நெடில் ஆகிய ஒலியன்களில் எது முதன்மையானது என்பது பற்றியும் அறிஞர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். சிலர் நெட்டுயிர்களே காலத்தால் முந்தியன என்று வாதிடுவர்.

எ.கா. ஆர் > அரு(மை)

சேர் > செ(ன்றான்)

என்பவற்றைக் காட்டிக் குற்றுயிர்கள் காலத்தால் பிற்பட்டன என்று வாதிடுவர்.

**மெய்யொலிகள் ஓரினமாதல்**

வேறுபட்ட இரண்டு மெய்கள் தொடர்ந்து வரும்பொழுது ஒன்றன் ஆற்றலால் மற்றொன்று தன் நிலைமாறி இரண்டும் ஓரினமாகி நிற்றலை ஓரினமாதல் என்பர்.

எ.கா.

நின்ற > நின்ன

இங்கு நின்ற என்ற சொல்லிலுள்ள முன்னண்ண மூக்கொலியான னகர ஒலி தன் ஆற்றலால் அதைத் தொடர்ந்து வந்த றகர ஒலியையும்

தன்னினமாக(ன) மாற்றியது. இம்மாற்றத்திற்கு ஒலிக்கும் உறுப்புகளின் அமைப்பே காரணம் என்கின்றார் புளூம்ஃபீல்டு.

ஓரினமாதலைப் பெரும்பாலான உலக மொழிகளிலும் காணமுடிகின்றது. ஆங்கிலமொழியில் ஏற்படும் ஓரினமாதலை வரலாற்று நிலையில் ஏற்படுவன எனவும், இடத்திற்கேற்ப ஏற்படுவன எனவும் இருவகைப்படுத்துவர்.

மொழியில் ஒரே உருபனுக்குப் பல்வேறு மாற்று உருபன்கள் ஏற்படுவதற்கு ஓரினமாதலே அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

எ.கா. முள்

முட்(செடி)

இம்மாற்றுருபன்களின் வடிவ மாற்றத்திற்கு விளக்கம் தரவும் இவ்விதி பயன்படுகிறது.

பல ஒலிகள் ஒலிக்கும் உறுப்புகளாலும் ஒலிக்கும் முறையாலும் ஓரினமாகி நிற்றலைக் காணலாம்.

எ.கா. முள்+செடி > முட்செடி - ஒலிக்கும்முறை

i.e பிரிவளி ஒலி தடையொலியாக மாறியது

கீழ்+பாலம் கீப்பாலம் -ஒலிக்கும் உறுப்பு

i.e ழ் ஒலி ஈரிதழ் தடையொலியாக மாறியது.

ஓரினமாதலை (1) எங்கும் விதியாய் வருவன எனவும்(2) ஒரோவழியாய் வருவன எனவும் இரண்டாக மொழிநூலார் பிரிப்பர்.

**ஒலியழுத்தம்**(Stress or Accent)

ஒரு சொல்லிலுள்ள ஓர் எழுத்தையோ, அசையையோ அழுத்தி ஒலித்தால் அது ஒலியழுத்தம் எனப்படும். அதிகமாக அழுத்தி ஒலிக்கப்படும் பகுதியை Strong Stress என்றும், அழுத்தி ஒலிக்கப்படாத பகுதியை Weak Stress என்றும் அழைப்பர். ஆங்கிலமொழியில் இடத்தைப் பொறுத்தும் பேசுவோரைப் பொறுத்தும் ஒலியழுத்தம் மாறுபடுவதை ஒலியியல் அறிஞர் டானியல் ஜோன்ஸ் விளக்கியுள்ளார்.

ஒரு தொடரில் அல்லது சொல்லில் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ அசையையோ அழுத்திக் கூற விரும்பும்பொழுது அப்பொருளைக் குறிக்கும் ஒலிச்சேர்க்கையை ஒலியுறுப்புகள் வன்மையாக ஒலிக்கின்றன. ஏனையப் பகுதிகளை ஒலிக்கும்பொழுது முயற்சி எளிமையாகிறது. இவ்வாறு அழுத்தியும் அழுத்தமின்றியும் ஒலிப்பதால் ஒரே சொல்லில் பல்வேறு உணர்ச்சிகளையும், பொருட்களையும் வெளிப்படுத்திக் காட்டமுடிகின்றது. எடுத்துக்காட்டாகத் தமிழில் ஆம் என்ற சொல்லையோ, ஆங்கிலத்தில் yes என்பதையோ எடுத்தும், படுத்தும் ஒலித்து உடன்பாட்டினையும், வெறுப்பினையும், மகிழ்ச்சியினையும், இகழ்ச்சிக் குறிப்பினையும் காட்ட முடிகின்றது.

ஆங்கிலத்தில் சொற்களில் வரும் ஒலியழுத்தம், தொடர்களில் வரும் ஒலியழுத்தம் என்று ஒலியழுத்தத்தை இருகூறாக்குவர்.

தமிழ் மொழியில் ஒலியழுத்தம் அமைந்திருப்பதை,

''எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்

திரிபும் தத்தமில் சிறிதுள வாகும்''(நன்னூல், எழுத்து, நூ.88)

என்னும் நன்னூல் நூற்பாவால் 'தபு' என்னும் சொல்லை எடுத்து ஒலித்தால் ஒருபொருளும், படுத்து ஒலித்தால் வேறொரு பொருளும் அமைகின்றது என்று நச்சினார்க்கினியர் கூறிச்செல்வதால் ஒலியழுத்தம் ஒரு தனி ஒலியனாகக் கருதப்பட்டது என்பது தெளிவு.

**குரல்வளைத் தடையொலி**

திராவிடமொழிக்குடும்பத்தைச் சார்ந்த கோண்டா, குயி, குவி என்ற மொழிகளில் குரல்வளை தடையொலி அதிகமாகப் பயின்று வருகின்றது. மேற்கூறிய மொழிகளைப் பொறுத்தவரையில் அதனைத் தனி ஒலியனாகக் கொள்ளலாம். குவி மொழியில் இது மிகவும் அழுத்தமாக ஒலிக்கப்படுகிறது.

கோண்டி, கொலாமி, நாயக்கி ஆகிய மொழிகளில் வட்டார வழக்குகளிலும் குரல்வளைத் தடையொலி இடம்பெறுவதை மொழிநூலார் சுட்டிச் சென்றுள்ளனர். தமிழ்மொழி பேசுவோர் சிலரின் பேச்சு வடிவில் இவ்வொலி மொழிமுதல் உயிரொலியின் முன்னரும் மொழியிறுதி உயிரொலியின் பின்னரும் இடம்பெறுவதைக் காணலாம். ஒப்பீடு நிலையில் இவ்வொலியை ஆராயும்பொழுது கோண்டா, குயி, குவி ஆகிய மூன்று மொழிகளிலும் இது தனி ஒலியனாகச் செயல்படுகின்றது.

கோண்டாமொழியில் இது மொழி முதலிலும் இறுதியிலும் இடம் பெறுவது கிடையாது. அதிகமான இடங்களில் இரு உயிரொலிகளுக்கு இடையில் இடம்பெறுவதைக் காணலாம்.

இவ்வொலி அதிகமாகத் தென் திராவிட மொழிகளிலும் வட திராவிடமொழிகளிலும் ஒலியனாக அமையவில்லை. எனினும் ஒரிசா மாநிலத்திலுள்ள கோறபூர் மாவட்டத்தில் பேசப்படும் பல நடுத்திராவிட மொழிகளில் ஒலியனாகப் பயின்று வருகின்றது. எனவே இதனைப் புராதன திராவிட ஒலியனாகக் கொள்ளமுடியவில்லை.

**உருபன்களும் சொல்லாக்கமும்**

**உருபன்கள்**

ஒலியன்கள் இணைந்து பொருள்தரும் அசைகளாக மாறும்பொழுது அவை உருபன்கள் (morphemes) எனப்படும். ஒலியன்கள், உருபன்கள், சொற்கள் ஆகிய ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. தனி ஒலியன்களே உருபன்களாகவும், சொற்களாகவும் நிற்றல் உண்டு.

எ.கா. ஆ- பசு

ஏ -அம்பு

மேற்காட்டிய ஆ, ஏ என்னும் இரு ஒலியன்களும் பொருளைத் தருவதாலும் தனித்து நிற்பதாலும் தனி உருபன்களாகவும் (free morphemes), சொற்களாகவும் செயல்படுகின்றன. ஆனால் எல்லா ஒலியன்களும் உருபன்களாவதில்லை. அதே சமயம் சொற்களும் உருபன்களாக நிற்பது உண்டு.

எ.கா.

கடல்

மரம்

இவை சொற்களாகவும் உள்ளன. அதேசமயம் மேலும் கூறுபடுத்த முடியாமலும், கூறுபடுத்தினால் பொருள் தராமலும் அமைவதால் இவை உருபன்களாகவும் கொள்ளப்படுகின்றன. ஆனால் எல்லாச்சொற்களையும் உருபன்களாகக் கொள்ளமுடியாது. பழங்கள், நாய்கள் என்பன தனிச்சொற்களே. ஆனால் அவை தனி உருபன்கள் அல்ல. இவை முறையே பழம்+கள், நாய்+கள் என்று இரு உருபன்கள் இணைந்த சொற்களாக உள்ளன. எனவேதான் பொருளைத் தருகின்ற மிகச்சிறிய அசையே உருபன் என்று மொழிநூலார் உருபனுக்கு விளக்கம் தருவர்.

மொழிநூலார் உருபன்களை கட்டு வடிவம் என்றும் (bound form) தனிவடிவம் (Free form) என்றும் இரு கூறுபடுத்துவர். தனித்தியங்கும் ஆற்றலுடைய உருபன்களைத் தனி வடிவங்கள் என்றும், தனித்தியங்கும் ஆற்றலற்றனவாய், பிற தனி வடிவங்களோடு இணைந்தியங்கும் வடிவங்களைக் கட்டு வடிவங்கள் என்றும் கூறுவது மரபு. மேற்காட்டிய நாய்கள், மரங்கள் என்னும் இருசொற்களில் நாய், மரம் என்பன தனிவடிவங்களாகவும், கள் என்னும் பன்மை விகுதி கட்டு வடிவமாகவும் அமைகின்றன.

**சொற்கள்**

எழுத்து தனித்தோ, தொடர்ந்தோ, உருபன் தனித்தோ, தொடர்ந்தோ சொற்கள் அமைகின்றன. சொல்லுக்கு முடிந்த முடிவாக ஒரு விதிமுறை விளக்கம் வகுத்தல் மிக அரிது. மொழிநூலறிஞர் புளூம்ஃபீல்டு சொல்லை மிகச்சிறிய தனிவடிவம் என்று விளக்குவார். சொற்களைப் பொதுவாக மொழிநூலார் பொதுப்பொருளை உணர்த்தும் சொற்கள் எனவும், இலக்கணப் பொருள் உணர்த்தும் சொற்கள் எனவும் இரு கூறாகப் பகுப்பர். மரபிலக்கண நூலார் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காகப் பகுக்கின்றனர். பெயர்ச்சொற்கள் வேற்றுமை ஏற்பதும் வினைச்சொற்கள் காலம் காட்டி நிற்பதும் தனிச்சிறப்புகளாகும்.

திராவிடமொழிகளில் முதலில் இவ்விருவகைச்சொற்கள் இருந்திருக்கவேண்டும். பின்னரே இடைச்சொல், உரிச்சொல் ஆகிய இரண்டையும் இணைத்துச் சொற்களை நான்காகக் கூறுபடுத்தும் வழக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகின்றது. தொல்காப்பியிரும்,

‘‘சொல்லெனப் படுப பெயரே வினையென்(று)

ஆயிரண்டு என்ப அறிந்தி சினோரே’’

என்று கூறிப், பின்னர்

> ‘‘இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
> அவற்று வழிமருங்கின் தோன்றும் என்ப’’

என்று இலக்கணம் கூறுகின்றார்.

சொற்களை எழுத்துகளின் அடிப்படையில் ஓரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, இரண்டிற்கும் மேற்பட்ட எழுத்துகளால் அமைந்த சொற்கள் என்று மூவகையாகப் பிரிக்கும் மரபினைத் தொல்காப்பியரிடம் காண்கின்றோம். இதைத் தவிரப் பகுபதம், பகாபதம் என்று சொற்களைக் கூறுபடுத்தும் முறையை நன்னூலாரிடம் காண்கின்றோம்.

**சொல்லாக்கம்**

திராவிட மொழிகளில் அடிச்சொற்கள் தனித்து நின்று சொல்லாகச் செயல்படுவதைக் காணலாம். வினையடிச்சொற்களெல்லாம் இம்மொழிகளில் ஏவல் வடிவங்களாக உள்ளன. இதைத் தவிர வினைச்சொற்களோடு கால இடைநிலை, எதிர்மறை இடைநிலை, தன்வினை, பிறவினை உருபுகள், பாலறி கிளவிகள் ஆகிய ஒட்டியொட்டி ஒட்டுநிலையாகப் பெரும்பாலான சொற்கள் அமைகின்றன. தமிழில் பல அடிச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக நிற்கின்றன.

எ.கா. பூ -பெயர்

பூத்தது- வினை

திராவிடமொழிகளின் அடிச்சொற்கள் பொதுவாக ஓரசைச்சொற்களாக அமைகின்றன. அவற்றோடு பொருட்சிறப்பை நோக்கி ஆக்கவிகுதிகள் இணைக்கப்படுகின்றன. அடிச்சொற்களுடன் இணையும் இலக்கணவிகுதிகள் காலம், திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

சொல்லாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தனிநிலை மொழி, ஒட்டுநிலைமொழி, உட்பிணைப்பு நிலைமொழி என்று மொழிகளை மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள் திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழி என்ற பிரிவில் அடங்கும். இம்மொழிகளின் கூறுகள் அடிச்சொற்களோடு ஒட்டியொட்டி அமைந்து பொருள் தந்து நிற்கும்.

அடிச்சொற்களோடு இணையும் இணைப்புக்களைப் பொதுவாக,

1.இலக்கண வேறுபாடு உணர்த்துவன

2.பொருள் சிறப்புத் தருவன

3.ஒலித்துணை ஆவன என்று மூன்றாகப் பகுக்கலாம்.

**வேற்றுமைகள்**

திராவிடமொழிகளில் வேற்றுமைகள் எண்ணற்றவையாக உள்ளன. பெயர்ச்சொற்களின் பின்னர் இணைக்கப்படும் ஒவ்வொரு இணைப்பும்

இம்மொழிகளில் பொதுவாக ஒரு புதிய வேற்றுமையைத் தோற்றுவிக்கின்றன. இவ்வேற்றுமைகள் தொடர்களிலுள்ள பெயருக்கும், வினைக்கும் இடையே உள்ள தொடர்பினைக் காட்டி நிற்கும். இதற்கு ஆறாம் வேற்றுமை மட்டும் விதிவிலக்கு.

வடமொழியாளர்கள் அம்மொழியிலுள்ள வேற்றுமைகளை எட்டாக வரையறுத்து விளக்கியுள்ளனர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு வேற்றுமைகள் தமிழில் ஏழாகக் கருதும் மரபு இருந்துள்ளது. பின்னர் அவர்காலத்தில் விளி வேற்றுமையையும் இணைத்து வேற்றுமைகளை எட்டு என்று வகுத்தனர். இதனை,

''வேற்றுமை தாமே ஏழென மொழிப''

''விளிகொள் அதன்கண் விளியொடு எட்டே''

என்னும் தொல்காப்பியர் கூற்றாலும் இதனைத் தெளியலாம். மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளின் இலக்கண நூல்களான 'லீலா திலகம்', 'சப்தமனி தர்பணம்', 'பாலவியாகரணமு' என்ற நூல்களும் எட்டு வகையான வேற்றுமைகளை விளக்குகின்றன.

திராவிட மொழிகளில் முற்காலத்தில் வேற்றுமையை உணர்த்த முழுச்சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும், நாளடைவில் அச்சொற்கள் திரிந்து தனித்தியங்கும் ஆற்றலற்ற உருபன்களாக (bound forms) மாறி, பின்னர் உருபுகள் (suffixes) என்ற நிலையை அடைந்திருக்க வேண்டும் என்றும் கால்டுவெல் கருதுகின்றார். வேற்றுமைகள் திராவிடமொழிகளில் இரண்டு விதமாக அமைவதைக் காணலாம்.

1.பெயர்+ சொல்லுருபு எ.கா.மரத்தின் மேல்,கல்கொண்டு

2.பெயர்+ உருபு எ.கா. கல்லால் அவனது

இவ்வாறு வேற்றுமையை உணர்த்தப் பயன்படுத்தப்படும் உருபுகள் அல்லாத சொற்களை சொல்லுருபுகள் என்பர். வேற்றுமை உருபுகளோடு இத்தகைய சொல்லுருபுகள் பல தமிழிலும் ஏனைய திராவிடமொழிகளிலும் உள்ளதால் வேற்றுமை எட்டு அல்ல பல என்பது தெளிவு.

மேலும் முதல் வேற்றுமை வெறும் பெயராக உள்ளது.உருபு இதற்கு இல்லை.எனவே இதனைக் கணக்கிட்டு எண்ணுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை ஆகும். விளி ஏற்கும்பொழுது பெயர்சொற்களில் ஓரளவு வடிவ மாற்றத்தைக் காணமுடிகின்றது. மூன்றாம் வேற்றுமை கருவி, கருத்தா, உடன் நிகழ்ச்சி போன்ற பல பொருட்களில் வருவதாக மரபிலக்கண நூலார் குறிப்பிடுவர். எனவே இவ்வேற்றுமையைக் கருவிப்பொருள் வேற்றுமை உடன் நிகழ்ச்சிப்பொருள் வேற்றுமை என்று இரண்டு தனி வேற்றுமையாகப் பிரிப்பதே சிறப்பாகத் தெரிகிறது. கோடா, பர்ஜி, கடபா போன்ற மொழிகளிலும் இவ்விரண்டையும் தனித்தனி வேற்றுமைகளாகக் கொள்வதே சிறப்பாகத் தெரிகிறது.

ஏழாம் வேற்றுமை இடப்பொருளை மட்டும் காட்ட தமிழ், படகா, துளு, பர்ஜி, குருக், பிராகுயி போன்ற மொழிகளில் நீங்கற் பொருளையும்

ஒப்புமைப் பொருளையும் உணர்த்துகின்றது. மேலும் இல், இன் என்னும் உருபுகள் இடப்பொருளில் உயர்திணைப் பெயர்களை அடுத்து வருவதில்லை. ஆனால் இன், இல் என்பன ஒப்புமைப் பொருளில் அவனின் (அவனைவிட) என்று உயர்திணை மூவிடப் பெயர்களை அடுத்து வருகின்றது.

வேற்றுமைகள் ஒவ்வொரு மொழியின் அல்லது மொழிக்குடும்பத்தின் இயல்பிற்கேற்ப அமைவதால் அவை மொழிக்கு மொழி எண்ணிக்கையில் வேறுபடுகின்றது. சான்றாக வடமொழியில் எட்டு வேற்றுமைகளும் இலத்தீன் மொழியில் ஆறு வேற்றுமைகளும், பினீஷிய மொழியில் பதினெட்டு வேற்றுமைகளும் உள்ளன.

**உருபு ஏற்கும் முறை**

திராவிடமொழிகள் வேற்றுமை உருபுகளை ஏற்பதற்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் வேற்றுமை உருபை ஏற்பதற்கும் பல வேறுபாடுகள் உண்டு. திராவிடமொழிகளில் வேற்றுமைகள் பொதுவாகப் பெயர்+சாரியை+வேற்றுமை உருபு என்ற முறைப்படி அமைகின்றன. பெயர்ச்சொற்கள் சாரியைகளைப் பெறுவதிலும்ஓர் ஒழுங்குமுறை உண்டு.

இந்தோ ஐராப்பிய மொழிகளில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை ஏற்கும்பொழுது அச்சொற்களின் இறுதிநிலை ஒலிக்கேற்ப உருபுகளும் மாறுவதால் உருபேற்கும் முறைகளும் பலவாக உள்ளன. திராவிடமொழிகளில் பெயரீறுகளுக்கு ஏற்ப உருபுகள் மாறும்நிலை இல்லை. மாறுதல்கள் அனைத்தும் பெயர்களுக்கும் உருபுகளுக்கும் இடையில் இணைக்கப்படும் சாரியைகளில் நிகழ்கின்றன. இம்மொழிகளில் பெயரே வேற்றுமை ஏற்கும் அடிச்சொல்லாக அமையும்.

**உருபும் சாரியைகளும்**

உருபு ஏற்காமல் தொகையாக நின்று வேற்றுமைப் பொருளை உணர்த்தும்போது பெயர்ச்சொற்கள் திரியாமல் நிற்கும். உருபு ஏற்கும்பொழுது பெயர்ச்சொல்லின் ஈறும், உருபும் திரிந்து நிற்கும்.

எ.கா. அவன் + ஐ = அவனை

இராமன் +ஆல் =இராமனால்

சிலபெயர்ச்சொற்கள் உருபு ஏற்கும்பொழுது அவ்வொலிச் சேர்க்கை ஒலிப்பதற்கு அரிதாக இருந்தாலோ, அல்லது அம்மொழியின் ஒலியமைப்பிற்கு பொருந்தவில்லை என்றாலோ பெயருக்கும் உருபுக்கும் இடையில் பொருள் தராத உருபன்கள் சிலவற்றைப் பயன்படுத்துகிறோம். இவை சாரியை எனப்படும். சாரியை சில பொழுது இணைந்து வருவதும் உண்டு.

மரம்+அத்து+ இன்+ஆல்=மரத்தினால்

**திராவிடமொழிகளின் சாரியை**

தமிழில் ‘உ’கரத்தைக் கொண்டு முடியும் எண்ணுப் பெயர்களை அடுத்து ‘அன்’,‘இன்’ போன்ற சாரியைகள் இடம்பெறும். அது, இது

என்னும் சுட்டுப்பெயர்களையடுத்தும் ‘அன்’ சாரியை வருகின்றது. ’அற்றுச்’ சாரியை பல,சில போன்ற பெயர்களை அடுத்து இடம்பெறுகின்றது. ‘உ’கரச்சாரியை ‘ண’கர ஈற்றுச் சொற்களை அடுத்து வருகின்றது.

எ.கா.கண்ணுக்கு, மண்ணுக்கு

மலையாள மொழியில் ‘ம’ கர ஈற்றையுடைய அஃறிணைப் பெயர்களின் முன்னர் த்த்- என்ற சாரியையும், உ,ஊ அ போன்ற ஈறுகளையுடைய பெயர்கள், ஆறாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகியவற்றின் உருபுகளை ஏற்கும்பொழுது ‘இன்’ சாரியையும் இடம்பெறுகின்றன. கோடா மொழியில் -t-, -n- ஆகியனவும், தோடா மொழியில் -t- ‘யும், கொடகு மொழியில் -t-, -an- ஆகியனவும், கன்னட மொழியில் tt என்பனவும், துளு மொழியில் -t-, -d-, -a-, -e- ஆகியனவும் சாரியைகளாக வருகின்றன.

**எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை**

சித்திய மொழிகளிலும் உருதுமொழியிலும் உள்ளது போன்று திராவிட மொழிகளிலும் எழுவாய் வேற்றுமை திரிபடையாத பெயராகவே உள்ளது. எழுவாய் வேற்றுமைக்கு எனத் தனி உருபு இல்லை. வடமொழியில் பெயர்ச்சொல்லிலிருந்து எழுவாய் வேற்றுமை வடிவத்தால் மாறுபடுகின்றது.

**இரண்டாம் வேற்றுமை**

கோண்டி, கோண்டா போன்ற மொழிகளில் இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகியவற்றின் பொருட்களைச் செயப்படுபொருள் வடிவமே உணர்த்திவிடுகின்றது. ஐ உருபு தமிழ், மலையாளம் போன்ற தென்திராவிட மொழியில் இடம்பெறுகின்றது. இவ்வுருபு மலையாள மொழியில் ‘எ’ கர உருபாகத் திரிகின்றது.

எ.கா. அவனை >அவனெ

கோடா மொழியில் அ உருபு காணப்படுகின்றது.இதனை ஐ உருபின் திரிபாகக் கொள்வர்.தமிழ், மலையாளம் போன்ற மொழிகளில் இவ்விரண்டாம் வேற்றுமை உருபின்றித் தொகையாகவும் வழங்குவதைக் காணலாம்.

**கருவிப் பொருள் வேற்றுமை**

மரபிலக்கண நூலார் மூன்றாம் வேற்றுமை, கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி போன்ற மூன்று பொருள்களில் வரும் என்பர். இதனைக் கருவிப்பொருள் வேற்றுமை, உடன் நிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை என இரண்டாகக் கொள்வதே பொருந்தும்.

கருவிப் பொருள் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், அ, சேத, கொண்டு என்பன உள்ளன. இவற்றுள் சே அல்லது சேத என்ற உருபு தெலுங்குமொழியில் கருவிப் பொருளை உணர்த்தப் பயன்படுத்தப்படுகின்றது.

எ.கா.நிப்புசேத -நெருப்பால்

பழங்கன்னடத்தில் 'இம்' உருபு உள்ளது.புதுக்கன்னடத்தில் இந்த என்ற உருபு உள்ளது.

எ.கா. மரதிந்த- மரத்தால்

துளுமொழியில் 'து'என்னும் உருபு பெருவழக்கில் உள்ளது. கொடகு மொழியில் 'இஞ்சி' என்னும் உருபும் நடுத்திராவிடமொழிகளில் 'தோட' என்ற உருபும் வழக்கில் உள்ளன.

**உடன் நிகழ்ச்சிப்பொருள் வேற்றுமை**

ஒடு என்னும் உருபே திராவிட மொழிகளில் அதிகமாகப் பயின்று வருகின்றது. இதன் திரிபுகளைத் தமிழ் மலையாளம், கோடா, பர்ஜி போன்ற மொழிகளில் காணலாம். தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் ஒடு, ஓடு என்னும் உருபுகளுடன் உடன் என்ற சொல்லுருபும் உள்ளது. கோடா மொழியில் ஒடுஎன்னும் உருபு மட்டும் உடன்நிகழ்ச்சி பொருளைத் தருகின்றது. ஆன் என்னும் உருபு பழந்தமிழில் உடன் நிகழ்ச்சி பொருளைத் தருகின்றது. தற்காலத்தமிழிலும், மலையாளத்திலும் கொடகு, படகா ஆகிய மொழிகளிலும் கூட என்ற சொல்லுருபு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஒடு உருபு இலக்கியங்களிலும் ஒப்புமைப் பொருளில் வருகின்றது.

எ.கா. மதியொடு ஒக்கும்

**நான்காம் வேற்றுமை அல்லது கொடைப்பொருள் வேற்றுமை**

தமிழில் நான்காம் வேற்றுமை கொடை, பகை, நட்பு, தகவு, முதற்காரணம், நிமித்த காரணம், முறை ஆகிய ஏழு பொருட்களில் வருவதாக இலக்கண நூலாசிரியர்கள் குறிப்பிடுவர். திராவிடமொழிகளில் கு, கி, னு, க, g, கெ, ge,கோ,உன்,(u) g,இக், அகி, இகி, திங்கி என்பன வேற்றுமை உருபுகளாக உள்ளன.

எ.கா.

1.மரத்திற்கு -தமிழ்

2.மரத்தினு - மலையாளம்

3.மரக்கெ - கன்னடம்

4.குரமுனமு -தெலுங்கு

5.மரக்கு -துளு

6.கொக்கோஸ்கே (குழந்தைக்கு) - குருக்

7.படித்துன் (பன்றிக்கு) - கோண்டி

8.அபதிங்கி (அப்பாவுக்கு) - குயி

9.ஹரசே (காளைக்கு) - பிராகுயி

**நீங்கல் பொருள் வேற்றுமை**

இல்,இன்,இம் போன்ற உருபுகள் ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகத் தென் திராவிட மொழிகளில் வழங்குகின்றன. தமிழ், மலையாளம் போன்ற

மொழிகளில் இல், இன் என்பன இடப்பொருளை மட்டும் தருகின்றன. நீங்கல் பொருளை உணர்த்தத் தமிழில் 'இருந்து' என்ற சொல்லுருபும் மலையாளத்தில் இதற்கு நிகராக 'நிந்து' என்ற சொல்லுருபும் பயன்படுத்தப்படுகின்றன.

எ.கா.

மரத்தில் இருந்து வீழ்ந்தது - தமிழ்

மரத்தில் நிந்து வீணு - மலையாளம்

**ஆறாம் வேற்றுமை அல்லது உடைமைப்பொருள் வேற்றுமை**

ஆறாம் வேற்றுமை உருபுகளாக அது, அ, ஆது, இன், உடைய, உடே, ன்ற, ஆர, த, ன்னெ, தொ, gahi, கி, த்ரா,கது,அதி, அத போன்றன திராவிட மொழிகளில் உள்ளன.

தமிழ், கன்னடம், தெலுங்கு மொழிகளில் அது, அ என்னும் இருவடிவங்கள் உள்ளன. இவற்றுள் அகர உருபு பன்மை உருபாகக் கருதப்படுகின்றது. 'த்ரா' என்னும் உருபு கோடா மொழியில் உள்ளது.

எ.கா.மதரரா (மரத்தினது)

தமிழில் பெயர்ச்சொல்லோடு உருபு சேர்க்காமல் இன் சாரியை இணைத்து ஆறாம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் மரபும், இன் சாரியைக்குப் பின் ஆறன் உருபினை இணைத்து அப்பொருளை உணர்த்தும் மரபும் உள்ளன.

எ.கா. மரத்தின் கொம்பு

மரத்தினது கொம்பு

**இடப்பொருள் வேற்றுமை**

தமிழ் இலக்கண வல்லுநர்கள் இடப்பொருள் உணர்த்தும் சொற்கள் பலவற்றையும் ஏழாம் வேற்றுமை உருபு என்பர். திராவிடமொழிகளில் இல், இன், கண், கால், இடம், உள், அலு, அன், ஆன், ஆ, இ,லு (n)adan, துன்,தின்,அடி போன்ற பல உருபுகள் உள்ளன.

முன்னர்க் காட்டிய உருபுகளில் முதல் ஆறு உருபுகளும் தமிழில் பெரு வழக்கில் உள்ளன. கன்னடத்தில் ஒள், அல், அல்லி, இல்லி போன்ற வடிவங்கள் உள்ளன.

எ.கா.

மரொள்

மரல்

மரல்லி

தெலுங்கு மொழியில் அந்து' , உன்னாது' என்ற உருபுகள் காணப்படுகின்றன.' அன்' உருபு கன்னடம், கோண்டா, குவி, குயி, பிராகுயி போன்ற மொழிகளில் உள்ளது. துன் உருபு நாயக்கி மொழியிலும் அதங்,அடி போன்ற உருபுகள் பிராகுயி மொழியிலும் 'அதங்' உருபு

கொலமி மொழியிலும் உள்ளன. பர்ஜி மொழியில் கெல்,எல் போன்ற உருபுகளும் உள்ளன.

**விளி வேற்றுமை**

விளி வேற்றுமைக்கெனத் தனி உருபுகள் அதிகமான இலக்கண ஆசிரியர்களால் வரையறுக்கப்படவில்லை. எனினும் e, o என்ற இரு உருபுகளை மூலத் திராவிட விளி வேற்றுமை உருபுகள் எனலாம்.நன்னூலார் ஓ என்னும் எட்டாம் வேற்றுமை உருபைச் சுட்டிச் செல்கின்றார்.இடைக்காலத் தமிழிலக்கியங்களில் ஓ என்னும் உருபு இணைந்து விளி வேற்றுமையாக அமைவதைக் காணலாம்.

எ.கா.அண்ணாவோ (கம்பராமாயணம்)

தமிழ்ப்பெயர்ச்சொற்களின் ஈற்றயல் உயிர் நீண்டும் திரிந்தும் விளி வேற்றுமை வடிவங்கள் அமைகின்றன.

**மூவிடப்பெயர்கள்**

மாற்றுப்பெயர்களுள் மூவிடப்பெயர்கள் தொன்மையான இலக்கணக் கூறுகளுள் ஒன்றாகும். திராவிட மொழிகளின் ஒற்றுமைக் கூறுகளை விளக்கவே இவை பெரிதும் துணைசெய்கின்றன. மூவிடப்பெயர்களுள் பொதுவாக னகர ஈறு ஒருமையினையும் மகர ஈறு பன்மையினையும் உணர்த்தி நிற்கின்றன. ஏனைய இலக்கணக் கூறுகளைவிட மூவிடப்பெயர்கள் அதிக நிலைபேறுடையன.

மூவிடப்பெயர்களைத் தன்மைப் பெயர்கள், முன்னிலைப்பெயர்கள், படர்க்கைப் பெயர்கள் என்று மூன்றாகப் பிரிப்பர். இவற்றுள் தன்மை, முன்னிலை ஆகிய பெயர்கள் திணை, பால் பாகுபாட்டைக் காட்டாமல் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை மட்டும் உணர்த்தி நிற்கின்றன. படர்க்கைப் பெயர்கள் எண் பாகுபாட்டுடன் திணை, பால் ஆகியவற்றையும் காட்டி நிற்கின்றது. இதற்குத் தோடா, பிராகுயி ஆகிய இருமொழிகளும் விதிவிலக்காக உள்ளன. திராவிட மொழிகளின் மூவிடப்பெயர்களில் எழுவாய் வடிவம், வேற்றுமை ஏற்கும் வடிவம் என இருவடிவங்கள் உள்ளன. மூவிடப்பெயர்களின் எழுவாய் வடிவில் உயிர் நீண்டும், வேற்றுமை ஏற்கும் வடிவில் உயிர் குறுகியும் காணப்படும்.

**தன்மை ஒருமைப் பெயர்கள்**

திராவிடமொழிகளில் யான், நான், ஆன், ஒன், ஏனி, ஏனு, அனா, ஆனா, ஏன், ஈ போன்ற தன்மை ஒருமை வடிவங்கள் உள்ளன. இவற்றுள் 'yan' என்பதை மூலத் திராவிட வடிவமாகக் கொள்ளலாம். பிராகுயி மொழியில் மட்டும் 'ஈ' என்னும் முற்றிலும் மாறுபட்ட வடிவத்தைக் காணமுடிகின்றது.இது முன்னிலை வடிவமான நீ என்பதைப் பின்பற்றி ஒப்புமையாக்கமாகப் படைக்கப்பட்டிருக்கவேண்டும்.

தொல்காப்பியர் தன்மை வடிவமாக யான் என்பதை மட்டும் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார் காலத்தில் யான் என்பதோடு நான் என்ற வடிவமும் படைத்துக்கொள்ளப்பட்டது. இது தன்மைப் பன்மையான நாம் என்பதை அடியொற்றிப் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.யாம், நாம்

என்னும் இரு வடிவங்களும் தொல்காப்பியர், நன்னூலார் ஆகிய இருவர் காலத்திலும் பயின்று வந்தன என்பது தெளிவு.

**தன்மைப் பன்மை**

திராவிட மொழிகளின் தன்மைப் பன்மை வடிவத்தில் வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என இருவகையுண்டு. இவற்றுள் வெளிப்பாட்டுத் தன்மைப்பன்மை கேட்போரை நீக்கி ஏனையோரை உளப்படுத்தி நிற்கும். உளப்பாட்டுத் தன்மைப்பன்மை கேட்போரான முன்னிலையாரையும் உளப்படுத்தி நிற்கும்.

இத்தகைய அமைப்புமுறை கோண்டா, பர்ஜி, கடபா, பிராகுயி ஆகிய மொழிகளில் தெளிவாக இல்லை. தமிழில் நாம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகவும், யாம், யாங்கள், நாங்கள் என்பன வெளிப்பாட்டுத் தன்மைப்பன்மையாகவும் உள்ளன.

**முன்னிலைப் பெயர்கள்**

தன்மைப் பெயர்களைப் போல, முன்னிலைப் பெயர்களும் ஒருமை, பன்மை என்ற வேறுபாட்டைக் கொண்டுள்ளன.தமிழில் முன்னிலைப் பன்மை வடிவமாகத் தொல்காப்பியர் நீயிர் என்பதையும் நன்னூலார் நீவீர், நீர் என்பதையும் சுட்டியுள்ளார். சிந்தாமணியில் நீம் என்னும் பன்மை வடிவம் உள்ளது. குமரி மாவட்ட மீனவர்களின் பேச்சு வழக்கில் நீம் என்னும் வடிவம் வழக்கில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மலையாளத்தில் நீ, நின், நிங்கள் என்பனவும், கோடாவில் நீ, நீம் என்ற வடிவங்களும் தோடாவில் நீ, நும் என்னும் வடிவங்களும் முன்னிலை மூவிடப் பெயர்களாக உள்ளன. தெலுங்கில் நீவு, மீரு போன்ற வடிவங்களையும் கோண்டாவில் இம்மா, இம்மத் போன்ற வடிவங்களையும், குயி மொழியில் ஈனு, ஈறா என்பவற்றையும் பிராகுயி மொழியில் நீ, நெ என்பனவற்றையும் காணமுடிகின்றது.

**படர்க்கை மூவிடப்பெயர்கள்**

தமிழில் காணப்படும் தான், தாம் என்பன படர்க்கை மூவிடப் பெயர்களாகும். நன்னூலார் இதனை மூவிடப்பெயர்களாகவே கொண்டுள்ளார். இவ்விரு பெயர்களிலும் ஏனைய மூவிடப்பெயர்களைப் போன்று ஒருமை, பன்மை என்ற எண் பாகுபாடு மட்டும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் தான் என்பது ஒருமைப் பெயராகவும், தாம் என்பது பன்மைப் பெயராகவும் உள்ளன. தோடா மொழியில் தேன், தம்என்ற பெயர்களும், கொடகுமொழியில் தானி, தங்க என்பனவும் உள்ளன. இவ்வடிவங்கள் தற்காலத்தில் வழக்கில் குறைந்துள்ளன.

**எண்ணுப்பெயர்கள்**

எண்ணுப்பெயர்களை எண்ணுமுறைப் பெயர்களாகவும் எண்ணுப்பெயர்களாகவும் வகைப்படுத்தலாம். முதலாம், இரண்டாம் என்பன எண்ணுமுறைப் பெயர்களாகவும் ஒன்று இரண்டு என்பன எண்ணுப் பெயர்களாகவும் கொள்ளப்படும். ஆங்கில மொழியில் one, two என்ற

எண்ணுப்பெயர்களுக்கு முற்றிலும் வடிவத்தால் மாறுபட்ட first, second என்ற எண்ணுமுறைப் பெயர்கள் உள்ளன. திராவிடமொழிகளில் இத்தகைய வேறுபாடு இல்லை. தமிழில் ஒன்று, இரண்டு என்பனவற்றுடன் ஆம் என்ற விகுதி இணைத்து ஒன்றாம்,இரண்டாம் என்று எண்ணுப்பெயர்கள் அமைகின்றன. இவ்வாறு அன்றி ஆவது என்ற விகுதியை இணைத்து ஒன்றாவது, இரண்டாவது என்று எண்ணுப்பெயர்களை அமைத்தலுமுண்டு.

எண்ணுப்பெயர்களில் தனித்து வழங்கும் வடிவங்களுடன் அடையாக ஒரு, இரு, மூ போன்ற வடிவங்களும் உள்ளன. பழந்தமிழில் பான் என்னும் விகுதி இணைந்து ஒருபான், இருபான் என்று வருவதைக் காணலாம். திராவிட மொழிகளில் ஓர், ஈர், மூ, நால், சை, சார், ஏழ், எண், தொண், பத், நூற் என்பன எண்ணுப்பெயர்களின் அடிச்சொற்களாக உள்ளன.

**ஒன்று**

ஓர், ஒரு என்பன ஒன்று என்ற எண்ணுப்பெயரின் அடைகளாக உள்ளன. இவற்றுள் ஓர் என்பது உயிரை முதலாகக் கொண்ட பெயர்களுக்கு முன்னரும் ஒரு என்பது மெய்யை முதலில் கொண்ட பெயர்களுக்கு முன்னரும் இட்பெறும்.இவ்விரு வடிவங்களையும் மூலத்திராவிட வடிவங்களாகப் பேராசிரியர் எமனோ கருதுகின்றார். தெலுங்கு மொழியில் உக என்ற வடிவம் உள்ளது. துளு மொழியில் ஓரி, ஓர போன்ற வடிவங்கள் உள்ளன. டாக்டர் கால்டுவெல் திராவிட மொழியிலுள்ள ஒன்று என்னும் எண்ணுப்பெயர் இந்தோ ஐரோப்பிய மொழியிலுள்ள ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் வடிவத்துடன் தொடர்புடையது என்கின்றார்.

**இரண்டு**

இவ் எண்ணுப்பெயர் கோடா, கொடகு, கன்னடம், துளுபோன்ற திராவிடமொழிகளில் பல திரிபுகளாக வழங்குகின்றது. தெலுங்கு மொழியில் ரெண்டு என்னும் வடிவமும் கடபாவில் இண்டி என்னும் வடிவமும் பெங்கோ, மண்டா மொழிகளில் ரி என்ற வடிவமும் உள்ளன. இரண்டு என்பதுடன் தொடர்புடைய இரட்டை என்னும் வடிவம் தமிழ், மலையாளம், தோடா, தெலுங்கு போன்ற மொழிகளில் உள்ளன.

**மூன்று**

மூன்று என்ற எண்ணுப்பெயருக்கு மூந்நு, மூட், மூறு, muji, முண்டரீ போன்ற வடிவங்கள் மலையாளம், தோடா, கன்னடம், துளு, கோண்டா போன்ற மொழிகளில் உள்ளன. மூன்றி என்ற வடிவமும் அதன் மாற்று வடிவங்களும் துளு, கொலமி, நாக்கி, குயி போன்ற மொழிகளில் உள்ளன.

**நான்கு**

நான்கு என்பதன் மூலத் திராவிட வடிவமாக நால்கு என்பது கொள்ளப்படுகின்றது. பழந்தமிழில் இவ்வடிவம் உள்ளது. மலையாளத்தில் நாங்கு என்ற வடிவமும், கொடகு மொழியில் நாலி என்ற வடிவமும்

காணப்படுகின்றன. தோடா மொழியில் நோ என்ற வடிவமும் பர்ஜி மொழியில் நெல் என்ற வடிவமும் காணப்படுகின்றன. இவற்றுள் நால் என்பதை மூலத்திராவிட வடிவமாகக்கொள்வர். தொல்காப்பியத்தில் நால், நான் என்னும் வடிவங்களைக் காணலாம்.

**ஐந்து**

ஐந்து மூலத்திராவிட வடிவமாக cayntu என்பது திருத்தியமைக்கப்படுகின்றது. மொழிமுதல் சகர ஒலி கெட்டு தமிழில் ஐந்து என்றும் மலையாளத்தில் அஞ்சு என்றும், கோடாவில் அஞ் என்றும், கொடகு மொழியில் அஞ்சு என்றும் இது வழங்குகிறது. கன்னடத்தில் ஐது என்ற வடிவமும் துளுமொழியில் ஐனு என்ற வடிவமும் தெலுங்கில் ஏனு என்ற வடிவமும் இடம்பெறுகின்றன.

டாக்டர் கால்டுவெல் அய் என்பதை ஐந்து என்பதன் அடிச்சொல்லாகக் கொள்கின்றார்.

**ஆறு**

ஆறு என்ற எண்ணுப்பெயரினையும் அதன் சற்றுத் திரிந்த மாற்று வடிவங்களையும் தமிழ், மலையாளம், கோடா, தோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, கொடகு, கோண்டா ஆகிய மொழிகளில் காணலாம். ஆறு என்பதன் குறுகிய வடிவமான அறு என்பது தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் காணப்படுகின்றது.

**ஏழு**

தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளில் இவ் எண்ணுப்பெயர்கள் அதிக மாற்றமின்றிக் காணப்படுகின்றது. கோடா மொழியில் e, y வடிவமும் தோடாவில் ow என்ற வடிவமும் உள்ளது. தெலுங்குமொழியில் ஏழு என்பது ஏடு என்று திரிகிறது.

**எட்டு**

எட்டு என்ற வடிவம் தமிழிலும் மலையாளத்திலும் திரிபின்றி எட்டு என்றே வழங்குகிறது. கன்னடத்தில் எண்டு என்றும், தெலுங்கில் எனிமிதி என்றும் இது திரிந்து வழங்குகிறது. கோண்டி, கொலாமி போன்ற மொழிகளில் தென்மிதி, எனுமிதி போன்ற வடிவங்கள் உள்ளன. எண்பது என்பதற்கு நிகராகத் தெலுங்கில் எனிபதி என்ற வடிவம் உள்ளது. மிதி என்பது தெலுங்கில் பத்தை உணர்த்துகின்றது.

**ஒன்பது**

ஒன்பது என்னும் எண்ணுப்பெயரின் மூலத் திராவிட வடிவங்களாக ton, tonpatu என்பன கொள்ளப்படுகின்றன. திராவிடமொழிகளில் தகர மெய்யைக் கொண்டு தொடங்கும் எண்ணுப்பெயர்கள், ஒகர உயிரைக் கொண்டு தொடங்கும் எண்ணுப்பெயர்கள் என்று இருவகை மாற்றுவடிவங்கள் உள்ளன. தமிழில் ஒன்பது, ஒன்பான் என்னும் பெயர்களும், மலையாளத்தில் ஒம்பது என்னும் பெயரும், கோடாவில் onbad என்னும் பெயரும் உள்ளன. தெலுங்கு, கொலமி, கோண்டி போன்ற மொழிகளில் முறையே தொம்மிதி, தொம்தி போன்ற வடிவங்கள் உள்ளன.

தமிழிலும் தொண்ணூறு போன்ற வடிவங்களில் தகர மெய்யே மொழி முதலில் உள்ளன.

**பத்து**

தமிழில் பத்து என்பதற்கு பஃது, பது, பான், பதின் என்ற மாற்று வடிவங்கள் உள்ளன. தோடாவில் பொத் என்னும் வடிவமும் பொன் என்ற மாற்றுவடிவமும் காணப்படுகின்றன. துளு மொழியில் பத்து என்பதன் மாற்று வடிவங்களாகப் பதுன், பது, வது போன்றன உள்ளன. இவற்றுள் பத்து, பதின், பதி, பன், பது என்பன மூலத் திராவிட வடிவங்களாகத் திருத்தியமைக்கப்படுகின்றன. கன்னடத்தில் பத்து என்பது ஹத்து என்று மாறுகின்றது.

**நூறு**

நூறு என்ற எண்ணுப் பெயர் அதிக மாற்றங்களின்றித் திராவிடமொழிகளில் வழங்குகிறது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் நூறு என்ற வடிவமும் கோடா, தோடா, கோண்டி ஆகிய மொழிகளில் முறையே tti என்னும் வடிவங்களும் துளு மொழியில் nudu என்ற வடிவமும் உள்ளன. இதன் வேற்றுமை ஏற்கும் வடிவமாக நூற்று என்பது காணப்படுகின்றது.

**ஆயிரம்**

Cayiram என்பது அதன் மூலத் திராவிட வடிவம். இது வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட சஹஸ்ர என்னும் சொல்லின் திரிபாகும். sahasra என்பதன் முதலில் உள்ள s ஒலி கெட்டு, இடையிலுள்ள h ஒலிக்குப் பதில் y ஒலி தோன்றி,இரு அகர ஒலிகளும் இணைந்து ஆகார நெடிலாக மாறி இத்தகைய வடிவம் தோன்றியிருக்கலாம்.

**திணை,பால், இடம்**

திராவிட மொழிகளில் தனிச்சொற்களும், சில இடங்களில் விகுதிகளும் திணை, பால் பாகுபாட்டைக் காட்டுகின்றன. இம்மொழிகளில் தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் பால் வேறுபாட்டைக் கண்பது அரிது. இப்பெயர்கள் ஒருமை, பன்மை என்ற வேறுபாட்டை மட்டும் காட்டி நிற்கின்றன. படர்க்கைப் பெயர்களில் எண், திணை, பால் ஆகியவற்றைத் தெளிவாகக் காணலாம்.

பால்பாகுபாடு மொழிக்குடும்பங்களுக்கு மொழிக்குடும்பங்கள் வேறுபட்டு அமைவதைக் காணலாம். வடமொழியில் திராவிட மொழிகளைப் போன்று பொருட்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமையாமல் உயிரற்ற பொருட்களும் கண்ணுக்குப் புலனாகாத நுண்பொருள்களும் கூட ஆண், பெண் என்று கூறுபடுத்தப்படுகின்றன. இத்தகைய பால்பாகுபாட்டு முறையினை இயல்பான பால்பாகுபாட்டு முறை' என்று வழங்குகின்றனர். இம்மொழிகளில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வழங்கப்படுகின்றன.

திராவிடமொழிகளில் திணை உயர்திணை என்றும், அஃறிணை என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. தெலுங்குமொழியில் இவை 'மகத்,' 'அகமத்' என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. மலையாளமொழியில் இப்பிரிவு தெளிவாக அமைந்த பொழுதிலும் இவற்றிற்குத் தனிப்பெயர்கள் கொடுக்கப்படவில்லை.

பால்பாகுபாடு திராவிடமொழிக் குடும்பங்களிலும் மொழிக்கு மொழி வேறுபட்டுத் தோன்றுவதைக் காணலாம். பழங்கன்னடத்தில் இலக்கண நூலார் ஒன்பது வகையான பால்பாகுபாட்டினைக் காட்டுகின்றனர். மலையாளம் போன்ற மொழிகளில் சுட்டுப்பெயர்களில் மட்டும் ஐந்து வகையான பால்பாகுபாடு அமைய, வினைமுற்றுக்களில் பால்பாகுபாட்டினைக் காணமுடியவில்லை. தமிழிலுள்ள காணிக்காரர்களின் வட்டார வழக்கிலும், தோடா, கொடகு போன்ற மொழிகளிலும் இம்முறை உள்ளது.

தெலுங்குமொழியில் சுட்டுப்பெயர்களிலும், வினைமுற்றுக்களிலும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத ஒருமை, பலர்பால், பலவின்பால் என்ற நால்வகைப் பகுப்புகள் உள்ளன. கோண்டா, கோண்டி, கோயா, கொலமி, நாயக்கி, பர்ஜி, கடபா போன்ற மொழிகளில் வினைமுற்றுக்களிலும், சுட்டுப்பெயர்களிலும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் பன்மை, ஆண்பால் அல்லாத ஒருமை, ஆண்பால் அல்லாத பன்மை என்ற நால்வகைப் பகுப்புகள் உள்ளன.மால்டோ மொழியில் ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத ஒருமை, பலவின்பால் என்ற மூன்றுவகையான பாகுபாடே உள்ளது.

திராவிட மொழியிலுள்ள பால்பாகுபாட்டை விளக்கும் ஒப்பியலறிஞர்களுள் சிலர் அவற்றை மூவகையாகவும், வேறு சிலர் நால்வகையாகவும் கூறுபடுத்தி விளக்குவர்.

பிராகுயி, தோடா, தற்கால மலையாளம் ஆகியவற்றில் பால்பாகுபாடு தெளிவாக இல்லை.

**எண்**

திராவிட மொழியில் எண்ணைப் பொறுத்தவரையில் ஒருமை, பன்மை என்ற பாகுபாட்டை மட்டும் காண்கின்றோம். இவற்றுள் ஒருமை எண்ணுக்குத் தனி விகுதிகள் இணைக்கும் மரபு இல்லை. எனினும் சிலர் பழந்தமிழில் மகரம் பன்மை உருபாகவும் ன கரம் ஒருமையுருபாகவும் பயன்படுத்தப்பட்டதாக வாதிடுவர். சிலர் மனிதன் என்ற சொல்லில் வரும் னகர ஒற்றையும், கன்னட சொல்லான huruganu (பையன்) என்ற சொல்லின் இறுதி ஒலியான nu என்பதையும் tammu-ru என்ற சொல்லின் இறுதி ஒலியான ru என்பதையும் ஒருமை விகுதிகள் என்பர்.

இந்தோ ஐரோப்பிய மொழிகளில் ஒருமை, இருமை(dual), பன்மை என்ற முப்பிரிவுகளே உள்ளன. இப்பிரிவுகள் திராவிட மொழிகளிலும் ஆங்காங்கு காணப்படுகின்றது எனவும், கண்கள் என்ற சொல் இரண்டு என்பதைச் சுட்டுவதால் பொருளடிப்படையில் இருமை என்ற பாகுபாடு

இம்மொழிகளில் உண்டு என்று வாதிடுவர். இது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. அடிச்சொல்லுடனோ, ஒருமைப்பெயர்களுடனோ, பன்மை விகுதிகளை இணைத்துப் பன்மை எண்ணை உணர்த்துவது திராவிட மொழிகளின் பொது இயல்பு. நடுத்திராவிட மொழிகளில் பெண்களைக் குறிக்கும் சொற்களுடன் பன்மை விகுதிகளை இணைத்து உயர்திணையாக வழங்கும் வழக்கம் இல்லை.

உயர்திணைக்குரிய பன்மை விகுதியாகத் திராவிட மொழிகளில் 'ர்' என்பது வழக்கில் உள்ளது. பன்மை விகுதிகளான க,கள்,ளு ஆகியன பெரும்பான்மையான மொழிகளில் உள்ளன. சில மொழிகளில் க கரத்தோடு, உகர உயிர் இணைந்தும் அகரம் இணைந்தும் பன்மை விகுதி உண்டு.

1.எ.கா.நாயக்கி - தல் (தலை)

-தல்கு (தலைகள்)

2.கோண்டா - மேமர் (கணவன்)

மேமர்க (கணவன்மார்கள்)

சிலமொழிகளில் -v, -ev, -ov என்பனவும் பன்மை விகுதிகளாக உள்ளன. இவ்விகுதிகளைக் கடபா, பர்ஜி, கொலாமி ஆகிய மொழிகளில் காணலாம்.

எ.கா. 1. பர்ஜி - அலியக் (எருமை)

Aliakev (எருமைகள்)

2.கடபா - iya (தாய்)

Iyov (தாய்மார்கள்)

திராவிட மொழிகளில் திணை,பால் பாகுபாட்டில் எண்ணும் அடங்கிவிடுகின்றது.

| திணை | பால் | எண் |
|---|---|---|
| 1.உயர்திணை - | ஆண்பால் | ஒருமை |
| | பெண்பால் | |
| | பலர்பால் | பன்மை |
| 2.அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை |
| | பலவின்பால் | பன்மை |

**உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகள்**

திராவிட மொழிகளில் ஒருமைக்கெனத் தனி விகுதிகள் இல்லை.எனினும் மூவிடப்பெயர்களில் இணைக்கப்படும் பாலறி கிளவிகள் எண் வேறுபாட்டையும் உணர்த்தி நிற்கின்றன. உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகளாகத் தமிழ், மலையாளம் போன்ற தென் திராவிடமொழிகளில் அன், ஆன் என்னும் விகுதிகள் இடம்பெறுகின்றன. தமிழில் காணப்படும் அன் என்னும் விகுதி ஒலித்துணையாக உகரத்தைப்

பெற்றுக்கொண்டு கன்னட மொழியில் அனு என்று வருகின்றது. டு, உடு, அடு, ண்டு, உண்டு, அண்டு என்னும் வடிவங்கள் தெலுங்கு மொழியில் உள்ளன. தெலுங்கில் காணப்படும் இறுதி மூன்று வடிவங்களும் அன் என்பதன் திரிபே என்பர். மூவிடப்பெயர்களோடு மட்டுமன்றிச் சில இடப்பெயர்களோடும் அன் போன்ற விகுதிகளை இணைக்கும்பொழுது அவை ஆண்பால் ஒருமையாகின்றன.

எ.கா. மலை+அன்= மலையன்

நாடு+அன் = நாடன்

**உயர்திணை பெண்பால் ஒருமை விகுதிகள்**

பெண்பால் ஒருமை விகுதிகளாகத் தமிழ், மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளுள் -அள், ஆள், இ என்பன உள்ளன. தெலுங்கில் சில இடங்களில் ஆளு என்ற விகுதி வழங்குகின்றது. தமிழில் -இ என்னும் விகுதி சிறுபான்மை வழக்கிலுள்ளது. கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளிலும் இவ்விகுதியைக் காணலாம்.

எ.கா. தமிழ் -குறத்தி,தோழி,அரசி

கன்னடம்- அரசிதி

தெலுங்கு- சின்னதி

தமிழிலும் மலையாளத்திலும் பல நடுத்திராவிட மொழிகளிலும் ஆண்பால் ஒருமை வடிவத்துடன் பெண்பால் விகுதியை இணைத்துப் பெண்பால் ஒருமையை உணர்த்தும் இயல்பும் காணமுடிகின்றது.

எ.கா.பார்ப்பான்+ இ > பார்ப்பினி

**அஃறிணை ஒன்றன்பால் விகுதி**

ஒன்றன் பால் விகுதிகளாக து, த போன்றன திராவிட மொழிகளில் காணப்படுகின்றன. திராவிட மொழிகளில் முற்காலத்தில் எல்லாப் பெயர்ச்சொற்களும் அஃறிணையாக இருந்திருக்க வேண்டும் என்றும், பின்னர் காலப்போக்கில் பாலுணர்த்தும் விகுதிகள் அவற்றோடு இணைந்து உயர்திணையாக அமைந்திருக்க வேண்டும் என்றும் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். ஒருமை பன்மையமைப்பில் திராவிட மொழிகள் பெரும்பாலும் சிந்திய மொழிகளை ஒத்து காணப்படுகின்றன. இந்தோ ஐரோப்பிய மொழிகளில் விகுதி இணைத்தல், இடையொட்டு இணைத்தல், தனிவடிவம் அமைத்தல் எனப் பலமுறைகள் இருக்க, திராவிட மொழிகளில் விகுதிகளை இணைத்துப் பன்மை உணர்த்தும் முறை மட்டும் உள்ளது.

**உயர்திணைப் பலர்பால் விகுதிகள்**

தெலுங்கு தவிர்ந்த ஏனைய நடுத்திராவிட மொழிகளில் ஆன்பால் பன்மை மட்டும் காணப்படுகின்றது. ஏனைய அனைத்து மொழிகளிலும் உயர்திணையில் பொதுநிலையில் பலர்பால் (Epicine Plural) என்ற தனிப்பிரிவு உள்ளது. இவற்றுள் பலர்பால் என்ற பகுப்புதான் தொன்மையானது என்றும் ஆண்பால் பன்மை பிற்காலத்தது என்றும் பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் கருதுகின்றார்.

உயர்திணைப் பலர்பால் விகுதிகளில் அர், ஆர், இர், ஈர், அ, மார் என்பன தமிழ், மலையாளம் போன்ற தென்திராவிட மொழிகளில் பெருவழக்கில் உள்ளன. அரு, ஆரெ, ஏரு, ரி,ரு போன்றன கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் காணப்படுகின்றன. பலர்பால் விகுதியான மார் இடைக்காலத் தமிழிலக்கியங்களிலும், தற்கால மலையாள மொழியிலும் பெரு வழக்கில் உள்ளது. தமிழில் அரு,ஆர் போன்ற பன்மை விகுதிகளுடன் கள் விகுதியும் இணைந்து அவர்கள் என்பன போன்ற இரட்டைப் பன்மை (Double Plural) வடிவங்களும், மரியாதைப் பன்மை (Honorific Plural) வடிவங்களும் அமைவதுண்டு. சில வட்டார வழக்குகளில் கவிகுதியும், ங்க போன்ற பன்மை விகுதிகளும் பலர்பால் விகுதிகளாக உள்ளன.

**மரியாதைப் பன்மை**

திராவிட மொழிக்குடும்பத்தில் அதிகமான மொழிகளில், ஒருவருக்கு அதிக மரியாதை கொடுக்கவேண்டுமாயின் மூவிடப்பெயர்களின் பன்மை வடிவினை ஒருமையைச் சுட்டப் பயன்படுத்துவதுண்டு.

மரியாதைப் பன்மை தொல்காப்பியர் காலத்திலிருந்து தனித்து ஓர் இலக்கணக் கூறாக மரபிலக்கண வல்லுநர்களால் கருதப்பட்டு வருவதைக் காண்கின்றோம். தமிழில் மரியாதைப் பன்மை பேச்சு வழக்கிற்கு உரியதெனத் தொல்காப்பியர் சுட்டிச்செல்கின்றார். பழந்தமிழில் பாடல்களின் அடிக்குறிப்புகளில் இடம்பெறும் புலவர்களின் பெயரொடு பல இடங்களில் அது இணைக்கப்படுகின்றது. சிலம்பில் மகனார், மகளார் என்னும் வழக்குகள் காணப்படுகின்றன. வீரசோழியத்தில் ஆண் மரியாதைப் பன்மை,பெண் மரியாதைப் பன்மை ஆகியன வேறுபடுத்திச் சுட்டப்படுகின்றன.

மலையாளக் கல்வெட்டில் அரு,கள் என்னும் விகுதிகள் மரியாதைப் பன்மையுணர்த்த துணைபுரிகின்றன. கன்னடத்தில் ஆதனு, ஊதனு, ஈதனு என்பன ஆண்பால் மரியாதைப் பன்மை வடிவங்களாகவும், ஆகெ, ஊகெ, ஈகெ என்பன பெண்பால் மரியாதைப் பன்மை வடிவங்களாகவும் உள்ளன. தெலுங்கில் ஆயன, ஈயன, ஆமெ, ஈமெ போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன.

**அஃறிணைப் பன்மை**

தமிழில் அஃறிணைப் பன்மை விகுதிகளாக கள் என்பதும் அதன் மாற்றுவடிவமான gal என்பதும் காணப்படுகின்றன. அ விகுதி இலக்கியத் தமிழில் பெரு வழக்கில் உள்ளது.இவற்றோடு பல,சில என்ற தனிவடிவங்களும் உள்ளன.தெலுங்கு மொழியில் லு என்னும் விகுதியே அதிகமாகப் பயின்று வருகின்றது.

எ.கா. ஒருமை பன்மை

சிலுகா - சிலுகலு

எலுகு - எலுகலு

**பாடத்தொகுப்புரை**

மொழிக்கு அடிப்படையாக அமைவது ஒலியாகும்.

ஒலி உயிரொலி, மெய்யொலி எனும் பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டு ஆராயப்படுவது.

ஒலியழுத்தம் பொருள் வேறுபாட்டை விளைவிப்பது உண்டு

திராவிடமொழிகளில் வேற்றுமை உருபுகள் பலவாக உள்ளன.

திராவிட மொழிகளில் திணை, பால், இடம் பற்றிய பகுதிகள் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன.

**மாதிரி வினாக்கள்**

அ.ஒருபக்கஅளவில்விடைதருக

1.உயிரொலி மாற்றங்கள் பற்றி குறிப்பு வரைக

2.உடம்படுமெய் குறிப்பு வரைக

3.ஒலிழுத்தம் விளக்குக

4.உருபன்கள் என்றால் என்ன? விளக்குக

ஆ.நான்குபக்கஅளவில்விடைதருக

1.உயிரொலிகள்,மெய்யொலிகளின் பிறப்பு பற்றி விளக்குக

2.திராவிட மொழிகளில் வேற்றுமைகள் பெறும் இடத்தினை எழுதுக

3.திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் பெறும் இடத்தினை விவரி

----------

**குறிப்பு**

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

## அலகு 5

**முன்னுரை**

சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பகுப்பது தமிழ் மரபு. வினைச்சொற்கள் காலம் காட்டும் சிறப்புடையன. வினைச்சொற்கள் திராவிட மொழிகளில் செயல்படும் முறையை இந்த இயல் விளக்குகிறது. மேலும் பெயரெச்சம், வினையெச்சம் பற்றியும், சொற்பொருள் மாற்றங்கள் பற்றியும் இந்த இயலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது

**பாட அறிமுகம்**

சொற்களுள் முக்கிய இடம் வகிப்பன வினைச்சொற்களாகும். திராவிட மொழியில் அமையும் வினைச்சொற்களின் அமைப்பு, வினைச்சொற்கள் காலம் காட்டும் முறை, திராவிட மொழிகளின் சொற்றொடரமைப்பு, சொற்பொருள் மாற்றமடைதல் குறித்த செய்திகள் முனைவர் ஜான் சாமுவேல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பாய்வு என்னும் நூலிலிலிருந்து எடுக்கப்பெற்று இங்குப் பாடமாக அமைக்கப்பெற்றுள்ளது.

**வினைச்சொற்களின் அமைப்பு**

திராவிட மொழிகளில் வேற்றுமை ஏற்கும் அடிச்சொற்களைப் பெயர் (Stem) என்றும், காலம் காட்டும் இடைநிலைகளை ஏற்கும் அடிச்சொற்களை வினை என்றும் குறிப்பிடுகின்றனர். வினைச்சொற்களைப் பொதுப்பொருள் உணர்த்தும் வினைச்சொற்கள் என்றும், இலக்கணப் பொருள் உணர்த்தும் துணைவினைகள் என்றும் இருகூறுபடுத்தலாம். இவற்றுள் பொதுப்பொருள் உணர்த்தும் வினைவடிவங்கள் எண்ணற்றனவாய், வரையறைக்குள் அடங்காதனவாய் உள்ளன. இலக்கணப் பொருள் உணர்த்தும் வினைவடிவங்கள் எண்ணிக்கையில் குறைந்து, வரையறைக்குள் அடங்குவனவாக உள்ளன. திராவிட மொழிகளின் வினையடிச் சொற்களோடு (Verbal bases) வு, கு, ங்கு, ந்து, து, பு, ம்பு போன்ற விகுதிகளைச் சேர்ப்பதால் பெரும்பாலான வினைச்சொற்கள் அமைகின்றன.

திராவிட மொழிகளின் வினைவடிவங்கள் பால்காட்டும் விகுதி, கால இடைநிலை போன்ற இலக்கணக் கூறுகளுடன் இணைந்து நெடிதாக அமைந்த போதிலும் தனிச்சொற்களாகவே கருதப்படுகின்றன. திராவிடமொழிகளில் வினைச்சொற்கள் ஒட்டுநிலையாய் அமைந்த போதிலும் ஏவல் வினைகளில் மட்டும் இடைநிலைகளும், விகுதிகளும் இணைக்கப்படுவதில்லை.

ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டும். திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. ஆனால் திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

வந்தான் - உயர்திணை,ஆண்பால்,ஒருமை

இந்தப் பொது இயல்புக்கு மலையாள மொழி மட்டும் விதிவிலக்காக உள்ளது. மலையாள மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பாலறிகிளவிகள் இன்மையால், வினைச்சொற்களுக்கு முன்னர் இடம்பெறும் எழுவாயைக் கொண்டே திணை, பால், எண் போன்றவற்றை அறிய வேண்டியுள்ளது.

திராவிட மொழிகளின் வினைச்சொல்லாக்கம் எளிமையாக உள்ளது என்று கால்டுவெல் குறிப்பிடுவார். வினைச்சொற்கள் இம்மொழியில் எச்சம் என்றும் முற்று என்றும் கூறுபடுத்தப்படுகின்றன.

திராவிட மொழிகளின் வினைச்சொற்களில் தன்வினை, பிறவினை, இயக்குவினை என்ற மூவகையான வினைவகைகளையும், ஏவல்வினை, நிபந்தனை வினை, வியங்கோள் வினை என்னும் பல்வேறு வினைப்பொருட்களையும் காணலாம். வினைச்சொற்களின் பொருளைச் சிறப்பிக்கத் துணைவினைகளும், எச்சமாக அடுக்குவினைகளும் பயன்படுத்தப்படுகின்றன. திராவிடமொழிகளின் வினைச்சொற்களைக் காலங்காட்டும் முறை, வினையின் தன்மை, பால்காட்டும் முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறுபடுத்த இயலும்.

**வினைச்சொற்கள் காலம் காட்டும் முறை**

திராவிட மொழிகளில் வினையடிகளோடு காலம் காட்டும் இடைநிலைகள் இணைந்து நின்று காலத்தைக் காட்டி நிற்கின்றன. பழந்தமிழில் இறந்தகாலம், இறந்தகாலம் அல்லாதன என இரு காலங்களே உள்ளன. பேச்சு வழக்கில் மட்டுமேயுள்ள திருந்தாத திராவிட மொழிகள் பலவற்றிலும் பழந்தமிழைப் போன்று இறந்தகாலம், இறந்தகாலம் அல்லாதன என்ற இரு பாகுபாடே காணமுடிகின்றது. தொல்காப்பியர், காலம் மூன்று என்று குறிப்பிட்டபோதிலும் இரண்டு காலங்களையே சுட்டிச்செல்கின்றார்.

எ.கா. செய்த - இறந்த காலம்

செய்யும் - இறந்தகாலம் அல்லாதது.

மூலத்திராவிட மொழியிலும் இவ்விருவகையான காலப்பாகுபாடுதான் இருந்திருக்க வேண்டும் என்பது பெரும்பாலோர் கருத்து. இவற்றுள் இறப்பு அல்லாத காலத்தில் ஆங்கிலத்தில் எதிர்காலமும் அடங்கும். இறப்பு அல்லாத காலத்தை aorist future என்று அழைப்பர். இறப்பு அல்லாத காலத்திலிருந்து நிகழ்காலம் காலப்போக்கில் தனியாகப் பிரிந்திருக்க வேண்டும். தற்காலத் தமிழிலும் நிகழ்கால வடிவங்கள் எதிர்காலத்தையும் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

எ.கா. நான் வருகிறேன் - நிகழ்காலம்

நான் (நாளை) வருகிறேன் - எதிர்காலம்

**இறந்த காலம்**

தென்திராவிட மொழிகளில் ஏராளமான இறந்த கால இடைநிலைகள் உள்ளன. அவற்றுள் த், த்த், ந்த், இ போன்றவற்றை மூலத் திராவிட வடிவங்களாகக் கொள்வர். இவ்வடிவங்கள் தென் திராவிடமொழிகளில் அதிகமாக உள்ளன. பழந்தமிழிலுள்ள இறந்தகால வினைவடிவங்களை அவை ஏற்கும் இறந்தகால இடைநிலைகளை அடிப்படையாகக் கொண்டு நான்காகப் பகுக்கலாம்.

அவை:

1.செய்+த்+ ஆன் = செய்தான்

2.நட+ந்த்+ஆன் = நடந்தான்

3.அடி+த்த்+ஆன் = அடித்தான்

4.அடங்கு+இன் +ஆன் = அடங்கினான்

பேச்சுத் தமிழில் ந்த், த்த் என்னும் இடைநிலைகள் இடையண்ண ஒலிகளாக மாறி முறையே ஞ்ச, ச்ச என்று முன்னுயிர்களையடுத்து வருகின்றன. இம்மாற்றம் கி.பி.7 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே ஏற்பட்டிருக்கவேண்டும். அப்பர் தேவாரத்தில் இத்தகைய இடைநிலைகள் சிலவிடங்களில் வருகின்றன. தகர இடைநிலைகள் சில இடங்களில் பேச்சுத் தமிழில் ஞ்ச என்று திரிந்து வருகின்றது.

எ.கா. பெய்தது > பெஞ்சது

தமிழில் இறந்தகால அடிச்சொற்களுடன் உகர இகர ஒலிகளை இணைத்து வினையெச்ச வடிவங்கள் அமைப்பது உண்டு.

எ.கா.நடந்து

திரும்பி

இவ்வாறே இறந்த கால வினயடிச்சொல்லுடன் அகரத்தை இணைக்கும்பொழுது இறந்தகாலப் பெயரெச்சங்கள் ஏற்படுகின்றன.

எ.கா.

வந்த

ஒடிய

தமிழிலுள்ள -ந்த்- என்ற இடைநிலைக்கு நிகராக மலையாளமொழியில் ந்த் என்ற இடைநிலை உள்ளது. பழங்காலக் கல்வெட்டுகளில் 'என்ற', 'ந்த' போன்ற வடிவங்கள் உள்ளன. இம்மொழியில் 'ண்ண்' என்ற இடைநிலையே பெரு வழக்கில் உள்ளது.

தெலுங்கு மொழியில் எ, இ, ஆ, இன் போன்ற இடைநிலைகள் காணப்படுகின்றன. இறந்தகால இடைநிலைகளைப் பொறுத்தவரையில் தென் திராவிடமொழிகளுக்கும் நடுத்திராவிட மொழிகளுக்கும் இடையே அதிக ஒற்றுமைக் கூறுகளைக் காணமுடிகின்றது. கோண்டா, கோண்டி, குயி போன்ற மொழிகளிலும் -இத்- என்னும் இடைநிலையே பெருவழக்கில் உள்ளது.

தமிழ், கொடகு ஆகிய மொழிகளில் வினையடிகளோடு த், ந்த், த்த், இ என்ற இடைநிலைகளை இணைத்து இறந்தகால வினைவடிவங்களை அமைத்துக் கொள்கின்றன. இம்முறையே மூலத் திராவிட மொழிகளின் இயல்பாகும்.

**இறந்தகாலம் அல்லாதன** (Non-past)

திராவிட மொழிகளில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முப்பிரிவு தோன்றும் முன்னர், இறந்த காலம் அல்லாதன என்ற கூறுபாடே நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தியிருக்க வேண்டும். எனவேதான் திராவிட மொழிகளை ஆராய்ந்த டாக்டர் கால்டுவெல் இம்மொழிகளில் இறந்தகாலம், எதிர்காலம் என இரு காலங்களே உள்ளன என்று குறிப்பிடுகின்றார். மூலத்திராவிடமொழிகளில் -ப்ப்-, -ப்-, க்ச்,த்த்,த்,உம்,ன போன்றன இறந்தகாலம் அல்லாதனவற்றின் இடைநிலைகளாக இருந்திருக்க வேண்டும். இடைநிலைகள் சில இடங்களில் எதிர்காலத்தையும், சில இடங்களில் நிகழ்காலத்தையும் உணர்த்தி நிற்கின்றன. நிகழ்காலத்தை இடைநிலைகள் இல்லாமல் கூட்டுவடிவங்களால் உணர்த்தும் முறையும் இம்மொழிகளில் உள்ளன. கிறு, கின்று, ஆநின்று என்பன தமிழில் நிகழ்காலத்தை உணர்த்தும் தனி வடிவங்களாகும்.

மூலத் திராவிட இடைநிலைகளான த்த்- என்பதை நடுத்திராவிட மொழிகளிலும், ப்ப் என்பதைத் தென்திராவிட மொழிகளிலும் காணலாம். -க்க்- இடைநிலை தமிழ், மலையாளம், தோடா, கோடா, கன்னடம், கொலமி, பர்ஜி ஆகிய மொழிகளில் உள்ளன.

எ.கா.நடக்குவன் (தமிழ்)

-த்த்- இடைநிலை தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் இடம்பெறுகின்றது. -உம்- இடைநிலை தமிழ், மலையாளம், கோடா, துளு, கொலமி, பர்ஜி போன்ற மொழிகளில் மிகுதியாக இடம்பெறுகின்றன.

மலையாள மொழிகளில் நிகழ்கால இடைநிலைகளாக -உன்னு-, -குன்னு- என்பன உள்ளன. பழைய மலையாளத்தில் -இன்னு- என்னும் இடைநிலையும் உள்ளது. தெலுங்கு மொழியில் ‘சு’, அல்லது ‘து’ என்னும் இடைநிலை நிகழ்காலத்தைக் குறிக்கப் பயன்படுகின்றது.

திராவிடமொழிகளில் எதிர்காலம் தெளிவற்றதாக உள்ளது. பேச்சு மொழியில் நிகழ்காலத்தையே எதிர்காலமாக வழங்குவதும் உண்டு. நிகழ்காலம் என்பது நிலையற்ற நொடிப்பொழுதளவுள்ள ஒரு காலம். ஆகையாலும் எதிர்காலத்தின் முந்திய ஒரு பகுதியே நிகழ்வு என்று கூறுமாறு உள்ளது.

தமிழ்மொழியில் வ், ப்ப், ப், உம் போன்றன எதிர்கால இடைநிலைகளாக உள்ளன. இவற்றுள் வினைப்பகுதியோடு உம் இணைத்து அமைக்கப்படும் எதிர்கால வடிவத்தை defective future என்று அழைக்கின்றார் கால்டுவெல். இத்தகைய வடிவங்களில் பால்காட்டும் விகுதிகள் இணைக்கப்படுவதில்லை. மலையாள மொழியில் உம், ஆம் ஆகிய எதிர்கால இடைநிலைகளாக அமைகின்றன. தெலுங்கில் எதிர்கால

இடைநிலையாக உகரமே பெருவழக்கில் உள்ளது. எனினும் ஒருமையில் 'உனு' என்னும் வடிவமும், பன்மையில் 'உமு' என்னும் வடிவமும் விகுதிகளாக அமைந்து எதிர்காலத்தை உணர்த்தி நிற்கின்றன.

எ.கா. சேஸ்தனு -ஒருமை

சேஸ்தமு - பன்மை

கன்னடமொழியில் வகரமே எதிர்காலத்தை உணர்த்துகின்றது. தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளின் பேச்சு வழக்கில் எதிர்காலத்தைப் பயன்படுத்துவது குறைவு. எதிர்காலத்திற்குப் பதிலாக நிகழ்காலமே பயன்படுத்தப்படுகின்றது.

**எச்சங்களும் முற்றுகளும்**

திராவிடமொழிகளின் வினைவடிவங்கள் முற்றுக்கள் எனவும் எச்சங்கள் எனவும் இரு கூறுபடுத்தப்படுகின்றன. முற்றுக்களில் அடிச்சொல், கால இடைநிலைகள், பால்காட்டும் விகுதிகள் ஆகியன இணைந்து நிற்கும். எச்சங்கள் பாலறிகிளவிகளைப் பெறாமலே நிற்கின்றன. எச்ச வடிவங்களைப் பெயரெச்சங்கள் எனவும், வினையெச்சங்கள் எனவும் இரு கூறாகப் பாகுபடுத்துவர். இரண்டுமே வினைச்சொற்கள். எனினும் பெயரைக் கொண்டு முடியும் வினைச்சொற்கள் பெயரெச்சம் எனவும், வினைமுற்றுக்களைக் கொண்டு முடியும் வினைச்சொற்கள் வினையெச்சம் எனவும் அழைக்கப்படுகின்றன.

**பெயரெச்சங்கள்.**

நாயக்கி தவிர்த்த ஏனைய திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்கள் தெளிவாக உள்ளன. ஐரோப்பிய மொழிகளில் உள்ள who, which, were, what போன்ற இணைப்புப் பெயர்களின் பணியினைத் திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்களே செய்கின்றன.

எ.கா. மி saw the man who came

வந்த மனிதனைக் கண்டேன்.

இவ்விரு தொடர்களில், ஆங்கில மொழித் தொடரில் who என்ற இணைப்புப் பெயர் இடம்பெறுகின்றது. ஆனால் தமிழில் 'வந்த' என்ற பெயரெச்சமே இணைப்பு இடப்பெயரின் கடமையைச் செய்வதைக் காண்கின்றோம். பெயரெச்ச வடிவங்கள் அவற்றையடுத்து வரும் பெயர்கள் காட்டும் எண், திணை, பால் ஆகியவற்றிற்கேற்ப மாறுவதில்லை.

தொல்காப்பியர் பெயரெச்சங்களைப் 'பெயரெஞ்சுக் கிளவி' என்று அழைக்கின்றார். தமிழில் பெயரெச்சங்கள் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலங்களையும் காட்டி நிற்கும். தொல்காப்பியர் செய்த என்னும் இறந்த காலப் பெயரெச்ச வடிவத்தையும் செய்யும் என்னும் நிகழ்கால, எதிர்கால வடிவத்தையும் மட்டுமே குறிப்பிட்ட போதிலும் இடைக்கால இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் 'செய்கின்ற', 'செய்யாநின்ற' என்பன போன்ற நிகழ்காலப் பெயரெச்ச வடிவங்களையும் காணலாம். வீரசோழிய ஆசிரியர் 'செய்கிற' என்ற வடிவத்தையும் குறிப்பிடுகின்றார்.

மலையாளம், கொலமி போன்ற மொழிகளிலும் பெயரெச்சங்கள் மூன்று காலங்களையும் காட்டுகின்றன. குருக், மால்டோ போன்ற மொழிகளிலும் நிகழ்கால, இறந்த கால இடைநிலைகளைப் பெயரெச்ச வடிவங்கள் ஏற்கின்றன. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொலமி போன்ற மொழிகளில் கால இடைநிலைகளோடு, அகர விகுதி இணைந்து பெயரெச்ச வடிவங்கள் அமைகின்றன.

எ.கா. தமிழ் - செய்த

மலையாளம் - செய்யுந்த

கன்னடம் - marida

தெலுங்கு - சேசின

கோண்டா, குயி, குவி, துளு போன்ற மொழிகளில் இ விகுதி இணைந்து பெயரெச்ச வடிவங்கள் அமைகின்றன.

**வினையெச்சங்கள்**

தொல்காப்பியம், வீரசோழியம் ஆகிய வினையெச்சங்களை விளக்காதபோதிலும் பின்னர் வந்த நன்னூலார் வினையெச்சங்கள் தொழிலையும் காலத்தையும் காட்டி, பால்காட்டாது வினை எஞ்சி நிற்கும் என்று விதி வகுத்துள்ளார். வினையெச்சத்தை விளக்காதபோதிலும் தொல்காப்பியர் ஒன்பது வகையான வினையெச்ச வாய்பாடுகளைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

> ‘செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
> செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
> அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி’ (தொல்.சொல்.228)

இவற்றைத் தவிர தொல்காப்பியர் ‘மயங்காமை’ என்பதை விசையெச்சமாக ஆள்வதால் அவர் காலத்தில் செய்யாமை என்ற வாய்பாட்டு வடிவமும் இருந்தது என்பது தெளிவு. செய்யாமல் போன்ற வாய்பாட்டு வடிவங்கள் கலித்தொகையில் உள்ளன. இன்றைய தமிழில் செய்வதற்கு, செய்தால் என்ற வாய்பாட்டு வடிவங்களுடன் செய்யாவிடின், செய்யாவிட்டால் போன்ற வாய்பாட்டு எதிர்மறை வடிவங்களும் உள்ளன. நன்னூலார் ஆ, வான், பான், பாக்கு என்ற ஈறுகளையுடைய வினையெச்ச வடிவங்களைக் குறிப்பிடுவதுடன் வினையெச்ச வாய்பாடுகள் எந்தெந்த காலங்களைக் காட்டி நிற்கும் என்பதையும் தெளிவாக வரையறுத்துள்ளார்.

கோண்டா மொழியில் இறந்தகாலம், எதிர்காலம் ஆகியவற்றின் இடைநிலைகளை ஏற்கும் வினையடிச்சொற்களுடன் a(no) என்ற விகுதியை இணைப்பதால் வினையெச்ச வடிவங்கள் அமைகின்றன.

பர்ஜி, கடபா, குருக், பிராகுயி ஆகிய மொழிகளில் வினையடிச் சொற்களுடன் இகர விகுதியை இணைப்பதால் வினையெச்ச வடிவங்கள் அமைகின்றன. கோடா, கொடகு, கொலமி போன்ற மொழிகளில்

‘ஆகாரம்’ எதிர்மறை வினையெச்ச விகுதியாக உருபு உள்ளது. மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளில் எகர உருபு உள்ளது.

**வினைமுற்றுக்கள்**

திராவிட மொழிகளில் வினைமுற்றுக்கள் திணை, பால், எண் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. இவற்றை அறிய வினைப்பகுதிகளின் இறுதியில் இணைக்கப்படும் பாலறி கிளவிகளே துணைசெய்கின்றன. இத்தகைய அமைப்பு முறைக்கு மலையாள மொழி மட்டும் விதிவிலக்கு. எனினும் பழைய மலையாளச் செய்யுட்களில் பாலறி கிளவிகளைக் காண்கின்றோம்.

திராவிடமொழிகளின் வினைமுற்றுக்களில் படர்க்கை வினைமுற்றுக்கள் மட்டும் பால்பாகுபாட்டை உணர்த்துகின்றன. எனவே திணை, பால் உணர்த்தும் முறை சமுதாய மாற்றத்திற்கேற்பப் பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி எனலாம். பாலறி கிளவிகளை வினையடிச்சொற்களோடு இணைத்து வினைமுற்றுக்கள் அமைக்கும் மரபு மங்கோலிய மொழிகளிலும் உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

**திராவிடமொழிகளின் சொற்றொடரமைப்பு**

சொற்கள் முறைப்படி அமைந்து பொருளைத் தரும்பொழுது அது சொற்றொடர் என்று கருதப்படும். சொற்களின் சேர்க்கை, பேசுவோன், கேட்போன் ஆகியோர் மனநிலைக்கு ஏற்ப அமைந்து, கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணைசெய்ய வேண்டும். தொடர்களில் அமையும் சொற்களின் சேர்க்கை பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட மரபுப்படியே அமைகின்றது. இம்மரபு மொழிக்கு மொழி மாறுபடுதல் இயல்பே. சான்றாக, ஆங்கில மொழியில் அதிகமாக வினைச்சொற்கள் முற்றுத் தொடர்களின் நடுவிலும் தமிழில் வினைமுற்றுக்கள் தொடரின் இறுதியிலும் அமைவதைக் காண்கின்றோம். ஐரிஷ் போன்ற சிலமொழிகளில் வினைச்சொற்கள் தொடரின் முதலில் நிற்றலுண்டு. இவ்வாறே திராவிட மொழிகளின் வினையடிகள், இடைநிலைகள் போன்றன ஒட்டு நிலையில் அமைந்து நிற்க, சீனமொழியில் ஒவ்வொரு சொல்லும் தனியாக நிற்றலைக் காண்கின்றோம்.

அமெரிக்கப் பழங்குடி மக்களின் மொழியில் இலக்கண வேறுபாடு உணர்த்தும் விகுதிகள், உருபுகள் போன்றன ஒன்று சேர்ந்து தொடரின் முற்பகுதியில் நிற்க, எழுவாய், பயனிலை போன்றன பின்னர் நிற்கின்றன. திராவிடமொழியின் தொடரமைப்பைப் பொறுத்தவரையில் மொழிக்கு மொழி அதிக வேறுபாடுகளைக் காணமுடியவில்லை. தொடரமைப்பைப் பொறுத்தவரையில் திராவிட மொழிகள் இந்தோ - ஐரோப்பிய மொழிகளிலிருந்து பல வகையிலும் மாறுபடுவதைக் காணலாம்.

**சொற்களின் நிலை**

ஒருமொழியின் உயிரோட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள அம்மொழியின் தொடரமைப்பு பற்றிய அறிவு மிகவும் தேவை. மொழி

ஆய்வுக்கு ஒலியன் பற்றிய ஆய்வும் உருபன் பற்றிய ஆய்வும் உடம்பு என்றால், தொடர் பற்றிய ஆய்வு உயிராக அமைகின்றது.

திராவிட மொழிகளில் பொதுவாகப் பெயரடைகள் பெயர்களுக்கு முன்னர் அமைகின்றன. பெயரடைகள் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றனவாகப் பெயர்த்தொடரின் உறுப்பாக இம்மொழிகளில் அமைகின்றன.

வினையடைகள் பெயரடைகளைச் சிறப்பிக்கும் இடங்களும் இம்மொழிகளில் உள்ளன. அவ்வாறு அமையும் இடங்களில் வினையடைகளும் பெயர்த்தொடரின் ஒரு பகுதியாகவே செயல்படும்.

மலையாள மொழியைப் பொறுத்தவரையில் வினைச்சொற்களைச் சிறப்பிக்கும் வினையடைகள், பெயடைகளைப் போலன்றித் தனித்து இயங்கும் தன்மை பெற்றுத் திகழ்கின்றன. இந்நிலையில் அவை வினைச்சொற்களிலிருந்து வேறுபட்ட தனித்த உறுப்பாகச் செயல்படும் தன்மையுடையன.

திராவிட மொழிகளில் முற்றுத் தொடர்களில் எழுவாய் முதலிலும் வினைமுற்றுக்கள் இறுதியிலும் அமைகின்றன. செயப்படுபொருள் இவ்விரண்டிற்குமிடையில் இடம்பெறும். பெயரடைகள் பெயர்களுக்கு முன்னர் இடம்பெறுகின்றன. உணர்ச்சி வசப்பட்டுப் பேசுமிடங்களிலும், கவிதை வடிவிலும் இந்நிலை மாறியும் அமைதல் உண்டு.

**இயைபு**

இந்தி போன்ற வட இந்திய மொழிகளில் பெயரடைக்கும், அதை அடுத்து வரும் பெயருக்குமிடையே எண், பால் ஆகியவற்றில் இயைபுகள் இருப்பதைக் காணலாம்.

எ.கா. அச்சா லட்கா - நல்ல பையன்

அச்சி லட்கி - நல்ல பெண்

அச்சே லட்கே - நல்ல பையன்கள்

திராவிட மொழிகளில் இத்தகைய இயைபு கிடையாது. நல்ல பையன், நல்ல பெண் என்று பெயரடைகளோடு இயைபு இன்றியே வருகின்றன. இதற்குக் கோண்டி மொழி மட்டும் விதிவிலக்கு.

திராவிட மொழிகளில் முற்றுத் தொடர்களின் இறுதியில் அமையும் வினைமுற்று வடிவங்கள் எழுவாயோடு எண்ணால் இயைபு கொண்டுள்ளன.

படர்க்கை மூவிடப்பெயரின் வினைமுற்றுக்கள் எழுவாயோடு திணை, பால், எண் ஆகியவற்றுள் இயைபு கொண்டுள்ளன.

எ.கா. அவன் வந்தான் - ஆண்பால்

அவள் வந்தாள் - பெண்பால் உயர்திணை

அவர் வந்தார் - பலர்பால்

அது வந்தது - ஒன்றன்பால் -ஒருமை - அஃறிணை

அவை வந்தன - பலவின்பால் - பன்மை

இந்த இயைபினை மலையாளமொழியில் காணமுடியவில்லை. வினைமுற்றுக்களின் பாலறி கிளவிகள் இணையும் மரபு இம்மொழியில் இன்மையால் வினைமுற்றுக்கள் திணை, பால் வேறுபாட்டைக் காட்டி நிற்பதில்லை.

ஆங்கிலம் போன்ற மொழிகளின் தொடர்களின் முந்து நிலைகள் (Preposition) அமையும் இடங்களில் எல்லாம் தமிழில் பிந்து நிலைகள் (Post-position) அமைகின்றன. ஆங்கில மொழியில் இரு தொடர்களை இணைக்க இணைப்பு இடப் பெயர்களைப் பயன்படுத்தும் இடங்களில் எல்லாம் தமிழ், மலையாளம் போன்ற திராவிட மொழிகளில் பெயரெச்சங்களையோ, வினையாலணையும் பெயர்களையோ பயன்படுத்துவதைக் காணலாம்.

திராவிடமொழிகளில் வினைச்சொற்கள் இன்றியும் தொடர்கள் அமைகின்றன. இவ்வாறு பெயர் பயனிலையாக வரும் திராவிடமொழிகளின் தொடர்களுக்கு இணையாக உள்ள ஆங்கிலத் தொடர்களில் is, are போன்ற துணை வினைகள் இணைக்கப்படுகின்றன.

எ.கா. அவன் இராமன்

He is Raman

பல பெயர்கள் தொடர்ந்து வரும்பொழுது அவற்றை இணைப்பதற்கு ‘உம்’ என்னும் இடைச்சொல்லை அப்பெயர்கள் எல்லாவற்றுடனும் இணைக்கும் மரபைத் தமிழ் போன்ற திராவிட மொழிகளில் காணுமுடிகின்றது. ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் உம்மை இடைச்சொல்லுக்கு நிகராக and என்னும் இணைப்பு இடைச்சொல் அவற்றின் இறுதியில் மட்டும் வருகின்றது.

எ.கா. இராமனும், சீதையும், இலக்குவனனும் வந்தனர் - தமிழ்

Rama, sita and Lakshmana came

ஆங்கிலத் தொடர்களில் சொற்களுக்கு இடையே உள்ள உறவு இலக்கண உறவாக அமைய, திராவிட மொழித்தொடர்களில் அவ்வுருபு உருபன்களைப் பொறுத்ததாக அமைகின்றது.

**சொற்பொருள் மாற்றமடைதல்**

மனிதன் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருப்பது மொழி. அம்மொழி பலவித அமைப்புகளைக் கொண்டது. பல நூற்றாண்டுக் காலமாக மனிதனால் பேசப்படும் மொழியிலும் மாற்றங்கள் நிகழ்வது இயல்பே. சங்கத் தமிழுக்கும் இக்காலத் தமிழுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளதைக் காணலாம். ஒலியமைப்பிலும் இலக்கண அமைப்பிலும் வேற்றுமைகள் காணப்படுதல் போன்று சொல்லாட்சியிலும் மாற்றங்களைக் காணலாம்.

சங்க காலத் தமிழில் காணப்பட்ட சொற்கள் பலவற்றை இக்காலத் தமிழில் காணமுடியாது. தற்காலத் தமிழில் காணப்படும் பல சொற்களைப் பழந்தமிழில் காணமுடியாது. சொற்பொருள் மாற்றத்திலும் இத்தகைய மாற்றத்தைக் காணலாம்.

சங்க கால நூலான புறநானூற்றில் 'கோயில்' என்னும் சொல் 'அரண்மனை' என்னும் பொருளைத் தர, தேவார, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எழுந்த காலத்திலும், இடைக்காலத்திலும் 'இறைவனின் இருப்பிடம்' எனும் பொருளைத் தருகின்றது. 'கோயில்' எனும் சொல் இருவகைப் பொருளைத் தர, இன்றையத் தமிழில் ஒரு பொருளையே தந்து நிற்பதைக் காண்கின்றோம். இந்த நிலையினை உலக மொழிகள் யாவற்றிலும் காணலாம். மொழி வரலாற்றிலும் வளர்ச்சியிலும் இத்தகைய மாற்றங்கள் தவிர்க்கமுடியாதன. வரலாற்று மொழியியல் இவற்றை அடிப்படையாக வைத்து வளர்ந்ததாகும். இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம் முதலியவற்றைக் குறித்த பொன் என்னும் சொல் இன்று தங்கத்தை மட்டும் குறிக்கிறது. எனவே சொல் ஆரம்பத்தில் உணர்த்திய பொருள் ஒன்றாகவும் இன்று உணர்த்தும் பொருள் வேறாகவும் இருப்பதைக் காணலாம். சொல்பொருள் உணர்த்தும் முறையில் ஏற்படும் மாறுதல்களை ஆராய்வதைச் சொற்பொருளியல் (Semantics) என்பர்.

சொற்கள் பொதுவாகச் சூழ்நிலையை ஒட்டிப் பொருள் உணர்த்துகின்றன. சில இடங்களில் ஒரு பொருளையும் வேறு சில இடங்களில் அப்பொருளோடு தொடர்புடைய இரண்டாவது பொருளையும் உணர்த்துகின்றன. இதனால் இரண்டாவது பொருளே முதற்பொருள் என்ற எண்ணம் ஏற்படுகின்றது.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், தொடரியல் என்பன சொல்லின் தன்மையை வெளிப்படுத்துவன. சொற்கள் பொருளை உணர்த்தி நிற்பது பொருள் இலக்கணம் எனப்படும்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல்.சொ.155)

என்கின்றார் தொல்காப்பியர். இதே கருத்தைத்தான் மொழியியல் அறிஞர் ஜான் லயன்சு அவர்களும் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியரே அடுத்த நூற்பாவில்,

' பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லினாகும் என்மனார் புலவர்' (தொல்.சொ.156)

என்று கூறுகின்றார். சொற்கள் சூழ்நிலையை நோக்கிப் பல்வகைப்பட்ட பொருள் நுட்பங்களைப் புலப்படுத்துகின்றன. பொருண்மை சுட்டல் வெளிப்படையாகவும் அமையலாம். சூழ்நிலையைப் பொறுத்துக் குறிப்பாகவும் அமையலாம்.

'தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே'(தொல்.சொல்.157)

இதனை விளக்க வந்த சேனாவரையர், மேற்கூறப்பட்ட பொருண்மை தெரிதல், சொன்மாத்திரத்தால் விளங்கி வேறு நிற்றலுஞ், சொன் மாத்திரத்தால் தோன்றாது சொல்லோடு கூடிய குறிப்பாற் தோன்றலும் என இரண்டு கூற்றையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர் என்பர். பிறிதுமொழிதல் அணி ஒன்றைச் சேனாவரையர் குறிப்புப் பொருள்தரும் உதாரணமாக

எடுத்துக்காட்டுவார். உருவகம்,வேற்றுப்பொருள் வைப்பு அணி,சிலேடை என்பனவும் குறிப்புப் பொருள் உணர்த்தும்.

சொல்லின் பொருள் அதன் வழக்கை ஒட்டி அமைகின்றது. தொல்காப்பியர் வழக்கை இரண்டாகப் பகுக்கின்றார்.

'தகுதியும் வழக்கும் தழீஇன ஒழுகும்
பகுதிக் கிளவி வகைநிலை யிலவே' (தொல்.சொல்.17)

என்பது தொல்காப்பியம்.

வழக்கு என்பது காரணமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது என்றும், தகுதி என்பது அப்பொருட்குரிய சொல்லால் சொல்லுதல் நீர்மையன்று என்று களைந்து தக்கதோர் வாய்பாட்டால் கூறுதலென்றும் சேனாவரையர் குறிப்பிடுவர்.

நன்னூலார் வழக்கு என்பது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்ற இரு வகையில் குறிப்பிடுவர். இலக்கணம் உடையது, இலக்கணப்போலி, மரூஉ ஆகியவற்றை இயல்பு வழக்கு என்றும் இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகியவற்றைத் தகுதி வழக்கு என்றும் நன்னூலார் குறிப்பிடுவர். தொல்காப்பியர் இடக்கரடக்கல் என்பதை 'அவையல் கிளவி' என்பர். கால்கழீஇ வருதும், ஆமுன் பகரவீ என்பன இடக்கரடக்கல். மங்கலமல்லாதவற்றை மங்கலமாகக் குறிப்பிடுவதற்குச் செத்தாரைத் துஞ்சினார் எனவும், ஓலையைத் திருமுகம் எனவும், இடுகாட்டை நன்காடு எனவும் அழைப்பர். பொற்கொல்லர் பொன்னைப் பறி என்பதும், யானைப் பாகர் ஆடையைக் காரை என்பதும் கள், சாராயம் முதலியவற்றைத் தண்ணி என்பதும் குழூஉக்குறியாகும்.

ஒன்றன் பெயரால் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றைக் குறிக்க வழங்கும் ஆகுபெயர், அன்மொழித்தொகை என்பனவும் குறிப்புப்பொருளை உணர்த்துவனவாகும். ஆகுபெயர் பற்றியும், அன்மொழித்தொகை பற்றியும் தொல்காப்பியம் விரிவாகப் பேசுகின்றது.

**சொற்பொருள் மாற்றம்**

சொற்பொருள் மாற்றத்திற்கு மொழியியல் காரணங்களும், வரலாற்றுக் காரணங்களும் சமூகக் காரணங்களும் உளவியல் காரணங்களும் அயல்மொழிச் சொல்வாக்கும் அடிப்படையாகும்.

**1.ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்**

பேச்சு மொழியில் ஒரு சொல் ஒரு பொருளை உணர்த்தும். ஒரு சொல் இருபொருளை உணர்த்தின் அவற்றில் ஒன்று நிலைபெற, மற்றொன்று அழியும். சில நேரங்களில் இரண்டாவது பொருளையும் உணர்த்தும்.

சான்றாக கவலை என்ற சொல், இரண்டாகப் பிரியும் இடத்தையும் மனக்கவலையையும் உணர்த்தி நிற்கின்றது. இன்று மனக்கவலையை மட்டும் உணர்த்தி நிற்கின்றது.

2.**ஒரு பொருளுக்கு ஒரு சொல்**

ஒரு பொருளை உணர்த்த ஒரு சொல்லே வழங்கும். இரு சொல் வழங்கின் ஒன்று அழிய மற்றொன்று நிலைபேறு அடையும். வீடு, இல், மனை போன்றவை ஒரு பொருளை உணர்த்துவனவாகும். இல் என்ற சொல் இலக்கியத்தில் மட்டும் வழங்குகிறது. மனை என்ற சொல் வீடு கட்டுவதற்குரிய காலி மனையை மட்டும் வழங்குகின்றது. குடக்கு, மேற்கு என்ற சொற்கள் ஒரு பொருளை உணர்த்தும் சொற்களாகும். ஆனால் இன்று மேற்கு என்ற சொல் நிலைபெற, குடக்கு என்ற சொல் வழக்கற்றுப் போனது.

3.**உயர் பொருட்பேறு**(Elevation)

முன்பு இழிந்த பொருளைக் குறித்து வந்த சொல் இன்று உயர்ந்தபொருளில் வழங்குவதை உயர்பொருட் பேறு என்பர். முன்பு கழகம் என்ற சொல் சூதாடும் இடத்தைக் குறித்தது. இன்று கழகம் என்பது கற்றவர் அவையைக் குறிக்கிறது (எ.கா. திருக்குறள் கழகம், பல்கலைக்கழகம்).

4.**இழிபொருட்பேறு**(Degradation)

முன்பு உயர்ந்த பொருளில் வழங்கி வந்த சொல் இன்று இழிந்த பொருளில் வழங்குவதை இழிபொருட்பேறு என்பர். பழங்காலத்தில் 'நாற்றம்' என்ற சொல் வாசனை என்ற பொருளைத் தந்தது. ஆனால் இன்று துர்நாற்றத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது. காமம் என்ற சொல் உயர்ந்த அன்பைப் பண்டு குறித்தது. இன்று தீய நோக்கோடுகூடிய அன்பைக் குறிக்கிறது. குப்பை என்ற சொல் குவியல், செல்வம் என்ற பொருளை முன்பு தந்தது. இன்று உதவாத பொருட்களைக் குப்பை என்கின்றோம்.

5.**சிறப்புப் பொருட்பேறு** (Restriction or Narrowing)

முன்பு பலவற்றிற்கும் பொதுவாக இருந்த சொல் இன்று அவற்றுள் ஒன்றையே உணர்த்துவதைச் சிறப்புப் பொருட்பேறு என்பர். தங்கம், வெள்ளி, செம்பு முதலியவற்றைக் குறித்த பொன் என்ற சொல் இன்று தங்கத்தை மட்டும் குறிக்கின்றது. எள்ளின் நெய், பாலின் நெய் முதலியவற்றைக் குறித்த நெய் என்ற சொல், இன்று பாலின் நெய்யை மட்டும் குறிக்கின்றது. பழையனவற்றை எல்லாம் பழையது என்ற சொல் குறிக்கும் என்றாலும் பழைய சோற்றிற்கு மட்டும் இன்று பழையது என்ற சொல் ஆகி வருகின்றது. வீரரைக் குறித்த மறவர் என்ற சொல் இன்று ஓர் இனத்தாரை மட்டும் குறிக்கின்றது.

6.**பொதுப் பொருட்பேறு**

முன்பு ஒருவகைப் பெயருக்கே வழங்கிய பெயர், பின்னர் அதனோடு ஒத்த பலவற்றிற்கும் பொதுப் பெயராக வழங்குவதைப் பொதுப்பொருட்பேறு என்பர். மரத்தினால் செய்யப்பட்ட முகத்தலளவையை முன்பு மரக்கால் என்றனர். ஆனால் இன்று இரும்பு போன்றவற்றால் செய்யப்படுவதையும் மரக்கால் என்றே குறிப்பிடுகின்றனர்.

அணில், நாய், பன்றி இவற்றின் இளமைப் பெயர் முன்பு குட்டி எனப்பட்டது. இன்று எல்லாவற்றின் இளமைப் பெயராகக் குட்டி என்பது உள்ளது. தண்மை பொருந்தியதை முன்பு தண்ணீர் என்றனர். இன்று கஞ்சித்தண்ணி, காபித்தண்ணி என்று கூறுமளவிற்கு இன்று பொதுச்சொல்லாயிற்று. நிறுத்தற்குறியுள் ஒன்றான புள்ளி என்பது இன்று பெரிய மனிதரைக் குறிக்கும் வகையில் 'பெரியபுள்ளி இவர்' என்கின்றனர்.

### 7.**நுண்பொருட்பேறு** (Abstraction)

முதலில் பருப்பொருளை உணர்த்தி வந்த சொல் இன்று நுண்பொருளை உணர்த்துகின்றது. ஆகுபெயராக அமைந்தவை நுண்பொருட்பேற்றினை உணர்த்தத் தொடங்கிவிட்டன. சூழலையும் சூழ்ந்து நிற்றலையும் உணர்த்தி வந்த 'சூழ்ச்சி' என்ற சொல் நுட்பமான எண்ணத்தைக் குறிக்கும் 'சதி' என்ற பொருளைத் தருகின்றது. அணைத்தலை உணர்த்திய 'தழுவல்' என்ற சொல் இன்று வேறு பொருளில் வழங்கக் காண்கின்றோம். அவன் என் கருத்தைத் தழுவிப் பேசினான் என்று கூறக் கேட்கின்றோம். பார்வையை உணர்த்திய நோக்கம் என்ற சொல் இன்று குறிக்கோளை உணர்த்தத் தொடங்கிவிட்டது.

### 8.**பருப்பொருட்பேறு** (Concretion)

நுண்மையான பொருளை உணர்த்திய சொல் இன்று பருப்பொருளை உணர்த்துவதைப் பருப்பொருட்பேறு என்பர். 'புதுமை' என்னும் பன்மை உணர்த்திய 'விருந்து' என்னும் சொல் இன்று விருந்தையும் (feast) வீட்டிற்குப் புதியதாக வந்த விருந்தினரையும் (guest) குறிக்கின்றது.

### 9.**மென்பொருட்பேறு** (Hyperbole)

வன்மையான பொருளை உணர்த்திய சொல், இன்று மென்மையான பொருளை உணர்த்துவதை மென்பொருட்பேறு என்பர். பழங்காலத்தில் நால்வகைப் படையுடன் பொருது மனிதரும் படைக்கலன்களும் அழியும் இடம் 'அமர்க்களம்' என்ற சொல்லால் குறித்தனர். ஆனால் இன்று குழந்தைகள் செய்யும் விளையாட்டுக்களையும் பேச்சுக்களையும் 'அமர்க்களம்' என வழங்குகின்றனர்.

### 10.**வன்பொருட்பேறு** (Litotes)

முன்பு மென்மையான பொருளை உணர்த்திய சொல் இன்று வன்மையான பொருளை உணர்த்தத் தொடங்கிவிட்டது. அன்று 'அவர் அங்கே ஒழிந்தார்' என்றால் அவர் எங்கும் செல்லாமல் ஓரிடத்தில் தங்கினார் என்று பொருளாகும். ஆனால் இன்று அவர் அங்கே அழிந்துவிட்டார் என்ற பொருளைத் தருகின்றது.

### 11.**மங்கல வழக்கு** (Meliorative tendency)

மங்கலம் அல்லாதவற்றைக் கூறும்பொழுது மங்கலமான வேறு சொற்களால் கூறுவதை மங்கல வழக்கு என்பர். அதனால் பொருள் வேறுபடுதலும் உண்டு. செத்தாரைத் துஞ்சினார் என்றும், விண்ணுலகு அடைந்தார் எனவும், சிவலோக பதவி அடைந்தார் என்றும் கூறுவர். இத்தகைய வழக்கு எல்லா மொழிகளிலும் உண்டு.

**12.இடக்கரடக்கல்**

நாகரிகமில்லாத சொற்களை மறைத்து அவற்றின் பொருளை நாகரிகமான முறையில் கூறுவதை இடக்கரடக்கல் என்பர். தொல்காப்பியர் குறிப்பிடும் 'அவையல் கிளவி' என்பது இதுவாகும். கால்கழீஇ வருதும் என்பது இடக்கரடக்கலுக்குச் சான்றாகும்.

**13.குழுக்குறி (Slang)**

ஒவ்வொரு குழுவிலும் உள்ளோர் யாதானும் ஒரு காரணத்தால் ஒரு பொருளினது சொற்குறியை ஒழித்து வேறொரு சொற்குறியால் கூறுவது குழூஉக்குறி என்பர். குழூஉக்குறி இளைஞர்களிடம் அதிகமாக வழங்குகிறது. மாணவர்கள், திருடர்கள், விலைமகளிர், கள்ளவாணிகம் செய்வோர் தமக்குள் வழங்கும் சொற்கள் குழூஉக்குறியாகும். சாராயம், கள் குடிப்போர் அதனைத் தண்ணி என்பது இதற்குச் சான்றாகும்.

**14.ஆகுபெயர்**

ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவதை ஆகுபெயர் என்பர். ஊர் சிரித்தது என்றால் ஊரில் உள்ள மக்கள் சிரித்தனர் என்று வருவது ஆகுபெயராகும். 'கட்சி முடிவெடுத்தது' என்றால் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் முடிவெடுத்தனர் என்று பொருளாகும்.

**15.உருவகம்**

ஒருபொருளினை அதற்குரிய சொல்லால் உணர்த்தாமல் தெளிவுறுத்த விரும்பி, உருவகப்படுத்தி அந்த உருவகச்சொல்லால் உணர்த்துவதை உருவகம் என்பர்.

எ.கா.முகமதி

சொற்களுக்குப் புதுப்பொருள் உண்டாவது போல் பொருளைக் குறிக்கப் புதுச்சொற்களும் உருவாகின்றன. இவை மொழி வளர்ச்சிக்கு உதவுகின்றன. புதுச்சொற்களும் சொல்லமைப்புகளும் தோன்றுவது மொழியின் இயற்கையாகும்.

**மாதிரி வினாக்கள்**

அ.ஒருபக்க அளவில் விடை தருக

1.பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் விளக்குக

2.பெயரெச்சம், வினையெச்சம் விளக்குக

3.குழூஉக்குறி, மங்கலம் விளக்குக

ஆ.நான்கு பக்க அளவில் விடை தருக

1.வினைச்சொற்கள் காலம் காட்டும் முறையை விளக்குக.

2.சொற்பொருள் மாற்றம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

----------------

குறிப்பு

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

## குறிப்பு

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………